வெளியீடு 25-1-2007 Issued 25-1-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஆகஸ்ட் 3, 2006—தொகுதி 7—எண் 1

Thursday the 3rd August, 2006—Volume 7—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

752
13.06.07
13/06/07
V2;131'P06.
P06.7.1.
227418

## 3-8-2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. அறிவிப்பு—** | |
| மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் | 1-2 |
| **2. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 68-ஐத் தளர்த்தல் | 2-3 |
| **3. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்** | 3-51 |
| **4. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | 52-149 |
| கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை | |
| *மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 52, 66-67, 117-139, 142 |
| *திரு. என். மாலைராஜா | 67-78 |
| *திரு. மா. ராஜசேகரன் | 78-89 |
| *திரு. மு.க. பெரியசாமி | 89-97 |

| | |
|---|---|
| | பக்கங்கள் |
| 4. **மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை—தொடர்ச்சி | |
| *திரு. என். நன்மாறன் | 98-102 |
| *திரு. சு. குணசேகரன் | 102-109 |
| *திரு. எம்.ஆர். சுந்தரம் | 109-115 |
| 5. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 149 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

227418
சென்னை-600 018



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

12. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

D
V2113 1 P06
P06 • 7.1

**13. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ. வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**19. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல்

**21. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

**23. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு*

26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

*கால்நடை பராமரிப்பு*

27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்*

28. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

*மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

29. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*

30. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

*கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்*



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3. **Minister for Electricity and Rural Industries** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K. N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E. V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste Land Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

17. **Minister for Labour** .. **The Hon. Thiru T. M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment

18. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K. R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

19. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

20. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

21. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

22. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

23. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



24. **Minister for Highways** .. **The Hon. Thiru M. P. Saminathan:**

Highways and Ports

25. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Home

26. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

27. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

28. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

29. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

30. **Minister for Khadi** **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. - குழு அலுவலர்

திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். - துணைச் செயலாளர்

திரு. எ.ம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். - துணைச் செயலாளர்

திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கோ. தேவராசன், பி.ஏ. - சார்புச் செயலாளர்



திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. - தலைமை நிருபர்

திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கோ. சுப்புராம், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. மு. கதிரேசன், எம்.ஏ. - தலைமை நிருபர்

திரு. து. சீனிவாசன், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. ம. பன்னீர் செல்வம் - தலைமை நிருபர்

திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - | திருச்சிராப்பள்ளி-1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - | கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - | திருவாடனை |

| | | |
|---|---|---|
| 21. | இராமசாமி, திரு. தி. | - ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 22. | இராமசுவாமி, திரு. கே.பி. | - ராசிபுரம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - சாத்தூர் |
| 24. | இராமச்சந்திரன், திரு. டி. | - தளி |
| 25. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | - பள்ளிப்பட்டு |
| 26. | இராம்பிரபு, திரு. இரா. | - பரமக்குடி (செ.வ.) |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | - தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. ஆ. | - வீரபாண்டி |
| 29. | இராஜேந்திரன், திரு. இரா. | - பனமரத்துப்பட்டி |
| 30. | இராஜேந்திரன், திரு. க. | - ஜெயங்கொண்டம் |
| 31. | இராஜேந்திரன், திரு. சபா | - நெல்லிக்குப்பம் |
| 32. | இராஜ்குமார், திரு. ம. | - பெரம்பலூர் (செ.வ.) |
| 33. | இளமதி சுப்பிரமணியன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 34. | இளவரசன், திரு. வீர. | - திருமங்கலம் |
| 35. | இளவழகன், திரு. கே.எல். | - ஆற்காடு |
| 36. | உதயசூரியன், திரு. தா. | - சின்னசேலம் |
| 37. | உதயம் சண்முகம், திரு. | - அறந்தாங்கி |
| 38. | உபயதுல்லா, திரு. சி.நா.மீ. | - தஞ்சாவூர் |
| 39. | உலகநாதன், திரு. கே. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 40. | எதிரொலி மணியன், திரு. கோ. | - பெரணமல்லூர் |
| 41. | ஐயப்பன், திரு. கோ. | - கடலூர் |



| | | |
|---|---|---|
| 42. | கணபதி, திரு. ந. | - வானூர் (செ.வ.) |
| 43. | கணேசன், திரு. ஆர்.டி. | - தேனி |
| 44. | கண்ணப்பன், திரு. மு. | - தொண்டாமுத்தூர் |
| 45. | கண்ணன், திரு. பெ. | - தாரமங்கலம் |
| 46. | கண்ணன், திரு. வே. | - செஞ்சி |
| 47. | கமலாம்பாள், திருமதி பெ. | - காஞ்சிபுரம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | - சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | - சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | - தென்காசி |
| 51. | கலியவரதன், திரு. வீ.ஏ.டி. | - முகையூர் |
| 52. | கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. | - அரவக்குறிச்சி |
| 53. | கலைராஜன், திரு. வி.பி. | - தியாகராய நகர் |
| 54. | காந்தி, திரு. ஆர். | - இராணிப்பேட்டை |
| 55. | காமராஜ், திரு. பெ. | - கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 56. | காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. | - மதுராந்தகம் |
| 57. | காவேரி, திரு. வை. | - எடப்பாடி |
| 58. | கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். | - கலசப்பாக்கம் |
| 59. | கீதா ஜீவன், திருமதி பி. | - தூத்துக்குடி |
| 60. | குணசேகரன், திரு. சு. | - சிவகங்கை |
| 61. | குணசேகரன், திரு. ம. | - மானாமதுரை (செ.வ.) |
| 62. | குத்தாலம் க. அன்பழகன், திரு. | - குத்தாலம் |

63. குமரகுரு, திரு. இரா - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வீ. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்



85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்
87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
106. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். - முசிறி

108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி
110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆவா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் வரதன், திரு. ம. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-1
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமசந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை

| | | |
|---|---|---|
| 199. | ராஜசேகரன், திரு. மா. | - தொட்டியம் |
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பெ. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெசு. | - போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 222. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | - மதுரை மத்தி |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 18, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037
## 2006 ஆகஸ்ட் 3, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்."

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**திரு. டி. ஜெயக்குமார்:** **

### 1. அறிவிப்பு

#### மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு, பேரவைத் தலைவராக இருக்கக்கூடிய என்மீது... *(குறுக்கீடுகள்)* அறிவிப்பு வாசித்துக் கொண்டிருக்கிறேன், உட்காருங்கள் எல்லோரும். *(குறுக்கீடுகள்)* அறிவிப்பு வாசித்துக்கொண்டிருக்கிறேன், உட்காருங்கள் எல்லோரும். *(குறுக்கீடுகள்)* Record ஆகாது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அனுமதியில்லாமல் பேசுவது அவையின் மரபை மீறுவதாகும். *(கூச்சல்–குழப்பம்)* அனுமதியில்லாமல் பேசுவது அவையின் மரபை மீறுவதாகும்; தெரிகிறதா? உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 3

திரு. ஜெயக்குமார், திரு. சேகர்பாபு, *(கூச்சல்–குழப்பம்)* இரண்டு பேரும் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* பேரவையினுடைய தலைவராக இருக்கக்கூடிய என்மீது, அவை உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். நேற்று அது அலுவலகத்தில் பெறப்பட்டது. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிற அந்த வேண்டுகோளில் ஏகப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. இருந்தாலும் அதை அனுமதித்து இங்கே எடுத்துக்கொண்டு, அதன்மீது வழிமொழியக்கூடிய உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகின்றேன். அப்படி வழிமொழியக்கூடிய உறுப்பினர்கள் இங்கு இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எழுந்து நிற்க வேண்டுகிறேன்.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தைப் படித்துவிடுகிறேன். தீர்மானம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலில். *(கூச்சல்–குழப்பம்)* அரசினர் தீர்மானம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். *(கூச்சல்–குழப்பம்)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

## 2. அரசினர் தீர்மானம்

### விதி 68–ஐத் தளர்த்தல்

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உடனடியாக இந்த அவை எடுத்துக்கொள்ள அனுமதிப்பதற்காக, *(மேசையைத் தட்டும் ஒலி)*

"சட்டமன்றப் பேரவை விதி 68–ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்திற்கு 14 நாட்கள் முன்னறிவிப்பு அளிக்க வேண்டும் என்ற விதியினைத் தளர்த்தி முனைவர் மு. தம்பிதுரை அவர்கள் 2–8–2006 அன்று அளித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை—பேரவைத் தலைவர்மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை இன்றே பேரவையில் எடுத்துக்கொள்ள வேண்டும்"



2006 ஆகஸ்ட் 3] [பேராசிரியர் க. அன்பழகன்]

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவைத் தலைவரை நீக்க வேண்டும் என்னும் தீர்மானம் அவையில் முன்மொழியப்பட இருப்பதால், தீர்மானத்தின்மீது அவை முடிவு எடுக்கும் வரை சபையின் அனைத்து அலுவல்களையும் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர், தலைமை இருக்கையிலிருந்து இறங்கி தனது அறைக்குச் சென்றார்.)*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*முற்பகல் 9–35*

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

## 3. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நான் பேசி விடுகிறேன். இப்போது பேரவையின் முன்னுள்ள அலுவல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானமாகும். இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதித்துள்ளதா அல்லது இல்லையா என்பதை அறிவதற்கு முன்பு, பேரவை விதி 70(1)–ன்படி இத்தீர்மானத்தை நான் பேரவைக்குப் படிக்க வேண்டும். தீர்மானம் கீழ்க்கண்டவாறு உள்ளது:—

"மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

தீர்மானத்திற்கான அறிவிப்பை முனைவர் மு. தம்பிதுரை அவர்கள் கொடுத்துள்ளார்கள். பேரவை விதி 70(1)-ன்படி இத்தீர்மானத்தை முன்மொழியப் பேரவை அனுமதி அளிக்க வேண்டும். எனவே, பேரவை அனுமதி அளிக்கிறதா, இல்லையா என்பதை அறிய, இத்தீர்மானத்திற்கு இசைவு அளிக்கும்படி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களது இருக்கைகளிலிருந்து எழுந்து நின்றனர்.)*

மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் இத்தீர்மானத்திற்கு இசைவு அளித்து, 35-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஆதரவாக எழுந்து நிற்பதனால், பேரவை இத்தீர்மானத்தை எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தம்பிதுரை அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழியலாம்.

***முனைவர் மு. தம்பிதுரை:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு முன்பாக தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 68-ன்கீழ் அடியிற்கண்ட தீர்மானத்தை அவையில் கொண்டு வருவதற்கு அனுமதி கோருகிறேன்:

"மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*(தீர்மானம் வழிமொழியப்பெறவில்லை.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரும் வழிமொழியவில்லை. தீர்மானம் தோல்வியுற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) திரு. சண்முகம், உங்கள் தலைவர் எழுந்து நிற்கிறார்.



யாராவது ஒருவர்தான் பேச வேண்டும். 17 பேர் அமைச்சர்களாக இருந்து வந்ததன் காரணமாக, 17 பேரும் ஒட்டுமொத்தமாக எழுந்து நிற்பதை நான் அனுமதிக்கமாட்டேன். என்னுடைய அனுமதியைப் பெற்றுப் பேச வேண்டும். முதலாவதாக, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் 'பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லை' என்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்பிதுரை அவர்கள் கொடுத்திருந்தார்கள். ஆனால் இன்றைய நிகழ்ச்சி நிரலில் எந்தவித...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்பிதுரை அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். அதை வழிமொழிவதற்கு யாருமே இல்லையா? வழிமொழிந்த பிறகுதான்... (குறுக்கீடு) அதுதான். வழிமொழிகிறேன் என்று சொல்ல வேண்டியதுதான். (குறுக்கீடு) நீங்கள் பேசிவிட்டு என்ன சொல்லப் போகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தினை வழிமொழிய யாரும் எழுந்திருக்காததால், இந்தத் தீர்மானம் தோல்வியடைந்த பிறகு, யாரும் இது குறித்து மேற்கொண்டு பேசக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதைத்தான் நான் சொல்கிறேன். எல்லோரும் எழுந்திருந்து பேசக் கூடாது. அப்படிச் செய்வதுதான் பிரச்சினை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) திரு. சண்முகம், (குறுக்கீடுகள்) திரு. சண்முகம், இதுபோன்ற செய்கைகளைக் கைவிட வேண்டும். முன்னாள் அமைச்சராக இருந்த ஒரு காரணத்திற்காக—நாங்கள் தினமும் உங்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். தனியாகப் பேசுகிறீர்கள், தனியாகச் சிரிக்கிறீர்கள், வேண்டாம். (குறுக்கீடுகள்) பேசக்கூடாது. (கூச்சல்-குழப்பம்) நடவடிக்கை எடுக்கிறோம். திரு. சண்முகம், தினமும் இது வாடிக்கையாகப் போய்விட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) திரு. சண்முகம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) இந்த side-லிருந்து யாரும் பேச வேண்டாம்.

முற்பகல் 9–40

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இது மிகவும் பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம். இந்தத் தீர்மானத்தைப் பற்றி நிகழ்ச்சி நிரலில் எந்தவித முன்னறிவிப்பும் கொடுக்காமலேயே, இந்தத் தீர்மானத்தை இன்றைக்கு நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றீர்கள். அது ஜனநாயக... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் இந்தத் தீர்மானத்தைப் பற்றி, நிகழ்ச்சி நிரலில் ஏற்கெனவே இடம்பெறச் செய்யாமல் எடுத்துக்கொண்டிருக்கின்றீர்கள் என்று சொல்கிறார். இந்தத் தீர்மானத்தை விவாதிக்கலாமா, கூடாதா என்பதை இந்த அவையிலேதான் தீர்மானிக்க வேண்டும். ஆக, இந்த அவையிலே அதைத் தீர்மானிப்பதற்குத்தான் முதலிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் எழுந்து நின்று, அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்மானத்தை இந்த அவை விவாதிக்கலாம் என்பதற்கு, நான் ஏற்கெனவே உள்ள விதியைத் தளர்த்தி, அனுமதிப்பதற்கு நானும் தீர்மானம் கொண்டு வந்து, இந்த அவை முழுமனதோடு நிறைவேற்றியிருக்கிறது. ஆகவே, தீர்மானத்தைத்தான் இந்த அவை விவாதிக்க வேண்டும். நிகழ்ச்சி நிரலை மாற்றிக்கொள்கிற உரிமையும் இந்த அவைக்கு இருக்கிறது. அதற்கான தீர்மானத்தை நான் ஏற்கெனவே முன்மொழிந்து, அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விதிமுறைகளின்படி, தீர்மானத்தின் மீதுதான் பேசலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற நிகழ்ச்சி நிரலில் விதிமுறைகளை நீங்கள் மாற்றிக்கொள்ளலாம். ஆனால், புதிதாக நிகழ்ச்சி நிரலில், பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையை, எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் இன்றைக்கு நீங்கள் சபையில் எடுத்துக்கொண்டது, சபையின் மரபுகளை, விதியை மீறிய செயலாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், ஒன்று. ஆனால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நாங்கள் வழிமொழிவதற்கு நீங்கள் வாய்ப்பே கொடுக்கவில்லை. யாராவது வழிமொழிகிறீர்களா என்று நீங்கள் கேட்டீர்களா? கேட்கவில்லை நீங்கள். கேட்காமல்...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள்தான் வழிமொழிய வேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதாவது, சர்வாதிகார மனப்போக்குடன் நீங்கள் சபையை நடத்துவது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தீர்மானத்தை முன்மொழிந்த நீங்கள்தான் வழிமொழியக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இருங்கள், அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதுபோல, இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் எடுக்கக்கூடாது என்றால், எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய கட்சியைச் சேர்ந்த முனைவர் தம்பிதுரை அவர்கள் இந்தத் தீர்மானத்தை அந்தக் கட்சி சார்பாக முன்மொழிந்திருக்கக் கூடாது. முன்மொழியப்பட்டது, (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாமா என்ற கேள்வி எழுகிறபோது, அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கூறி, இந்த அவையிலே இதற்கு அனுமதி வழங்கலாமா என்ற கேட்கிறபோது, அல்லது கொண்டு வரலாமா என்று கேட்கிறபோது, எதிர்க்கட்சியைச் சேர்ந்த அத்தனை பேரும் அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதற்குத்தான் எழுந்து நின்றார்கள். ஆகவே, எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னதற்குப் பின்னர், இந்த அவையில் அதை உடனே எடுத்துக்கொள்வதற்கு அனுமதி இருக்கிறது. அதிலே, எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஏற்கெனவே தீர்மானம் கொடுத்த காரணத்தால், அதற்கான காரண, காரியங்களைத் தெரிந்துதான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருப்பார்கள். அப்படித்தான் கொடுத்திருக்க வேண்டும். காரண, காரியமே இல்லையென்றால், அவர்களே வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க் கட்சித் துணைத் தலைவர், நான் சரியான provision-ஐப் படித்து விடுகிறேன்; 97(1)-லே, "ஒவ்வொரு தீர்மானமும் உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பெற்று, மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப் பெற வேண்டும். நிலையான தீர்மானத்தை வழிமொழியும், உறுப்பினர் தமது உரையை விவாதத்தின் பிந்திய கட்டத்தில் ஆற்றலாம்." (குறுக்கீடு) நீங்கள் வழிமொழியவில்லையே? (குறுக்கீடு) "வழிமொழியப் பெறாத தீர்மானம் உடனே கைவிடப் பெறும்."

"...எனினும், அமைச்சர் ஒருவரால் மொழியப் பெறும் தீர்மானமோ வரவு–செலவுத் திட்ட மானியக் கோரிக்கை எதனையும் குறைக்க வேண்டுமென்று கோரும் தீர்மானமோ வழிமொழியப் பெற வேண்டியதில்லை." *(குறுக்கீடு)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தை யாரும் முன்மொழிகிறீர்களா என்று கேட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் எழுந்து முன்மொழிகிறேன் என்று சொன்னார். நீங்கள் திரும்பவும், யாரும் வழிமொழிகிறீர்களா என்று கேட்டீர்களா? சபைக் குறிப்பிலே எடுத்துப் பாருங்கள் நீங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. முன்மொழிந்த பிறகு வழிமொழிவதற்கு நீண்ட இடைவெளி விட்டாகிவிட்டது. நீங்கள் வழிமொழியத் தவறிவிட்டீர்கள். ஆகவே, இந்த அவைமீது நீங்கள்.. *(குறுக்கீடு)* நீண்ட நேரம் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தோம். முன்மொழிந்த பிறகு ஏறத்தாழ மூன்று, நான்கு நிமிடங்கள் வாய்ப்புக் கொடுத்தோம். *(குறுக்கீடு)* மாண்புமிகு அவை முன்னவர்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழிமொழியவில்லை என்பது வெறும் technical. வழிமொழியவில்லை என்பது முக்கியம் அல்ல. என்ன காரணத்தாலே என்றால், குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்டவர்கள் இந்த அவையில் எழுந்திருந்து அந்தத் தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள். ஆகவே, வழிமொழியவில்லை என்பது, வழிமொழிந்தேன் என்று சொல்லத் தவறிவிட்டார்கள் என்பதால் அதை இந்த அவை கருதத் தேவையில்லை. இந்தத் தீர்மானத்தை இந்த அவை எடுத்துக்கொண்டு விவாதிக்கலாம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே 1991–96 காலத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது இதே முறை கடைப்பிடிக்கப்பட்டு முன்மொழியப்பட்டு, அன்றைய துணை சபாநாயகர் திரு. பொன்னுசாமி அவர்கள், 'வழிமொழியப்படவில்லை' என்று அந்தத் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்துவிட்டு வேறு நிகழ்ச்சிகளுக்குப் போய்விட்டார் என்பது அவைக்



குறிப்பிலே இருக்கிறது. அதைத் தாங்கள் தயவுசெய்து பார்க்க வேண்டும். உறுப்பினர்களும் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே கொறடா அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் ஏற்கெனவே அந்த நிகழ்ச்சியைப் பற்றியெல்லாம் நன்கு தெரிந்தவர்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானம், சாதாரணமான நடைமுறையில் ஒரு தீர்மானமாக முன்மொழியப்பெற்று வழிமொழியப்பட்டால்தான் தீர்மானத்தை எடுக்கலாம். ஆனால், பேரவைத் தலைவர்மீதே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்து, அந்தத் தீர்மானத்திற்குக் குறிப்பிட்ட அளவு ஆதரவு இருக்கிறதா என்று பேரவைத் தலைவர் அவர்கள் கேட்டு, கேட்டதற்குப் பின்னர், அவ்வளவு பேரும் எழுந்திருந்து நின்று, அதை ஆதரித்ததற்குப் பின்னர், நடைமுறையில் ஒருவர் வழிமொழியவில்லை என்று சொன்னாலுங்கூட, அதையொட்டிப் பேசுகிறவர்கள் பேசுகிறபோது தானாகவே அது வழிமொழிந்ததாகிவிடும். இன்னும் சொல்லப் போனால், அவ்வளவு பேரும் வழிமொழிந்தார்கள் என்று தாங்கள் ஏற்றுக்கொண்டு, இந்த விவாதத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையினுடைய முன்னவர் அவர்களுடைய கருத்தை ஏற்று இந்தத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. *(குறுக்கீடு)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் தலைவர், அண்ணன் திரு. டி. சுதர்சனம் அவர்கள் குறிப்பிட்டது அனைத்தும் உண்மை. ஆனால், அன்றைக்கு வந்து தீர்மானம் கொடுத்து, அன்றைக்கே எடுத்துக்கொள்ளப் பெறவில்லை. 15 நாட்கள் கழித்துத்தான் எடுத்தார்கள். பிறகு technical flaw என்று சொல்லிக் கைவிட்டுவிட்டார்கள். ஆனால் இன்றைக்கு, இன்றைக்கே எடுத்திருக்கிறார்கள். இதுதான் ஜனநாயகத்தினுடைய நம்பிக்கை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் மு. தம்பிதுரை.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே, இந்த அவையினுடைய தலைவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்தைக் கொடுத்ததற்கான காரிய, காரணங்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக 31 ஆம் தேதி, நம்முடைய உறுப்பினர், இந்த அவையைச் சார்ந்த உறுப்பினர் சில காவலர்களால் பேரவைத் தலைவரின் ஆணைக்கேற்ப அவர்கள் உள்ளே வந்து, உறுப்பினர்களுக்கு ஒரு பாதுகாப்பு இல்லாத நிலைமையை உருவாக்கி, எங்களைப் போன்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வலுக்கட்டாயமாக நீக்கியது ஜனநாயக முறைக்கு எதிரான ஒன்றாகும். குறிப்பாக, பெண்களுக்கு இந்தஅவையிலே பாதுகாப்பு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) காரணம் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்) காரணம் சொல்கின்றேன், கேளுங்களேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**முனைவர் மு. தம்பிதுரை:** 1 ஆம் தேதி நம்முடையை அவையைச் சார்ந்த உறுப்பினர் திருமதி பதர் சயீத் அவர்கள் ஒரு privilege motion–ஐக் கொடுத்தார்கள். அதில் கூறியிருப்பது, காவலர்கள் அத்து மீறி தன்னை இழுத்ததாகவும், தன் காலை மிதித்ததாகவும், அதனால் வலி ஏற்பட்டுத் தொல்லைக்குட்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், இரண்டு பக்கத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களையும், இதே காவலர்கள் உள்ளே நுழைந்து, அத்து மீறி வெளியேற்றினார்கள். இதை நாங்கள்கூட பார்த்தோம்.**

முற்பகல் 9–50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் தம்பிதுரை, நிரம்பப் படித்தவர். (குறுக்கீடு) சும்மா இருங்கள். நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவருடைய பேச்சு, ** என்று சொன்னால், அவையிலே இந்தப் பேச்சு, அவை ஏட்டிலே பதிவதை நான் விரும்பவில்லை. Please expunge the word. (குறுக்கீடு) Unparliamentary அல்ல. அது எந்த அளவிற்கு மற்றவர்களைப் புண்படுத்தும், வெளியிலே இந்தச் செய்தி போனால்?

**முனைவர் மு. தம்பிதுரை:** இல்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** I have given my ruling. Expunge. Yes, சொல்லுங்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு... (குறுக்கீடு) நான் பேசுகிறேன். இருங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மெத்தப் படித்தவனோ, படிக்காதவனோ, அது qualification கிடையாது. ஒரு சட்டமன்ற உறுப்பினராக வர வேண்டுமென்றால், அதற்குப் படித்திருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. படிக்காதவர்கள்கூட அவைக்கு வரலாம். அவர்கள் சிறப்பாகச் செயல்படலாம். அதனால் படிப்பதற்கும், இதற்கும் சம்பந்தம் கிடையாது. நான் சொல்ல விரும்புவது, நான் சொன்ன கருத்துகளை, சில வார்த்தைகளை நீக்குவதற்கு உங்களுக்கு உரிமையிருந்தாலுங்கூட, நான் வலியுறுத்த விரும்புவது, பொதுவாக, எங்களுக்கு எதிராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், தாங்கள் ஏதோ ** பாதுகாவலாக இருப்பதாக, என்று தேர்தல் நேரத்தில் பிரச்சாரமெல்லாம் செய்து, வாக்குகளைப் பெற்று, அந்தக் கருத்தைச் சொல்வதற்காகத்தான் வந்தேனேயொழிய, அது தவறு என்றால், நீக்குவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. அது உங்களுடைய விருப்பம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெண்––ஒரு பெண்ணுக்குக்கூட––நீங்கள் சொல்லியிருந்தீர்கள் தேர்தல் அறிக்கையிலே. இப்போதும் சொல்லியிருக்கின்றீர்கள். இப்பொழுது பட்ஜெட்டிலேயும் சொல்லியிருக்கின்றீர்கள். 33 சதவிகிதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொண்டு வருவதற்காக, பாராளுமன்றத்திலே மசோதா கொண்டு வர இருப்பதாகவும் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1998–99–லே, நான் மத்தியிலே அமைச்சராக இருக்கும்போது—சட்ட அமைச்சராக இருக்கும்போது, இதே மசோதாவைப் பாராளுமன்றத்திலே அறிமுகப்படுத்தியவனும் நான்தான் என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிகிறபோது நான் குறுக்கிடுவது அவசியமும் இல்லை,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விருப்பமும் இல்லை. ஆனால், அரசியலிலே நடைபெறுகிற செய்திகள் எல்லாம் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே விவாதிப்பதற்குரியவை அல்ல. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், பேரவைத் தலைவருடைய நடவடிக்கைகள் எந்த வகையில் உங்களுடைய உரிமையைப் பாதித்தது அல்லது எந்தக் காரணத்திற்காக அவரை நீக்க விரும்புகிறீர்களோ, அதைத்தான் பேச வேண்டுமே தவிர, பாராளுமன்றத்திலே நடந்ததை இங்கு பேசலாகாது. நான்கூட 1957–வது ஆண்டிலேயிருந்து... (மேசையைத் தட்டும் ஒலி)

**முனைவர் மு. தம்பிதுரை:** பேராசிரியர் எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக ஒரு காலத்திலே இருந்தார்கள். இல்லையென்று சொல்லவில்லை. 1957–லே வழிகாட்டியாக இருந்திருக்கலாம். ஆனால், இப்போது அவர் வழிகாட்டுவதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லாது இருக்கின்றோம் நாங்களெல்லாம். நான் சில காரணங்களைச் சொல்வதற்கு, சில கருத்துகளைச் சொல்வதற்கு சில முகாந்திரங்களைச் சொல்ல வேண்டும். எடுத்ததுமே, பேரவைத் தலைவர் சரியில்லை, நீக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னால், அது என் தீர்மானத்திலேயே இருக்கிறது. அதற்குக் காரண, காரியங்களைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லிக்கொண்டு நிற்கின்றேனேயொழிய, வேறொன்றும் கிடையாது. ஏன் 33 சதவிகிதம் என்று சொல்கிறேன் என்றால், ஒரு பெண்- (குறுக்கீடு) Relation இருக்கிறது. இல்லையென்றால், ruling கொடுப்பதற்குப் பேரவைத் துணைத் தலைவர் இருக்கிறார். நீங்கள் ஏன் தலையிடுகிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உங்கள் விவாதத்தைத் தொடருங்கள். தீர்மானத்தையொட்டி உங்கள் பேச்சு இருக்கட்டும்.

**முனைவர் மு. தம்பிதுரை:** அதைத்தான் சொல்கிறேன். 33 சதவிகிதம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். பெண்கள், சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் வர வேண்டும் என்றால், இங்கே பாதுகாப்பு இருக்க வேண்டும். அந்தப் பாதுகாப்பு இருக்கிறதா, இல்லையா என்பதைச் சொல்வதற்காகத்தான் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள், பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்றார்கள். அதற்காகத்தான் இங்கே பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டு, பெண் உறுப்பினர்கள் பெண் காவலர்களால்தான் வெளியேற்றப்படுகிறார்கள். அதைவிடப் பெரிய பாதுகாப்புக் கொடுக்க எங்களுக்குத் தெரியவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடிக்கட்டும். Please. நான் அனுமதிக்கிறேன் உங்களை. (குறுக்கீடு) சரி, சிவபுண்ணியம். இந்தத் தீர்மானத்தையொட்டி இருக்க வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. இந்த விஷயங்கள் விவாதத்திற்கு வருகிறபோது, அதை அனுபவித்தவர்கள் நாங்கள், நாங்களும் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பெண் உறுப்பினர்கள் சென்ற முறையும் இதேபோல வலுக்கட்டாயமாக அ.தி.மு.க ஆட்சிக் காலத்திலே வெளியேற்றப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. அதைப் பற்றிய விவாதம் இப்போது நடைபெறுவது ஏதோ புதிதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிவபுண்ணியம், உங்களைப் பேச அழைக்கும்போது நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) தம்பிதுரை, பேசுங்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது விவாதங்கள் வரும்போதெல்லாம், தங்களுக்குச் சாதகம் இல்லையென்றால், சாதகத்தைக் கொண்டு வருவதற்காகப்

பழைய காரணங்களை எடுத்துச் சொல்வது ஒரு நியாயமாக இருக்க முடியாது. அப்படி ஒவ்வொன்றுக்கும் சொல்லிக்கொண்டிருந்தால், சரியாகாது. இப்போதுள்ள பிரச்சினை, நம்முடைய இந்தச் சட்டமன்றத்திலே அன்று நடந்த நிகழ்ச்சியானது, பெண் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பில்லை என்பதைச் சொல்வதற்காகத்தான் சொல்கிறேன்.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள், ஏதோ பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, பாதுகாப்பு இல்லை என்று மூன்று முறை சொல்லிவிட்டார்கள். அவை முன்னவர், பெண் உறுப்பினர்களைப் பெண் காவலர்களை வைத்துத்தான் வெளியேற்றினோம் என்றும் சொன்னார்கள். நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சியிலே பெண்களுக்கு எவ்வளவு பாதுகாப்பு இருக்கிறது என்பதற்கு அடையாளம், உங்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர் தன்னந்தனியாக வந்து, இங்கே பேசிவிட்டு, பாதுகாப்பாகச் சென்றிருக்கிறார் என்பதிலேயிருந்து, இந்த அவையிலே பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் மு. தம்பிதுரை.

**முனைவர் மு. தம்பிதுரை:** துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் சொல்லுகின்றேன். அன்று நம்முடைய பெண் உறுப்பினர்களை வெளியேற்றியது பெண் பாதுகாவலர்கள் அல்ல—நீங்கள் அவர்களை—அது குறித்து விவாதிப்பதற்காகத்தான் நம்முடைய பதர் சயீத் அவர்கள் உங்களுக்கு Notice of privilege கொடுத்தார்கள். நீங்கள் நேற்று அதை எடுக்காமல் உடனடியாக, உங்கள்பாட்டுக்கு இப்படித்தான் நாங்கள் ஒரு முடிவு கொடுப்போம் என்றும், வாதாடக்கூடாது என்றும் நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அதற்காகச் சொல்கிறேன். இதுபோன்ற, பெண்களுக்கே பாதுகாப்பில்லாத நேரத்தில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.



**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு எல்லோரும் நேரிலேதான் பார்த்துக் கொண்டிருந்தோம். பெண் காவலர்கள்தான் அப்புறப்படுத்தினார்கள். பெண் உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லை, பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். செரினா என்ற பெண்ணுக்கு எந்த அளவுக்கு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது என்பது நாடறிந்த உண்மை. (குறுக்கீடு) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காயத்ரி தேவி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். குறுக்கீடு வராமல் பேசவேண்டியதுதான். (குறுக்கீடுகள்) சார், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன். (கூச்சல்–குழப்பம்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்குள்ளே நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, ஒரு தவறான வழியில், வெளியே நடைபெற்ற நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, செரினாவைப் பற்றிச் சொல்வது இந்த அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முனைவர் மு. தம்பிதுரை.

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காயத்ரி தேவி. (குறுக்கீடுகள்)

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றுக்கும் eye witness இருப்பதுபோல, இதற்கும் eye witness இருக்கிறது. நான் இதே வரிசையிலேதான் அமர்ந்து கொண்டிருக்கின்றேன். அன்று பெண் காவலர்கள் வந்து எல்லோரையும், 'வாங்க மேடம், வாங்க மேடம்' என்றுதான் கூப்பிட்டார்கள். அதையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திருமதி எஸ். தேன்மொழி:** Ladies-க்கு ladies இப்படிப் பேசாதீர்கள். உங்களுக்கும் இந்த நிலை வரும். *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும் *(குறுக்கீடு)* தேன்மொழி. *(குறுக்கீடுகள்)* என்னுடைய அனுமதியில்லாமல் தேன்மொழியும், மற்றவர்களும் பேசக்கூடாது.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் அவர்களிடம் வந்து அவர்கள் எவ்வளவு முறை, 'மேடம் வந்து விடுங்கள், வந்து விடுங்கள்' என்று கூப்பிட்ட சமயத்தில், இவர்கள் வேண்டுமென்றே, 'இல்லை, நான் வரமாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்த சமயத்தில் அவர்கள் தொட்டார்கள். தொட்ட சமயத்தில் இவர்கள் வேண்டுமென்றே இதனை ஒரு issue ஆக்க வேண்டுமென்று... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி தேன்மொழி, *(குறுக்கீடு)* திருமதி தேன்மொழி, என்னுடைய அனுமதியில்லாமல் நீங்கள் பேசுகிறீர்கள். உட்காருங்கள். காயத்ரி தேவி, கருத்தைச் சொல்லி முடித்துவிடுங்கள். *(குறுக்கீடு)* காயத்ரி தேவி, உங்கள் கருத்தைச் சொல்லி முடித்துவிடுங்கள்.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** கடைசியிலே அந்தப் பெண் காவலர்கள், நான் இந்த வரிசையிலே உட்கார்ந்திருக்கிறேன் என்று, 'நீங்களும் வந்துவிடுங்கள்' என்று தெரியாத்தனமாக என்னையும் அ.தி.மு.க. உறுப்பினர் என்று அழைத்தார்கள். அப்போது அவர்களிடம் நான் சொன்னேன், இல்லை, இல்லை, நான் காங்கிரஸ், அவர்களை மட்டும் கூட்டிக்கொண்டு போங்கள் என்று. இங்கு வேறு காவலர்கள் யாரும் வரவில்லை. பெண் காவலர்கள்தான் இந்த வரிசையில் வந்து... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். அமைச்சர் பொன்முடி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்சியிலே இருப்பவர்களுக்கு இதுவே இயல்பாக இருக்கிறது. இதே சட்டமன்றத்தில் முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் சென்னா ரெட்டியின்மீது சொன்ன குற்றச்சாட்டை இப்போது திருப்பிச் சொல்லுகிறார்கள்.



அவ்வளவுதான். ஆக, இவர்களுக்கு வழக்கமே அதுதான். வீண் பழி போடுவது. எப்படியாவது எதிர்க்கட்சிகளின்மீது வீண் பழியைப் போட்டு திசை திருப்புவதற்காகச் சொல்கிறார்களே தவிர, நடந்த உண்மையை மறைக்கப் பார்க்கிறார்கள். இதுதான் உண்மை.

*முற்பகல் 10-00*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** துணைத் தலைவர் அவர்களே...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. *(குறுக்கீடுகள்)* பாலபாரதி. *(குறுக்கீடுகள்)* அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள், முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

***செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும், அப்புறம் பேசுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** நான் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். பெண்கள் உரிமை பாதுகாக்கப்படுவது சம்பந்தமாகவும்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்கள் பேசி முடித்துவிடட்டும். *(குறுக்கீடுகள்)* அவர்கள் பேசி முடித்தவுடனே உங்களைக் கூப்பிடுகிறேன். *(குறுக்கீடு)* உங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். அவர்கள் பேசி முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** இங்கே இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு உட்பட, எதிர்க்கட்சியாகவும், தோழமைக் கட்சியாகவும் இருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட நாங்கள் அனைவரும், அன்றைக்கு நடந்த சம்பவங்களைப் பார்த்துக்கொண்டிருந்தோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள். அவர்கள் பேசி முடித்துவிடட்டும். *(குறுக்கீடுகள்)* அவர்களைப் பேச அழைத்துவிட்டேன்.

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் அவர்களை... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்களைப் பேச அழைத்துவிட்டேன். *(குறுக்கீடுகள்)* அவர்களைப் பேசவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* கட்டாயம் கூப்பிடுகிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** காவல் துறையோ, பெண் காவலர்களோ தள்ளவில்லை என்பதுதான் இங்கே நடந்த உண்மை, உறுப்பினர் காயத்ரி தேவி சொல்வதுதான் உண்மை. *(குறுக்கீடுகள்)* இங்கே நடக்கக்கூடிய சம்பவங்களைப் பத்திரிகைகளுக்காகக் குறிப்பு எடுத்துக்கொண்டிருந்த நான், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு உறுப்பினருடைய அசைவையும் கவனித்துக்கொண்டேயிருந்தேன். அதில் பதர் சயீத் அவர்களினுடைய உடலையோ--அவர்கள் பக்கமாகவோ, ஆண் காவலர்கள் யாரும் வரவில்லை என்பதுதான் இந்தச் சட்டமன்றத்தினுடைய மிக யதார்த்தமான உண்மை என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று, அ.தி.மு.க. ஒரு பிரதான எதிர்க்கட்சியாக வந்த பிறகு பெண்ணை, ** இந்தச் சட்டமன்றத்திற்குள் மிக அவமானப்படுத்தக்கூடிய காரியத்தை அ.தி.மு.க.தான் செய்துகொண்டிருக்கிறது. இது அபாயகரமானது, சட்டமன்ற ஜனநாயகத்திற்கும் உகந்தது அல்ல. தமிழகத்தினுடைய பெண்களினுடைய உரிமைக்கும் உகந்தது அல்ல என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அரசியலை அரசியலாகத்தான் சந்திக்க வேண்டுமே தவிர, மக்களுடைய பிரச்சினைகளைப் பேச வேண்டிய மன்றத்தில், பெண்களை முன்னால் வைத்து, பெண்கள் தாக்கப்படுகிறார்கள் என்று உண்மைக்குப் புறம்பாகச் சொல்வது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** ... என்பது அதி.மு.க.விற்கு அழகானது அல்ல. இத்தகைய நடவடிக்கைகளை அவர்கள் கைவிட வேண்டும். இல்லையென்றால் தமிழகத்தினுடைய பெண்கள், அ.தி.மு.க.வை அம்பலப்படுத்தக்கூடிய அரசியல் நடவடிக்கையிலே ஈடுபடுவார்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. கே.ஏ. செங்கோட்டையன். *(குறுக்கீடுகள்)* அமைதியாக இருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, 'நான் குறிப்பு எடுத்துக்கொண்டே ஒவ்வொரு அசைவையும் பார்த்துக்கொண்டிருந்தேன்' என்று சொன்னார்கள். அவருக்குப் பின்னாலே கண் இருக்கிறதுபோல் இருக்கிறது, முன்னாலே கண் இல்லை என்று தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தம்பிதுரை. *(குறுக்கீடுகள்)* தம்பிதுரை. *(குறுக்கீடுகள்)* இல்லை, போதும். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். தம்பிதுரை. *(குறுக்கீடு)* சரி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, பேசுவதற்கு நீங்கள் வாய்ப்பு அளித்திருக்கிறீர்கள். அவர்கள் பேசுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது. நீங்கள் அனுமதிக்கின்றபோது அவர்கள் பேசலாம். ஆனால், நாங்கள் சொல்ல வந்த கருத்தைச் சொல்லவிடாமல், இரண்டு வரிகூட ஒழுங்காக அந்த வார்த்தையைச் சொல்லவிடாமல், அத்தனை பேரும் எழுந்து குறுக்கீடு செய்வதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கின்றீர்கள். இது எந்தவிதத்தில் நியாயமானது என்பதனை நான் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சர்வாதிகாரத்தை நீங்கள் கையில் எடுத்துக்கொண்டு, இந்தச் சபையை நடத்துவது என்பதனை நீங்கள் தீர்மானிக்கின்ற நேரத்தில், நாங்கள் அதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் பேரவையிலிருந்து கூச்சலிட்டுக்கொண்டே வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். 'பேரவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாமல்' என்று சொன்னீர்கள். பேரவைத் துணைத் தலைவர்மீதும் 'சர்வாதிகாரி' என்று

சொல்லுகிறீர்கள், இந்த அவை ஜனநாயக முறைப்படி நடக்கிறது. (குறுக்கீடுகள்) இந்த அவை ஜனநாயக முறைப்படி நடக்கிறது. யாரும் சத்தம் போடாமல் வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) சத்தம் போடக்கூடாது. (குறுக்கீடுகள்) இது குறித்து யாராவது பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்) கோ.க. மணி அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–05*

*(பேரவையிலிருந்து வெளியேறிய உறுப்பினர்கள் கூச்சலிட்டுக்கொண்டே சென்றுகொண்டிருந்தார்கள்.)*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், இன்றைக்கே அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே அறிவித்ததற்குப் பிறகு, அதிலே விவாதம் நடத்த, காரணங்கள் சொல்ல, கண்டிக்க, எந்தவிதமான ஆதாரமும் இல்லாத காரணத்தால், ஏதாவது ஒரு காரணம் கண்டுபிடிக்க வேண்டுமென்று சொல்லி, ஏதோ ** என்ற ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டு வெளியேறி இருக்கிறார்கள். கடந்த பேரவையில் வெளியேற்றப்பட்ட விவரங்களை நான் சொல்கிறேன். கடந்த காலத்திலே அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, அப்போதிருந்த பேரவைத் தலைவர் எதிர்க்கட்சியிலே இருந்த எங்கள் பக்கமே திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்.

*(பேரவையிலிருந்து வெளியேறிய உறுப்பினர்கள் லாபியில் தொடர்ந்து கூச்சலிட்டுக்கொண்டே இருந்தார்கள்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** லாபியிலே சத்தம் போடுகிறார்கள். காவலர்கள் அவர்களை லாபியிலிருந்தும் அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்தப் பக்கம், ஆளுங்கட்சிப் பக்கம்தான் பேரவைத் தலைவருடைய கண்ணே இருந்துகொண்டு இருக்கும். முதலமைச்சர் என்ன signal கொடுக்கிறாரோ, அதன்படி நடப்பார். ஆனால் இங்கே இருக்கக்கூடிய பேரவைத் தலைவர் நம்முடைய முதலமைச்சரைக்கூடப் பார்ப்பது இல்லை. இன்னும் சொல்லப் போனால், ஒரு நாள் தீர்ப்புக் கொடுக்கும்போது, எதிர்க்கட்சிக்காரர்கள் பேசும்போது ஆளுங்கட்சிக்காரர்கள் குறுக்கிடக்கூடாது என்றும், ஆளுங்கட்சிக்காரர்கள் பேசும்போது எதிர்க்கட்சிக்காரர்கள் குறுக்கிடக்கூடாது என்றும் அறிவுரைகூட வழங்கியிருக்கிறார்.

ஆனால், கடந்த காலத்தில் *25–4–2002* அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரை வெளியேற்றினார்கள். எப்படித் தெரியுமா? குண்டுக்கட்டாக. சில உறுப்பினர்கள் கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்பதற்குக்கூட வாய்ப்புக் கொடுக்கவில்லை. ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டு போய் வெளியே போடுவதைப்போல, நான்கு காவலர்கள் வந்து உறுப்பினர்களைத் தூக்கிக்கொண்டு போய்ப் போட்டார்கள். அதைப்போல, *30–4–2002* அன்று எங்களை வெளியேற்றினார்கள். *29–10–2002* அன்றும் வெளியேற்றினார்கள். அதைப்போல், தோழமைக் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேர்களையும்கூட சேர்த்து வெளியேற்றினார்கள். 14 முறை இந்த அவையிலே, கடந்த 5 ஆண்டு காலத்திலே, எதிர்க்கட்சியிலே இருந்த எங்களை வெளியேற்றிய இன்றைய எதிர்க்கட்சிக்கு, நியாயமாக, நேர்மையாக நடந்துகொள்ளக்கூடிய ஒரு சட்டப் பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு அருகதைகூடக் கிடையாது என்பதைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தை எதிர்கொள்ள அவர்களுக்குத் தைரியம் இல்லாத காரணத்தால் வெளியேறியிருக்கிறார்கள். எனவே, அடுத்த அலுவலைத் தொடங்குவதற்கு—

*(பேரவையிலிருந்து வெளியேறிய உறுப்பினர்கள் லாபியில் தொடர்ந்து கூச்சலிட்டுக்கொண்டே இருந்தார்கள்.)*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தை விமர்சிக்கிறேன் என்கின்ற பெயரால், இந்த ஆட்சியே "minority ஆட்சி" என்று எதிர்க்கட்சியினுடைய தலைவர் குறிப்பிட்டபோது, அவை முன்னவர், நிதி அமைச்சர், பேராசிரியர் அவர்கள் எழுந்து, 'இது minority அரசு என்று நீங்கள்

கருதினால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வாருங்கள், தைரியமிருந்தால்' என்று சொன்னார். அவர்கள் யோசித்துப் பார்த்தார்கள். ஆட்சியின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதா, முதலமைச்சர்மீது கொண்டு வருவதா என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்து, எதற்காக வம்பு, தற்காலிகமாக சபாநாயகர்மீதே கொண்டு வந்து பார்க்கலாம் என்று, சபாநாயகர்மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, இன்றைக்கு சோதித்துப் பார்க்கத் தொடங்கி இருக்கின்றார்கள். அதுவரையிலே, அவர்கள் இது minority அரசு என்று சொன்னது நிரூபிக்கப்படவில்லை, நிரூபிக்க முடியாது என்ற காரணத்தால், அவர்களாகவே இன்றைக்கு வெளியேறி, தங்களுடைய தோல்வியை ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–10*

பேரவைத் தலைவரைப் பற்றி, தங்களைப் பற்றி—நான் 'தங்களை' என்று குறிப்பிடுவது, என்மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்துள்ள சூழ்நிலையில் நான் அரைக் கணமும் இந்த ஆசனத்திலே அமர்ந்திருக்கமாட்டேன் என்று, தன்மான உணர்வோடு *(மேசையைத் தட்டும் ஒலி)* கீழே இறங்கி, துணைத் தலைவருக்கு வழிவிட்டுவிட்டு அறையில் அமர்ந்திருக்கின்றீர்களே, தங்களைத்தான் குறிப்பிடுகிறேன், பேரவைத் தலைவரே என்று. நீங்கள் இந்த ஐந்து ஆண்டு காலத்திற்கும் எங்களுக்குப் பேரவைத் தலைவர்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவைத் தலைவர்கள் எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்ல வேண்டுமேயானால், கடந்த காலத்தைச் சொல்ல வேண்டுமேயானால், நானும், பேராசிரியரும் இதே அவையில் டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களைப் பார்த்திருக்கின்றோம், சிவசண்முகம் பிள்ளை அவர்களைப் பார்த்திருக்கின்றோம், செல்லப்பாண்டியன் அவர்களைப் பார்த்திருக்கின்றோம், புலவர் கோவிந்தனைப் பார்த்திருக்கின்றோம், பண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களைப் பார்த்திருக்கின்றோம். இப்படி, இந்தப் பேரவைத் தலைவராக வீற்றிருக்கக்கூடிய கண்ணியமும், மதிப்பும், எல்லாவிதமான குணாதிசயங்களும் பொருந்தியவர்கள் இந்த அவையை அலங்கரித்திருக்கின்றார்கள். எங்களைக்கூட சில நேரங்களிலே—ஏறத்தாழ 1957 ஆம் ஆண்டிலேயிருந்து நான் இந்த அவையிலே இருப்பவன் என்ற



காரணத்தால், *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்களைக்கூட கடிந்துகொண்ட பேரவைத் தலைவர்கள் உண்டு. நாங்கள் அவர்களைத் திருப்பிக் கடித்தது இல்லை. நாங்கள் அவற்றைத் தாங்கிக்கொண்டிருக்கின்றோம், நல்லதுதான் சொல்கிறார்கள், நல்ல வழிதான் காட்டுகிறார்கள் என்ற அளவில். அதனால்தான் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சிக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றபோது, கிருஷ்ணா ராவ் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் திறமையான மருத்துவர். அந்த மருந்தை எங்களுக்கும் கொடுத்து ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்கள். அப்படிப்பட்ட பேரவைத் தலைவர்கள் எல்லாம் அலங்கரித்த இந்த ஆசனத்தில், செல்லப்பாண்டியனுக்குப் பிறகு, அந்த வழி வந்த தாங்கள் இன்றைக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். செல்லப்பாண்டியன் கோபித்துக்கொள்வதிலும் உச்சக்கட்டத்திற்குச் செல்வார், சிரித்து மகிழ்வதிலும் உச்சக்கட்டத்திற்குச் செல்வார். 'நீங்கள் நன்றாகத்தான் சிரிக்கிறீர்கள். ஆனால் எங்கள்மீது எச்சில்படாமல் சிரியுங்கள்' என்றுகூட, ஒரு முறை பக்தவத்சலம் அவர்கள் தமாஷாகச் சொன்னார்கள். அந்த அளவிற்கு மனம்விட்டுச் சிரிக்கக்கூடிய, களங்கம் இல்லாத ஒருவர் செல்லப்பாண்டியன் அவர்கள். அவர் வழி வந்தவர் நீங்கள் என்று சொல்லுகிற காரணத்தால், நீங்களும் களங்கமற்றவர் என்பதை நான் நன்றாக உணர்வேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எப்படி ஒரு சபாநாயகர் இருக்கக்கூடாது என்பதற்குச் சில உதாரணங்கள் இருக்கின்றன. ஒன்றைச் சொல்ல நான் விரும்புகின்றேன். நான் கடந்த இரண்டு நாளைக்கு முன்புகூட எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னேன். உங்கள் சபாநாயகரைப் பற்றிய ஆதாரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன, அவற்றைத் தருகிறேன், நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள் என்றுகூடச் சொன்னேன். அதற்கு வாய்ப்புக் கிடைக்காதோ என்று கருதியிருந்தபோது, நல்லவேளையாக எதிர்க்கட்சிக்காரர்களே, சபாநாயகர்மீதே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்து, அந்த வாய்ப்பை எனக்கு வலுவிலே வழங்கி இருக்கின்றார்கள்.

*முற்பகல் 10–15*

இந்த அவைக்கு, இந்த அவையை நடத்துகின்ற செயலகத்திற்கு உட்பட்ட சில பகுதிகள், கோட்டையைச் சுற்றியும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கின்ற விடுதிகளைச் சுற்றியும்

இருக்கின்றன. அவற்றிலே ஒன்று, உணவு விடுதி. அந்த உணவு விடுதி காலங்காலமாகப் பலராலும் ஏலம் எடுக்கப்பட்டோ அல்லது ஒப்பந்தம் கோரப்பட்டோ தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதே அவையைச் சார்ந்த அண்ணா பெயரால் அமைந்த ஒரு அசைவ உணவு விடுதி இருந்தது. அதைப் பற்றிய ஒரு விவரத்தை மாத்திரம் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலே உள்ள அண்ணா உணவகத்தை நடத்தி வரும் கே.வி.ஆர். மணி என்பவரை அந்த உணவகம் நடத்த வழங்கப்பட்ட ஒப்பந்தக் காலம் 3-2-2002-உடன் முடிவுற்றபடியால், அந்த உணவகத்தை உடனடியாகக் காலி செய்து ஒப்படைக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு கே.வி.ஆர். மணி என்ற அந்த உணவகத்தின் உரிமையாளர், அந்த உணவகத்தை ஒப்பந்த அடிப்படையில் வருடத் தொகையாக 2 இலட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய் செலுத்தி நடத்தி வருவதாகவும், அந்த உணவகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதி தருமாறும், அதற்கு அதே ஒப்பந்தத் தொகையான 2 இலட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய் வருடாந்திரத் தொகையைச் செலுத்தி விடுவதாகவும் கேட்டுக்கொண்டு எழுதுகிறார். அந்தக் கோப்பில் முன்னாள் சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. காளிமுத்து அவர்கள் 16-2-2002 அன்று தன் கைப்படப் பிறப்பித்த ஆணையில், கே.வி.ஆர். மணி அவர்களுக்கே ஓராண்டு காலத்திற்கு அந்த உணவகத்தை அனுமதிக்கலாம் என்றும், மாத வாடகையாக 2,750 ரூபாய் நிர்ணயிக்கலாம் என்றும் எழுதியுள்ளார். கே.வி.ஆர். மணி அவராகவே தர முன் வந்த தொகை, ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய். காளிமுத்து பிறப்பித்த ஆணை, மாதம் ஒன்றுக்கு 2,750 ரூபாய். இது, ஆண்டு ஒன்றுக்கு 33,000 ரூபாய் மாத்திரம் பெற்றுக்கொண்டால் போதும் என்பதாகும். அவர் கொடுக்க முன் வந்தது 2 இலட்சத்து 60 ஆயிரத்து 3 ரூபாய். போதும் என்று இவர் ஆணை பிறப்பித்தது, ஆண்டு ஒன்றுக்கு 33,000 ரூபாய். மீதப் பணம் எங்கே போயிற்று என்பதை, (மேசையைத் தட்டும் ஒலி) அவைத் தலைவராகிய தங்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பவர்கள், தங்களுடைய முன்னாள் அவைத் தலைவர்மீது என்ன தீர்மானம் கொண்டு வருவார்களோ என்றுதான் எனக்குப் புரியவில்லை. இது sample-க்கு ஒன்று, இன்றைக்கு நான் படித்துக் காட்டினேன். நிறைய இருக்கின்றன, ஏராளம் இருக்கின்றன, எப்படிப்பட்ட சபாநாயகர்கள் இருந்த இடத்தில் இப்படிப்பட்ட ஒரு சபாநாயகர் இருந்திருக்கிறார் என்பதற்கான அடையாளத்தைத்தான் இப்போது நான் சொன்னேன்.



அவர்களையெல்லாம் தாண்டி, தாங்கள் இன்றையதினம் அப்படிப்பட்ட சபாநாயகர்தான் நான், இப்படிப்பட்ட சபாநாயகர் அல்ல என்று நிரூபித்துக்கொண்டிருக்கும்போது, எங்களுடைய நம்பிக்கைக்கு உரியவராக, என்னுடைய நம்பிக்கைக்கு உரியவராக, கடந்த காலத்திலே பேரறிஞர் அண்ணாவினுடைய நம்பிக்கைக்கு உரியவராக வாழ்ந்த, இன்றைக்கும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற தங்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது, அவர்கள் தங்களைத் தாங்களே நம்பாமல் கொடுத்தது என்பதைத் தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) வேறல்ல என்பதை எடுத்துக் கூறி, நிறைந்த நம்பிக்கை தங்கள்பால் எங்களுக்கு இருக்கிறது, மீண்டும் இந்த அவையிலே, இந்த இருக்கையிலே வந்து அமருங்கள், எங்களை வழி நடத்துங்கள் என்று கேட்டு, அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்திலே கலந்துகொண்டு, இந்த விவாதத்திலே பங்கு பெற்று, யாருக்குப் பதில் சொல்லிப் பேச வேண்டுமோ, அவர்கள் இந்த அவையில் இல்லை என்பது எனக்கு உள்ளபடியே சற்று வருத்தமாக இருக்கிறது. இருந்தாலுங்கூட, இந்த அவையில் இருக்கின்ற நம்முடைய பத்திரிகையாளர் நண்பர்கள்மூலமும், இந்த அவையிலிருந்து புறப்படுகின்ற செய்தித் துளிகள் தமிழகத்தின் எல்லையெங்கும் செல்கின்றன என்பதற்காகவும் நான் சில கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

ஜனநாயகத்தினுடைய ஓர் அற்புதமான வடிவம், பாராளுமன்ற ஜனநாயகம். அந்தப் பாராளுமன்ற ஜனநாயகம் கண்டிருக்கின்ற சில அடிப்படை நிறுவனங்களில் பாராளுமன்றமும், சட்டமன்றமும் மிக அடிப்படையான தடத்தில் பணியாற்றி, மக்களுடைய எண்ணங்களுக்கும், ஆசைகளுக்கும், அபிலாஷைகளுக்கும் வடிவம் கொடுக்கின்ற, மக்கள் தேவைகளை அரசியல் சாசனச் சட்ட ரீதியாக நிறைவேற்றித் தருகின்ற ஓர் அற்புதமான அரசியல் ஏற்பாடு. இந்தச் சட்டமன்றத்திற்குள்ளே நீங்கள் அமர்ந்திருக்கிற இந்தச் சபாநாயகர் நாற்காலி என்பது, இந்தச் சட்டமன்றத்தில் இருக்கின்ற ஒவ்வோர் உறுப்பினருடைய உரிமைகளைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் பாராளுமன்ற ஜனநாயகத்தினுடைய

மனசாட்சியாகவும், அதைப் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய ஸ்தானத்திலே நீங்கள் இருக்கிறீர்கள் என்பதும்தான் உண்மை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நிறைந்த அனுபவத்திலே, இந்த மன்றத்திலே அவர்கள் பார்க்காத இடமில்லை, அவர்கள் உட்காராத அமைச்சர் நாற்காலி இல்லை. கடந்த 50, 60 ஆண்டு கால தமிழகச் சரித்திரத்திலே, அவர்கள் இல்லாமல் ஒரு அரசியல் அசைவும் இருந்ததில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எங்களைப் போன்றவர்கள் அரசியல் மாணாக்கர்களாக இருந்த காலத்தில், நாங்களெல்லாம் தேசிய இயக்கத்திலே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கவரப்பட்டுப் பொது வாழ்க்கைக்கு வந்தாலுங்கூட, நாங்கள் மாற்று முகாமில் இருக்கிற அவர்களைப் பார்த்து, நேசித்ததுண்டு, கவரப்பட்டதுண்டு, சில நேரங்களிலே அவர்களுடைய எண்ணங்களோடு மாறுபட்டதும் உண்டு. மாறுபட்டு நிற்கிற நேரத்திலேகூட, ஒரு கொள்கைப் போராளியுடன் மாறுபட்டு நிற்கிறோம் என்கின்ற பெருமையோடு போராடிய வரலாறும் எங்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த சபாநாயகர் நாற்காலி, இன்று எவ்வளவு கீழ்த்தரமாக அசிங்கப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றம் இன்று பதிவு செய்துகொள்கிறது. இது ஒரு சாதாரண நாற்காலி அல்ல. இந்த மேடைக்கு வந்திருக்கின்றவர்கள், இந்த நாட்டு மக்களின் அனுமதியை ஜனநாயகத்தின் அடிப்படையில் பெற்று வந்திருக்கிறோம். இந்த அவையிலே இருக்கிற ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு மணித் துளியும், இங்கிருக்கிற ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தமிழகத்தில் இருக்கிற ஏழு கோடி வாக்காளப் பெருமக்களுக்குப் பொறுப்புச் சொல்லி, கணக்குக் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். அப்படிப்பட்ட அவையிலே, ஏதோ சிறுபிள்ளைத்தனமாக—சிறுபிள்ளைத்தனம் என்றுகூட நான் சொல்லமாட்டேன், ஒரு கேலிக்கூத்தாக்குகின்ற வகையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவது, அதை மேசையிலே போடுவது, அதை முன்மொழியச் சொன்னால் பேசாமல் எழுந்து நிற்பது, விவாதிக்கக் கூப்பிட்டால் வெளிநடப்புச் செய்வது, இது எவ்வளவு பெரிய ஆபாசக் கூத்து? இதை ஜனநாயகத்தினுடைய கேலிக்கூத்து என்று சொல்வதைவிட, இந்த ஜனநாயகத்தையே நகைப்புக்குள்ளாக்குகிற ஒரு பெரிய குற்றத்தை இன்று பிரதான எதிர்க்கட்சி செய்திருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்மைப் பொறுத்தவரை, சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்



வரக்கூடாது என்பது நம்முடைய வாதம் அல்ல. இதில் அவர்களுடைய வாதத்தைப் பதிவு செய்யக்கூடாது என்பது வாதமல்ல. ஆனால் இந்த மன்றத்திலே நாம் கொடுக்கின்ற ஒவ்வொரு தீர்மானத்திற்கும், நாம் பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தைக்கும், ஒவ்வொரு அசைவுக்கும் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றையதினம் மிக முக்கியமான வேளாண்மைத் துறையினுடைய மானியக் கோரிக்கை வரவேண்டிய நேரம். தமிழகத்திலேயிருக்கிற 70, 80 விழுக்காடு விவசாயிகளுடைய பிரச்சினைகளை இந்த மன்றம் விவாதித்து, அதற்கு முடிவு சொல்ல வேண்டிய நேரம். அந்தப் பொன்னான நேரத்தை, விளையாட்டுத்தனமாக, சிறுபிள்ளைத்தனமாக, முதிர்ச்சியற்ற விதமாக—நான் இன்னும் ஆளுநர் உரையின்மீது என்னுடைய விவாதத்திலே சொன்னேன். இதை ஒரு சட்டமன்ற பயங்கரவாதம் என்றே நான் சொன்னேன். சட்டமன்றத்தின் நடவடிக்கைகளில் இருக்கின்ற அந்த விதிகளைத் தங்களுடைய குறுகிய அரசியல் இலாபத்திற்காக, சுய நல நோக்கத்திற்காக, எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பயன்படுத்துவது தமிழகத்திலே இருக்கிற ஏழு கோடி மக்களுக்குச் செய்கின்ற துரோகம்.

சில செய்திகள்; இந்த மன்றத்திலே நானும் மூன்றாவது முறையாக இங்கே உறுப்பினராக இருக்கிறேன். இதே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்றபோது, எதிர்க்கட்சியில் இருந்திருக்கிறேன், இங்கிருக்கிற நம்முடைய அண்ணன் திரு. சுதர்சனம் அவர்கள் அப்போது இருந்திருக்கிறார். பல்வேறு நண்பர்களும், நாங்களும் அப்போது இருந்திருக்கிறோம். என்னுடைய அருமை நண்பர் இளம்வழுதியும், நானும், மணிக்கணக்காக எங்களுடைய வாசமே, எங்கள் இரண்டு பேருக்கும் வராண்டாதான். சட்டசபை துவங்கியவுடன் முதலில் வெளியே அனுப்பப்படுகின்றவர் அவர். இரண்டாவது வெளியே அனுப்பப்படுகின்றவன் நான். வெகு நாட்களாக மாண்புமிகு பரிதி இளம்வழுதி இந்தச் சட்டமன்றத்திற்கு வேட்டி கட்டித்தான் வருவார். ஆனால் வேட்டி கட்டினால் பாதுகாப்பு இல்லையென்று சொல்லி, அதற்குப் பிறகுதான் நான்தான் ஒரு நாள் சொன்னேன். இனிமேல் வேட்டி கட்டிக்கொண்டு வராதீர்கள். இனிமேல் Pant போட்டுக்கொண்டு வாருங்கள் என்று சொன்னேன். ஒரு நாள் இரவு முழுவதும் இந்த மன்றத்திற்குள்ளே எங்களை அடைத்து வைத்து இருந்தார்கள். இரவு முழுவதும் மின்சாரம் இல்லை, air-condition இல்லை, காற்று இல்லை. சற்று நேரம் கழித்து, இங்கிருக்கிற கழிப்பறையிலே தண்ணீரைக்கூட நிறுத்திவிட்டார்கள்.

உடனே நாங்கள் இங்கிருந்து ஆளுநருக்குத் தகவல் கொடுத்து, டெல்லிக்கு ஜனாதிபதிக்குத் தகவல் கொடுத்து, அதற்குப் பிறகு இந்த மன்றத்திற்குள்ளே air-condition-ஐயும், தண்ணீரையும் கொடுத்தார்கள்.

*முற்பகல் 10–25*

நான் இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைக்காக தென்காசியிலிருந்து காலையில் ஆறு மணிக்கு வந்து இறங்குகிறேன். எக்மோர் நிலையத்திலிருந்து பஸ்ஸில் ஏறி நம்முடைய சட்டமன்ற விடுதிக்குக் கிழே வந்து இறங்குகிறேன். விடிந்தும், விடியாத வேளை, ஐந்தரை மணி. சட்டமன்றத்தினுடைய வளாகம், சட்டமன்றத்தின் வாசலுக்கு நேர் எதிரே ஒரு Police outpost. என்னை ஆறு பேர் குண்டாந்தடியால் தாக்குகிறார்கள், எப்படி நீ சட்டமன்றத்தில் பேசுவாய் என்று. நான் அவர்களை எதிர்த்துப் போராடினேன். இங்கே வந்து சபாநாயகராக அன்று இருந்த திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களிடம் நான் புகார் கொடுத்தேன். அந்தப் புகாரையும் வாங்கிக் கொண்டு என்னை அன்றையதினம் அவையிலிருந்து வெளியே அனுப்பிவிட்டு என்ன பதிவு செய்தார்கள் தெரியுமா? நான் இல்லாத நேரத்தில்—1 மாதம் என்னை நீக்கி வைத்திருந்தார்கள். எனக்காக, நான் உள்ளே வரவேண்டும் என்பதற்காக, எங்களது காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள் நம்முடைய சென்னை எழிலகத்திலே. நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்று எனக்காக ஒரு அறிக்கை வெளியிட்டு, அவர்கள் தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார். அப்போது நாங்கள் அவர்களுக்கு எதிர்க்கட்சியாகக்கூட இருந்திருக்கிறோம். அந்த நேரத்திலே, இங்கே வந்து நாங்கள் அவையிலே இல்லாத நேரத்திலே, என்னை ஏன் தாக்கினார்கள் என்று பதிவு செய்தார்கள். நீங்கள் அந்த அவைக் குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். ஒரு பெட்ரோல் பங்க் வந்ததாகவும், அந்த பெட்ரோல் பங்கை நான் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி, அவர்களிடம் பணம் கேட்டு வாங்கிக்கொண்டதாகவும், அந்தப் பணத்தை நான் திரும்பத் தராத காரணத்தினால், என்னைச் சட்டமன்றத்திற்குள்ளே வந்து அடிக்க வந்ததாக அவர்களே ஒரு நபரை விட்டுப் பேச வைத்து இந்த அவையிலே பதிவு செய்துகொண்டார்கள். நான் சொன்னேன், அவையிலே இல்லாத என்னைப் பற்றி அவையிலே பதிவு செய்வது முறையல்ல. சட்டமன்றத்தின் விதிகளுக்கு முரணானது அப்படிப் பதிவு



செய்யக்கூடாது என்று நான் பதில் மனு, ஆட்சேபனை மனு எழுதிக் கொடுத்தேன். அதைக்கூட அவர்கள் பதிவு செய்யவில்லை. இன்றும் என்னுடைய அரசியல் வாழ்க்கையினுடைய அவமானச் சின்னமாக இந்த அவையினுடைய குறிப்பிலே அது இருக்கிறது. 40 ஆண்டு காலமாக பெருந்தலைவர் காமராஜருடைய மாணவனாக, எங்கள் அன்புத் தலைவர் மூப்பனாருடைய அடியொற்றி நான் நடந்து வந்தவன். இன்று ஒரு கறைபட்ட வரலாற்றோடு இந்தச் சட்டமன்றத்திலே நான் நிற்கின்றேன். என்ன காரணம்? அ.தி.மு.க. அரசை எதிர்த்துப் பேசினேன் என்பதற்காக.

இந்த சபாநாயகர் அப்படி எல்லாம் செய்யவில்லை. அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏதாவது இந்த அவையிலே நடந்ததா? இன்னும் 60 நாட்கள் முடியவில்லை. இரண்டாவது கூட்டத்தொடர் நடக்கிறது. ஏறக்குறைய நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல, அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் சொன்னதுபோல, தன்னந்தனியாக வந்து இரண்டு மணி நேரம் பேசிவிட்டுச் சென்றார் முன்னாள் முதலமைச்சர். 52 மணி நேரம் விவாதம் நடந்திருக்கிறது நிதிநிலை அறிக்கையின்மீது. இவர்கள் எத்தனை பேர் பேசியிருக்கிறார்கள்? இன்று தேர்தலுக்கு நாள் குறித்திருக்கிறீர்கள், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற பல்வேறு குழுக்களுக்கு. அதைக் கணக்கிட்டுக் கொடுத்திருக்கின்றீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவு? ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை பேர் வர வேண்டும் என்பதை, எங்களிடம் கூப்பிட்டுக் கேட்டு, இந்தக் கணக்கு சரிதானே என்று கேட்டு, அவர்களுக்கும் கொடுத்திருக்கின்றீர்கள். எங்களுக்கும் கொடுத்திருக்கின்றீர்கள். இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லோருக்கும் கொடுத்திருக்கின்றீர்கள். இதில் என்ன குறைபாடு? எந்த விதி? ஒரு தீர்மானம் வரவேண்டும் என்று சொன்னால், அந்தத் தீர்மானம் சொல்ல வேண்டாமா? இதிலே எந்த வகையிலே இந்தச் சபாநாயகர் இந்த விதிகளுக்குப் புறம்பாக நடந்திருக்கிறார், ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்திருக்கிறார் அல்லது அவையினுடைய நடவடிக்கைகளையோ, உறுப்பினர்களுடைய நடவடிக்கைகளையோ குந்தகப்படுத்துகின்ற அளவிலே எந்த அளவில் நடந்திருக்கின்றார் என்று சொல்லாமல், ஒரு வார்த்தையிலே, ஒரே வார்த்தையில், திரு. ஆவுடையப்பனை பதவியை விட்டு நீக்க வேண்டும் என்று சொன்னால், இந்த ஆவுடையப்பன் யார்? அவர் உங்களிடம் சம்பளம் வாங்குகிறவரா? இந்த நாட்டிலே என்னிடம் வேலை பார்க்கிற

ஒருவரைக்கூட வெளியே போகச் சொல்வதற்குக் காரணம் வேண்டும். ஆனால், 7 கோடி மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கின்ற, இந்த அரசியல் சாசன மன்றத்தினுடைய அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்ற, சட்டமன்றத்தின் சபாநாயகராக (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கிற உங்களை ஒரு கால் கடிதாசிமூலம் வீட்டுக்கு அனுப்புவேன் என்று சொன்னால், இவர்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள்? இந்த நாட்டின் ஜனநாயகம் இவர்களுக்கு ஒட்டுமொத்தக் குத்தகையா? அல்லது இந்த நாட்டிலே எல்லோரும் அடிமை சாசனம் எழுதிக் கொடுத்திருக்கிறோமா? இதையெல்லாம் நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

எனவேதான், எங்களின் பெருமைக்குரிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சபாநாயகர் செல்லப்பாண்டியன் மரபு கொண்டவர் எங்களுடைய சபாநாயகர். எனக்கு ஒரு பெருமை உண்டு. அவர்கள் அமருகின்ற அன்று வாழ்த்துகின்ற அந்த வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. இன்று அதைப் பேசுகின்ற வாய்ப்பினை எங்கள் அண்ணன் சுதர்சனம் அவர்கள் எனக்குத் தந்திருக்கிறார்கள். நானும், அவரும் சக மாணாக்கர்கள். ஐயா செல்லப்பாண்டியன் அவர்களுடைய பாசறையிலே பயின்றவர்கள். நாங்கள் செல்லப்பாண்டியனுடைய மாணாக்கர்கள் என்று சொல்வதிலே எங்களுக்குப் பெருமை உண்டு. நிச்சயமாக, உங்களுடைய பதவிக் காலத்தில் நீங்கள் ஐயா செல்லப்பாண்டியன் அவர்களுக்குப் புகழ் சேர்ப்பீர்கள். கலைஞர் அவர்களுடைய பாதுகாப்பும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆதரவும், எங்களைப்போல ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நல்ல கட்சிகளுடைய தோழமையும் உங்களுக்கு இருக்கிறது. எனவே, நீங்கள் வரவேண்டும், தலைமை ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அ.தி.மு.க. உறுப்பினர் தம்பிதுரை அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது எங்களுடைய கருத்துகளையும் சொல்வதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.



இது வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றம். ஆறரைக் கோடி தமிழ் மக்களும், இந்தியத் திருநாட்டு மக்கள் எல்லாமும் போற்றக்கூடிய மிகப் பெரிய மாமன்றம். இந்த மன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று சொன்னால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் யாரால் கொண்டு வரப்படுகின்றது? எதற்காகக் கொண்டு வரப்படுகிறது? எந்த நிலையில், எந்தப் பொருள் குறித்து அவசரமாகக் கொண்டு வரப்படுகிறது என்பதையெல்லாம் எண்ணிப் பார்ப்பவர்களா என்பதை நாம் முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 10–30*

தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசில் பொறுப்பேற்றிருக்கிற நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் இரண்டாவது கூட்டத் தொடரிலே பங்கேற்கிறார், தலைமையேற்கிறார். ஒரு வார காலம் ஆளுநர் உரைமீதான விவாதத்தை முடித்து, இரண்டாவது கட்டமாக ஒரு வாரம் முடிந்த நிலை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற ஒன்றைக் கொண்டு வந்து, அதில் எதையாவது பேசலாம் என்று இங்கே நினைத்தவர்கள் அ.தி.மு.க.வினர் என்பதைச் சொல்லக்கூடிய வேளையில், அவர்களைப் பற்றி இந்தச் சட்டமன்றத்திலே நெடிய வரலாறு இருக்கிறது. அதைத்தான் எனக்கு முன்னாலே எடுத்து வைத்த மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். கொண்டு வருவது யார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, கொண்டு வந்தவர்கள் அதை நிலைநிறுத்தினார்களா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கிறோம். இல்லை. ஆகவே, இதையெல்லாம் பார்க்கின்றபோது, நாடகமாடியவர்கள்--அதிலும் குறிப்பாக, இந்த மாமன்றத்தில் இன்று கபட நாடகமாட முற்பட்டார்கள், அது நிறைவேறவில்லை. அந்தக் கபட நாடகமும் தோல்வியுற்று, வெளியேறியிருக்கிறார்கள். வள்ளுவர் அழகாகச் சொல்வார்:

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு."

ஆகவே, எடுத்தான், கவிழ்த்தான் என்ற போக்கிலே, எதையும் அறியாமல் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்துவிட்டு, அது நிறைவேறாது. வாய்ப்பில்லை என்ற காரணத்தினாலேதான், வழுக்கி விழுந்தவன்போல வேறு வழியில்லாமல், வெளியேறுகிறோம் என்று வெளியேறியிருக்கிறார்கள்.

எண்ணிப் பார்க்கிறோம், கடந்த காலத்திலே, அ.தி.மு.க. ஆட்சியிலே இந்த மன்றத்திலே நாங்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருந்தவர்கள். இன்றும் இருக்கிறோம். அந்த அ.தி.மு.க. ஆட்சிக்கு முன்பு, 1996–லிருந்து 2001 வரையிலான தி.மு.க. ஆட்சி, அதிலும் குறிப்பாக மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேயும் நாங்கள் இருந்தவர்கள். இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், அன்று 1996–லிருந்து இருந்த தி.மு.க. ஆட்சியிலே அப்போது பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் அவைத் தலைவர். எந்த வகையிலே நடந்துகொண்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கிறேன். அ.தி.மு.க. வரிசையிலே நான்கு பேர் இருந்தார்கள். அந்த நான்கு பேரும் பேசாத வார்த்தைகள் இல்லை. இந்த மாமன்றத்தில் கருப்புப் பதாகைகளைத் தாங்கி வந்தார்கள். அனுமதிக்கக்கூடாது, இருந்தாலுங்கூட தி.மு.க. அமைச்சரவை என்ற காரணத்தினாலே, கண்ணியம் மிக்கவர்கள் என்ற காரணத்தினாலே அன்றைய பேரவைத் தலைவர் அவர்கள் அதையும் அனுமதித்தார், பேசவும் அனுமதித்தார்.

சில நேரங்களிலே, பேரவைத் தலைவராக இருந்த மாண்புமிகு பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் கண்டித்தாலுங்கூட, ஜனநாயகத்துக்கு மெருகூட்டக்கூடிய வகையில் அன்றைய முதலமைச்சராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள், இல்லை, இல்லை, நான்கு பேராக இருந்தாலும் பேச அனுமதியுங்கள் என்று சொல்லி, வாய்ப்பினைக் கொடுப்பார்கள். ஆகவே, 1996–லிருந்து 2001 வரையிலே இந்தச் சட்டமன்றம் ஜனநாயக நெறிமுறைகளோடு நடந்த வரலாற்றை நாம் கண்டோம்.

அதற்குப் பிறகு, 2001–லிருந்து 2006 வரையிலே அ.தி.மு.க. இங்கே பேரவைத் தலைவர் என்ன செய்தார்? எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற நாங்கள் எல்லாம் பேச முற்பட்டால், அனுமதி கேட்டால், அனுமதி மறுப்பார். அதை வாய் திறந்துகூட சொல்ல மாட்டார். தலையையே அசைத்துவிடுவார். இன்னும், தலையசைத்தும் அனுமதி கேட்டால், எங்கள் பக்கம் திரும்பியே பார்க்கமாட்டார். சரி அது ஒரு புறம் இருக்க, பேச முற்பட்டால், எங்களை வெளியேற்றுவார்கள். இன்னும் நாங்கள் வெளியேறாமல் அமர்ந்திருந்தாலுங்கூட, பேரவைத் தலைவர் சொல்வார், அன்றைய முதலமைச்சராக இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அம்மையார் சொல்வார், என்ன தெரியுமா? பேசுவதற்கு ஆரம்பித்தவுடனே, என்ன நீங்கள் எல்லாம் வெளிநடப்புப் பண்ணுகிறீர்களா? ஒரு முதலமைச்சராக இருப்பவர், எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் யாரும் வெளியிலே செல்லக்கூடாது,



அமர்ந்திருக்க வேண்டும், விவாதத்தைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்று நினைக்கக்கூடிய முதலமைச்சராக இருக்க வேண்டியவர், 'என்ன மணி, நீங்கள் வெளிநடப்புப் பண்ணவில்லையா?' எஸ்.ஆர்.பி.யைப் பார்த்துக் கேட்பார்கள், 'எஸ்.ஆர்.பி., வெளியே போகவில்லையா?' இதுதான் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் செய்கிற செயலா? ஆகவே, அப்படி வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்று அவர்களே சொல்வார்கள். நாங்கள் வெளியேற வேண்டுமென்று நினைப்பார்கள், வெளியேற்றுவார்கள். எப்படி? இப்போது சொன்னார்களே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பெண் உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த பெண் உறுப்பினர்கள் எல்லாம் உண்மையைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நான் முடித்துவிடுகிறேன். ** அப்போது அவர்கள் தரக்குறைவாக நடத்தினார்கள் என்று சொன்னார்கள், மறுத்தார்கள். எண்ணிப் பார்க்க வேண்டும், அப்படியெல்லாம் செய்யவில்லை. கடந்த ஆட்சிக் காலத்திலே குண்டுக்கட்டாக வெளியிலே தூக்கிப் போடுவார்கள். தொலைக்காட்சியிலே பார்த்தோம். எத்தனை முறையெல்லாம் தூக்கிக்கொண்டு போனார்கள்? அந்தச் சம்பவம் இந்த மன்றத்திலே நேற்று நடந்ததா? இல்லை. அதுமட்டுமல்ல, சட்டமன்ற நாட்களில் எதிர்க்கட்சியே உள்ளே இருக்கக்கூடாது என்ற நிலைப்பாடு உடையவர்கள். இன்று என்ன நடந்துகொண்டிருக்கிறது? நேற்று இரண்டு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் அளித்தார்கள். பதில் அளித்த பிறகு பேசுவதற்கு வாய்ப்பே தரமாட்டார்கள் கடந்த ஆட்சியிலே. ஆனால் அ.தி.மு.க சார்பிலே 6 பேரை அனுமதித்த மகத்தான தலைவர்தான் நம்முடைய பேரவைத் தலைவர். 6 பேரைப் பேச அனுமதித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் நடவடிக்கைகளை நாம் கூர்ந்து கவனித்துக்கொண்டு இருக்கிறோம். அமைச்சர்களுக்குக்கூட சரியாக அனுமதி வழங்குவதில்லை. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்குவது இல்லை. தோழமைக் கட்சிகளாக இருக்கிற எங்களைப் போன்ற கட்சித் தலைவர்களுக்குக்கூட அனுமதியில்லை. உட்காருங்கள், உட்காருங்கள் என்று சொல்லிவிட்டு, எதிர்க்கட்சியாக இருக்கிற அ.தி.மு.க.வுக்கு அனுமதி கொடுத்துக்கொண்டு இருக்கிறார். ஆக,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இப்படிப்பட்ட சட்டமன்ற ஜனநாயகம் இப்போது தழைத்துக்கொண்டு இருக்கிறது, நிலைத்துக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் யார் என்று சொன்னால், ஜனநாயகத்திலே நம்பிக்கையில்லாதவர்கள். ஜனநாயகத்தை எப்படியாவது சீர்குலைக்க வேண்டுமென்று சதித் திட்டம் போடக்கூடிய சதிகாரர்கள்—நாம் சதிகாரர்கள் என்று சொல்கிறோம். இந்த சதி என்பது தீவிரவாதத்திலேயும் வருகிறது. ஆனால் இது தீவிரவாதமல்லாத ஒரு வகைத் தீவிரவாதம் என்றே நான் கருதுகிறேன். தீவிரவாதி துப்பாக்கி எடுக்கிறான், கத்தி எடுக்கிறான். ஆனால், அந்தத் துப்பாக்கி எடுப்பதைவிட, கத்தி எடுப்பதைவிட இது மிகப் பெரிய தீவிரவாதச் செயல். இது கண்டிக்கத்தக்கது என்பதை நான் இங்கே பகிரங்கமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஜனநாயகத்திலே நம்பிக்கையில்லாத சதிகாரக் கும்பல் (மணியடிக்கப்பெற்றது) இந்த வகையிலே செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவர்கள் சொன்னார்கள், ** மாண்புமிகு பெண் உறுப்பினர். சரி, இப்போது ** பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது என்று கேட்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் யார்? (மேசையைத் தட்டும் ஒலி) ** கொச்சைப்படுத்தியவர்கள் யார்? எண்ணிப் பார்க்க வேண்டாமா? இன்றைக்கு ** நீலிக் கண்ணீர் வடிப்பதா? ** இட ஒதுக்கீடு என்று கேட்டால், முடியாது, பேசாதே, உட்காருங்கள் என்று சொன்னவர்தான் முன்னாள் முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர். ஆகவே, இப்படிப்பட்டவர்கள் ** என்று சொல்லி நீலிக் கண்ணீர் வடிக்கக்கூடாது. இன்று சிறுபான்மைகளுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று முன்னால் குரல் கொடுத்தவர், இந்த சிறுபான்மைகளுக்கு, இஸ்லாமியர்களுக்கும், கிருஸ்தவர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருக்கிற சிறுபான்மைக்கு ஆதரவாக இருக்கிற அரசுதான், இந்த அரசும், முதலமைச்சர் அவர்களும் என்பதை நான் இங்கே பட்டியலிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; இங்கே—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஜி.கே. மணி:** சீக்கிரம் உரையை முடித்து விடுகிறேன். நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. சிலவற்றையெல்லாம் சொல்லியாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏனென்றால், மானியக் கோரிக்கை இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** இங்கே பேசுவதற்குக் கவன ஈர்ப்பு அறிவிப்பு இரண்டு பேர் கொடுக்கிறார்கள்—கவன ஈர்ப்பு அறிவிப்பே கடந்த காலங்களிலே எடுக்கமாட்டார்கள், கடந்த ஆட்சியிலே—எடுக்கப்படுகிறது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அ.தி.மு.க., அந்த உறுப்பினர் பற்றி, இந்த ஆட்சியில் இல்லை, அந்த ஆட்சியிலேயே சொல்வார்கள் எப்படிப்பட்டவர் என்று, அவர் பேச எழுந்தாலே அ.தி.மு.க. அமைச்சர்களும், உறுப்பினர்களும், உட்காருங்கள் என்று நையாண்டி, கிண்டல் பண்ணுவார்கள் அந்தக் காலத்திலே. அவர் பேச முற்படுகிறார். அவருக்குப் பேச அனுமதி வழங்க வேண்டும் என்று சொன்னவர் இன்றைய முதலமைச்சர். பாண்டுரங்கன் அவர்களை அனுமதித்தவர் பேரவைத் தலைவர். சட்டமன்ற ஜனநாயகம் எப்படிக் காக்கப்படுகிறது? ஆகவே, இப்படி நல்ல நிலையிலே போய்க்கொண்டு இருக்கிற இந்தச் சட்டமன்றத்தைச் சீர்குலைக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான், எந்தவித ஆதாரமும் இல்லாமல், எந்தவித முகாந்திரமும் இல்லாமல், இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது வன்மையான கண்டனத்திற்குரியது என்று சொல்லி, நான் பகிரங்கமாகக் கண்டிக்கிறேன். அதே நேரத்தில் நம்முடைய... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கை எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மானமுள்ள தமிழர், ரோஷமுள்ள தமிழர், தன்மானமுள்ள தமிழர் என்ற காரணத்தினாலேதான், அதிலும் இங்கே இருக்கிற தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலேதான், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அரசு என்ற காரணத்தினால்தான், 14 நாட்களுக்கு முன்பே இந்தத் தீர்மானத்தைக் கொடுக்க வேண்டும் என்று இருந்தாலுங்கூட, அதையெல்லாம் கைவிட்டு—நேற்றுக் கொடுத்தார்கள்—விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிக்கலாம் என்று சொல்லி இன்றே எடுத்துக்கொண்டார்கள்.

அவை முன்னவர், மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் முன்மொழிந்தார்கள். இன்று ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் எல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறோம். நான் சொல்வது, ஜனநாயகத்தை அதல பாதாளத்தில் தள்ளிக்கொண்டிருப்பவர்கள், படுகுழியில் புதைத்துக்கொண்டிருப்பவர்கள் கொண்டு வந்த தீர்மானம் ஏற்புடையது அல்ல. அதை நிலைநாட்ட முடியாமல் வெளியேறியிருக்கிறார்கள். இந்தக் கபட நாடகத்தில் அவர்கள் தோல்வி கண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க.–வால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம், இந்தத் தீர்மானம் நிறைவேறாது, நிறைவேறாது. பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வாருங்கள், தலைமையேற்று அவையை நடத்தித் தாருங்கள் என்பதைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தத் தீர்மானத்தை எதிர்த்து, அமர்கிறேன். நன்றி.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. உங்கள் கட்சியிலே பீட்டர் அல்போன்ஸ் கருத்தைச் சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, time ஆகிறது. வேளாண்மைத் துறை மானியம் என்பது பெரிய மானியம். கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள்மீது நம்பிக்கையில்லை என்கின்ற ஒரு தீர்மானத்தை அ.இ.அ.தி.மு.க. சார்பில், அதன் உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் இந்த அவையிலே முன்மொழிந்துவிட்டு, அதை எதிர்கொள்வதற்குத் துணிவு இல்லாமல் இந்த அவையைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். தாங்கள் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்று இன்னும் 90 நாட்கள்கூட முடிவடையாத ஒரு நிலையில், இடைப்பட்ட காலத்தில் கடந்த 5 ஆண்டு காலம் இந்தச் சட்டமன்ற ஜனநாயகமே முற்றிலும் சீர்குலைக்கப்பட்டு, மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை இந்த அவையில் எழுப்புவதற்கு வாய்ப்பே இல்லாமல்



சட்டமன்ற ஜனநாயகம் சீர்குலைக்கப்பட்டு, தங்களுடைய தலைமையிலே மீண்டும் இந்தச் சட்டமன்ற ஜனநாயகம் தழைத்தோங்குகிற வகையில் தங்களுடைய பணி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அ.இ.அ.தி.மு.க.–வைச் சார்ந்தவர்கள் தங்களுடைய மாவட்டச் செயலாளர்களை மாற்றுவதைப்போல பேரவைத் தலைவரையும் மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் தங்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது மந்திரிகள் இல்லை. மாவட்டச் செயலாளர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே அதுபோலக் கருதி ஒரு ** காரணத்தை இங்கே சொல்லி தங்கள்மீது நம்பிக்கையில்லை என்கின்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கடந்த 5 ஆண்டு காலமாக ஆளுகிற கட்சியின் பொறுப்பிலே இருந்துகொண்டு இந்தச் சபையிலே எதிர்த் தரப்பைச் சேர்ந்தவர்கள் மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல் தடுத்தார்கள். இன்றைக்கு நம்முடைய பெருமதிப்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் உருவாகியிருக்கிற இந்தப் புதிய அரசு தேர்தல் காலத்திலே சொல்லப்பட்ட வாக்குறுதிகளை எல்லாம் நடைமுறையில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த அறிக்கை, அரசினுடைய முடிவுகள் எல்லாம் அமலாகுமானால், தமிழ்நாட்டு மக்களின் பேராதரவு இந்த அரசுக்கு ஆதரவாக மாறிவிடுமென்கின்ற அச்சத்தின் காரணமாக இந்தச் சபை நடவடிக்கைகளைச் சீர்குலைக்க வேண்டுமென்கிற நோக்கத்தோடு இன்றைக்கு அண்ணா தி.மு.க....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கோவிந்தசாமி, அவர்கள் பேசுகிறபோது அந்தக் காரணம் தவறான காரணம் என்று சொல்வதற்கு பதில் ** காரணம் என்றார்கள். அந்த வார்த்தையை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிட ஆணையிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*முற்பகல் 10–45*

**திரு. சி. கோவிந்தசாமி:** அந்த வார்த்தையைத் திருத்திக்கொள்ளலாம். ஆகவே, இன்றைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களாகவும் இருந்து கொண்டு இந்த அவையை முறையாக நடத்தவிடாமல் தடுக்கிற நோக்கத்தோடு, சபை கூடிய நாளிலிருந்து தொடர்ந்து கூச்சலும், குழப்பமும் செய்து வரக்கூடிய நிகழ்ச்சியைப் பார்க்க முடிகிறது. அந்தச் சந்தர்ப்பத்திலேதான், சபையை முறையாக நடத்துவதற்கு அவர்கள் ஒத்துழைக்க மறுக்கிறபோது, அவையிலிருந்து வெளியேற வேண்டுமென்று தாங்கள் வேண்டுகோள் விடுக்கிறீர்கள். தங்கள் வேண்டுகோளை ஏற்று வெளியே செல்ல மறுக்கிறார்கள். அவைக்குள்ளே அமர்ந்து, சபையை முறையாக நடத்துவதற்கும் குந்தகம் ஏற்படுத்துகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் வெளியேயும் போகாமல், உள்ளேயும் இருந்து சபை நடவடிக்கைகளை நடத்துவதற்கு ஒத்துழைக்காத நிலையில் காவலர்கள் அவர்களை வெளியேற்றுகிற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இங்கேகூட நான் அருகிலே பார்த்துக்கொண்டுதான் இருந்தேன் அன்றையதினம். 3, 4 அ.தி.மு.க. பெண் உறுப்பினர்கள் இங்கே கடமையாற்ற வந்த பெண் காவலர்களிடத்தில், அந்தப் பெண் காவலர்கள் அவர்கள்மீது கையே வைக்கவில்லை. அவர்கள் கையைப் பிடித்துக்கூட அவர்களை வெளியே செல்லுங்கள் என்று இழுக்கவில்லை. வாயாலேதான் சொன்னார்கள். நான்கூட நினைத்தேன். இவ்வளவு ஒத்துழைக்காமல் கலகத்தில் ஈடுபடுகிறார்கள், பெண் காவலர்கள் அவர்களிடத்திலே பேசிக்கொண்டிருக்கிறார்களே என்றுகூட நான் அன்றைக்கு நினைத்தேன். அந்த அளவுக்கு மிகச் சுமுகமாக, அவர்களை வெளியே செல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் அன்றைக்கு வெளியே போன பிறகு, அன்றைக்கே, சட்டமன்றத்திற்குள்ளே அ.தி.மு.க. பெண் உறுப்பினர் தாக்கப்பட்டதாக ஒரு செய்தியை வெளியே சொன்னார்கள். பத்திரிகையாளர்கள்கூட நாங்கள் சபை முடிந்து வெளியே செல்கிறபோது, இதை ஒரு கேள்வியாக எங்களிடத்திலே கேட்டார்கள், சட்டமன்றத்திற்குள்ளே அ.தி.மு.க. பெண் உறுப்பினர் தாக்கப்பட்டதாகச் சொல்கிறார்களே என்று. நான் சொன்னேன், நாங்களும் சட்டமன்றத்திற்குள்ளேதான் இருக்கிறோம், அப்படி எந்த ஒரு தாக்குதல் நிகழ்வும் சபைக்குள்ளே நிகழவில்லை என்பதை அன்றைக்கே நான் சொன்னேன். ஆகவே, இப்படித் தேவையில்லாத பிரச்சினைகளைக் கிளப்பி, அதுவும் குறிப்பாக, பெண்களை முன்னிலைப்படுத்தி, **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்கிற சாயம் பூசி, இன்றைக்கு அரசியல் ஆதாயம் தேட நினைக்கக்கூடிய வகையிலே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அ.இ.அ.தி.மு.க. இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

ஆகவே, மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில்— பேரவைத் தலைவர் அவர்கள், இன்னும் சொல்லப் போனால், அவர்கள் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையிலே கூடுதலான நேரம்கூட அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறார்கள். அவர்கள் ஆட்சியிலே நடந்த பட்ஜெட் குறிப்புகளை எல்லாம் சொல்லி, இந்த பட்ஜெட்டில் பேசுவதற்கு மாறாக, அவர்கள் பட்ஜெட்டை விளக்கிக்கொண்டிருப்பதற்குக்கூட வாய்ப்பு அளிக்கிறார்கள். அந்த அளவுக்கு ஜனநாயகப் பூர்வமாக இந்தச் சபையைத் தாங்கள் நடத்திக்கொண்டிருக்கின்ற நேரத்தில், நம்பிக்கை இல்லை என்று அ.தி.மு.க. முன்மொழிந்திருக்கிற அந்தத் தீர்மானத்தைக் கடுமையாக ஆட்சேபிப்பதோடு, முழுமையாக அதை நிராகரிக்கின்றோம். மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி, பேரவைத் தலைவரான தங்கள்மீதும், இந்த அரசின்மீதும் ஆழமான நம்பிக்கை கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இதற்கு ஆதரவாக நிற்போம். நீங்கள் பேரவைத் தலைவராக இங்கே வந்து அமர்ந்து இந்தச் சபையினுடைய ஜனநாயகத்தைக் காக்கத் தொடர்ந்து பணியாற்ற வேண்டும், வர வேண்டுமென்று அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, கிட்டத்தட்ட இன்றைய மிக முக்கியமான மானியக் கோரிக்கையின்மீது நடைபெற வேண்டிய விவாதத்தின் நேரத்தில் 1¼ மணி நேரத்தை விரயமாக்கி இருக்கிறார்கள் அ.தி.மு.க. நண்பர்கள்.

குறிப்பாக, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகவே சொன்னார்கள். அவர் பேசிய குறிப்புகளை ஆழமாக எல்லோருமே கவனித்துக்கொண்டிருக்கிறோம். இப்படி ஒரு பேரவைத் தலைவர்மீது, தன்னுடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது, இப்படி ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து அவர்கள் பேசுகிறார்கள், பேசியவர்கள் இடையிலேயே வெளியேறிவிட்டார்கள். ஆனால் திரும்ப அதைப் பற்றிக் கருத்துச் சொல்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுடைய அந்தக் கருத்து உரை இருக்கிறதே, அதைத்தான் நான் யோசித்து, யோசித்துப் பார்த்தேன். இவ்வளவு நிதானமாக, பொறுமையாக, சகிப்புத் தன்மையோடு அந்தச் செய்திகளை சர்வ சாதாரணமாக அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்றுதான் நான் யோசித்துக்கொண்டே இருக்கிறேன். பேசுகிற என்னால் அப்படியெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாது. இயல்பாக இருக்கின்ற குணங்கள் அவை. ஆனால், அவர்கள் முன்னாலே இருந்த பேரவைத் தலைவர்களைப் பற்றியும், அவர்களுடைய சிறப்பான செயல்பாடுகளைப் பற்றியும், அதைப்போலவே நம்முடைய பேரவைத் தலைவரைப் பற்றியும், அவருடைய சிறந்த செயல்பாடுகளைப் பற்றியும் மிக அழகாக இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதுதான் இந்தச் சபையிலே இருக்கிற நாகரிகமான சிறந்த பண்பாட்டிற்குரிய ஒரு அடையாளமாக நான் கருதுகிறேன்.

நாகரிகத்தையும், பண்பாட்டையும்பற்றி பேசுவதற்குரிய வாய்ப்பு இப்போது வந்திருக்கிறது என்று சொல்கிறபோதுதான், நான் பல தடவை இந்த அவையிலே பதிய, வைத்த செய்தி, நமக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசியல் அனுபவம் உள்ளவர் என்ற காரணத்தினாலும், எல்லாவற்றுக்கும் மேலாக, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆற்றலுக்குச் சொந்தக்காரர் என்கிற காரணத்தினாலேயும், நான் தொடர்ந்து சொல்வது, (மேசையைத் தட்டும் ஒலி) மூளை பலம் மிக்க ஒரு முதல்வரின் தலைமையிலே பணியாற்றுவதிலே நான் பெருமைப்படுகிறேன் என்று 1996–லே சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதும் சொல்கிறேன். அப்படியானால், வேறு யாரையும், எதையும் கேட்பதாகத் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆகவே, இது பெருமை. இதை ஒரு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் சொல்கிறாரே என்றுகூட மற்றவர்கள் வெளியேகூட கருதலாம். ஆனால் இதே அவையிலேயே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 1996–லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை பல முறை பேசுவதற்குரிய வாய்ப்புக்கள் கிடைத்தபோதெல்லாம்—என்னுடைய பேச்சுக் குறிப்புகளை எடுத்துப் பார்த்திருக்கிறேன்—அநேகமாக, ஆட்சியைப் பற்றி விமர்சனங்களை நான் அதிகமாகச் செய்திருக்கிறேன். அதற்கான நேரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் சரி, நம்முடைய முதலமைச்சர் அவர்களும் சரி, அனுமதித்திருக்கிறார்கள் என்பதுதான் வரலாற்று உண்மை. எழுத்துப்பூர்வமாக இருக்கிற செய்தி



இது. ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, ஆதரித்துப் பேசுவதற்கே எழுந்தால்கூட—ஏனென்றால், நாங்கள் தோழமைக் கட்சியாக இருந்தவர்கள்—அதையே அவர்கள் புரிந்துகொள்ளாத காரணத்தினாலேயே அனுமதி மறுக்கப்பட்ட வரலாறு இந்த அவையிலே இருந்தது இப்படித்தான் இந்த அவை நடந்தது. ஆகவே, பிரதான எதிர்க்கட்சிப் பொறுப்பிலே வந்திருக்கிறவர்கள், அவர்கள் பொறுப்பாக நடந்துகொள்ளவில்லை என்பதுதான் எனக்கிருக்கிற வருத்தம்.

முற்பகல் 10–50

இந்த அவையிலே, சொற்போர் நடத்தலாமே தவிர, மற்போர் நடத்தக்கூடாது. சொற்போர் நடத்துவதற்குரிய அந்தத் தகுதி, அந்தத் திறமை, அதற்குரிய வாய்ப்பு எல்லாவற்றையும் உருவாக்கக்கூடிய அரசியல் கட்சியாக அதனுடைய உறுப்பினர்களாக வரவேண்டும் என்றுதான் மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, சொற்போர் நடத்துவதற்கு இந்த அவையைப் பயன்படுத்துகிறபொழுது, அந்த சொற்போரிலே எல்லா வகையிலும் சிறந்த முறையிலே பதில் சொல்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காத்திருக்கிறார்கள், எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால், அவற்றைச் செய்யத் துணிவில்லாமல், அதற்குரிய அந்த வாய்ப்பைப் பெறாதவர்களாக இருக்கிற காரணத்தினாலே, மற்போரிலே ஈடுபடுவதற்கான முயற்சிகளை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் எடுக்கிறார்கள் என்பது வேதனையான ஒன்று. ஆகவே, இப்பொழுதுகூட இந்தத் தீர்மானத்தைக் கொடுத்து—அவர்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாது என்பதற்கு ஒரு உதாரணம்—ஒரு குறிப்பிட்ட செய்தியைச் சொல்லி ஒரு 5 நிமிடங்கள் உருப்படியாக இந்தத் தீர்மானத்தின்மீது பேசுவதற்குரிய வாய்ப்பே அந்த உறுப்பினர்கள் யாரிடத்திலேயும் இல்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை. அவர்கள் அந்தச் செய்தியை இங்கே பதிவு செய்திருந்தாலாவது, நாட்டு மக்களுக்கு அவர்கள் என்ன சொல்ல முயற்சித்தார்கள் என்று தெரியலாம். தீர்மானத்தைக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், என்ன சொல்வது என்று தெரியாமலே விழிபிதுங்கினார்கள். விளையாட்டிலே போகிறபொழுது, run எடுப்பதற்கான முயற்சியை எடுத்தபொழுதே run out ஆகிப் போனதுபோல, அண்ணா தி.மு.க. இப்பொழுது வெளியேறிவிட்டது. அதுதான் இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது.

ஆகவே, பேரவைத் தலைவர் என்பவர் இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, இந்த அவையை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் *1996–2001* ஆம் ஆண்டு காலத்திலே இந்த அவையிலே உறுப்பினராக இருந்தபொழுது நானும் இருந்திருக்கிறேன், அவர்களுடைய செயல்பாடுகளையெல்லாம் கவனித்தவன், அவற்றை மதித்தவன். அவர் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். இந்த அவையை மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார். ஆகவே, எந்தப் பாரபட்சமும் இல்லாமல் இந்த அவை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்கு, நேற்றையதினம் இந்த அவையில் நடந்தது என்ன? Zero hour என்ற பெயராலே அனைத்து உறுப்பினர்களுமே அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்பு மீது அநேகமாக முழுமையாக உரையாற்றிவிட்டார்கள். நான் என்னுடைய நண்பர்களிடத்திலே பேசிக்கொண்டிருந்தேன். இப்படி ஒரு அனுமதி—எல்லாவற்றையுமே சொல்லிவிட்டார்களே என்றுகூட நான் இங்கே பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தேன். ஆகவே, அப்படி நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தார்கள். ஆனால், சென்ற ஆட்சிக் காலத்திலே அது நடைபெற்றதா? சென்ற பேரவைத் தலைவர் அனுமதித்தாரா? Zero hour–லே கருத்தைச் சொல்வதற்கு எழுந்தாலே, அவர் உட்காருங்கள், ஆய்விலே இருக்கிறது, என்னுடைய அறையில் சந்தியுங்கள் என்று சொல்லுவார். அறையிலே சந்தித்தால் அந்தப் பேரவைத் தலைவர் என்ன சொல்லுவார் தெரியுமா? சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. உங்களுக்குத் தெரியாதா சிவபுண்ணியம்? என் நிலைமை தெரியாதா? புரியாதா? இப்படித்தான் உறுப்பினர்களிடத்திலே சொன்னாரே தவிர, எதையும் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை அவரால் எடுக்கவே முடியாது என்பதுதான் அன்றைக்கு இருந்த நிலை.

இன்றைக்கு நடைபெற்றதிலே, குறிப்பாக நான் ஒன்றைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சகோதரி காயத்ரி தேவி அவர்கள் உண்மையைச் சொல்லிக்கொண்டிருந்தார். அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள், அவர் பேசிக்கொண்டிருக்கிறபொழுதே அருகிலே இருந்த அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த பெண் உறுப்பினர், அவருடைய கையைத் தட்டிவிட்டு அடித்தார். அதை நீங்கள் பார்த்தீர்களா,



என்னவென்று தெரியவில்லை. அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதற்குரிய உதாரணத்தை இன்றையதினமே இந்த அவையிலே நடத்திக் காட்டிவிட்டு, அவர்கள் வெளியேறுவதற்கான உத்தரவினைப் பிறப்பித்ததற்குப் பின்னாலே, அவர்கள் மறுக்கிறபொழுது, பெண் காவலர்களாலே வெளியேற்றுவதற்கான முயற்சியை எடுக்கிறபொழுது என்ன செய்திருப்பார்கள் என்பதற்கு உதாரணமாக, ஒரு சக உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறபொழுதே அவர்களுடைய நடவடிக்கை இந்த அவையிலே அப்படி அமைந்தது என்பதுதான் நான் சொல்லக்கூடிய செய்தி.

ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்தத் தீர்மானம் என்பது, நேரடியாக என்னுடைய முடிவைச் சொல்ல வேண்டுமானால், ஒரு அவசரக் கோலத்திலே, அரை வேக்காட்டுத்தனமாகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்பது என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எல்லா வகையிலும் நம்பிக்கைக்கு உரியவர். ஆகவே, அவர் வந்து இந்த அவையை சிறப்பாக நடத்த வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, இந்தக் கூட்டணிக் கட்சிகளுடைய மகத்தான ஆதரவின்மூலமாக, தொடர்ந்து 5 ஆண்டு காலம் சிறப்பாக வெற்றி நடைபோடும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதுணையாக இருக்கும். பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வந்து சிறப்பாக அவையை நடத்த வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி.

*முற்பகல் 10–5.5*

**Dr. OSCAR C. NIGLI:** Hon. Deputy Speaker Sir, two days ago, there was a talk about minority Government and they went on saying minority Government. The Leader of the House challenged them and said. 'You prove that it is a minority Government.' The proof was not there. Today they said that the minorities have been attacked. I want to ask just one question, from 2001 to 2006 what was the state of minorities in Tamil Nadu? There was fear among all the people here. Today, these people are talking about minorities. Does that mean as a minority, myself or my friend Thiru Peter Alphonse or

anybody who was a minority can behave in any manner we want and get away with it? This is what I ask. Even as a minority, we are subject to the same decorum, decency and dignity of this House. In fact I would say it is an aberration that a Motion of No Confidence has been moved against the Hon. Speaker.

Very often, Members point their fingers to the Hon. Speaker and speak. The convention of this House is that when the Speaker stands, all of us are not supposed to be standing; we are supposed to be seated. But this convention has been flouted all along and also I want to just ask how long are we going to go on with this as far as this is concerned. The amount of restraint that has been shown by the Speaker has been so tremendous and today we are talking about what the Speaker has done—whether it is democratic or not? I would say earlier—now we are talking about democracy. How can people who do not know the meaning of democracy, who only know the meaning of autocracy or mobocracy —these are two words which are very famous. Mobocracy — when you go as a group, threaten people, that is mobocracy. Autocracy is one person. So, that is why unfortunately, they are not used to saying 'No'; every time it is always 'Yes' outside the Assembly and today they cannot say 'Yes' in the Assembly.

Therefore, I would just like to say this, from all of us the Christians here in Tamil Nadu and the Anglo Indian community, that the minorities are safe and it is a mockery (Thumping of desks) if anybody goes against this. Therefore, I would say Sir, to our Hon. Speaker that it is a very sad reflection that such a motion of no confidence has been moved. It is our wish and prayer that this Speaker will, as our Hon. Chief Minister said, carry on for the next five years which is a great certificate. What more certificate can he expect from our Chief Minister ? With these few words Sir, I would like to say that this is a very sad reflection and all of us have expressed confidence in our Speaker. Thank you.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பொன்முடி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்க்கட்சி கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் அவர்கள் சொல்லியிருக்கிற குற்றச்சாட்டு, பதர் சயீத் அவர்கள் இங்கே தவறாக நடத்தப்பட்டார் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வாதம் எல்லாம்,



இந்தக் கட்சியினுடைய வரலாறு, அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுகள் எல்லாம், திரும்பத் திரும்ப இதையே சொல்லி அரசியல் நடத்துவதே வழக்கமாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது.

குறிப்பாக மே 1, 1988-ல் அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளர் ஜெயலலிதா அவர்கள், எம்.ஜி.ஆரினுடைய கொலைக்கே காரணம் மோரில் விஷம் கலக்கப்பட்டது என்று சொல்லி, அது பத்திரிகைகளிலே மே 1, 1988-லே வந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஆளுநர் சென்னா ரெட்டி எந்த அளவிற்கு வயதானவர்? அவரைப் பற்றி இதே சட்டமன்றத்திலேயே 1995 ஏப்ரல் 26-ல், அவர் பேசியிருக்கிற வார்த்தைகள்; "மேதகு ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் இங்கே தமிழகத்திற்கு நியமிக்கப்பட்ட புதிதில் அடிக்கடி சென்று அவரை நான் சந்தித்துக்கொண்டுதான் இருந்தேன். பல சந்தர்ப்பங்களில் நான் ராஜ்பவனத்திற்குச் சென்று அவரைச் சந்தித்திருக்கிறேன், ஆனால், 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நான் ராஜ்பவனத்திற்குச் சென்றபோது, அவர் என்னிடம் தவறான முறையில் நடந்துகொண்டார்; தகாத வார்த்தைகளைப் பேசினார்; என்னை அவமானப்படுத்தினார். எந்த ஆளுநரும் இதுவரையில் எந்த முதலமைச்சரிடமும் இப்படி நடந்துகொண்டு இருக்க முடியாது, இந்திய வரலாற்றிலேயே. இதையெல்லாம் வெளியே சொன்னால் நன்றாக இருக்காது என்பதற்காக இத்தனை நாட்கள் நான் வாளா இருந்தேன்". இது, ஆளுநராக இருந்த சென்னா ரெட்டிக்கு அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா கொடுத்த சர்ட்டிபிகேட்.

அதுமட்டுமல்ல, 1989-லே இதே முதலமைச்சர் இங்கே இருக்கிறபொழுது, எதிரிலே உட்கார்ந்துகொண்டு, தகராறுகளைச் செய்துவிட்டு, அன்றைய அமைச்சர் துரைமுருகன் என்னுடைய சேலையைப் பிடித்து இழுத்தார் என்று ஒரு நாடகத்தை ஆடிவிட்டு வெளியே சென்றார்கள். அந்த நாடகத்தை, நாடகம்தான் நடத்தினார்கள் என்பது, அப்போது அவர் கட்சியிலே இருந்த திருநாவுக்கரசு இதே சட்டமன்றத்திலேயே, திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகம் என்பதையும் நிரூபித்திருக்கிறார். ஆக, இதிலே ஒன்று புரிகிறது. இப்பொழுதுகூட, இந்த நாடகம் எதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அன்று துரைமுருகன்மீது பழி சுமத்திவிட்டு, நான் சட்டமன்றத்திற்கே வரவில்லை என்று சொல்லி ஒதுங்கிவிட்டார்கள். இப்பொழுது இங்கே இந்த நாடகத்தை உருவாக்கி, வெளியே மக்களிடம் சென்று, இங்கே எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொல்லி ஒதுங்கிக்கொள்ளலாம் என்ற திட்டத்தோடுகூட

இதைத் தீட்டி இருக்கலாம் என்றுகூட நான் கருதுகிறேன். இவர்களைப் பொறுத்தவரையில் இதைத்தான் அவர்கள் இங்கே செய்துகொண்டிருக்கிறார்கள். இங்கே அவர்கள் நடத்திய நாடகத்தை, இன்று நல்லவேளையாக திருநாவுக்கரசு போன்று அடுத்த கூட்டத்திலே சொல்வதற்குப் பதிலாக, பக்கத்திலே இருந்து பார்த்திருக்கிற சகோதரி மாண்பிற்குரிய டாக்டர் காயத்ரி அவர்களும், பாலபாரதி அவர்களும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இவற்றை எல்லாம் ஒப்பிட்டு நோக்குகிறபொழுது, திட்டமிட்டு, ஒரு கண்ணியம் மிக்க சபாநாயகரின்மீது ஒரு பழியைச் சுமத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு இதைச் செய்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மையாக இருக்கிறது. ஆக, சபாநாயகரைப் பொறுத்தவரையில், இதுவரையில் நானும் இந்தச் சட்டமன்றத்திலே இருந்திருக்கிறேன், எந்தக் காலத்திலாவது எதிர்க்கட்சித் தலைவர்கள் இரண்டு மணி நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிறார்களா? சொல்லச் சொல்லுங்கள். இரண்டு மணி நேரம் பேச வாய்ப்பளித்துவிட்டு, 53 பேர் குறுக்கிட்டார்கள் என்று சொல்லுகிற அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், நான் இதே சட்டமன்றத்திலே 15 நிமிடம் பேசுகிறபொழுது 23 முறை பேசியிருக்கிறார்கள்; மறுக்க முடியாத உண்மைகள், அவைக் குறிப்பிலே இருக்கிற உண்மைகள். ஆக, மிகவும் கண்ணியத்தோடு, அனைத்து உறுப்பினர்களுக்கும் வாய்ப்பினைக் கொடுத்து நடத்துகிற இந்த சபாநாயகரின்மீது நம்பிக்கையில்லை என்று சொன்னால், இதையே திட்டமிட்டு, ஒரு பொய்ப் பிரச்சாரம், ஒரு தவறான பிரச்சாரமாகத் தமிழகத்து மக்களிடையே கொண்டு செல்வதற்காகத்தான் அவர்கள் முயற்சி செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சொல்வதைப்போல, இன்றைய சபாநாயகர் கண்ணியத்தோடு, தந்தை பெரியார் வழியில் தன்மானத்தோடு, 14 நாட்கள் என்ன, இப்பொழுதே நான் இதை எதிர்கொள்கிறேன் என்று சொன்ன அவருடைய தைரியத்தைப் பாராட்டி, வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவரைக் குறித்து



எதிர்க்கட்சியின் சார்பில் கொண்டு வரப்பட்ட இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிற அந்தக் கட்டத்தில், முன்மொழிந்து பேசியவரே எல்லாக் காரணங்களையும், அல்லது அவர் நினைத்த காரணங்களை, அல்லது விரும்பிய காரணங்களை, அல்லது கற்பித்த காரணங்களை இங்கே சொல்வதற்கு முன் வராமல், இந்தத் தீர்மானம் வெற்றி பெறாது என்ற ஒரே அடிப்படையில், தன்னுடைய வாதம் எடுபடாது என்று உணர்நத காரணத்தால், தொடர்ந்து இநத விவாதம் நடைபெறுவதற்கு, தான் இந்த அவையிலே இருக்ககூடாது என்று திட்டமிட்டு, இந்த அவையைவிட்டு வெளியேறிவிட்டார்கள். அவர்களாக வெளியேறினார்கள் என்பதை நாடு அறியும். ஒரு வேளை அவர்களாக வெளியேறிவிட்டு, இந்த அவையிலே எங்களைப் பேசவிடவில்லை என்று சொன்னாலும் சொல்லக்கூடும். ஆனால், வெளியேறியது அவர்களாகத்தான். தீர்மானத்தை அனுமதித்தோம், பேசுவதற்கு அழைக்கப்பட்டார்கள், பேசவும் முற்பட்டார்கள்.

முறை தவறாக, சட்டமன்றத்திலேயே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைத் தவறான முறையில் இங்கே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த அவையினுடைய உறுப்பினராக இருக்கிற பதர் சயீத் அம்மையாரைக் குறித்து, அவர்கள் ஏதோ ஒரு வகையில் காவலர்களால் வெளியே அனுப்பப்பட்டபோது பாதிக்கப்பட்டார்கள் என்பதைச சொல்ல முற்பட்டவர்கள், ** இந்த அவை கேடு செய்து விட்டது, அல்லது துரோகம் செய்து விட்டது என்ற கருத்துப்பட பேசத் தொடங்கினார்கள், அது மறுக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளியேறுமாறு ஆணையிடப்பட்டு வெளியேறாத நிலையில் வெளியேற்றுவதற்கான கடமையிலே காவலர்கள் ஈடுபடுகிறபோது, மகளிர் காவலர்கள் சென்று அந்த அம்மையாரை வெளியே அனுப்பியபோது, அவர் ** என்று கருதுவதற்கு அவர்களால் முடியாது, அவர்களுக்கு அவ்வாறு கருத இயலாது. எல்லாவற்றையும்விட, இந்த அவையிலே உள்ள எந்த உறுப்பினராக இருந்தாலும், பெரும்பான்மைச் சமூகமோ, சிறுபான்மைச் சமூகமோ, ஆளுங்கட்சியோ, எதிர்க்கட்சியோ, பெரிய கட்சியோ, சின்னக் கட்சியோ, படித்தவர்களைக் கொண்ட கட்சியோ, பாட்டாளி மக்களைக் கொண்ட கட்சியோ, எந்தக் கட்சியாக இருந்தாலும், அத்தனை உறுப்பினர்களும் இங்கு சமம். இந்த அவையிலே உள்ளவர்களை discriminate செய்து வேறுபடுத்திப் பார்க்கிற மரபு இந்த அவைக்கு உரிய முறை அல்ல, இந்த அவையில் இடம் பெறவும் செய்யாது. வெளியேற்றுகிறபோதோ, அல்லது இந்த அவையிலேயிருந்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பணியாற்றுகிறபோதோ, எந்த நேரத்திலும் அந்த வேறுபாடு கருதப்படுவதற்கு இடம் இல்லை. அப்படி இந்த அவைக்குள்ளே இருக்கிற ஒருவரைப் பற்றி, அவர் இன்ன ** என்று சுட்டிக்காட்டிப் பேசுவதுகூட சட்டமன்ற மரபுக்கு மாறானது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இந்த அவையில் எந்தக் காலத்திலேயும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை இருக்கிற இந்த அவையில், தலைவர் கலைஞர் இருக்கிற இந்த அவையில், யாரையும், அவருடைய சமூக அடிப்படையிலே பிரித்துக் கருதுவதற்கோ, பிரித்துச் செயல்படுத்துவதற்கோ எண்ணப்படமாட்டாது. ஜனநாயக மரபை மீறிச் செயல்படமாட்டாது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். மற்றொன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நீண்ட காலக் கொள்கை, மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களை மதித்து நடத்துவதன்மூலமாகத்தான் நம்முடைய மதிப்பும் உயரும் என்பதாகும். அந்த எண்ணத்தோடு செயற்படும் கலைஞர், முதலமைச்சராக இருந்த கடந்த காலகட்டத்தில் அ.தி.மு.க.–வைச் சேர்ந்த உறுப்பினர்கள் நான்கு பேர் மட்டுமே இருந்தபோதும் இங்கே எவ்வளவு நேரம் பேசினார்கள், எத்தனை பிரச்சினைகளை எழுப்பினார்கள், அதற்கெல்லாம் அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால், அ.தி.மு.க.வினர் நான்கு பேராக இருந்தாலுங்கூட அவர்களுக்கு அந்த மதிப்பளித்திருக்கிறபோது, இவ்வளவு பேர் இருக்கிற இந்தக் காலத்தில் அவர்கட்கு மதிப்பு அளிக்காமலோ, வேண்டுமென்றே அவர்களைக் குறைவுபடுத்தியோ நடத்தவில்லை என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–0.5*

அந்த எதிர்க்கட்சியைச் சார்ந்த தலைவரும், அவரைச் சேர்ந்தவர்களும் உண்மையற்ற கருத்துகளைச் சொல்லி, முறைகேடான கருத்துகளைச் சொல்லி, இந்த அவையிலே ஒருவருக்கொருவர் வாதம் நடத்தி, அதிலே ஒரு வம்பு ஏற்படுமானால், அது தங்களுக்குப் பெருமை என்று கருதுகிறார்கள். அந்த மனப்பான்மை தவறு என்பதை நான் ஏற்கெனவே இங்கே பேசுகிறபோது சுட்டியிருக்கிறேன், இப்போதும் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் அவைத் தலைவர் அவர்கள்—பேரவைத் தலைவர் அவர்கள் சற்றுக் கண்டிப்பான முறையில் நடத்தி, கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. அவையை மொத்தமாகக் கட்டுப்படுத்துகிறபோது,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களையும் கட்டுப்படுத்துகிறார், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களையும் கட்டுப்படுத்துகிறார், அப்படிக் கட்டுப்படுத்துவதற்காகவே, இப்படி ஒரு எதிர்ப்பு உணர்வை, இந்த அவையிலே காட்டிக்கொள்வதற்காக, நம்பிக்கையில்லாத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டது என்று சொன்னாலும், இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை, இங்கே உள்ள மற்ற கட்சித் தலைவர்களெல்லாம் பேசுகிறபோது சொன்னதுபோல, எல்லோருக்கும் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. வாதத்திலே கலந்துகொண்டு, அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும் நிரம்பப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டு எதுவும் இல்லை. குற்றச்சாட்டு இல்லாத நிலையிலேயும், குற்றச்சாட்டுக்காக வாதாட முடியாத நிலையிலேயும் அவர்கள் தாமாக வெளியேறிவிட்ட நிலையில், இந்தத் தீர்மானம், இந்த அவையில், சட்டப்படி, நம்முடைய விதிமுறைப்படி கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்ற முறையில் இந்தத் தீர்மானத்தை, நான் எதிர்க்கிறேன் என்பதுடன், வாக்கெடுப்பு நடத்தி இந்த அவை தோற்கடித்துவிட்டது என்று பதிவு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையினுடைய துணைத் தலைவர் என்ற முறையில் 1989 ஆம் ஆண்டிலிருந்து இரண்டாண்டு காலம், நமது ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களால், பேரவையினுடைய துணைத் தலைவராக நியமிக்கப்பட்டவன் நான். ஒரு நாள் அவர்கள் என்னை அழைத்து, 'Speaker should not speak', அவையினுடைய இரு பக்கங்களிலும் என்ன வாதம் செய்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டியதுதான் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோருடைய பணியாக இருக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்கள். அன்றைய பேரவைத் தலைவரும், நானும் மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அறிவுரையை ஏற்று, அன்றைக்குச் சிறப்பாகச் செயல்பட்டோம். அதேபோல, பேரவையினுடைய முன்னவர், மாண்புமிகு பேராசிரியர் அவர்களுடைய அறிவுரையை ஏற்று அன்றைக்கு நாங்கள் செயல்பட்டோம். அத்தகைய தலைவர்களினுடைய பள்ளியிலே பயின்றவர்கள் நாங்கள். எங்கள்மீது இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள், முன்மொழிந்தவர்கள், வழிமொழிய வேண்டும் என்ற சட்டப் பிரிவுகூட தெரியாமல் இன்றைக்குத் தீர்மானத்தைக் கொண்டு வந்துவிட்டு வெளியே செல்கின்றபோது, பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு

வந்தவர்கள், பேரவைத் துணைத் தலைவராக தலைவர் இருக்கையில் இருக்கின்ற என்னைப் பார்த்து, 'இது சர்வாதிகாரப் போக்கு' என்ற அவர்களுடைய பேச்செல்லாம் கண்டிக்கக்கூடியதாக இருக்கிறது.

இரண்டாண்டு காலம் இந்த அவையினுடைய துணைத் தலைவராகவும், 6 ஆண்டு காலம் பாராளுமன்ற மேலவையிலும் நான் கற்ற என்னுடைய அனுபவத்திலிருந்து இதுபோன்ற செயல்களை நான் பார்த்ததே கிடையாது. பாராளுமன்ற ஜனநாயக முறைகளுக்கு எதிராக தினமும் 17 அமைச்சர்கள் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்ததன் ஒரே காரணத்தை வைத்துக்கொண்டு, 17 பேரும் எழுந்து நிற்கிறார்கள். ஆகவே, இந்தப் போக்கையெல்லாம் கண்டிக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தின்மூலமாக நமக்கு ஒரு விடை கிடைத்துவிட்டது. Minority அரசு என்பதற்கு விடை, இன்றைக்குத் தலைவர் கலைஞர் தலைமையிலே அமைந்திருக்கின்ற அரசு முழு majority அரசு என்பதை--தலைவர் அவர்கள் ஏற்கெனவே சுட்டியக்காட்டியதுபோல--இந்தத் தீர்மானம் தோல்வி அடையவிருப்பதன் மூலமாக நமக்குத் தெரிய வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் முனைவர் தம்பிதுரை அவர்களால் முன்மொழியப்பட்ட, "மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது." என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்க.

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

தீர்மானத்தை ஆதரிப்போர் ஒருவரும் இல்லை என்று கருதுகிறேன்.

தீர்மானத்தை ஆதரிப்போர் ஒருவரும் இல்லை என்பதால் தீர்மானம் ஒருமனதாகத் தோல்வியுற்றது.

அதாவது, உறுப்பினர் முனைவர் மு. தம்பிதுரை அவர்களால் முன்மொழியப்பட்டு, விவாதிக்கப்பட்ட தீர்மானம், ஆதரிப்போர் ஒருவரும் இன்றி பேரவையில் ஒருமனதாக மறுக்கப்படுகிறது என்பதை அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவைக்குள் வந்தார்.)

இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர்— (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-10

(மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் தலைவரது இருக்கையில் வந்து அமர்ந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசியல் உள்நோக்கத்தோடு அ.தி.மு.க.வினர் என்மீது தீர்மானத்தைக் கொண்டு வந்து அளித்தார்கள். நாட்டுக்கு உண்மை நிலை தெரிய இத்தீர்மானத்தைப் பெருமனதோடு இந்த அவை விவாதத்திற்கு ஏற்றது. ஆனால், அ.தி.மு.க.வினர் ஜனநாயகப் பண்போடு வலியுறுத்திப் பேச விரும்பாமல் வெளியேறிவிட்டனர். அவர்கள் நல்ல வாய்ப்புக்களை, ஜனநாயகப் பண்புகளைத் தொடர்ந்து இழந்துகொண்டே வருகின்றனர். இனி அ.தி.மு.க.வினர் அண்ணாவின் பண்புகளைப் பயில்வது நல்லது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்மீது கொண்டுள்ள பேரன்பினால், என்னைப் பற்றி உளமார, தாயினும் மேலாகப் பாராட்டி நல்ல கருத்துகளைத் தெரிவித்துள்ளார்கள். அந்தப் பேரன்பிற்கு நன்றி. அவரின் நல்லெண்ணத்திற்குத் தகுதி படைத்த தனயனாக, இந்த அவையினை நடுநிலை தவறாமல் நடத்துவேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் என்பால் நம்பிக்கை கொண்ட உறுப்பினர்களுக்கு என் உளமார்ந்த நன்றி. இனி இந்த அவையில் காழ்ப்புணர்ச்சி இல்லாமல், ஜனநாயகம் பூத்துக் குலுங்கும் என்று நம்புகின்றேன். கட்சிப் பாகுபாடு இல்லாமல் இந்த அவையை நடத்தும் என்னைப் பற்றி அவை நன்கு அறியும். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், முதல்வர் அவர்கள் உளமார என்னைப் பாராட்டி, என்னுடைய பண்புகளை எல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். அதேபோன்று, இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் என்னை உளமாரப் பாராட்டி, என்மீது நம்பிக்கை வைத்து இங்கே உரையாற்றினார்கள். எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### கோரிக்கை என் 5–வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை என் 5–வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.64,24,65,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் என் 58, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பாசன வசதியை மேம்படுத்த சொட்டு நீர்ப் பாசனத்திற்கு முழுமையான மானியம் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913 73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் என் 83, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் என் 260, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காங்கேயம் வறட்சியான தொகுதி. அதிலும் குறிப்பாக, குண்டடம் ஒன்றியப் பகுதி விவசாயிகள் வாழ்க்கை வளம் பெற, ஆடு, மாடு வாங்கி, பண்ணை அமைக்கக் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் என் 65, திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் என் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் என் 1179, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "தருமபுரி மாவட்டத்தில் அரூரில் உழவர் சந்தையும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரையில் உழவர் சந்தையும் அமைத்திடுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 433, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முந்திரிக்கு 1 மூட்டைக்கு ரூ.5,000/- விலை நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 513, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் கரும்புப் பயிர் அதிக அளவில் பயிரிடப்படுவதால், கரும்பு ஆராய்ச்சி மையம் ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 582, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.



**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் விவசாய விளைபொருட்கள் உற்பத்தி மேம்பாட்டுக்காக ஊர்கள்தோறும் சிமெண்ட் களம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 726, திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி தொகுதியில் விவசாயக் கருவிகள் விற்பனை மையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 798, திரு. கே.எல். இளவழகன்.

முற்பகல் 11-15

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் விவசாயிகள் காட்டாமணக்கு பயிரிடுவதற்கு ஆராய்ச்சி மையம் ஒன்று அமைத்துத் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 958, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், முருக்கம்பாடி கொட்டா சிமென்ட் கதிர் அடிக்கும் களம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1057, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 9 தொகுதிகளில் மையத்தில் உள்ள தொகுதி என்பதாலும், வேளாண் பெருமக்கள் அதிகம் உள்ளதாலும், பெரணமல்லூர் தொகுதியில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1118, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் சிற்றூராட்சியில் உழவர் சந்தை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1147, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழிற்சாலைகள் துவங்க மின் இணைப்பில் முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்குவதுபோல, முதன்மைத் தொழிலான வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பம்புசெட்டுக்கு இணைப்புக் கோரி விண்ணப்பித்துள்ள விவசாயிகள் அனைவருக்கும் மின் இணைப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 860, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1436, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரும்பு விவசாயிகளுக்கு மாநில அரசு வழங்கும் ஆதரவு விலை, தனியார் கரும்பு ஆலை விவசாயிகளுக்கும் கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1357, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்ட மலர் உற்பத்தி விவசாயிகளின் நலனுக்காக, அங்கே அரசு மலர் விற்பனை நிலையம் அமைப்பது குறித்து விவாதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1327, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாய வேளாண்மைக் கிடங்குகளிலும் உரம், பூச்சி மருந்து விற்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1321, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடியில் வேளாண் கல்லூரி அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1219, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.



***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டியிருக்கும் விவசாய விளை நிலங்களைக் காட்டு விலங்குகள் அழிப்பதைத் தடுக்க, அரசு சூரிய மின் வேலி (Solar Fencing) அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 644, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டையில் உள்ள தென்னை விவசாயிகளுக்கு இடுபொருட்களை மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 632, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 650, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 653, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 766, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், பரமத்தி–வேலூரில் உழவர் சந்தை தொடங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 791, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 836, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 849, திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 887, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிப்புத்தூர், கிருஷ்ணன் கோவிலில் கொய்யாப் பழங்களைப் பதப்படுத்த, குளிர்பதனக் கிடங்குகளுடன்கூடிய விற்பனை நிலையம் அமைப்பது பற்றிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 872, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு விதைப் பண்ணைகளை மேம்படுத்தி, விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வேளாண்மைத் துறைமூலம் விநியோகம் செய்ய வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 939, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 920, திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 994, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 909, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண் உயிரியல் பாதுகாப்புக் குழு அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 911, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1193, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1001, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1089, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியிலுள்ள காட்டாங்கொளத்தூர் மற்றும் திருப்போரூர் ஊராட்சிகளில் உள்ள கிராமப் பகுதிகளில் இயற்கை உரம் சேமித்து வைக்க, கிடங்கு அமைக்க அரசு முன்வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1039 திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1010 திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "எடப்பாடியில் அரசு உழவர் சந்தை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1035. திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட சூறாவளிக் காற்றால் பாதிப்படைந்த வாழை மற்றும் ரப்பர் பயிர்களுக்காக விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1205, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்குத் தரமான விதைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1250, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருளான விதைகளுக்கு மானியம் உரிய காலத்தில் வழங்கவும், அதில் ஊனமுற்றோர்களுக்கு முன்னுரிமை வழங்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1239, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல்லில் கோழி முட்டை மற்றும் விவசாயப் பொருட்களைத் தேக்கி வைத்து, நல்ல விலைக்கு விற்க குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1234, செல்வி கே. பாலபாரதி.

***செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் உற்பத்தி செய்யும் வெங்காயம், நிலக்கடலை போன்ற பொருட்களுக்கு நியாயமான விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 24, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி, திருப்பத்தூர், வேலூர், காட்பாடி, வாலாஜா, ஆற்காடு, அரக்கோணம் வட்டங்களில் ஈரியோபைட் நோயால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களைக் காப்பாற்ற இலவசமாக நவீன மருந்து தெளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 152, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 192, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 306, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகள் பயிரிடும் பொருட்களுக்கு விலையை விவசாயிகளே நிர்ணயம் செய்யும் முறையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 359, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 371, திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 388, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 375, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 477, திரு. இரா. துரைக்கண்ணு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 464, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் என் 466, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 484, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் என் 1290, திருமதி ஆர். பிரேமா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1509, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் தோட்டக்கலை அலுவலர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தருதல் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.64,24,65,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1502, திரு. இரா. குமரகுரு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1380, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1364, திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1302, திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 141 பக்கங்களைக் கொண்ட புத்தகம் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வேளாண்மைத் துறை கொள்கை விளக்கத்தினைக் குறித்து, 51 மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் 198 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் நானும் படித்து அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பும் எனக்குக் கிடைத்ததற்காக மகிழ்ச்சி

@ 151 முதல் 303 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



அடைவதோடு, இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. பேசுவோர் பட்டியலில், முதலில் திரு. கு. பாண்டுரங்கன், அவையில் இல்லை. திரு. என். மாலைராஜா.

***திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், வான் புகழ் கொண்ட வள்ளுவம், வளமான தமிழகத்தின் சூரியன், உலகத் தமிழினத்தின் காவலர், தமிழக முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்...."

என்றார் வள்ளலார். வாட்டமுற்ற ஏழை உழவர்களின் வாழ்க்கை ஏற்றமுற ஏற்ற திட்டமாய், உழவர் சந்தையை மீண்டும் கொணர்ந்து புத்துயிரூட்டிய சொல்லேர் உழவராம் தமிழக முதல்வருக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் ஆகியோர் உரையாற்றிய இந்த வரலாற்றுப் புகழ் மிக்க மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு, எனக்கு வாக்களித்து, என்னை வெற்றி பெறச் செய்த திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது வெற்றிக்காக உழைத்திட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிச் செயல் வீரர்களுக்கும், தற்போதைய சட்டப் பேரவைத் தலைவர், அப்போதைய மாவட்டக் கழகச் செயலாளர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தற்போதைய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்களுக்கும், கழக முன்னோடி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஏ.எல். சுப்பிரமணியன் அவர்களுக்கும், எனக்காகத் தேர்தல் பணியாற்றிய

ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

வரலாற்றுக் காப்பியமாக, இலட்சியப் படைப்பாக அமைந்துள்ள நிதிநிலை அறிக்கையை, நாட்டில் நல்ல உள்ளம் கொண்டோர் எல்லாம் பாராட்டுகின்றனர். இன்னும் சொல்லப் போனால், டாக்டர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இனமானப் பேராசிரியரால் திட்டமிடப்பட்டு, மெருகேற்றப்பட்ட நிதிநிலை அறிக்கை, சுமங்கலிப் பெண்ணாகக் காட்சி தந்துகொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை என்ற மணிமகுடத்தில் வேளாண்மைத் துறை கோகினூர் வைரமாக ஜொலிக்கிறது. எங்கள் நெல்லை மாவட்டம் இயற்கையிலே வீரம் விளைந்த மண். சுதந்திரத்திற்காக வித்திட்ட முதல் குரல் கொடுத்த மாவீரன் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி., புரட்சிக் கவிஞர் பாரதியார், அழகுமுத்துக்கோன், வீரன் சுந்தரலிங்கம், ஒண்டி வீரன், வீர வாஞ்சிநாதன் போன்ற எண்ணற்ற தீரர்களையும், தியாகிகளையும் தந்த மாவட்டம் எங்களது ஒன்றுபட்ட நெல்லை மாவட்டம். ஒரு நல்லவரின் பெருமையைச் சொல்ல வேண்டுமானால், தீயவர்களின் கொடுமைகளை, கொடுஞ்செயல்களைச் சொன்னால்தான் தெரியும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கடந்த ஐந்தாண்டு காலமாக அ.தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட பட்ஜெட் மக்கள் விரோத அவல நிலை பட்ஜெட் ஆகும். அந்த பட்ஜெட் பற்றிச் சொன்னால்தான், எல்லா மக்களும் பயன்பெறத்தக்க வகையில் ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை வகுப்பினர் ஏற்றம் பெற, வாழ்வு வளம் பெறும் வகையிலும் தீட்டப்பட்டுள்ள நம்முடைய நிதிநிலை அறிக்கை பற்றிய பெருமைகள் தெரியும். எனவேதான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 11–25

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். "களஞ்சியத்திலே புகுந்துகொண்டு களவாடித் தின்று கொழுத்த எலி, பொறியிலே சிக்கிவிட்ட பிறகு இரும்புக் கம்பிகளையும், தானியத்தைப்போன்று கொறித்துத் தள்ளிவிட முடியாது என்று தெரியாமல், தான் உயிர் பிழைக்க வேண்டுமென்று கம்பியைக் கடிப்பதும், பலகையைப் பிராண்டுவதும் போன்று முயற்சிகள் பல செய்தும், அதனால் என்ன ஆகிவிடப் போகிறது, வெற்றி பெற்று வரும் நம் போன்ற



சீர்திருத்தவாதிகளுக்கு அதெல்லாம் இலவசக் கண்காட்சி" என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அ.தி.மு.க. என்பது கூண்டுக்குள் சிக்கிய எலி. கடந்த ஆட்சியிலே விவசாயிகள் தஞ்சையில் பசி, பட்டினியோடு எலிக் கறி தின்ற அவலம், விஷம் குடித்து விவசாயி இறந்ததைச் சுட்டிக்காட்டிய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் தோழர் நல்லக்கண்ணுமீது உண்மைக்குப் புறம்பாக வழக்கு.

'உழவன் உள்ளத்தில் புயல் வீசினால் வயலில் வளம் காண இயலாது' என்றார் அறிஞர் அண்ணா. அதனை நினைவிற்கொண்டு, தமிழினத் தலைவர், ஏழை விவசாயிகளின் கடன் சுமையை நீக்கிட ரூ. 6,866 கோடி கூட்டுறவுக் கடன் தள்ளுபடி என்று அறிவித்துள்ளார். கூட்டுறவுக் கடன்களுக்கு 9 சதவிகிதம் வட்டியிலிருந்து 7 சதவிகித வட்டியாகக் குறைப்பு. மீண்டும் விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கடன் வழங்கிட ரூ.1,000 கோடி இந்த ஆண்டு ஒதுக்கீடு.

இன்று 3–8–2006 ஆடிப் பெருக்கு விழா. தமிழகமெங்கும் நதிகள் இருக்கும் இடங்களில் சீரும், சிறப்புமாகத் தமிழர்கள் கொண்டாடும் விழா. குறிப்பாக, காவிரி நதிக்கரைப் பகுதிகளில் கொண்டாடப்படுகிறது. ஆடி 18–ல் இடக்கூடிய வேளாண் இடுபொருட்கள் நல்ல மகசூல் தரும் என விவசாயிகள் நம்புகின்றனர்.

'ஆடிப் பட்டம் தேடி விதை' என்பதற்கு ஏதுவாக, தமிழினத் தலைவர் முதல்வர் அவர்கள் ஜூன் 12 ஆம் தேதியே காவிரியில் தண்ணீர் திறந்துவிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் சுமார் 17 ஆண்டுகளுக்குப் பின் ஜூன் 1 ஆம் தேதி பாபநாசம் அணை திறக்கப்பட்டு, மாவட்டத்தில் உள்ள ஆற்றோர விவசாயிகள் விதைவிட்டுள்ளனர் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1990 ஆம் ஆண்டில் கடும் நிதி நெருக்கடிக்கு இடையில் விவசாயிகளுக்கு பாரதத் திருநாட்டில் முதன்முதலாக இலவச மின்சாரம் தந்தவர் தமிழினத் தலைவர் அவர்கள். தலைவர் கலைஞர் குளித்தலை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, நங்கவரம் ஜமீனை எதிர்த்து அங்கு பணிபுரிந்து வந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுத்து, உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்று அன்றே அறிவித்தார். அதனைக் கருத்தில் கொண்டு, ஏழை விவசாயி வாழ்வு

வளம் பெற, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தலா 2 ஏக்கர் நிலம் தரப்படும் என்று இந்த அரசு அறிவித்துள்ளது.

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வு வளம் பெற நல வாரியம் அமைத்து பல்வேறு நலத் திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்த உறுதி ஏற்றுள்ள அரசு, தலைவர் அரசு. இரத்தினச் சுருக்கமாகச் சொன்னால் 'கருவறை முதல் கல்லறை வரை' என்று பல்வேறு நலத் திட்ட உதவிகளை விவசாயிகளுக்குச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ள அரசு, கலைஞர் அவர்களின் அரசு. மகப்பேறு உதவித் திட்டம், குழந்தைகள் உதவித் திட்டம், உயர் கல்வி பயில ஊக்கத் தொகை, விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகள் திருமண உதவித் திட்டம் போன்ற பல்வேறு பயனுள்ள, சிறப்பான, செம்மையான திட்டங்கள். விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய, உயரிய விலை கிடைத்திட உலகத் தரம் வாய்ந்த சேகரிப்பு மையங்கள், குளிர்விக்கும் சாதனங்கள், தரம் பிரித்துப் பதப்படுத்துதல் மற்றும் மின்னணு ஏல முறை போன்ற அனைத்து வசதிகளுடன்கூடிய மூன்று வணிக வளாகங்கள் சென்னை, கோவை, மதுரை போன்ற பெருநகரங்களில் உருவாக்குவதை வாழ்த்தி, வணங்கி, வரவேற்கும் வேளையில், எனது தொகுதியான திருநெல்வேலியிலும் ஓர் உலகத் தரம் வாய்ந்த வணிக வளாகம் அமைக்க மாண்புமிகு தமிழினத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதிகமான அளவு வாழை தென் மாவட்டங்களில் பயிரிடப்படுவதால், வாழைக்காய் பவுடர் தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஓர் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–30*

கண்ணிற்கு இனிமை தரும் வானவில்லின் நிறங்கள் ஏழு. மனதை மகிழ்விக்கும் இசையின் சுரங்கள் ஏழு. உயர் விளைச்சல் பெற விவசாய இடுபொருட்கள் ஏழு. விதை, உரம், பூச்சி மருந்து, நீர் மேலாண்மை, வேளாண்மைக் கருவிகள், கடன், தொழில்நுட்பங்கள், இவை அனைத்தும் உரிய காலத்தில் வழங்க உத்தரவிட்ட தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவுப் பஞ்சம் தமிழகத்தில் தலைவிரித்தாடியபோது, படி அரிசித் திட்டத்தையும், பசுமைப் புரட்சியையும் புகுத்தி, புதிதாக வேளாண்மைப் பல்கலைக்கழகத்தையும்



உருவாக்கி, இன்று வரை தமிழகத்தில் உணவு உற்பத்தியில் தலை நிமிர்ந்து நின்றிட வித்திட்ட வித்தகரின் தலைமையில், மக்கள் மனம் விரும்பும் ஆட்சி, நல்லாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இன்று கடனிலே வாழ்ந்துகொண்டிருக்கும் உழவரைக் கைதூக்கிவிடும் ஆட்சி, 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்பதற்கு உரை கண்ட கலைஞர் ஆட்சி, விவசாயிகளின் பொற்காலமாகத் திகழ்கின்றது.

விவசாயிகள் கடந்த ஐந்தாண்டுகளில் அலைக்கழிக்கப் பட்டிருந்தார்கள். இப்போது அவர்கள் நலனைப் பாதுகாக்கின்ற அரசு வந்துள்ள காரணத்தினால், அவர்களின் வேதனைகள் எல்லாம் தீர்க்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டு, விவசாயத் தொழிலாளர்கள், ஏழையெளியோர் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை முனைப்போடு செயல்படுத்த தமிழினத் தலைவர் அரசு முன்வந்திருக்கிறது. கடந்த ஆட்சியில் இலவச மின்சாரத்தை ரத்துச் செய்ய முற்பட்டபோது, தலைவர் அவர்கள் போராட்டம் அறிவித்ததன்பேரால், விவசாயிகளுக்கு மீண்டும் இலவச மின்சாரம் கிடைத்தது.

விவசாயிகள் நலனைப் பாதுகாக்கவும், விவசாய நிலங்கள் மேம்பாடு அடையவும் நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட வேண்டும். ஆழ்குழாய் மூலம் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால், நீர்மட்டம் படுவேகமாகக் குறைகிறது. நீரில்லாத ஆழ்குழாய்களுக்குள் காற்று நிரம்பி, நிலத்தின் அடிப்பகுதி வெப்பமடைகிறது. நிலம் வெப்பமடைவதைத் தடுக்க, நீரில்லாத ஆழ்குழாய்களை மண்ணினால் மூடச் செய்ய வேண்டும். ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகள், பூமியைக் குளிரச் செய்ய நிலத்தைத் துளையிட்டு, நல்ல நீரால் நிரப்பி வருகிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நிலத்தடி நீர்மட்டம் குறைவதால், பூமியின் மேற்பரப்பில் ஒரு அடி வரையிலான உயிரினப் பாதுகாப்பு பாக்டீரியாக்கள் அழிந்து விடுகின்றன, அல்லது குறைந்து விடுகின்றன. மேலும், படரும் தன்மையுள்ள அரிதான, அற்புதமான சில சிறு மூலிகைகள் மறைந்து வருகின்றன. இவற்றைத் தடுக்க, ஆழ்குழாய் அமைக்க அரசு அனுமதி பெற வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

விவசாய வளத்திற்கு ஆதாரமான நீர் குறைந்து வருவதால், விளை நிலங்களின் பயன்பாடும் குறைந்துகொண்டே வருகிறது. தமிழக அரசின் தரிசு நில மேம்பாடு ஏழை விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக

அமையும் என்பதில் சந்தேகமேயில்லை. நீர்க் குறைபாட்டால் விளைபொருள் உற்பத்திக்கான இட அளவு குறைந்து, விவசாயிகள் தங்கள் தொழிலை மாற்றிக்கொள்ளும் தன்மை தற்காலத்தில் அதிகரித்து வருவதால், தானிய உற்பத்தி எதிர்காலத்தில் குறையும். இதைத் தவிர்க்க, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் நிலமில்லா ஏழைகளுக்கு நிலம் வழங்கி, நீர் வழங்கி, நல்ல விதை வழங்கி, சந்தை ஏற்பாட்டையும் வழங்கினால் நல்லது.

விளை நிலங்களையும், நீர்ப்பிடிப்புப் பகுதிகளையும் கேடுறச் செய்யும் சீமஉடை, ஆகாயத் தாமரை, மலைப்பூவரசு, பார்த்தீனியம் போன்ற நச்சுச் செடிகளை விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து அழிக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களை முழுவதும் தள்ளுபடி செய்த முத்தான முதல்வருக்குத் தமிழக விவசாயிகளின் சார்பாக என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். மேலும், விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள் வழங்கும்போது, மண்ணை மாசுபடுத்தும் மேற்குறிப்பிட்ட நச்சுச் செடிகள் இல்லாத நிலங்களுக்கு முன்னுரிமை வழங்கினால் நல்லது. மண்புழு உரம், இயற்கை உரங்கள், இயற்கையான பூச்சித் தடுப்பு ஏற்பாடுகள், பால் பண்ணை அபிவிருத்தி, பட்டுப் பூச்சிப் பண்ணை போன்றவற்றை மென்மேலும் வளர்க்கவும், பாதுகாக்கவும் முயல வேண்டும். கிராம சுய உதவிக் குழுக்களுக்கு மண்புழு உரம் பயிற்சியளித்து, மானியம் வழங்கி, அதை விற்பனை செய்ய ஆலோசனை வழங்கலாம். இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளால் உணவுப் பயிர்களும் நச்சுத் தன்மை பெறுவதைத் தடுக்க பஞ்ச கவ்யம், வேப்பெண்ணெய் போன்ற இயற்கைத் தடுப்பு முறைகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கான தேவைகளை இங்கே பட்டியலிட விரும்புகின்றேன்:

தாமிரபரணி ஆறு 4 மாவட்ட மக்களின் தாகம் தீர்க்கும் புண்ணிய நதி. அதன் கரைகளில் இருபுறமும் ஆக்கிரமிப்பும், சீமஉடை, ஆகாயத்தாமரை, மலைப்பூவரசு, பார்த்தீனியம் போன்ற நச்சுச் செடிகளால் சூழப்பட்டுள்ளன. அவற்றை அப்புறப்படுத்தி, தாமிரபரணி ஆற்றினைத் தூர் வாரி செப்பனிட வேண்டும். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார். அதனைக் கருத்தில் கொண்டு, வாட்டமுற்ற ஏழை உழவர்களின் வாழ்க்கைத் தரம் ஏற்றமுற ஏற்ற திட்டமாம் உழவர் சந்தையை மீண்டும் கொண்டு வந்து புத்துயிரூட்டிய சொல்லேர் உழவராம் தமிழக முதல்வருக்கு நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.



நெல்லையில் சிறப்பாக இயங்கி வந்த பேட்டை கூட்டுறவு நூற்பாலையை முந்தைய ஆட்சியாளர்கள் அபகரிக்க நினைத்து, ஆலையை மூடிவிட்டனர். அந்த மூடப்பட்ட நூற்பாலையை மீண்டும் திறந்து, அதனால் பாதிக்கப்பட்ட சுமார் 1,500 குடும்பங்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைக்க மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் வழிவகை செய்து, நூற்பாலையை இயங்கச் செய்திட வேண்டுமாய் மிக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி புறவழிச் சாலை ஆரம்பமாகும் தச்சநல்லூரில், எங்கள் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும், மறைந்தும் மறையாத மாமேதை முரசொலி மாறன் அவர்களுக்குச் சிலை நிறுவ அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரதத் திருநாட்டில், மறைவுக்குப் பின்னர் வழங்கப்படும் உயரிய விருதான "பாரத ரத்னா" விருதிற்கு அரசியல் சாணக்கியர் முரசொலி மாறன் அவர்கள் பெயரைத் தமிழக அரசு மத்திய அரசிற்கு முன்மொழிய வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டதுபோன்று, இரண்டாம் கட்டத் தலைநகரங்களில், மென்பொருள் பூங்கா ஒன்று திருநெல்வேலியில் அமைக்கப்படும்போது அதனை நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்தில் அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்காசிய நாடுகளில் தமிழர்களின் பாரம்பரியக் கலையான நாதஸ்வரம், தவில் பற்றிய பெருமைகளை உணர்த்திய காருகுறிச்சி அருணாசலம் அவர்களுக்குத் திருநெல்வேலியில் மணிமண்டபம் கட்ட மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள சைவ வேளாளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நலிவுற்று, வாழ்க்கைத் தரம் உயராமல் உள்ளனர். அவர்கள் நலன் பேணும் பொருட்டு, என் தொகுதி திருநெல்வேலியில் அதிகமான அளவு உள்ள சைவ வேளாளர் சமூகத்தினரை, பிற்படுத்தப்பட்டோர்

இனத்தில் சேர்க்க வேண்டுமென இந்தச் சமயத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

திருநெல்வேலி டவுன் பழையபேட்டை மற்றும் விரிவாக்கப் பகுதிகளில் வாழும் மக்கள் பேருந்து நிலையத்திற்கு வர சுமார் 6 கி.மீ. வர வேண்டியுள்ளது. இதனால் பள்ளி, கல்லூரி, அலுவலகம் செல்வோர் மிகுந்த சிரமம் அடைகின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் நன்மை கருதி, திருநெல்வேலி டவுன் லெட்சுமி திரையரங்கம் எதிரில் ஒரு மாநகரப் பேருந்து நிலையம் அமைத்திட வேண்டுமென மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி வளர்ந்து வரும் ஒரு மாநகரம். மாநகராட்சிப் பகுதியில் நவீன சுடுகாடு இதுவரையில் இல்லை. எனவே சிந்துபூந்துறை பகுதியில் நவீன மின்சார மயானம் ஏற்படுத்தி சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தச்சநல்லூரில் அமைந்துள்ள காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. அதை அரசு சார்பில் கட்டத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி சந்திப்பு, பேரறிஞர் அண்ணா சிலை அருகே போக்குவரத்து நெரிசலால், நடந்து செல்பவர்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர். அவர்களது சிரமத்தினைப் போக்க சந்திப்பு, அண்ணா சிலை அருகே ஒரு சுரங்க நடைபாதை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மதுரை ரோட்டிலிருந்தும், தென்காசி ரோட்டிற்கு இராமையன்பட்டி வழியாக ஒரு புறவழிச் சாலையும், தச்சநல்லூரில் இருந்து ஸ்ரீபுரம் வரை ஒரு சாலையும், பார்வதி திரையரங்கம் முதல் அருணகிரி திரையரங்கம் வரை ஒரு சாலையும், ராம்–முத்துராம் தியேட்டரில் இருந்து புறவழிச் சாலைக்கு ஒரு இணைப்புச் சாலையும் அமைத்துத் தர மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைகள் அதிகமாக உள்ள தச்சநல்லூரில் புதிதாகக் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும். திருநெல்வேலி அபிஷேகப்பட்டியில் இயங்கி வரும் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தைத் தரம் உயர்த்தி, கால்நடை மருத்துவக் கல்லூரியாக மாற்ற மாண்புமிகு



கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் சீதபற்பநல்லூரில் அமைக்கப்பட வேண்டும். தாழையூத்தில் ஒரு அரசு மருத்துவமனை அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கண்டியப்பேரி மாநகராட்சி மருத்துவமனை என்பது, முந்தைய அந்த நகராட்சியின் Chairman–ஆக இருந்த பா.ரா. என்கின்ற பா. ராமசாமி என்கின்ற சுதந்திரப் போராட்டத் தியாகியால் உருவாக்கப்பட்டு, அதிகமான நிலம் அந்த இடத்தில் உள்ளதால், அந்த மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக ஆக்கி, அதிக அளவு படுக்கை வசதிகளையும், எல்லா வசதிகளையும் கொண்ட ஒரு மருத்துவமனையாக உருவாக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

திருநெல்வேலி அருகே ரூ.800 கோடி செலவில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும் என கடந்த ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டு, கோடகநல்லூரில் 67 ஏக்கர் நிலமும் தேர்வு செய்யப்பட்டது. பின்னர், ஏனோ அந்த ஆட்சியாளர்களால் தொடங்கப்படவில்லை. பேரம் படியவில்லையோ, என்னவோ? மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அதனைச் செயல்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சிப் பள்ளிகளில் மின்சாரக் கட்டணம் வணிக ரீதியான பயன்பாட்டிற்குள்ளது போன்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனைக் குறைத்திட வேண்டுமாய் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தாழையூத்து, வளர்ந்து வரும் தொழில் நகரம். அங்கு இரு பாலர் பயிலும் வண்ணம் அரசுக் கலைக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா–இராணி அண்ணா மகளிர் கல்லூரியில், Job Oriented Course--வேலைவாய்ப்புத் தரும் பயிற்சிப் படிப்பு தொடங்கிட மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்திட வேண்டும் என்று அன்போடு வேண்டுகிறேன்.

நெல்லையப்பர் திருக்கோயில், அம்மன், முருகன், விநாயகர், சண்டிகேஸ்வரர் திருத்தேர்கள் செப்பனிடப்பட வேண்டும் என மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

நீங்கள்தான் என்னைக் கையைப் பிடித்து, இந்தச் சட்டமன்றத்திற்குக் கூட்டி வந்து உட்கார வைத்தவர். அதனால் எனக்குக் கூடுதல் நேரம் ஒதுக்கித் தரும்படித் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு 19 நிமிடம் கொடுக்கப்பட்டுள்ளது. 19 நிமிடம் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. என். மாலைராஜா:** 5 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுங்கள். பேசி முடித்துவிடுகிறேன். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசு ஆணையின்படி தமிழகத்தில் அர்ச்சகர் ஆவதற்கான கல்வி பயில தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் தனிப் பள்ளி ஒன்றை உருவாக்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கரையிருப்பு விதைப் பண்ணை 85 ஏக்கர் நிலப்பரப்பு உடையது. இதில் 25 ஏக்கர்தான் பயிரிடப்படுகிறது. தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ளதால் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, வருடம் முழுவதும் அத்தண்ணீரைக் கொண்டு அனைத்து விவசாய நிலங்களும் பயிரிடப்பட்டு, விதைப் பண்ணையை விரிவுபடுத்தலாம். இதனால் பெரிய அளவில் விதைச் சுத்திகரிப்பு நிலையத்தையும் இந்த விதைப் பண்ணைக்குள்ளே உருவாக்கலாம். இதற்கு ஏற்ப தேவையான நிலப்பரப்பும் உள்ளது என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இந்தியப் பருத்திக் கழகம்—Cotton Corporation of India என்ற மைய அரசு நிறுவனம், விவசாயிகளிடமிருந்து நமது கழக ஆட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வழியாகப் பருத்தியினைக் கொள்முதல் செய்தது. இதனால் இடைத்தரகர் இன்றி விவசாயிகளுக்கு முழுத் தொகையும், விற்பனை செய்தவுடன் எந்தத் தடையுமின்றிக் கிடைத்து வந்தது. இடையில் வந்த அ.தி.மு.க. அரசு இதனைக் கண்டுகொள்ளாமல் விட்டதன் விளைவாக, இந்தியப் பருத்திக் கழகமும் தனது இஷ்டம்போல் தனியார் நடத்தும் கமிஷன் கடைகளில் கொள்முதல் செய்து வந்தது. இதனால், விவசாயி 100 ரூபாய்க்கு விற்றால், கமிஷன் ரூ. 5, 10 வரையிலும் சரியான எடையில்லாமலும், எடை போட்ட கூலி, மகிமை, வியாபாரிகள் சங்க நிதி என ரூ.20 வரை எடுத்து,



விவசாயிகள் வயிற்றில் அடித்து வருகின்றனர். எனவே, தலைவர் கலைஞர் அரசு வந்துள்ளதால் இந்தியப் பருத்திக் கழகம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் வழியாகப் பருத்திக் கொள்முதல் செய்ய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடகன் கால்வாய், திருநெல்வேலி கால்வாய்களைத் தூர் வாரி, சிமெண்ட் தடுப்புப் போட்டு மதகுகள் சரி செய்யப்பட்டு, கடைமடை வரை தங்கு தடையின்றித் தண்ணீர் செல்ல வழிவகை செய்ய வேண்டும். கடந்த ஆட்சியாளர்கள் மதகு செப்பனிட்டதாக, தூர் வாரியதாக அரசுப் பணத்தை அபகரித்துள்ளனர். அதற்குத் துறைவாரியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள், விவசாயத்திற்கு மின் இணைப்புப் பெற முடியாமல் பல பேர் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை அளித்து உடனே மின் இணைப்புக் கொடுத்திட மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

'இழந்த பழம்பெருமைகள் மீட்கப்பட வேண்டும், எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும், வழிந்தொழுகும் சுவைத் தமிழே பெருக வேண்டும், வீழ்ந்த தமிழகம் தலை நிமிர வேண்டும் எனில், எந்தன் உயிர்தனை வேண்டும் எனில் தந்திடுவேன்' என்று இந்த மாமன்றத்திலே தமிழினத் தலைவர் கூறியதை நினைவுகூர்ந்து, இந்த 83 ஆம் அகவையிலும் 23 வயது இளைஞர் போன்று, தமிழுககாக, தமிழர்களுக்காக, தமிழ் வளர்ச்சிக்காக, தமிழகத்தின் பெருமையை உணர்த்துவதற்காக, தமிழர்களின் வாழ்வுரிமையை நிலைநாட்டுவதற்காக, அயராது, அல்லும் பகலும் பாடுபட்டுக்கொண்டிருக்கும் உலகளாவிய தமிழினத்தின், ஒப்பாரும், மிக்காரும், ஈடும், இணையும் இல்லாத தலைவராகவும், தமிழினத்தின் வழிகாட்டியாகவும், இந்தியத் திருநாட்டின் அரசியல் வானில் என்றென்றும் இடம்பெயராத் துருவ நட்சத்திரமாகவும் விளங்குகின்ற தலைவர் கலைஞர் அவர்களை வாழ்த்த வயதில்லை, பொற்பாதம் வணங்குகின்றேன்.

விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்களான விதை, உரம் போன்றவற்றின் தரம் குறையாமல் பார்த்துக்கொள்வோம். அழுக்கு வேட்டி கட்டிய விவசாயிகள் தரம் உயரப் பாடுபடுவோம். உச்ச விளைச்சல், உயர்ந்த வருமானம், உன்னத வாழ்வு, இதுவே நமது நோக்கம்.

எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. ராஜசேகரன்.

***திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி. ஜாதி, மதம், இனம், மொழி இல்லாத இந்தியாவை உருவாக்க, 60 குண்டுகளை மார்பிலே தாங்கி, இந்த மண்ணிலே சாய்ந்த அன்னை இந்திராவுக்கு, அவருடைய ஆத்மாவிற்கு வணக்கம். இந்தியாவை 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் சென்ற என் அருமைத் தலைவன், தீவிரவாதத்திற்குப் பலியான இந்தத் தமிழக மண்ணில், அவர் உறங்கிக்கொண்டிருக்கின்ற ஸ்ரீபெரும்புதூர் இடத்திற்கு என்னுடைய வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகம் போற்றும் உத்தமி, உண்மை, பண்பு, பாசம், இம்மூன்றையும் உள்ளடக்கிய, தன்னைத் தேடி வந்த பாரதப் பிரதமர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு, 'மக்கள் பணியே மகேசன் பணி' என்று இந்திய அரசியலை வழிநடத்திக்கொண்டிருக்கும் அன்னை சோனியாவின் நல்லாசியோடு, எனக்கு இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சைத் தரணி தந்த தங்கம், தமிழகத்தின் சிங்கம், ஒப்பற்ற தலைவர் மூப்பனார் அவர்களின் இளவல், மாண்புமிகு மத்திய அமைச்சர், அருமைத் தலைவர் ஜி.கே. வாசன் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி.

80 வயதிலே தமிழகத்தை வலம் வந்து, தமிழக மக்களைப் பார்த்து, ஜனநாயகம் வேண்டுமா, சர்வாதிகாரம் வேண்டுமா என்ற வினாவை எழுப்பி, மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, ஜனநாயகம்தான் நாட்டிற்கு வேண்டும் என்று மக்கள் வாக்களித்து, 5-வது முறையாக இந்த அவையிலே அமர்ந்திருக்கின்ற மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த தொட்டியம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எடுத்துக்கொண்டிருக்கின்ற விவசாய மானியக் கோரிக்கையானது, தமிழகத்திலே இருக்கின்ற 60 சதவிகித மக்களுடைய வாழ்வுப் பிரச்சினை. நீங்கள் காலையிலே ஒரு திருக்குறள் வாசித்தீர்கள். அதில் உழவர் பெருமையை எடுத்துக் கூறினீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி மணியடித்து இடையூறு செய்யாமல் எனக்குப் பேச வாய்ப்பளிக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அருமைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையேற்றிருக்கின்ற இந்த அரசு தமிழகத்திலே ஒரு மாபெரும் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. முதலாவதாக, நெல், கரும்பு, வாழை—இந்த மூன்று பயிர்களிலே நெல்லுக்கு முக்கியத்துவம் இருக்கிறது. அந்த நெல்லிலே சரியான வருமானம் விவசாயிக்குக் கிடைக்கவில்லை என்றாலும், அந்தத் தொழிலை விட்டு அந்தத் தொழிலாளி விலகவில்லை. தமிழகத்திலே இருக்கின்ற 60 சதவிகித மக்களும் விவசாயத் தொழிலாளிகள் என்பதை இந்தச் சபையின்மூலம் நான் அறிவிக்க விரும்புகின்றேன். தமிழக அரசும், மத்திய அரசும் குவின்டாலுக்கு 100 ரூபாய் உயர்த்தித் தர வேண்டும். மத்திய அரசு 10 ரூபாய்தான் அறிவித்திருக்கிறது. இந்த முறை குறுவை சாகுபடிக்கும், சம்பா சாகுபடிக்கும் தமிழக அரசு 100 ரூபாய் ஊக்கத் தொகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நெல் சாகுபடி குறுவை ஆரம்பித்திருக்கிறது. குறுவைக்குத் தேவையான விதை நெல்லும் மானியமாகக் கிடைக்க வேண்டும். மருந்துகளும் கிடைக்க வேண்டும். இடுபொருட்களும் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சமீபத்திலே நவீன விவசாய முறைப்படி விவசாயம் செய்ய, திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தை நமது விவசாய விஞ்ஞானிகள் அறிவித்திருக்கிறார்கள். நல்ல திட்டம். அந்தத் திட்டமானது கீழ்மட்டத்திலுள்ள மக்களைச் சென்றடைவதற்குச் சரியான தொழில்நுட்ப வல்லுநர்களை நியமித்து, வட்டாரந்தோறும், ஒன்றியந்தோறும், கிராமந்தோறும் அந்தத் திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, கரும்பு. கரும்புக்கு, டன்னுக்கு 1,050 ரூபாய் இன்று கிடைக்கிறது. அதே நேரத்திலே, கரும்புக்கு இடக்கூடிய இடுபொருள்கள்; கரும்புக் கரணை, உரம் மற்றும் செலவுகள் அதிகரித்துக்கொண்டு

செல்கின்றன. ஒரு கரும்பு முதிர்வு அடைந்தவுடன் வெட்டி எடுத்துச் செல்வதற்குக் கூலி அதிகமாக இருக்கிறது. அதைத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்வதற்கு அதிக வாடகை வாங்குகிறார்கள். இதில், இரண்டில் ஒன்றை, அரசோ அல்லது அந்தத் தொழிற்சாலையோ ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சிறுகமணியிலே கரும்பு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அது எப்படிச் செயல்படுகிறது, அதனுடைய செயல்பாடு என்ன? அங்கு இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கவில்லை. அதற்கு என்ன காரணம்? அந்த ஆராய்ச்சி நிலையம் சரியாகச் செயல்படவில்லையா அல்லது அங்கு இருக்கின்ற அறிஞர்கள் சரியாகச் செயல்படவில்லையா என்பதை நான் அறிய விரும்புகின்றேன். தஞ்சைப் பகுதியிலே, பட்டுக்கோட்டைப் பகுதியிலே 18 மாதங்களாகக் கரும்பு நன்கு முதிர்ந்த பிறகும் வெட்டப்படவில்லை. இன்றையதினம் விவசாயிகள் போராட்டத்திற்குத் தயாராக இருக்கிறார்கள். அதில் என்ன இடையூறுகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அரசு முறையாக அந்தக் கரும்புகளை வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வாய்ப்பளிக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-50

அடுத்து வாழை. நியாயமான விலை கிடைக்காத ஒரு தொழில் வாழை. ஏனென்று சொன்னால், புயல் அடித்தால் வாழை சாய்ந்துவிடுகிறது. அது பருவம் அடைந்தால் அதை வெட்டி 24 மணி நேரத்திலே market-க்கு அனுப்ப வேண்டும். நானும் ஒரு வாழை விவசாயி. நல்ல முதிர்ந்த ஒரு வாழையை வெட்டியவுடன் 24 மணி நேரத்திற்குள் அதை market-க்கு அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் அழுகிவிடும். நான் காய் வெட்டும்போது market-க்கு phone பண்ணிக் கேட்கும்போது, இன்று நல்ல விலை இருக்கிறது, தார் 100 ரூபாய்க்குப் போகிறது என்று வியாபாரிகள் சொல்கிறார்கள். வெட்டிக்கொண்டு வந்து ஏலத்திலே வைத்தவுடன் 50 ரூபாய்க்குக்கூட விலை போகவில்லை. எனக்கு ஒரு காய்க்கும், ஒரு பழத்திற்கும் 30 பைசாதான் அடக்கம் ஆகிறது. ஆனால் சட்டமன்ற விடுதிக்கு வெளியே இருக்கிற கடைக்குச் செல்லும்போது, ஒரு வாழைப் பழத்தைக் கேட்டால், ஒரு ரூபாய் 50 பைசா என்று சொல்கிறார்கள். 12 மாதம் கஷ்டப்பட்டுக் கொண்டு வந்த அந்த விவசாயிக்கு உரிய தொகை கிடைக்கவில்லை. உற்பத்திக்குச் சரியான விலை கிடைக்கவில்லை என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் இதன்மூலம் தெரியப்படுத்த



விரும்புகின்றேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு நியாயமான விலையை வழங்குவதற்கு அரசு அதிகாரிகளையும், விவசாயிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அடிப்படை விலை, பூவன் வாழைக்கு ஒரு கிலோவிற்கு இவ்வளவு, ரஸ்தாளிக்கு இவ்வளவு, வறுவல் வாழைக்கு இவ்வளவு என்ற ஒரு உத்தரவாதத்தை அந்த விவசாயிக்கு வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறீர்கள். கரும்புக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறீர்கள். தென்னைக் கொப்பரைக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வாழை பயிரிடுகின்ற இந்த ஏழை விவசாயி என்ன செய்தான்? அரசு இந்த முறை இந்த வாழை விவசாயிகளை நீங்கள் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திருச்சி மாவட்டம், முதலைப்பட்டி அருகே 100 கோடி ரூபாய் செலவிலே மத்திய அரசிலே இருந்து வாழை ஆராய்ச்சி மையம் அமைத்திருக்கிறார்கள். அந்த வாழை ஆராய்ச்சி மையத்தின் விளைவாகத் தமிழக விவசாயிகளுக்கு என்ன பயன் என்று நான் அறிய விரும்புகின்றேன். அந்த ஆராய்ச்சி மையம் சரியாகச் செயல்படுகிறதா, இல்லையா என்பதே தெரியவில்லை. இதுவரை அதனுடைய தொழில்நுட்பம் என்ன? அந்தத் தொழில்நுட்பத்தின் வாயிலாகத் தமிழகத்தில் இருக்கின்ற வாழை விவசாயிகளுக்குக் கிடைத்த இலாபம் என்ன என்பதை அறிய விரும்புகின்றேன். ஆகவே, நமது தமிழ்நாடு அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு அந்த வாழை ஆராய்ச்சி மையம் சிறப்பாக, நல்ல முறையில் இயங்குவதற்கு ஆவன செய்யக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து தென்னை. தென்னை நீண்ட காலப் பயிர். கிராமத்திலே ஒரு பெரிய பழமொழி உண்டு. 'பெற்ற பிள்ளை சோறு போடவில்லை என்றால், வைத்த பிள்ளை சோறு போடும்' என்பார்கள். அப்படி ஒரு அரசு (மகன்) போல ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற தென்னைப் பயிர். அந்தத் தென்னைப் பயிரிலே சிலந்திப் பூச்சி பல ஆண்டுகளாக, சுமார் 5 ஆண்டுகளாக மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. சென்ற முறை அரசு ஒரு கண்துடைப்பாக, சிலந்திப் பூச்சியை அகற்றுவதற்கு மருந்து தருகிறேன் என்று ஒவ்வொரு யூனியனிலேயும் ஒரு சதவிகிதம்கூடக் கொடுக்காமல், அதை வீணடித்துவிட்டார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழகத்திலே மிகப் பெரிய சாகுபடி, தென்னை சாகுபடி.

கோடிக்கணக்கான மரங்கள் இருக்கின்றன. அவற்றைக் கணக்கெடுக்கச் சொல்லுங்கள். கணக்கு உங்களிடமே இருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கின்ற அந்த விவசாயிகளுக்குத் தேவையான அந்தத் தடுப்புப் பொருள், அதாவது சிலந்திப் பூச்சியை நீக்கக்கூடிய அந்தத் தடுப்பு மருந்தைக் கொடுக்க ஆவன செய்யக் கேட்டுக்கொள்கின்றேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இன்று 35 ரூபாய் 70 பைசாவுக்குத்தான் NABARD மூலமாகக் கொப்பரையை எடுத்துக்கொள்கிறீர்கள். ஆனால், கொப்பரையை purchase பண்ணும்போது, அதை வாங்கும்போது, அந்த ஏழை விவசாயி படக்கூடிய துன்பங்களை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். V.A.O Certificate வேண்டும், R.I. Certificate வேண்டும், வேளாண்மை Certificate வேண்டும். கொப்பரையை என்ன factory–யிலா செய்து கொடுப்பார்கள்? இல்லையே? தேங்காயிலிருந்து எடுத்து வரக்கூடிய கொப்பரையை எடுத்துச் செல்வதற்கு இப்படிக் கட்டுப்பாடுகளை ஏன் விதிக்க வேண்டும்? மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இந்த முறை கொப்பரை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்பரையை மாநில அரசாங்கத்தினுடைய TANFED வாங்கி, மத்திய அரசாங்கத்தின் நிறுவனத்திற்குக் கொடுக்கிறது. இதிலே வியாபாரிகள் வாங்கிக்கொண்டு இருந்தார்கள். அதாவது, விவசாயிகளே கொண்டு வந்தால் அவர்களுக்கு நேரடியாக விலை கிடைக்கும். இவர் தென்னை விவசாயிதான் என்று ஒரு சான்றிதழ் இருந்தால், அவர்களுக்கு நேரிடையாக விலை கிடைக்க வேண்டும் என்பதற்குத்தான் அந்தச் சான்றிதழ் வழங்குகிறோம்.

**திரு. மா. ராஜசேகரன்:** கொப்பரைக்கு 45 ரூபாய் கொடுத்தால் நியாயமான விலை விவசாயிக்கு இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, வெற்றிலை. தமிழகத்திலே திருச்சி மாவட்டத்திலே தொட்டியம சட்டமன்றத் தொகுதியானது வெற்றிலைக்குப் பெயர் பெற்ற இடம். அந்த வெற்றிலையிலே ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திலே அழுகல், வாடல் நோய் வரும். அந்த வாடல் நோயினைச் சரி செய்வதற்கு அரசு மானிய விலையிலே மருந்து அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பருத்தி. தமிழகத்திலே கோவை மாவட்டம் பருத்தி ஏற்றுமதியிலே மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆக்கபூர்வமான அரசின் அணுகுமுறையோடு ஆண்டுதோறும் பயிர் செய்யக்கூடிய புதிய ரகங்களைக் கண்டுபிடித்து, நல்ல ஒட்டு உரங்களைக் கண்டுபிடித்து, விவசாயிகள் மேலும், மேலும் வளர்வதற்கு ஒரு நிரந்தர வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து பனை மரம். பனை மரத் தொழிலாளர் வாரியம் அமைத்திருக்கிறீர்கள். வரவேற்க வேண்டிய ஒரு விஷயம். அதை இல்லை என்று மறுக்க முடியாது. அதேபோல, விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நல வாரியம் பற்றியும் இந்தச் சட்டமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறீர்கள். மிக, மிகப் பாராட்டுகிறேன், தமிழகத்தின் சார்பாக. 6 கோடி மக்களுக்கு உணவளிக்கக்கூடிய அந்த விவசாயிக்கு இன்றுதான் விடிவு கிடைத்திருக்கிறது. விபத்திலே ஒரு விவசாயி மரணம் அடைந்தால் ஒரு இலட்சம் ரூபாய், இரண்டு கால்களை இழந்தால் ஒரு இலட்சம் ரூபாய், இரண்டு கைகளை இழந்தால் ஒரு இலட்சம் ரூபாய், ஒரு கால், ஒரு கையை இழந்தால் ஒரு இலட்சம். ஊனப்பட்டால் 20 ஆயிரம். அவருடைய பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளியிலே படித்தால் 1,250 ரூபாயிலிருந்து 2,000 ரூபாய். மேல்நிலைப் பள்ளியிலே படித்தால் 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாய். இப்படி வகைவாரியாக ஒரு ஏழை விவசாயி இந்தத் தமிழகத்திலே வாழ முடியும் என்பதற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட பட்ஜெட் ஒரு விவசாய பட்ஜெட் என்று விவசாயிகளின் சார்பாகப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 11–55

அதற்கு அடுத்தாற்போல, வேளாண்மைத் தொழில்நுட்பத்திலே பொறியியல் மிக முக்கியமான subject. ஏன் என்று சொன்னால், இன்று வேளாண் பொறியியல் துறை ஏன் முக்கியம் என்றால், ஏழை விவசாயிகள் யாரும் அதிகமாக வேலைக்கு வருவதில்லை. அறுவடைக்கு இயந்திரத்தைத்தான் பயன்படுத்த வேண்டிய ஒரு காலக் கட்டாயத்திற்கு ஏழை விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதைத் தனியாக வாங்கி அவன் பயன்படுத்துவதற்கு ரூ.15 இலட்சம், 16 இலட்சம் ஆகும், முடியாது. விவசாயப் பொறியியல் துறைமூலமாக, எப்படி புல்டோசர் வைத்து நடத்துகிறோமோ, டிராக்டர் வைத்திருக்கிறார்களோ, அறுவடை மெஷின் வைத்திருக்கிறார்களோ, அதைப்போல கதிரடிக்கும் இயந்திரத்தை அதிகப்படுத்தி

விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

50 ஆண்டு காலத்திற்கு முன்னதாக, தமிழகத்திலே இதுபோல ஒரு விவசாயப் புரட்சியை ஏற்படுத்தியவர் கர்ம வீரர் காமராஜர். அவர் பதவியேற்றவுடன், முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே, முதல் 9 ஆண்டுகளிலே 13 அணைகளை இந்தத் தமிழகத்திலே கட்டினார். ஏன் தெரியுமா? அவர், வளர்கின்ற இந்த நாட்டிலே எதிர்காலத்திலே உணவுத் தேவை அதிகமாக இருக்கும் என்பதற்காக நீண்ட, தொலைக்கண் பார்வையோடு இவற்றைக் கட்டினார். இன்று 6 கோடி மக்களுக்குத் தமிழகம் சோறு படைக்கிறது என்றால், என் அருமைத் தலைவன் காமராஜர் வைத்த திட்டங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலாவதாக, கீழ்பவானித் திட்டம், மிகப் பெரிய திட்டம். கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகில் உள்ளது. 2,02,500 ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய இத்திட்டத்தின் மதிப்பு 10.2 கோடி ரூபாய். மணிமுத்தாறு பாசனத் திட்டம் ஒரு இலட்சம் ஏக்கர், வறண்ட 300 ஏரிகளுக்கும் இதன்மூலம் பாசன வசதி கிடைத்தது. உடுமலைப்பேட்டை அருகே அமராவதி அணை கட்டப்பட்டது. மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகில் வைகை அணை கட்டப்பட்டது. இந்த அணையிலே பெரியாறு ஆற்றிலிருந்து வரக்கூடிய உபரி நீரை, கடலுக்குச் செல்லக்கூடிய நீரை இந்த அணையிலே தேக்கி பாசனத்திற்குப் பயன்படுத்தினார்கள். அதுமட்டுமல்லாமல், பெரியாறு மின்சாரத் திட்டத்தின் வாயிலாக வரக்கூடிய உபரி நீரையும் தேக்கி வைத்து, மதுரை மாவட்ட மக்களுக்கு நீர்ப்பாசனத்திற்கு வழங்கினார்கள். அதுபோல, வடாற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.2.58 கோடி. சேலம், கிருஷ்ணகிரியில் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது. அதனுடைய மதிப்பு ரூபாய் 2 கோடி. திருவள்ளூர் மாவட்டத்திலே, பிச்சாட்டூரிலே ஆரணி ஆற்றின் குறுக்கே அணை கட்டப்பட்டது. காவிரி ஆற்றின் வடகரையில் புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாய் வெட்டப்பட்டது, மதிப்பு 2.25 கோடி ரூபாய். காவிரியிலே, வார்த்தலையில் புள்ளம்பாடி கால்வாய் வெட்டப்பட்டது, மதிப்பு 26 கோடி ரூபாய். தென்னார்க்காடு மாவட்டம், வீடூரின் அருகில் வராக நதியின் குறுக்கே அணை கட்டப்பட்டது. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் 30 கோடி செலவில் கட்டப்பட்டது. இதை அப்போதிருந்த மாண்புமிகு மோதிலால் நேரு அவர்கள் திறந்து வைத்தார்கள். இதுபோன்ற ஒரு மாபெரும் திட்டத்தை, 13 அணைகளைத்



தமிழகத்திலே கட்டி 50 ஆண்டு காலத் தேவைகளைப் பூர்த்தி செய்த அந்த மாமனிதருடைய பசுமைப் புரட்சிக்குப் பிறகு இந்த அவையிலே மீண்டும் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால், டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக விவசாயிகளுக்கு ரூ.6,866 கோடியை இனாமாக அளித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 6,866 கோடி ரூபாய் என்பது சாதாரண விஷயம் அல்ல. தமிழகத்திலே இன்று போடப்பட்டிருக்கிற பட்ஜெட்டில் நான்கில் ஒரு பகுதியை, இந்த ஏழை விவசாயிகளுக்காக இந்த அரசு அறிவித்து இருக்கிறது. எவ்வளவு ஒரு பெரிய சுமையை இந்த அரசு ஏற்றிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆகவேதான் இந்த பட்ஜெட் முழுக்க, முழுக்க விவசாய பட்ஜெட் என்று (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு மத்திய அரசு, கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை உறுதி செய்திருக்கிறது. தென்னக நதிகள் இணைப்புத் திட்டத்தை இந்த அரசு விரைவுபடுத்த வேண்டும். கிராமத்திலே ஏழை விவசாயி ஒருவனுடைய வீடு, தீயினாலோ அல்லது ஏதாவது விபத்தினாலோ பாதிக்கப்பட்டால், இதுவரை 2,000 ரூபாய்தான் தந்துகொண்டிருக்கிறார்கள். 2,000 ரூபாய்க்கு அவன் கீற்றுகூட வாங்க முடியாது, குச்சிகூட வாங்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சர் அவர்களும், அந்த 2,000 ரூபாய் என்பதை 5,000 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாய நிதி ஒதுக்கீடு 2005–2006–ல் வேளாண்மை மற்றும் தொடர்புடைய இனங்களுக்கு ரூ.854.41 கோடியாக ஒதுக்கப்பட்டது. டாக்டர் கலைஞர் தலைமையிலே இருக்கின்ற இந்த அரசு 2006–2007–ல் ரூ.977.98 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறது. ஆக மொத்தம் 123.57 கோடி அதிகமாக நிதி ஒதுக்கியிருக்கிறது. இதிலிருந்தே இந்த அரசு விவசாயிகளுக்கு உறுதுணையாக, உற்ற நண்பனாக இருப்பதை நாம் அனைவரும் அறிந்துகொள்ளலாம்.

திருச்சியிலே ஸ்ரீரங்கத்திலே பூ மார்க்கெட் இருக்கிறது. இதுவரையில் அங்கு விற்பனைக் கூடம் ஒன்றும் இல்லை. ஸ்ரீரங்கத்திற்குப் போகக்கூடிய முக்கிய சாத்தார வீதியிலே மிகக் கடுமையான, குறுகிய பகுதியிலே அந்தப் பெரிய மார்க்கெட் இருக்கிறது. அதற்கு ஒரு விற்பனைக் கூடம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் பல பேர் விவசாய மின் இணைப்புக் கேட்டு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கி, விவசாய மோட்டார்களுக்கு இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அடுத்து, சிறப்புத் திட்டத்தின்கீழ் 50,000 ரூபாய் செலுத்தி வாங்கிய மோட்டார்களுக்கும் டாக்டர் கலைஞர் அவர்கள் இலவச மின்சாரம் அளித்திருக்கிறார்கள். அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சொட்டு நீர்ப்பாசனத்திற்கு 50 சதவிகிதம் தள்ளுபடி கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் ஆந்திர மாநிலத்திலே 90 சதவிகிதம், சொட்டு நீர்ப்பாசனத்திற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், வளர்கின்ற விவசாயத்திலே நமது நாட்டின் தேவையைப் பார்க்கும்போது, நீர் ஆதாரம் மிகக் குறைவு. காவிரியிலே தண்ணீர்ப் பிரச்சினை, கிருஷ்ணா நதியிலே தண்ணீர்ப் பிரச்சினை, பெரியார் நீர்த் தேக்கத்தில் தண்ணீர்ப் பிரச்சினை. இருக்கின்ற தண்ணீரை வைத்து விவசாயம் செய்ய வேண்டுமென்றால், நாம் நீராதாரங்களைத் தேட வேண்டும். அதற்கு முறையாக நாம் வழிவகை செய்ய வேண்டும். ஆகவே, சொட்டு நீர்ப்பாசனத்தை இந்த அரசு முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டு, அதற்கு அதிக நிதியை ஒதுக்கி, 50% ஆக இருக்கிற தள்ளுபடியை, பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்தைப் போன்று 90% ஆகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நணபகல் 12-00

அடுத்து என்னுடைய தொகுதிப் பிரச்சினை. என்னுடைய தொகுதியிலே ஸ்ரீராம சமுத்திரம் என்ற குறம்பு இருக்கிறது. இது 75 ஆண்டு காலமாக உள்ள பிரச்சினை. காவிரியிலே தண்ணீர் திறந்து விடப்பட்டு, மேட்டூர் அணையை மூடிய பிறகு வரக்கூடிய உபரி நீரை அரசு ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை செலவு செய்து விவசாயிகளுக்குப் பாசனத்திற்காகக் கொடுக்கிறது. இது 70 ஆண்டு காலம் நடைமுறையில் உள்ள பிரச்சினை. இதில் 11 ஆயிரம் ஏக்கர் பாசனம் ஆகிறது. இரண்டு மாதங்களுக்கு மட்டும்தான் அந்த ஆற்றில் குறம்பு இருக்கும். ஆனால் பல கோடி ரூபாயை அரசு இதுவரை செலவு செய்திருக்கிறது. நீண்ட காலப் பிரச்சினை. இந்தப்



பிரச்சினை தீருமேயானால், என்னுடைய தொட்டியம் சட்டமன்றத் தொகுதி, முசிறி தொகுதி முழுக்க, முழுக்கப் பயன்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். அதற்கு நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், பொறியியல் துறையைச் சார்ந்தவர்களும் அந்த இடத்தை நேரடியாகப் பார்த்து, 2 குறம்புகளுக்கு எஸ்டிமேட் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஒன்று 3 கோடி ரூபாய், இன்னொன்று 2 கோடி ரூபாய். அதை இந்தத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொண்டோம். இந்த முறை சேர்க்க முடியவில்லை, அடுத்த முறை நான் சேர்த்துத் தருகிறேன் என்ற உத்தரவாதத்தைத் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்திலே P.H.C., அதாவது, Primary Health Centre, upgrade செய்யப்பட்ட மருத்துவமனை இருக்கிறது. அது 24 மணி நேர மருத்துவமனையாக இருக்கிறது. அங்கே 26 படுக்கைகள் இருக்கின்றன. புதிய டெம்போ வேன் இருக்கிறது, ஆனால் டிரைவர் இல்லை. டாக்டர்கள் 4 பேர் வேண்டும். ஆனால் ஒருவர்தான் இருக்கிறார். நர்சுகள் யாருமே இல்லை. எம்.என்.ஏ. ஒருவர்தான் இருக்கிறார். இப்படி அரசினுடைய ஒட்டுமொத்தப் பணமும் வீணடிக்கப்படுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். ஆஸ்பத்திரி திறந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. 26 beds அப்படியே இருக்கின்றன. அதேபோன்று, காட்டுப்புத்தூர் Primary Health Centre மருத்துவமனையிலும் பிரச்சினை. Operation Theatre இருக்கிறது. ஜெனரேட்டர் இல்லை. அதையும் முறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்திலே என்னுடைய தா.பேட்டை ஒன்றியமானது முழுக்க முழுக்க வறட்சியான பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதி. அங்கே irrigation-க்கு வாய்க்கால்கள் கிடையாது. காவிரியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாகத்தான் அங்கிருக்கிற 26 பஞ்சாயத்துகளும், 2 பேரூராட்சிகளும் பயனடைகின்றன. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு எங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே எம்.புதுப்பட்டி என்ற பஞ்சாயத்து இருக்கிறது. அதிலே 10 hamlets, சிறு குக்கிராமங்கள் இருக்கின்றன. மிகப் பெரிய

பஞ்சாயத்து. அந்தப் பஞ்சாயத்திற்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தேவையென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் திருச்சிக்கு வந்தபோது நான் அவரிடம் கேட்டிருக்கிறேன். அவரும் செய்து தருகிறேன் என்ற உத்தரவாதத்தைத் தந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், கொல்லிமலையிலிருந்து வரக்கூடிய புளியஞ்சோலை அருவித் தண்ணீர். குற்றாலம்போல எங்களுடைய பகுதியிலே கொல்லிமலையிலிருந்து வருகிறது. அந்த உபரி நீரை, அதாவது விவசாயத்திற்குப் பயன்பட்டது போக, எங்களுடைய தா.பேட்டை ஒன்றியத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களது தா.பேட்டை ஒன்றியத்தில் அதிக ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளைத் தூர் வாரி, ஆழப்படுத்தி மழைக் காலத்தில் நீராதாரத்தைப் பெருக்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலை வசதிகளை ஏற்படுத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதனால் அப்பநல்லூர் பஞ்சாயத்தில் இருக்கிற ஏரி மிகவும் பழுதடைந்திருக்கிறது. அந்த ஏரியைச் சீர்செய்வதற்கு ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் நெடுஞ்சாலை. முசிறியிலிருந்து நாமக்கல் செல்லக்கூடிய நெடுஞ்சாலையிலே இடையிலே 5 பாலங்கள் பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் கட்டியவை. அவற்றிலே 2 பாலங்கள் உடைந்து போய்விட்டன. 3 பாலங்கள்தான் இருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறை அமைச்சரைப் பார்த்து மனு கொடுத்திருக்கிறேன். இந்த 5 பாலங்களையும் சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்றிலும் விவசாயத்தையே நம்பியிருக்கிற எனது தொகுதியில் எந்தவிதமான சிறு தொழிலோ, பெரிய கனரகத் தொழிற்சாலையோ இல்லை. அவை வருவதற்குத் தொழில் துறை அமைச்சர் அவசியம் எங்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், நமது டாக்டர் முதல்வர் அவர்கள் 1969–லே என்னுடைய தொகுதியில் உள்ள ஒரு கல்லூரிக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார். 1975–லே கல்லூரிக்குக் கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கிறார். அதற்குப் பிறகு 30 ஆண்டுகளாக அங்கே எந்தக் கட்டடமும் கட்டப்படவில்லை. ஆனால், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய எண்ணிக்கை 3 ஆயிரம். கிட்டத்தட்ட 2,500-லிருந்து 3,000 பேர் வரை அந்தக் கல்லூரியிலே



படிக்கின்றார்கள். ஆனால், கட்டட வசதி இல்லை. ஆகவே, காலையில் Arts-ம், மாலையில் Science-ம் என்று shift முறையிலே நடைபெறுகின்றது. அங்கே அவசியம் கட்டடம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சிறப்பான பட்ஜெட்டை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

*பிற்பகல் 12–05*

***திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்தில், 13-வது சட்டமன்றப் பேரவையில் ஒரு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிட வாய்ப்பளித்த பெண்ணுரிமைக் காவலர், மனித நேயப் பற்றாளர், வாழும் இளம் பெரியார், சமூக நீதிக் காவலர், முக்காலமும் உணர்ந்து, எக்காலமும் தாய்த் தமிழுக்காகவும், தமிழ் மண்ணிற்காகவும் மூன்றாவது மொழிப் போர் கண்ட பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் எங்கள் தமிழினப் போராளி, மருத்துவர் ஐயா அவர்களுக்கு மனம் நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியப் பாராளுமன்ற மத்திய மண்டபத்தைப் புகை மண்டலத்திலிருந்து புனித மண்டபமாக மாற்றிய, இந்தியாவின் புகையிலை உபயோகத்தை வெகுவாகக் குறைத்துக் கட்டுப்படுத்தியமைக்கு லூத்தர் எல். டெர்ரி என்ற அமெரிக்காவின் உயரிய விருதைப் பெற்று, இந்தியத் திருநாட்டிற்கும், தன்னை ஈன்றெடுத்த செந்தமிழ் நாட்டிற்கும், "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்ற தமிழரின் தன்மான உணர்வையும், அறிவு சார்ந்த ஆற்றலையும் உலகோர்க்கு எடுத்துக்காட்டிய, எதிர்கால இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், எங்கள் மருத்துவர் சின்ன ஐயா அவர்களுக்கும், அகமும், புறமும் எங்களுக்குத் தலைமையேற்று, வழிகாட்டிக்கொண்டிருக்கும் ஓய்வறியா உழைப்பாளி, எங்கள் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும், "பொன்னி வளத் திருநாட்டின் கன்னித் தமிழ்க் காவலன்", மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், தன்மானத் தமிழனுக்குத் தலைமையேற்கும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், தளபதி

அவர்களுக்கும், எங்கள் மண்ணின் மைந்தர், சோழ மண்டலத் தளபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு அண்ணன் கோ.சி. மணி அவர்களுக்கும், என் வெற்றிக்கு அல்லும், பகலும் அயராது உழைத்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், செயல் வீரர்களுக்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க பூம்புகார் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இரு கரம் கூப்பித் தலை வணங்கி, என் மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். மேலும், இம்மாமன்றத்தில் விவசாய மானியக் கோரிக்கையின்மீது விவாதம் செய்ய எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என, ஆராய்ந்து, அறிந்து, இந்த விவசாயத் துறையை மாண்புமிகு அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற நமது மாண்புமிகு முத்தமிழ்க் காவலர் கலைஞர் அவர்களுக்கு முதலிலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வேளாண்மைக்கு இணையான தொழில் வேறு எந்தத் தொழிலும் இல்லை. ஆக, இந்தியாவில் மட்டும் அல்ல, தமிழகத்தில் மட்டும் அல்ல, உலகம் பூராவும் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு மிகப் பெரிய வேலைவாய்ப்பைக் கொடுக்கக்கூடிய துறை இந்த வேளாண்மைத் துறை. இப்படிப்பட்ட வேளாண்மைத் துறையை ஏறக்குறைய முதன்மைத் துறையாக இன்று அனைத்து நாடுகளும் எடுத்துக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட வேளாண்மைத் துறையில், அந்நியருடைய 300 ஆண்டு கால ஆட்சியில் தமிழக வேளாண்மை முழுக்க, முழுக்க நசிந்ததென்றே சொல்ல முடியும்.

தமிழக விவசாயிகள், அந்நியர் ஆட்சியில், இங்கிலாந்து, ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்களான பருத்தி, நிலக்கடலை, புகையிலை போன்ற வாணிபப் பயிர்களை விளைவித்து அனுப்பினர். இதன் காரணமாக, உணவுப் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டு, உணவுப் பொருள் பங்கீடு என்ற முறையே அப்பொழுதுதான் இந்த நாட்டில் அடியெடுத்து வைத்தது. இதனால் பர்மா, பிரேஸில் போன்ற நாடுகளிலிருந்து அரிசியையும், அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து கோதுமையையும் இறக்க வேண்டிய நிலை இந்த மண்ணுக்கு ஏற்பட்டது. மன்னர் காலத்தில் வெட்டப்பட்ட குளங்கள்,



ஏரிகள், வாய்க்கால்கள் மேடிட்டுப் போய்விட்டன. அந்நியர்கள் மராமத்துப் பணிகளை முற்றிலுமே செய்யவில்லை என்று சொல்ல முடியும். அதற்கும் மேலாக, இந்த நாட்டிற்கு வளம் கொடுக்கக்கூடிய, மழை கொடுக்கக்கூடிய அடர்ந்த காடுகளில் உள்ள மரங்கள், பல சதுர மைல்கள் வெட்டப்பட்டு, அதன் காரணமாகவும் இந்த நாடு நீர் வளத்தை இழந்தது.

மேலும், தமிழ்நாட்டில் ஜீவ நதிகளே கிடையாது என்று சொல்லலாம். ஆக, அந்நியர் ஆட்சியில் அணைக்கட்டுகளும் கிடையாது என்றே சொல்லலாம். எனவே, தமிழ்நாட்டு விவசாயம் என்பது ஒரு சூதாட்டத் தொழிலாக இருந்து வந்துள்ளது. அதற்குப் பிறகு மான்டேகு–செம்ஸ்ஃபோர்டின் இரட்டை ஆட்சித் திட்டத்தில் வேளாண்மைத் துறை இந்தியரிடம் ஒப்படைக்கப்பட்டபோது, இத்திட்டத்தினால் மேட்டூர் அணைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. நாடு சுதந்திரம் பெற்று, ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இதனால் விவசாயம் வளர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் ரூ.2,378 கோடியில் உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் வாயிலாகத் தமிழ்நாட்டிலுள்ள விவசாய நிலங்களில் விவசாயம், நீர்ப்பாசனம், மின்சார சக்தி ஆகியவற்றிற்கு முதலிடம் அளிக்கப்பட்டது. இதனால் தமிழ்நாட்டில் பல நீர்ப்பாசன அணைக்கட்டுகள் உருவாகின. அதற்குப் பின்னால் வந்த ஏனைய ஒன்பது திட்டங்களில் சிறு, சிறு திட்டங்களான பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம், வைகை அணைத் திட்டம், சாத்தனூர் அணைத் திட்டம், பெருஞ்சாணி, பேச்சிப்பாறை நீர்த்தேக்கங்கள் போன்ற சிறு, குறு நீர்ப்பாசனத் திட்டங்களைத் தவிர, வேறு பெரிய திட்டங்கள் ஏதும் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படவில்லை. அதன் பிறகு, இந்தியாவில் ஏற்பட்ட பசுமைப் புரட்சியின் காரணமாகத் தமிழ்நாட்டில் விவசாய நிலப்பரப்பு அதிகரித்தது. பண்டைய முறையைப் பின்பற்றி வந்த தமிழக விவசாயிகள் பசுமைப் புரட்சியின் காரணமாக வேளாண்மைத் துறைமூலம் தரமான விதைகள், இரசாயன உரங்கள், பயிர் சுழற்சி முறை, நவீன விவசாயக் கருவிகள் பயன்படுத்துதல், பூச்சி மருந்து, பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு, பயிர் இன்சூரன்ஸ், விவசாயக் கடன், கூட்டுறவுமூலம் விளைபொருட்களை விற்பனை செய்தல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், நியாய விலைக் கொள்முதல், இவை யாவும் விவசாயிகளுக்குக் கிடைத்தன. இதனால் விவசாயம் செழிப்புறலாயிற்று. குறுகிய காலத்தில் அதிக மகசூல் தரும் விதைகள் பயன்படுத்தப்பட்டன. கிணறு வெட்டுதல், மின் பம்புசெட்டு

அமைத்தல் மற்றும் உரம் வாங்குதல் முதலியவற்றிற்கு மானியத்துடனான கடன்கள் வழங்கப்பட்டன. பம்புசெட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. இதனால் சிறு, குறு மற்றும் ஏழை, நடுத்தர விவசாயிகள் பயன்பெற்றனர்.

*பிற்பகல் 12-10*

தமிழ்நாட்டில் காவிரி கழிமுகப் பகுதிகளாகிய தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் "தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்" என்று இன்றளவும் வர்ணிக்கப்பட்டு வருகின்றன. இங்கு சம்பா, குறுவை, தாளடிப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. தாளடி, சம்பா அறுவடை முடிந்ததும், உளுந்து, பயறு, துவரை போன்ற பருப்பு வகைகள் பயிரிடப்படுகின்றன. நெல்லைத் தவிர புஞ்சைப் பயிர்களான கம்பு, சோளம், கேழ்வரகு, தினை போன்றவையும், பணப் பயிர்களாக வாழை, கரும்பு, எள் ஆகியவையும் இங்கு சாகுபடி செய்யப்படுகின்றன. "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று சொல்லி, யானை கட்டிப் போரடித்த சோழ வள நாடு" கடந்த காலத்தில் "வான் பொய்ப்பினும் தான் பொய்யாக்" காவிரித் தாய் பொய்த்ததன் காரணமாக விவசாயிகள் செழுமை குன்றி, வாழ்விழந்து, வாழ வகை தெரியாது தவித்த நேரத்தில், வணங்கும் தெய்வமாய், வாழும் வரலாறாய் தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கும், ஏனைய தமிழ்நாட்டு விவசாயப் பெருமக்களுக்கும் சுமார் 7 ஆயிரம் கோடி விவசாயக் கடன்களை அறவே தள்ளுபடி செய்து தமிழக விவசாயிகளுக்குக் கலங்கரை விளக்கமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், 2006-2007-க்கு NABARD வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய தவணைத் தொகை 43.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆண்டுக்குப் பயிர்க் கடன் கூட்டுறவுச் சங்கங்களின்மூலமாக வழங்க ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயக் கடன்களுக்கு 9 சதவீத வட்டியிலிருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பருவ மழை காரணமாக ஜூன் 15 ஆம் நாள் மேட்டூர் அணை திறக்கப்பட்டு, வாய்க்கால்கள் தூர் வாருதல், உரிய நேரத்தில் வேளாண்மை இடுபொருட்கள் வழங்குதல் சீரமைவுமூலம் எதிர்பார்க்கும் உற்பத்தி 95 இலட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



வேளாண்மை மற்றும் தொடர்புடைய இனங்களுக்கு நடப்பாண்டில் ரூ.854.41 கோடியிலிருந்து ரூ.977.90 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த மாபெரும் மனப்பான்மை வேறு எந்த அரசுக்கும் இதுவரையில் இருந்ததில்லை. விவசாயிகள் நேரடிப் பலன் பெறவும், இடைத்தரகர்கள் முறையை ஒழிக்கவும், மீண்டும் தமிழ்நாடு முழுவதும் 103 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன.

உழவர் பெருமக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தரம் வாய்ந்த சேமிப்புக் கிடங்குகள், குளிர்விப்பு வசதி, பதப்படுத்துதல், தரம் பிரித்தல், மின்னணு ஏல முறை போன்ற அனைத்து வசதிகளுடன்கூடிய மூன்று வணிக மையங்கள், சென்னை, கோவை, மதுரையில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு விற்பனை வாய்ப்பையும், ஏற்றுமதி வாய்ப்பையும் அதிகரிக்கிறது.

அதுபோல, திராட்சைக்கும், முந்திரிக்கும், அவை விளையும் மாவட்டங்களிலேயே விற்பனை மண்டலம், ஏற்றுமதி மண்டலம் அமைத்து விவசாயிகள் பயனடைய இந்த விவசாய மானியக் கோரிக்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்குவது, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின் வாயிலாக இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முழுக்க, முழுக்க, ஆண்டு முழுவதும், எந்த ஒரு இடர்ப்பாடும் இல்லாமல் ஒரு பாதுகாப்பு அரணாக இந்தத் தமிழக அரசு திகழ்கிறது என்று சொன்னால், அதற்கு மற்ற ஏனையோர் பல செய்திகளைச் சொல்கிறார்கள்.

*பிற்பகல் 12-15*

நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், ஒன்றாவது முறை, இரண்டாவது முறை, மூன்றாவது முறை, நான்காவது முறை என்று, ஐந்தாவது முறையாக முதல்வராகி இந்த நிதிநிலை அறிக்கையை ஒரு மாண்புள்ள நிதிநிலை அறிக்கையாக, மக்கள் நல்வாழ்வு அறிக்கையாக, அதைப்போல தமிழ்நாட்டில் 6 கோடி மக்களுக்கும் பயன்படுகிற அறிக்கையாக அறிவித்திருக்கிறார் என்று சொல்லுவாரும் உண்டு. ஆனால், அப்படிப்பட்ட அறிக்கையைக் கொடுப்பதற்கு மனம் இருக்க வேண்டும். இதயத்திலே இடம் இருக்க வேண்டும். அதைத்தான இன்று தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இன்று எத்தனையோ அரசுகள் வருகின்றன. அத்தனை

அரசுகளும், இப்படிப்பட்ட இந்த விவசாயிகளுக்கான திட்டங்களை அறிவித்திருக்கின்றனவா என்று கேட்கிறபோது, அதைத்தான் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொல்லுகிறபோது, தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அல்லும் பகலும், நான் அனுதினமும் உறங்காமல், உண்ணாமல் இந்த ஏழை மக்களுடைய வாடிய கண்ணீரிலிருந்து அந்த இரத்தக் கண்ணீரை என்னுடைய பேனாவினுடைய மையாக ஆக்கி, அவர்களுடைய நலன்களை நான் அனுதினமும் எண்ணி, எண்ணி உருகி, நான் இந்தத் தேர்தல் அறிக்கையை இந்த நாட்டு மக்களுக்கு அளித்து இருக்கிறேன் என்று அவர்கள் சொல்லிய அந்த மிகப் பெரிய உள்ளம். அந்த உள்ளம்தான் தாயுள்ளம்.- இந்த 6 கோடி மக்களைக் காப்பாற்றுகிற உள்ளம். அது வேறு எந்த முதல்வருக்கும் இதுவரையிலே இருந்திருக்கிறதா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இந்த மாமன்றமும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அப்படிப்பட்ட இந்த நிலையிலே அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவர்களுடைய குழந்தைகளுக்குப் பல்வேறு நலத் திட்டங்கள், சிறு, குறு விவசாயிகள் மற்றும் இந்த விவசாயிகளுக்கு எல்லாம், அவர்களுடைய பிள்ளைகளுக்கு, தாய்மார்களுக்கு, இப்படி ஏகப்பட்ட திட்டங்கள். அதிலே கை இழந்தால் அதற்கு ஒரு திட்டம், விபத்தில் இறந்தால் அதற்கு ஒரு திட்டம், இப்படி விவசாயிகளுக்கு எந்தெந்த வகையிலே, எப்படிப்பட்ட முறையிலே இந்தத் திட்டங்களைக் கொண்டு வர் முடியும் என்று சொல்லி, அவர்களுடைய குழந்தைகளுக்கு இன்று உதவித் தொகை, திருமணத் தொகை, அவர்களுடைய தாய்மார்களுக்கு, கர்ப்பிணிகளுக்கு 6 ஆயிரம் ரூபாய், இப்படி ஒட்டுமொத்தமாக இந்த நிதிநிலை அறிக்கை இந்த விவசாயிகளுக்காகவே உருவாக்கப்பட்டு இருக்கிறது என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. மு.க. பெரியசாமி:** இப்படி இந்த விவசாயிகளுடைய வாழ்க்கை— அற்புதமாக, ஒளிமயமாக இந்தத் தமிழ்நாட்டிலே கலைஞருடைய ஆட்சியிலே எல்லா விவசாயிகளும் தீபாவளி கொண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். அதுதான் இன்றைய தமிழகத்தினுடைய நிலை. ஆக, இப்படி இருக்கின்றபோது, இன்று தேவையில்லாத ஒரு காரணத்தைச் சொல்லி, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து வெளியிலே சென்று



இருக்கிறதே அந்த எதிர்க்கட்சி, என்ன காரணம் தெரியுமா? இவர்கள் கடந்த காலத்திலே இந்த விவசாயிகளுக்குச் செய்த துரோகம், சொல்ல முடியாத துயரங்கள். உயிரிழப்பு, அதேபோல, விவசாயிகள் கடனிலே நாட்டைவிட்டு ஓடுகிற நிலை. இப்படிப் பல்வேறு நிலைகளை நேற்றுச் சொல்கிறபோது, அவர்கள் ஆர்ப்பரித்து இந்தச் சபையையே நடத்தவிடாமல் செய்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த விவசாயிகளுக்காகக் குரல் கொடுப்பது உண்மை என்று சொன்னால், இந்த விவசாயிகளுக்காக நாங்கள் ஆட்சி செலுத்தினோம் என்று சொல்லுகிறவர்கள், இந்த மாமன்றத்திலே இருந்து, அவர்கள் இந்த விவசாய மானியக் கோரிக்கையில் பங்கு பெற்று இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் இந்த விவசாயிகளினுடைய எதிர் ஆட்சி, எதிர்க்கட்சி, நாங்கள் விவசாயிகளுடைய எதிரி என்பதை இந்த நேரத்திலே, இந்த மாமன்றத்திலே அந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நிரூபித்துச் சென்று இருக்கிறார்கள் என்ற செய்தியை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஆகவே, ஒரு மாபெரும் புரட்சி செய்து இருக்கிற, பசுமைப் புரட்சி செய்து இருக்கிற நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு ஒரு முக்கியமான செய்தி. என்னவென்று சொன்னால், "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும் ஊழ்வினை உறுத்து வந்தூட்டுவதுமாம்." அதைப்போல, இன்று அந்த உயர்ந்த பெண்ணை உயர்ந்தோர் ஏத்துவர் என்ற அந்த அடிப்படையிலே இன்று அந்தத் தொகுதியிலே, நான் பூம்புகார் சட்டமன்றத் தொகுதியிலிருந்து இங்கு வருகை தந்திருக்கிறேன். அது நம்முடைய கலைஞர் அவர்களுடைய சொந்தத் தொகுதி. அதைப்போல, நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்களுடைய சொந்தத் தொகுதி. அந்தத் தொகுதியிலே பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன.

அப்படிப்பட்ட அந்தத் தொகுதிக்கு நீண்ட நாள் கோரிக்கை, நம்முடைய மீனவத் தோழர்களுக்கு ஒரு மீன்பிடித் துறைமுகம். அந்த மீன்பிடித் துறைமுகம், மத்திய அரசு, நமது மாநில அரசு, இரண்டு அரசுகளும் சேர்ந்து செய்யக்கூடிய அந்த மாபெரும் திட்டத்தை நம்முடைய கலைஞர் அவர்கள் அந்தத் தொகுதிக்கு நிறைவேற்றித் தர வேண்டும்.

அதைப்போல, அந்தத் தொகுதி கடைமடைத் தொகுதி. டெல்டா மாவட்டத்தினுடைய கடைமடைத் தொகுதியாக இருப்பதனாலே, இன்று காவிரி பொய்த்ததனாலே, கடந்த 8 ஆண்டுகளாக அந்த உப்பு நீர் 10 கி.மீ.-க்கு மேலாக என்னுடைய தொகுதியிலே ஊர்ந்து கீழ் அடி

நிலத்திலே வந்திருக்கிறது. இன்றைக்கு bore போட்டால் தண்ணீர் உப்புத் தண்ணீராக வருகிறது. ஆகவே, இந்தக் காவிரி நீர் வருகிறபொழுது, அதற்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுத்து, அந்தக் கடைமடைப் பகுதிகளிலே இருக்கிற பூம்புகார் தொகுதி, சீர்காழி தொகுதி, அதைப்போல வேதாரண்யம் தொகுதிகளுக்கு இந்தக் காவிரி நீரை முதலிலே குட்டை, குளங்களிலே விட்டு நிரப்பி, அந்த நீராதாரத்தை எங்களுக்கு நிரப்பித் தர வேண்டுமென்ற ஒரு பணிவான வேண்டுகோளை வைக்கிறேன்.

அந்தத் தொகுதியில் முழுக்க, முழுக்கப் பருத்தி விவசாயம் இப்பொழுது நடைபெறுகிறது. கரும்பு விவசாயம் நடைபெறுகிறது. வாழை விவசாயம் அதிகமாக நடைபெறுகிறது. இப்படிப்பட்ட அந்தத் தொழிலுக்கு அங்கே பதப்படுத்துவதற்கும், பதப்படுத்தி அங்கே சரியான கூடங்களை அமைத்துக்...

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சீக்கிரம் பேச்சை முடியுங்கள். நேரம் ஆகி விட்டது.

**திரு. மு.க. பெரியசாமி:** ...கொடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைப்போல, பொறையார், தரங்கம்பாடி பகுதிகளிலே, பொறையாரிலே பேருந்து நிலைய வசதி, மக்களுடைய கோரிக்கை. அதற்கு நமது அரசு நிலம் கையகப்படுத்தி இருக்கிறது. ஆனால், பேருந்து நிலையம் இதுவரை கட்டப்படவில்லை. ஆகவே, அதையும் கட்டித் தர வேண்டும். ஆகவே, மீன்பிடித் தொழில் அங்கு முக்கியமான தொழிலாக, விவசாயமும், மீன்பிடியும் இரு சம பாகங்களாக அந்த மக்களுடைய தொழில்களாக இருக்கின்றன. ஆகவே, மீன்பிடித் தொழிலுக்கு, அங்கேயே அதைப் பதப்படுத்துவதற்கும், அதைக் கருவாடாக்கி, அங்கேயே சேமித்து வைப்பதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் தேவையான ஒரு கிடங்கை அங்கே ஏற்படுத்தி, நல்ல சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் நான் உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல இன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரியசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள்

**திரு. மு.க. பெரியசாமி:** அங்கே அதிகமாகப் பருத்தி விளைகிறது. அந்தப் பருத்தி இன்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின்



வாயிலாக அங்கே கொள்முதல் செய்யப்பட்டாலும், உடனுக்குடன் அங்கே அதற்கு விலை கொடுப்பதில்லை. அதை எடுத்துக் கொள்வதில்லை. ஆகவே, மாநில அரசே, நமது தாயுள்ளம் கொண்ட கலைஞர் அரசே, அங்கு பருத்திக் கொள்முதலைச் செய்து, அந்தப் பருத்தி கொள்முதலை அங்கு தரம் பிரித்து, அந்தத் தொகுதியிலேயே பருத்தியைப் பதனிடுவதற்கும், நூலாக்குவதற்கும், பதப்படுத்துவதற்கும் ஒரு ஆலையை நிறுவி, அந்தத் தொகுதியினுடைய மக்களுக்கு கொடுக்க வேண்டும்.

அந்தத் தொகுதியிலே இன்னும் பல்வேறு பிரச்சினைகளை உங்களிடத்திலே நேரிலே சொல்லிப் பெற வேண்டியுள்ளது. நீங்கள் அவற்றை எனக்குச் செய்து தர வேண்டுமென்று நல்ல எண்ணத்திலே கேட்டுக்கொண்டு, முழுக்க, முழுக்க விவசாயம் சார்ந்திருக்கிற அந்த மாவட்டம் நாகை மாவட்டம். அந்த நாகை மாவட்டம், ஆண்டுதோறும் புயலாலோ அல்லது வெள்ளத்தாலோ பாதிக்கப்படுகிற ஒரு மாவட்டம...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி, சீக்கிரம் உரையை முடியுங்கள்

**திரு. மு.க. பெரியசாமி:** வெள்ளம், புயல், சுனாமியால் பாதிக்கப்படுகிற அந்த மாவட்டத்திற்குத் தனியான கவனம் செலுத்திட வேண்டும். பின்தங்கிய மாவட்டமாக மத்திய அரசும், மாநில அரசும் அறிவித்து இருந்தாலும், அந்த மாவட்டத்தைத் தங்களுடைய சொந்த மாவட்டமாகக் கருதி, அதற்கு நீங்கள் அதிக உதவிகளை விவசாய மானியக் கோரிக்கையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் கட்சித் தலைவர் அவர்களுக்கும், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லி, உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன். நீங்கள் ஒரு 7 நிமிடம், அடுத்த உறுப்பினர் ஒரு 7 நிமிடம். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12–25

***திரு. என். நன்மாறன்:** நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டாலும், இந்த அவையின் பெரும்பான்மை உறுப்பினர்களும், நாட்டு மக்களும் கொண்டிருக்கிற நம்பிக்கை காரணமாக ஒரு சிறிய, மிகச் சிறிய இடைவேளைக்குப் பின்னால் மீண்டும் இந்த ஆசனத்திலே அமர்ந்திருக்கிற அவையின் நாயகர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் மீண்டும் இடம்பெறுவதற்காக என்னை இந்தத் தேர்தலிலே நிறுத்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கும், உடனிருந்து ஒத்துழைப்புத் தந்த திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, முஸ்லீம் லீக், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம், நடிகர் திலகம் சிவாஜி மன்றம், இயக்குநர் திலகம் பாக்கியராஜ் மன்றம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த நண்பர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களே, இந்த மன்றத்தில் அமர்ந்து செவி சாய்த்துக் கொண்டிருக்கிற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர், பேரவை விதி 110 என்பதற்குப் பெருமை சேர்த்து, அந்த விதியே மகிழத்தக்க வகையில் தரிசு நில மேம்பாடு பற்றியும், உபரி நிலங்கள் குறித்தும் தெரிவித்து, விவசாயத் தொழிலாளிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்குகிற ஒரு உயரிய தீர்மானத்தை 'தீக்கதிர்' நாளேட்டின் தலையங்கத்தையும் வாசித்துக் காட்டி இந்த அவையின் முன் வைத்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயம் குறித்து, வேளாண்மைத் துறை குறித்துப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். விவசாய நெருக்கடி கடுமையாக இருக்கிறது. உலகமயமாக்குதலின் சூழலில் விவசாயம் கடும் பாதிப்படைந்துள்ளது. மத்தியில் உள்ள தேசிய விவசாயிகள் ஆணையம் விவசாயிகளுக்கு 4 சதமான வட்டியில் கடன் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அது நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், பயிர்க் காப்பீடுமூலம் விவசாயிகளுக்கு முழுப் பாதுகாப்பினை வழங்க வேண்டுமென்றும், இந்திய நாடு முழுவதிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஊழியர்கள் இந்த ஆகஸ்ட் மாதம் பிரச்சார இயக்கத்தினை மேற்கொண்டிருக்கிறார்கள். அதையும் இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக அரசு மத்திய அரசிடம் இப்பணியை



நிறைவேற்றக் கூடுதல் நிதியுதவி கோர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயம் என்பது ஆதாயம் தரும் தொழிலாக இன்றைக்கும் இல்லை.

"சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று வள்ளுவர் பெருமகன் குறிப்பிட்டிருந்தாலுங்கூட, உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள், குறிப்பாக, கரும்பு, நெல், வாழை, குச்சிக்கிழங்கு போன்றவற்றை சாகுபடி செய்யும் விவசாயிகளின் நிலை கவலைக்குரியதாக இருக்கிறது. ஒரு ஏக்கர் சொந்த நிலம் வைத்து சாகுபடி செய்யும் விவசாயி—கரும்பு பயிரிடக்கூடிய விவசாயிக்கு 40 டன் கிடைக்கும். அதற்கு 12 அல்லது 13 மாதங்கள் பிடிக்கும். மொத்த உற்பத்திச் செலவு ரூ.22,265. ஒரு டன் கரும்புக்கு, ஒரு மாதத்திற்கு 1,050 ரூபாய் நிகர வருவாயாகக் கிடைக்கிறது. ஒரு டன் கரும்புக்கு ரூ.1,050 ரூபாய் கிடைக்கிறபோது, 40 டன் விளைச்சல் வருகிற நேரத்தில், 42 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. அவருடைய நிகர வருவாய் ரூ.19,735. ஒரு மாத வருமானம் என்பது 1,644 ரூபாய்தான் அவருக்குக் கிடைக்கிறது. இதுபோல ஒவ்வொரு துறையிலும் சொல்லலாம். நெல் பயிரிடக்கூடிய விவசாயிக்கு ஒரு மாதத்திற்குக் கூடுதல் லாபம் என்பது 950 ரூபாய். அதுபோல குச்சிக்கிழங்கு விவசாயிக்குக் கிடைப்பது ஒரு மாதத்திற்கு 782 ரூபாய். இது சொந்த நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடிய தொகை. இதுவே குத்தகை விவசாயியாக இருந்தால் நிச்சயமாக எதுவும் இல்லை என்பதைக் கவலையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிலத்தை மாத்திரமே நம்பி இருக்கக்கூடிய விவசாயிகள், புலிமீது சவாரி செய்வதுபோல் இருக்கிறார்கள். தொடரவும் முடியவில்லை, இறங்கவும் முடியவில்லை, கரும்பு உற்பத்தியில். அதே சமயம் உற்பத்தி என்று வருகிறபோது ஒரு தேக்க நிலை இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 40 டன் கரும்பு உற்பத்தி என்கிற நிலைமை நீண்ட காலமாக நிலவுகிறது. புதிய விஞ்ஞான உற்பத்தி முறையைக் கையாண்டு விளைச்சலைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அறிக்கையிலும் அது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

விவசாய இடுபொருட்களுடைய விலை உயர்வு தடுத்து நிறுத்தப்பட வேண்டும். உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்யும்போது, கூடுதல் விலை தர வேண்டும். இதன்மூலம் விவசாயிகள் கடனாளிகளாக மாறாமல், கந்துவட்டிக்காரர்களிடம் சிக்காமல் தவிர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாய விளைபொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். விவசாய விளை நிலங்களில் பல பகுதிகள் real estate–களாக மாறிக்கொண்டிருக்கின்றன. இந்தப் போக்கு தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அகில இந்திய அளவில் எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் National Farmers' Commission என்ற ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் விவசாயம் குறித்து ஒரு குழு. அது இப்போது துறைவாரியான பயிர்களுக்கு ஒரு குழு என்று அறிக்கையிலே இருக்கிறது. மாநில அளவில், விவசாய சங்கத் தலைவர்கள், நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அதற்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–30*

சொட்டு நீர்ப்பாசன முறை ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அதற்கு மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நில முதலைகள் உச்சவரம்பு கண்டறியப்பட வேண்டும். சிறுதாவூர் குறித்து ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல, கடலாடி ஒன்றியம். அந்தப் பகுதியிலும் 10,000 ஏக்கர் வரையிலும் பதிவு செய்யப்பட்டு, நிலமுள்ளவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு இருப்பதாக நிலைமை உள்ளது. அதுபோல, சாயல்குடி பகுதியில் ஏற்பட்டிருக்கின்ற மோசடிக்கும் விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

கோயில் நிலங்களில் பாடுபடக்கூடிய குத்தகை விவசாயிகள் கடந்த 3 ஆண்டுகளாக வறட்சியின் காரணமாகக் குத்தகை செலுத்தவில்லை. ஆனாலுங்கூட, குத்தகை செலுத்தவில்லை என்று அச்சுறுத்தப்பட்டு, வெளியேற்றப்படுகிற நிலைமை இருக்கிறது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. அது இயங்குவதற்கு உத்தரவாதமான ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

D V21;31'N06 2006.7.1



கிராமப்புற ஏரி, குளங்கள் தூர் வாரப்பட வேண்டும். இதில் இயந்திரங்கள் புகுத்தப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். மண் வளப் பாதுகாப்பு. அதேபோன்று, புவியியல், Geologist நிபுணர்கள் இருக்கிறார்கள். இந்தத் துறைகள் பாதுகாக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை வளர, வேளாண்மைத் துறை ஊழியர் நலனும் பாதுகாக்கப்பட வேண்டும். சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசி, அவர்களது குறைகளைக் களைந்து, வேளாண்மைத் துறையில் வளர்ச்சியை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல், சிறுமலைப் பழங்களை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும். அறநிலையத் துறை பழனி திருக்கோயில் பஞ்சாமிர்தம் போன்ற பொருட்கள் தயாரிக்க இது பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். குமரி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி நிறுவப்பட வேண்டும் என்று அம்மக்கள் விரும்புகிறார்கள். அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தரிசு நில மேம்பாட்டிற்காகக் கடந்த காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டது. அது தரிசு நில மேம்பாட்டிற்குத்தான் பயன்பட்டிருக்கிறதா அல்லது வேறு சிலரின் மேம்பாட்டிற்குப் பயன்பட்டிருக்கிறதா என்பதையும் கண்டறிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

சில மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய புகார்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். Contract Farming என்கிற முறையில் பயிர் செய்யப்படுகிற காட்டாமணக்கு, பயோ டீசல் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவற்றிற்கு மார்க்கெட் ஏற்பாடு செய்து தர வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறோம்.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட குமரி, தூத்துக்குடி, (மணியடிக்கப்பெற்றது) விருதுநகர், நெல்லை, மதுரை, தேனி மாவட்டங்களில் வாழை, தென்னை, கரும்பு, மா, கொய்யா போன்ற பயிர்களில் ரூபாய் 50 கோடிக்கும் மேல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

வணிக வளாகம். பக்கம் 123–ல் குறிக்கப்ப[illegible]யில். அதிலே சுமைப் பணித் தொழிலாளர்களு[illegible] இட வசதி செய்ய வேண்டும் என்று மா[illegible]வட்ட ஆட்சித் தலைவர்களிடம்



227418

கோரியிருக்கிறோம். அதனைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உழவர் பயிற்சி மையம் மதுரையிலும் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

கரும்பு விவசாயத்தைப் பொறுத்தவரையில் அலங்காநல்லூர், மேலூர் வட்ட விவசாயிகள் அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு தருகிறார்கள். விவசாயம் என்பது தொழிலுக்கும் பயன்படுகிற காரணத்தினால் அந்தச் சர்க்கரை ஆலை இயங்குவதற்கு ஒரு சிறிய கடன் தள்ளுபடியை அரசு செய்ய வேண்டியிருக்கிறது. அதனைச் செய்து, அந்தச் சர்க்கரை ஆலையை இயங்க வைத்து, மேலூர் தாலுகா கரும்பு விவசாயிகளைக் காக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு வணங்கி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு வாய்ந்த இந்த வேளாண் மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றத் தோழர்களுக்கும், 'மற்றவை எதுவானாலும் காத்திருக்கலாம்; ஆனால் வேளாண்மை அல்ல' என்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய கூற்றிற்கிணங்க, இன்றைக்குத் தமிழகத்தினுடைய வாழ்வாதாரத்தை, நிதி நிலையை, மேம்பாட்டை செழுமைப்படுத்துவதற்கு, செம்மைப்படுத்துவதற்கு சரியான ஒரு நிலை எடுத்து வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டுகிற விதத்திலே பல நல்ல திட்டங்களை அறிவித்து, 6,866 கோடி ரூபாய் கடனையும் தள்ளுபடி செய்திருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் இந்த அவையிலே தமிழகத்தினுடைய வேளாண் மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்து, என்னுடைய சில கருத்துகளை இங்கே முன்மொழிகிறேன்.

வேளாண் தொழில் என்பது இயற்கை சார்ந்தது. பல்வேறு எதிர்பாராத் தாக்குதல்களைச் சந்தித்து, சாதிக்க வேண்டிய தொழில். விவசாயம் என்பது இன்றைய சமூகத்தில் தொழிலாக மாற்றப்பட்டுள்ளது. குடும்பத்தோடு தன்னுடைய சொந்த உழைப்பால் பாடுபடக்கூடிய விவசாயக் குடும்பத்திற்குக்கூட விவசாயம் செய்வதற்கு மூலதனம் அவசியம் தேவையுள்ள ஒரு சூழல். அதே சமயம், வேளாண்



தொழிலும், உற்பத்தியும் இல்லாது உயிரினம் வாழ முடியாது. எனவே, எந்தவொரு நாடும் எந்தத் துறையில் முன்னணியில் இருந்தாலும், அடிப்படையில் தன் நாட்டில் வேளாண் தொழிலைப் பாதுகாக்க, உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும்.

*பிற்பகல் 12–35*

இந்த அடிப்படையில் தமிழக விவசாயத் துறையை நாம் கணக்கில் எடுக்க வேண்டும். இந்தத் துறைக்கு அதி முக்கியத்துவம் தரப்பட வேண்டும். நமது நாட்டிலும், தமிழ்நாட்டிலும் நூற்றுக்கு சுமார் 75 சதவிகித மக்கள் இத்தொழிலைச் சார்ந்துள்ளார்கள் என்ற அடிப்படையில், இத்தொழிலின் வளர்ச்சியும், லாபம் ஈட்டும் தன்மையும்தான் நாட்டின் பெரும் பகுதி மக்களின் வேலைவாய்ப்பையும், தனி நபர் வருமானத்தையும், வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும். நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தும். ஆனால், தொடர்ந்து நீண்ட நாட்களாகவே, விவசாயத் துறையில் அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தினாலும், அந்தத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படாததால், விவசாயத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்களும், நிலையான வளர்ச்சியும் ஏற்பட முடியவில்லை.

எனவே, விவசாயத்தில் ஈடுபட்ட பாரம்பரியமான விவசாயக் குடும்பங்கள்கூட நலிவடைந்து, விவசாய வீழ்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தேவைக்காக இடம் பெயர்ந்து நகரவாசியாக மாற்றப்பட்டுள்ளார்கள். விவசாயம் என்பது வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்கிற வருமானம் இல்லாத தொழிலாக உள்ளதால், விவசாயக் குடும்ப இளைஞர்கள் பெருமளவில் வேலையில்லாப் பகுதி மக்களாகவும், சிறு, குறு விவசாயிகள் நகர்ப்புறத்துக் கூலிகளாகவும் மாறியுள்ளார்கள். இந்திய நாட்டினுடைய கணக்கெடுப்பின் அடிப்படையில் 40 சதவிகித விவசாயத் தொழிலை மேற்கொண்டிருக்கிற விவசாயிகள் வேறு தொழில் இருந்தால், இதை விட்டுவிட்டுப் போய் விடுவோம் என்கிற கருத்தை உடையவர்களாக இருக்கிறார்கள் என்ற அபாயமும் நீடித்துக்கொண்டிருக்கிறது.

விளைநிலங்கள் தரிசு நிலங்களாகவும், வேறு பயன்பாட்டிற்குப் பயன்படுத்தும் நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில், தமிழகத்தின் விவசாயம் என்று பார்த்தால், 1996 முதல்

2001 ஆம் ஆண்டு வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழ்நாட்டினுடைய உற்பத்தி வருவாயில் 18 சதவிகிதமாக இருந்த விவசாய உற்பத்தி கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 13 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

அதைப்போல, தமிழகத்தில் ஏற்பட்ட தொடர் வறட்சி, வெள்ளம் ஆகியவற்றால் விவசாயப் பகுதி நிலைகுலைந்திருக்கிற சூழலில், கலைஞருடைய அரசு புதியதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள இந்தச் சூழலில், தமிழக விவசாயத்திற்கு நம்பிக்கை ஊட்டுகிற பல்வேறுவிதமான நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் விவசாயம் தமிழகத்திலே நிலையாக வளர்ச்சி அடைவதற்கு, அதனுடைய சங்கிலித் தொடர்ச்சியாக உள்ள கட்டமைப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும். நிலம், நீர்ப்பாசனம், முதலீடு, விதை மற்றும் இடுபொருட்கள், விவசாயிகளுக்கான மானியம், தொழில்நுட்ப உதவி, விவசாய விளைபொருட்களைப் பாதுகாக்கின்ற தன்மை, கட்டுப்படியான விலை, மார்க்கெட், பயிர் இன்சூரன்ஸ் திட்டம், இவற்றிலே எல்லா முனைகளிலுமே ஒரு நிலையான, உறுதியான மேம்பாட்டை நாம் அடைவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

நிலம் என்று எடுத்துக்கொண்டால், இன்றைக்கு 48 சதவிகித நிலங்கள் பாசன வசதி இல்லாமல் இருக்கின்றன. 100 சதவிகித நிலங்களுக்கும் பாசனத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதைப்போல இன்றைக்கு நமது நிதிநிலை அறிக்கையிலே தென்னக நதிகளை இணைக்கிற ஒரு நடவடிக்கை. அதற்கு வரவேற்புக் கொடுக்கிற அந்த நேரத்தில், முதல் கட்டமாகத் தமிழக நதிகளை இணைக்கிற ஒரு செயலை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

எப்படி நமது முதல்வர் அவர்கள் சார்ந்திருக்கிற சோழமண்டலத்திலே கரிகால் சோழன் காலத்தில் இரண்டாம் நூற்றாண்டிலே கல்லணையைக் கட்டி, பாசனத் திட்டத்தை உருவாக்கினார்களோ, அதைப்போல, இந்தச் சோழன் 21 ஆம் நூற்றாண்டிலே தமிழக நதிகளை இணைத்து, ஒரு மாபெரும் சரித்திர சாதனையைப் படைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் தமிழகத்திற்குச் சரியாக இருக்கும். அவருடைய வரலாறு என்பது இந்த மண் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதைப்போல, காவிரி நீரைப் புதுக்கோட்டைக்குக் கொண்டு செல்கிற ஒரு திட்டத்தைச் சிறப்பாக அமல்படுத்தியிருக்கிறார்கள். அதிலே இறுதியாக அக்கினி ஆற்றிலே கொண்டு போய்ச் சேர்ப்பதாக இருக்கிறது. அக்கினி ஆறு என்பதும் கடலிலே கலக்கிற ஒரு வடிகால் பகுதி. எனவே, அதை மாற்றி, சிவகங்கை போன்ற பகுதிகளுக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கான திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–40*

முல்லைப் பெரியாறு என்பது ஒரு பிரச்சினையாக மாறி இருக்கிறது. அந்த முல்லைப் பெரியாறு அணையிலிருந்து வைகை அணைக்கு எடுக்கிற தண்ணீரை இன்னும் கூடுதலாக எடுப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதைப்போல, கிணற்று விவசாயம் இன்றைக்குக் கூடியிருக்கிறது. மின் இணைப்புக்காகக் காத்து இருப்பவர்களுக்கு விரைவாக மின் இணைப்புக் கொடுக்கிற ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டும். அடுத்த கட்டமாக விவசாயிகளுக்கு விதை, விதை உற்பத்தி, விநியோகம் அரசின் கட்டுப்பாட்டிலே இருக்க வேண்டும். Terminator seed போன்ற பன்னாட்டுக் கம்பெனிகளின் அந்த மறு முளைப்புத் திறன் இல்லாத விதைகளை அறவே ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இடுபொருள் என்று வரும்பொழுது, இயற்கை உரங்கள் பற்றி இன்றைக்கு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. இடுபொருள், பூச்சி மருந்து பற்றி மறு சிந்தனை விவசாயிகளிடம் உருவாகியிருக்கிறது. எனவே, இயற்கை உரங்கள் தயாரிப்பு மற்றும் பயன்பாடுகள் பற்றி இன்னும் அதிகமான ஊக்குவிப்புகள் அறிவிக்கப்பட வேண்டும். அதைப்போல, மானியம் தொடர்ந்து வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தொழில்நுட்ப உதவி என்று வரும்பொழுது, இன்றைக்கு விவசாயத்திலே தொழில்நுட்ப உதவி என்பது இன்றியமையாததாக இருக்கிறது. அதற்காக விவசாய ஆராய்ச்சி மையங்களை இன்னும் விரிவுபடுத்தவும், புதிய ஆராய்ச்சி மையங்கள் உருவாக்கப்படவும் வேண்டும். வேளாண் துறையிலே பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு உதவியாக இருக்க வேண்டும். அதைப்போல, வளர்ந்து வரும் விவசாய அறிவியல் நுட்பங்கள், புதிய விவசாய உற்பத்தி முறைகள், நுணுக்கங்களை விவசாயிகள் தேடி அலைவதைவிட, விவசாயிகளைத் தேடித் தொழில்நுட்பங்கள் செல்லுகிற அளவில்

விவசாய ஆராய்ச்சி மையம், வேளாண் துறை செயலாற்ற மேம்படுத்தப்படவேண்டும். வேளாண் துறை என்பது விவசாயிகளுக்கு இணை கோடாகச் சென்றுகொண்டிருக்கிறது, அது விவசாயிகளோடு இணைகிற ஒரு துறையாக உருவாக்கப்பட வேண்டும்.

அதைப்போல, எவ்வளவுதான் நாம் கட்டமைப்பு வ்சதிகளை உருவாக்கிக் கொடுத்தாலும் கட்டுப்படியான விலை என்பதும், மார்க்கெட் என்பதும்தான் விவசாயத்திலே இருக்கிற ஒரு மையமான, முக்கியமான பிரச்சினை. அந்த அடிப்படையில் கட்டுப்படியான விலைக்காக தமிழத்திலே முன் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். விலை நிர்ணயம் என்பது இந்திய அளவிலே உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை மாற்றி மாநில அளவிலே விலை நிர்ணயிக்கிற ஒரு சூழலை உருவாக்க வேண்டும், விவசாய விளைபொருள் நிர்ணயத் துறையை இங்கே உருவாக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இந்திய அளவிலே இருக்கிற ஒவ்வொரு மாநிலத்திலும், மாநிலத்திற்கு மாநிலம் விவசாய உற்பத்தியில் ஏற்படக்கூடிய செலவினங்களும், பல்வேறு நிலைகளும் மாறுபட்டு இருக்கிற காரணத்தால், விலை நிர்ணயிப்பதை மாநில அளவில் தீர்மானிப்பதைக் கொள்கை முடிவாக எடுக்க வேண்டும்.

அதைப்போல, மார்க்கெட் என்பது அவசியத் தேவை. அதைக் கருத்தில்கொண்டு, மார்க்கெட்டிங் சொசைட்டியை உருவாக்கியிருக்கிறோம். அந்த மார்க்கெட்டிங் சொசைட்டி என்பது இன்றைக்குச் சிறப்பாகச் செயல்படவில்லை. அது ஒரு வட்டிக் கடையைப்போலத்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிலே பல்வேறு ஒழுங்கீனங்களும், ஊழல்களும் நடக்கின்றன, வர்த்தகர்களுக்குப் பயன்படுகிறது. அதை மாற்றி அதனை உண்மையிலேயே விவசாயிகளுக்கான கொள்முதல் நிலையங்களாகச் செயல்படுகிற மார்க்கெட்டிங் சொசைட்டியாக மாற்ற வேண்டும்.

அதைப்போல, பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைத் தனி நபர் இன்சூரன்ஸ் திட்டமாக மாற்றி, நிதி ஒதுக்கீடு, தனி அமைப்பு தமிழகத்திலே அமல்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறுவிதமான விவசாயப் பிரச்சினைகளை விவாதிப்பதற்காக—விவசாயிகள் தொடர்ந்து பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே, அதை முழுமையாகக் கண்காணித்து, விவாதிப்பதற்கு—கலைஞர் அவர்கள் அரசு 1996 ஆம் ஆண்டு ஏற்படுத்தியதைப்போல, விவசாய உயர்மட்டக் குழுவை ஏற்படுத்தி, தொடர்ந்து விவசாயப் பிரச்சினைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.



இன்றைக்குக் கரும்பு ஒரு முக்கியமான பயிராக இருக்கிறது. கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான் 1996–லிருந்து 2001 வரை மாநில அரசு ஆதரவு விலை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது. அதே சமயத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பின்னால், 2001–லிருந்து 2005 ஆம் ஆண்டு வரை, அந்த நான்கு ஆண்டுகளிலே மாநில அரசு ஆதரவு விலை தரப்படவில்லை. ஆனால், 2005–2006 ஆம் ஆண்டு மட்டும் தேர்தலுக்காக 214 ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விலையும் தனியார் ஆலையில் இருக்கிற விவசாயிகளுக்குக் கிடைக்காத ஒரு சூழல் நீடித்துக்கொண்டிருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** முக்கியமான ஒரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேச வேண்டும். இன்னும் உறுப்பினர்கள் பேச வேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை, இல்லை, முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். அதனால், கரும்பு விவசாயிகளுக்கான மாநில அரசு ஆதரவு விலை தனியார் ஆலை விவசாயிகளுக்கும் கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Sugarcane Board என்பது இன்றைக்குச் செயல்படாத ஒரு அமைப்பாக இருக்கிறது. எனவே, கரும்பு விவசாயிகளைப் பாதுகாக்கிறவிதமாக முத்தரப்புக் கூட்டத்தை நடத்த வேண்டும். விவசாயிகளுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. கரும்பு வெட்டுவதில் காலதாமதம், பணம் கிடைப்பதில் காலதாமதம் மற்றும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, அவற்றைப் பற்றி ஆய்வதற்கு முத்தரப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும்.

அதைப்போல, நெல்லுக்கு விலை 10 ரூபாய்தான் மத்திய அரசு கூட்டியிருக்கிறது. அதை ரூ. 100/– கூடுதலாக அறிவித்து, மாநில அரசும் கூடுதலாக ஆதரவு விலை அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடந்த ஆட்சியில் பெரு வெள்ளம் ஏற்பட்டு உணமையான பெரும் பகுதி விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கிடைக்கவில்லை. போன

ஆட்சியிலும், இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற, தோழமைக் கட்சியாக இருக்கிற இந்தக் கட்சிகளைச் சார்ந்த விவசாயிகள் பட்டியல் போட்டு, குறிப்பிட்டுச் சொல்லப்பட்டு, நஷ்ட ஈடு வழங்குவதிலிருந்து அவர்களுடைய அந்த நிலங்களையெல்லாம் தள்ளுபடி செய்து அவர்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்காத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆட்சி மாற்றத்தில் தங்களுக்குக் கிடைக்கும் என்று உண்மையான பாதிக்கப்பட்ட விவசாயிகள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தோட்டக்கலைத் துறை என்பது ஒரு பிரிவாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தத் தோட்டக்கலைத் துறை என்பது, ஓர் இராணுவ இரகசியம்போல இயங்கிக்கொண்டிருக்கிறது. அதை மாற்றி, அங்கேயிருக்கக்கூடிய திட்டங்கள் மக்களுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12–45*

இறுதியாக ஒன்றே ஒன்று. நமது வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, விவசாயம் சம்பந்தமான ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. அதிலே அவர் தெளிவாக அறிவித்திருக்கிறார். நாம் இந்த பூமியில் சூரிய வெளிச்சத்திலிருந்து உணவு தயாரித்து அளிக்கும் பசுமையான தாவரங்களுக்கும், மழை மற்றும் வெயிலிலே பாடுபட்டுச் சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிருக்கும் விருந்தினராக வசிக்கிறோம். எனவே, இதர மக்களின் வாழ்வுக்குப் பாடுபடுவோரின் உயிரைப் பறிக்கும் நடவடிக்கைகள் வருத்தத்தைத் தருவதாகவும், வெட்கப்பட வேண்டியதாகவும் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த நிலைகளை எல்லாம் மீறி, தமிழகத்திலே—கடந்த ஆட்சியின்போது, தஞ்சை மாவட்டத்தில் 22 பேர் தற்கொலை செய்துகொண்டு இறந்திருக்கிறார்கள். அந்தத் தகவலை வெளியே சொன்னதற்காக, இங்கேயிருக்கிற எங்களது அருமை சட்டமன்றக் குழுத் தலைவர் சிவபுண்ணியம் அவர்கள் காவல் துறையினரால பாதிப்படைந்தார். எங்களுடைய அன்றைய மாநிலச் செயலாளராக இருந்த தோழர் ஆர். நல்லக்கண்ணு அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு விவசாயச் சங்கத்தின்மூலமும், தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் அந்த விவசாயிகளுக்கு, 22 நபர்களுக்கு



நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறோம். ஆனால், அது போதாது. தமிழக அரசு, கலைஞர் அவர்கள் இந்தக் கூட்டத்திலேயே அவர்களுக்குக் கூடுதலாக இரண்டு இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுப்பதற்கான ஆணையை வழங்க வேண்டும், விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் குத்தகை விவசாயிகளுக்கு குத்தகைகளை ரத்துச் செய்ய வேண்டும்.

விவசாயிகளும், விவசாயமும் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிற இந்தச் சூழலில் தமிழக அரசு வேளாண் துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து, வேளாண் துறைக்கு முதன்மையைக் கொடுத்து, பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை, நல்ல அறிவிப்புகளை, நல்ல சலுகைகளை, நல்ல திட்டங்களை முன் வைத்திருக்கிறது. இந்தத் திட்டங்கள் முறையாக அமல்படுத்தப்பட்டு, இன்னும் இருக்கிற சில குறைபாடுகளை நீக்கி, வருகிற 5 ஆண்டு காலத்தில் தமிழகத்தினுடைய விவசாயிகளுக்கு ஒரு பொற்காலமான சூழலையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி, தமிழகத்தினுடைய விவசாயத்தைச் செழிப்படையச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. எம்.ஆர். சுந்தரம், ஐந்து நிமிடங்கள் பேசுங்கள். அதிக time இல்லை.

***திரு. எம்.ஆர். சுந்தரம்:** வணக்கத்திற்கும், போற்றுதலுக்கும் உரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு பேரவையின் உறுப்பினர்களே, அனைவருக்கும், என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்த ஆத்தூர் தொகுதியின் வாக்காளர்களின் சார்பிலும், எனது சார்பிலும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கும் முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், எங்களையெல்லாம் அடையாளம் காட்டி, அழகு பார்த்து, எங்களுக்கு வழிகாட்டி, அரசியலில் என்னை வழிநடத்திய மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டின் ஈடில்லா விடிவெள்ளி அன்னை சோனியா அவர்களுக்கும், பாரதப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன்சிங்

அவர்களுக்கும், மக்கள் தளபதி மாண்புமிகு மத்திய அமைச்சர் ஐயா ஜி.கே. வாசன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களுக்கும், ராசிபுரம் பாராளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய செல்வி கே. ராணி அவர்களுக்கும் மற்றும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய ஆத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த நிதிநிலை அறிக்கை, வரியில்லா, ஏழைகளை வாழ வைக்கின்ற, அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்படுகின்ற நிதிநிலை அறிக்கையாக விளங்குவதை எண்ணி மக்கள் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளனர். உழவன் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில், விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்தல், விவசாயிகளுக்கு மீண்டும் வழங்கும் கடனுக்கு வட்டிக் குறைப்பு போன்றவை மகத்தான திட்டங்களாகும். விவசாயிகளுக்கு இந்த நிதிநிலை அறிக்கை ஒரு அட்சயப் பாத்திரம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். விவசாயிகளுக்கு ஏற்படும் வேதனைகளையும், சோதனைகளையும் நன்கு உணர்ந்தவன். கடந்த சில ஆண்டுகள் தமிழகம் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கி வாடியது. கடந்த ஆண்டு சுனாமியின் தாக்குதலால் திக்குமுக்காடியது. இதில் விவசாயப் பெருமக்கள் வாடினார்கள், தவித்தார்கள். அதாவது, 'காய்ந்தும் கெட்டது, மழை பெய்தும் கெட்டது' என்ற கிராமத்துப் பழமொழிக்கேற்ப, விவசாயப் பெருமக்கள் பெரும் பாதிப்புக்கும், இழப்புக்கும் ஆளானார்கள். 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினார் இலங்கை நாட்டு வேந்தன்' என்று சொல்வதுபோல, இத்தகைய பாதிப்பால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கும், கடன் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டார்கள். விவசாயத்திற்காகக் கடன்பட்டு, வட்டிகூடக் கட்ட முடியாத அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். அவர்கள் வறுமையில் வாடி நின்றதை நாடறியும், நாம் அறிவோம். ஆனால், அப்போதைய அரசு விவசாயிகளைப் பற்றிக் கவலைப்படாத



அரசாக இருந்தது. ஆனால், விவசாயிகள் பட்ட கடனை, விவசாயிகளுடைய மகன் மட்டுமல்ல, அவர்களுடைய பேரன்கூடக் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருந்தபோது, அந்தக் கடனிலிருந்து மீள முடியாத ஒரு அவல நிலை இருந்தபோது, வறுமையில் வாடும் விவசாயிகளின் வேதனைகளை உணர்ந்த தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில், விவசாயக் கூட்டுறவுக் கடன், வட்டியுடன் அறவே தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். சொல்வதைச் செய்யும், செய்வதைச் சொல்லும் கலைஞர் அரசு, அனைத்து விவசாயக் கூட்டுறவுக் கடன்களையும் ரத்துச் செய்து, விவசாயிகள் வாழ்வில் விளக்கேற்றி, அனைத்து விவசாயிகளையும் வாழ வைத்ததற்காகத் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். விவசாயிகள் வாழ்வில் விளக்கேற்றிய தமிழினத் தலைவர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அன்னை சோனியா அவர்களுக்கும், பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களுக்கும், அனைத்து விவசாயக் குடும்பங்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *12-50*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், நான் சார்ந்துள்ள சேலம் மாவட்டம் மற்றும் தருமபுரி, கடலூர், பண்ருட்டி, தஞ்சாவூர், ஈரோடு, கோவை மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, கேரளா, பாண்டி ஆகிய மாநிலங்களில் அதிகமான அளவில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டு வருகின்றது. கடந்த சில ஆண்டுகளாக அதிகமாக நோய் தாக்கப்பட்டு வருகிறது. இதனால் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்படுவதால், மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி நாளுக்கு நாள் குறைந்து வரும் பெரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் பல பகுதிகளில் உணவுப் பொருளுக்குப் பயன்படும் மூலப்பொருளான மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி அழிந்து போகாமல் இருக்க, அரசு பல ரகத்திற்கு மாற்றாக புதிய ஒட்டு ரக மரவள்ளிக் கிழங்கை அறிமுகப்படுத்திட ஆவன செய்திட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன், மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளுக்கும், இதை நம்பியுள்ள பல இலட்சம் தொழிலாளர்களுக்கும்,

சேகோ மில் நடத்தி வரும் உரிமையாளர்களுக்கும், வணிகர்களுக்கும் பயன் தரும் வகையில் சேகோசர்வ்-இல் விற்பனை செய்யும் ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச்சுக்கு வரித் தள்ளுபடி செய்து இத்தொழிலைக் காப்பாற்ற வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். அமைச்சர் பேச வேண்டும்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மரவள்ளிக் கிழங்கைப்போல, தமிழகத்தில் இலட்சக்கணக்கான விவசாயிகள் தென்னை பயிரிட்டு வருகின்றனர். தற்போது தமிழகத்திலே உள்ள தென்னை மர வளர்ப்பில் சுமார் 50 சதவீதத்திற்கு மேல் கடுமையான நோய் தாக்கப்பட்டு, தேங்காய் உற்பத்திக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய கடுமையான நோய்த் தாக்குதலைக் கண்டறியவும், நோய்த் தாக்காத புதிய தென்னை மரம் அறிமுகப்படுத்தவும் அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். தற்போது நோய்த் தாக்குதலுக்குள்ளான தென்னை மர விவசாயிகளுக்கு அரசு தகுந்த நிவாரணம் வழங்கி உதவிட வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, மாற்று ஏற்பாடாக, இப்போது தென்னை மரத்திற்கு ஏற்றாற்போல், தண்ணீர் குறைவாக உள்ள பேரீச்சைப் பயிர் வெகுவாக நடைமுறையிலே உருவாக்கப்பட்டு வருகின்றது. நமது தமிழக அரசு, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதை ஊக்கப்படுத்தி விவசாயிகளுக்கு, தென்னை மரத்திற்குப் பதிலாக ஒரு மாற்று ஏற்பாடு செய்வார்களானால், விவசாயிகள் பெரும் பயனடைவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர், தலைவாசல் தொகுதிகளில் அதிகப்படியான விவசாயிகள் கரும்பு பயிரிட்டு வருகின்றனர். இப்பகுதி விவசாயக் கரும்புகள் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும், மற்ற மாவட்டங்களிலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. கரும்பு அறுவடைக் காலங்களில் குறிப்பிட்ட காலங்களில் கரும்பு வெட்டப்படாமல் காலதாமதம் ஆகிறது. இந்த நிலையில் தனியார் சர்க்கரை ஆலையினரும், இடைத்தரகர்களும் குறைந்த விலைக்குக்



கரும்பை வாங்கிடும் நிலைமையும், மேலும், எடையில் முறைகேடு போன்ற நிலைமையும், குறித்த காலத்தில் பணம் கொடுக்கப்படாத நிலைமையும் ஏற்படுகின்றன. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரும் சிரமத்திற்கும், பாதிப்பிற்கும் ஆளாக்கப்படுகின்றார்கள். கடந்த 30 ஆண்டுகளாக ஆத்தூர் வட்டாரப் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்தப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் பயனளிக்காத நிலைமையே ஏற்பட்டுள்ளது. எனவே ஆத்தூர், தலைவாசல் வட்டாரப் பகுதி விவசாயிகள் கனவு நனவாகும் வகையில், ஆத்தூர் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்த நமது கழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை தலைவர் கலைஞர் அவர்களின் அரசு நடைபெற்றபோது, வாய்க்கால்கள் தூர் வாரும் பணியும் மிகவும் செம்மையாகவும், சிறப்பாகவும் நடைபெற்றது. இதனால் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தண்ணீர் சேமிக்கவும், அதன்மூலம் விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. தற்போது தமிழகத்தில் பெரும்பாலான ஏரிகள், வாய்க்கால்கள், குளங்கள் தூர் எடுக்கப்படாத நிலையில், மழைக் காலங்களில் சேமிக்கப்பட வேண்டிய தண்ணீர் வீணாகிறது. மழைக் காலங்களில்கூட, ஏரிக்குச் செல்லவேண்டிய தண்ணீர் வீணாகிறது. இதனால் நிலத்தடி நீர் கிடைக்காத அவல நிலை ஏற்படுகின்றது. எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்து ஏரிகள், ஏரி வாய்க்கால்கள், குளங்கள் போன்றவற்றை நல்ல முறையில் தூர் எடுத்து, செப்பனிட்டு, விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் தடையில்லாமல் கிடைக்க அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் பகுதியில், சுமார் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் லிட்டர் பால் ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. அதே வேளையில், சேலம் மற்றும் நாமக்கல் ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில், நாள் ஒன்றுக்கு நான்கு இலட்சத்து முப்பதாயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் உயர்த்தி வழங்கியுள்ளது. அதே வேளையில், நுகர்வோர் நலனில் அக்கறை கொண்டு, பால் நுகர்வோருக்கு விலை உயர்த்தப்படாத காரணத்தினால், சேலம் மாவட்டக் கூட்டுறவு

பால் உற்பத்தியாளர் ஒன்றியம் தினந்தோறும் நிதியிழப்பைச் சந்தித்து வருவதை நிவர்த்தி செய்ய, அரசு, மானியம் அல்லது இதரப் பொருளாக உதவி செய்கின்றதா என்பதைத் தெரிவிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த நிதியிழப்பு காரணமாக, பால் உற்பத்தியாளர்களுக்கு பத்து நாளைக்கு ஒரு முறை வழங்கப்பட்ட பால் பணம் இப்போது ஒரு மாதம் ஆகியும், பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளது. இதற்கு அரசு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் கல்வராயன்மலை அடிப்பகுதியில்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள். அமைச்சருக்கு time கொடுக்க வேண்டும், பேச வேண்டியிருக்கிறது அவர்கள். நீங்கள் ஏற்கெனவே ஒன்பது நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** 1971 ஆம் ஆண்டு கழக அரசுக் காலத்தில், கல்லாறு இராமநாயக்கன்பாளையம் அணை கட்ட திட்டமிடப்பட்டது. அடிப்படை வேலை—ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அன்றைய நிலையில் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் செலவில் திட்டமிடப்பட்ட இத்திட்டம் பல காரணங்களாலும், ஆட்சி மாற்றத்தாலும், அலுவலகச் சிக்கலாலும் தடைப்பட்ட நிலையில் நிறைவேறாமல் உள்ளது. இத்திட்டம் நிறைவேறினால், ஆத்தூர், தலைவாசல் தொகுதிகளில் பல்லாயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். நிலத்தடி நீர் நீண்ட தூரத்திற்குக் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும், தொழிலாளர்களும் பயன் பெறுவார்கள். பல வகைகளிலும் பயன் பெறும் இத்திட்டம் ஆத்தூர் தொகுதியின் நெடுங்காலத் திட்டங்களில் ஒன்றாக, நிறைவேறாமல் உள்ளது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், எனது தொகுதி மக்களின் நலனுக்காக இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே ஒரு வரியிலே உரையை முடியுங்கள், சுந்தரம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.



***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை, எண்ணங்களை எழுதிக்கொண்டு வந்து, கருத்துகளைப் படிக்கிறபோது, நேரம் அதிகமாகிவிட்டால், தாங்கள் எப்படியாவது தொடர்ந்து படிக்க வேண்டுமென்று கருதத் தேவையில்லை. தாங்கள் படிக்கக் கருதியவற்றை அமைச்சரிடத்திலே வழங்கிவிடலாம். அதன்மூலம் அவையினுடைய நேரத்தை மிச்சப்படுத்தினால், மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கருத்துகளுக்கு அமைச்சர் உரிய நடவடிக்கையைப் பின்னர் ஆராய்ந்து எடுப்பார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், அப்படியே கொடுத்துவிடுங்கள். முன்னவர் அவர்கள் சொன்ன மாதிரி, அப்படி எழுதி வைத்திருப்பதைக் கொடுத்துவிடுங்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது, உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடு)* நன்றி சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** எனக்கு இந்த வாய்ப்பை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களது சட்டமன்றத் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை. *(குறுக்கீடு)* திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மிக முக்கியமான துறை. விவசாயிகள் மின் இணைப்புக் கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில், இங்கே சட்டப் பேரவையில் அமர்ந்திருக்கின்ற உறுப்பினர்களுக்கு ஒரு இணைப்பு வீதம் இங்கே, *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பம்புசெட்டுக்கு ஒரு இணைப்பு வீதம் வழங்க வேண்டுமென்று அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலே ஒரு கோரிக்கையை வைத்து, இந்த இணைப்பை வழங்குவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் அவரிடத்திலே இந்த வேண்டுகோளை வைத்த காரணத்தால், காலையிலே முதலமைச்சரிடத்திலே இந்த வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள், ஆண்டுதோறும் ஒரு இணைப்புக் கேட்கிறார். ஆண்டுதோறும் ஒரு இணைப்புக் கொடுக்க முடியாது. யார், யாருக்கு இணைப்பு இல்லையோ,— சட்டமன்ற உறுப்பினர்களில் யார், யாருக்கு இல்லையோ— அவர்களுக்கெல்லாம் மின் இணைப்பு 5 ஆண்டு காலத்திற்குள்ளாக, ஒரேயொரு தடவை, ஒரு இணைப்புக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அனுமதித்திருக்கிறார். இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் முதன்முறையாக இப்படி அனுமதிக்கப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பில் கேட்கப்பட்ட கோரிக்கையை ஏற்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், வேளாண் துறை அமைச்சர் அவர்களுக்கும் மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு புதிய மின் இணைப்பு வழங்குவதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள், நன்றி. ஆனால், எங்களைப்போன்ற எந்த நிலமும் இல்லாதவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். ஆகவே, எங்களுக்கு என்ன மாற்று ஏற்பாடு? நாங்கள் சொல்லக்கூடிய ஒரு நபருக்கு அந்த இணைப்பு வழங்கப்படுமா என்பதையும் சேர்த்து அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் பெயரிலே நிலம் இருந்தால்தான் கொடுக்க முடியுமே தவிர, அவர் பரிந்துரை செய்கின்றவர்களுக்கெல்லாம் கொடுக்க ஆரம்பித்தால், நிதிநிலை தாங்காது. *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய குடும்பத்திற்குள்ளே, அதாவது, மனைவி பெயரிலோ, மகன் பெயரிலோ இருந்தால் கொடுக்கலாம் என்று வைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று முன்னுரிமை கொடுத்து, சட்டமன்ற உறுப்பினருக்கு மின் இணைப்புக் கொடுப்பது என்பது இதற்கு முன்னாலேயே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நன்றி. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கைமீது, திரு. என். மாலைராஜா, திரு. மா. இராஜசேகரன், திரு. மு.க. பெரியசாமி, திரு. என். நன்மாறன், திரு. சு. குணசேகரன், திரு. எம்.ஆர். சுந்தரம் ஆகிய சட்டப் பேரவை உறுப்பினர்கள், இந்த அரசு, தலைவர் கலைஞர் தலைமையிலே அமைந்திருக்கின்ற அரசு, விவசாய பட்ஜெட்டாக அறிவித்து, வேளாண்மையில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக விவசாயிகளை ஊக்கப்படுத்தியும், ஊக்கப்படுத்தும் வகையிலும், பல்வேறு திட்டங்களை அறிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டி அனைவருமே பாராட்டினார்கள். அதற்காக, பேசிய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுதலை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்தாவது முறையாக, மக்களுடைய ஆதரவைப் பெற்று, ஆட்சியிலே முதலமைச்சராக அமர்ந்திருப்பதைவிட, 14 வயதில் தமிழ்க் கொடியைக் கையில் ஏந்தி, "இந்தி ஆதிக்கம் ஒழிக; தமிழ் வாழ்க" என்று முழக்கமிட்ட அந்த உணர்வுதான், நம்முடைய முதலமைச்சருடைய

உள்ளத்தில் என்றும் பசுமையாக இருக்கின்ற நாளாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேதான் அவர் பெருமை கொள்ளக்கூடியவர். அவர் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பது—நான் இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே சொல்லிக்கொள்ள விரும்புவது—உழவனுக்குத் தெரியும்; வயலிலே தண்ணீரைப் பாய்ச்சி, ஏர் கொண்டு உழுது, பிறகு நிலத்தைச் சமப்படுத்தி, நாற்று விட்டு, பயிர் நடுவார்கள். அப்படி நடுகின்ற அந்தப் பயிர் நன்றாக வளர்ந்து விளைச்சலைத் தந்தால்தான், விவசாயி மகிழ்ச்சி அடைவான். நாட்டுக்கும் உணவு கிடைக்கும். ஆனால் அப்படி நடப்பட்ட பயிரில் களை முளைத்துவிட்டால் அந்தக் களையை அகற்ற வேண்டும். இல்லாவிட்டால் பயிர் விளைச்சலைத் தராது. அதைப்போல, தமிழ்நாட்டில் அரசியலிலும் தேவையில்லாத ஒரு களை தமிழகத்திலே திராவிட இயக்கம் என்ற பெயராலே புகுந்துவிட்டது. அந்தக் களையை அகற்றுவதுதான் என்னுடைய வாழ்நாளின் இலட்சியம் என்ற அந்த உணர்வோடு தந்தை பெரியாருடைய கொள்கையை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இலட்சியத்தை ஏற்று இன்றைக்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டிருக்கக்கூடிய ஒப்பற்ற முதலமைச்சர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–05*

இன்றைக்கு அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று 60 நாட்களுக்கு மேலாகின்றன. நாட்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளில் 90 விழுக்காடு நிறைவேற்றிவிட்டு நிமிர்ந்து நிற்கிறார். அவர் சாதனையைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், தலையைக் குனிந்துகொண்டு அந்தச் சுமையைத் தாங்கமுடியாதவர்கள் வெளியே போகிறார்கள். தேவையில்லாத கருத்துக்களை இந்த மாபெரும் மன்றத்தில் பேசுகிறார்கள். முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களைப் பார்த்து, தொலைபேசியிலே நாங்கள் எல்லாம் ஏதாவது தொடர்பு கொண்டாலுங்கூட, அவருடைய பெயரைச் சொல்லி, பேசுகிறேன், சொல் என்பார். தாய், தகப்பனுக்குப் பிறந்தவர்கள், அவர்கள் வைத்த பெயரைத்தான் சொல்வார்கள். நாங்களும் எங்களுடைய பெயரைச் சொல்லுவோம். அதைப்போல, இன்றைக்கும் நாங்கள் ஏதாவது ஒரு அறிக்கை விடுவதற்கு எழுதிக்கொண்டு போய் தலைவரிடத்திலே காண்பித்தாலுங்கூட, தமிழினத் தலைவர், செம்மொழிக் காவலர், அண்ணாவின் தம்பி



என்றெல்லாம் சொன்னால், இந்த அடைமொழிகள் எல்லாம் வேண்டாம், கலைஞர் மு. கருணாநிதி என்று போட்டால் போதும் என்று எங்களுக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருப்பவர்.

இதே சட்டப் பேரவையில் அரசியல் விபத்தின் காரணமாக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவைத் தேர்தலிலே வேட்பாளராக நிற்கிறபோதும் சரி, முதலமைச்சராகப் பொறுப்பேற்று, முதலமைச்சர் என்ற அந்தத் தகுதியினாலே கோப்புகளிலே கையெழுத்துப் போடுகிறபோதும், 'ஜெ ஜெயலலிதா' என்றுதான் போடுகிறார். இங்கே பேசுகின்ற எங்களுடைய ஆளுங்கட்சியிலே இருப்பவர்களும் சரி, தோழமைக் கட்சியிலே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களும் பேசுகிறபோது நாம், முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா என்று பேசுவதிலே என்ன தவறு இருக்கிறது என்று தெரியவில்லை. அதைச் சொல்வதற்குக்கூட எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடியவர்கள்—அதைக்கூட ஏற்றுக்கொள்ள மனம் இல்லாத சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் இங்கே சபை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பதைப் பார்க்கிறோம்.

கடந்த காலத்தில் இதே சட்டமன்றக் குறிப்பேடுகளை நாம் எடுத்துப் பார்த்தால், எத்தனை முறை—கலைஞர் என்ற வார்த்தையைக்கூட சொல்வதில்லை—கருணாநிதி, கருணாநிதி என்று தலையிலே அடித்ததைப்போல எங்களுடைய தலைவருடைய அரசியல் அடிச்சுவட்டிலே ஒரு கால் தூசிக்குக்கூட சமப்படாதவர், ஒப்பாகாதவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட வார்த்தைகளை உச்சரித்தவர்களையெல்லாம்கூட பார்த்து இந்த அவையிலே எதிருக்கெதிர் நாங்கள் பேசாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறோம், அவையின் மரபைக் கருதி. ஏனென்றால், எங்களை வளர்த்த, நாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைக்குச் சொந்தக்காரர்கள் பெரியாரும், அண்ணாவும். அவர்கள் இல்லாவிட்டாலும் எங்களுக்கெல்லாம் இன்றைக்குத் தந்தையாக இருந்து வழிநடத்தக்கூடியவர் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற காரணத்தினால், இன்றைக்கு அமைதியாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தால். ஏதோ எங்களைக் கோழை என்று அவர்கள் கருதிவிடுகிறார்கள். அவர்கள் நடப்பதைப்போல, ஆளுங்கட்சியிலே இருப்பவர்களும் இருக்க வேண்டுமென்று எண்ணினால், பேரவைத் தலைவர் அவர்களே, மன்னித்து விடுங்கள், நாங்களும் அதற்குத் தயாராக, எங்களை ஒப்படைத்துக்கொள்ள எங்களுக்கு ஒன்றும் சங்கடமில்லை. ஆனால்,

அரசியல் நாகரிகத்தைக் கருதித்தான் அவற்றையெல்லாம் நாங்கள் சொல்லாமல், அப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபடாமல் அமைதியாக இருக்கிறோம் என்பதை இந்த அவையிலே நான் எடுத்து வைக்கிறேன்.

*பிற்பகல் 1-10*

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, தமிழகம் உணவுப் பற்றாக்குறை மாநிலம். அவர் பொறுப்பேற்ற நேரத்திலே, அந்த அமைச்சரவையில், இன்றைய முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார்கள். அப்படிப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலேயே, 1968-லேயே, 1924-வது ஆண்டு போட்ட காவிரி ஒப்பந்தத்திலே ஏற்பட்ட அந்தப் பிரச்சினை குறித்து, மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சரோடும், அன்றைக்கிருந்த கர்நாடக மாநிலத்தினுடைய முதலமைச்சரோடும் 'பேச்சுவார்த்தை நடத்து' என்று, அன்றைக்குப் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த, இன்றைய நம்முடைய முதலமைச்சரைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு அனுப்பிவைத்தார்கள். காவிரி டெல்டா பகுதியில், அண்ணா அவர்கள், ஒரு போகம் விளையக்கூடிய நிலத்தில் இரண்டு போகம் விளைவித்தால், உணவு உற்பத்தி கூடுதலாகுமே என்று கருதி, அதற்கான இரண்டு போக சாகுபடி முறையை அறிமுகப்படுத்தினார்கள். கிடைக்கிற நீரைப் பயன்படுத்துகிறபோது, நிலத்தடி நீரைக்கூட எடுத்துப் பயன்படுத்தி, இரண்டு போகமாகப் பயிர் செய்யலாம் என்ற அந்த முறையை ஆரம்பித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதை நிறைவேற்றியவர் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

1968 ஆம் ஆண்டு உலகத் தமிழ் மாநாட்டிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது, உற்பத்தியைப் பெருக்க வேண்டியதைச் சுட்டிக்காட்டி, "வறண்டு போன நிலங்களை விளை நிலங்களாக மாற்ற வேண்டும், காடு திருந்திட வளம் பெருகிட வேண்டும், அதனால் உணவு பெருகிட வேண்டும், இந்தப் பணிகளை நிறைவேற்றிட மக்கள் ஒத்துழைக்க வேண்டும், தமிழர்கள் செழிப்படைய வேண்டும், இப்பணிகளைச் செய்யத் தயங்காதே தமிழா" என்று, நம்முடைய மக்களுக்கு, விவசாய மக்களுக்கு அறைகூவலாக, உலகத் தமிழ் மாநாட்டிலேயே அண்ணா அவர்கள் வேண்டுகோளை விடுத்தார்கள். அப்பொழுது மத்தியிலே அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம்



அவர்களும் இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டு, 'அதற்கு உடன்பட்டுச் செயல்பட்டார்கள். அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான், எப்பொழுதெல்லாம் தமிழகத்தினுடைய முதலமைச்சராகக் கலைஞர் அவர்கள் வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் விவசாயிகளுடைய விடிவெள்ளியாக, விவசாயிகளுக்கு உதவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு, செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நமக்குத் திட்டங்களை வகுத்து உதவிக்கொண்டிருக்கின்றார்கள்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், பொறியியல் விஞ்ஞான வளர்ச்சியை எட்டாத அந்தக் காலத்திலேயே, கடலில் வீணாகக் கலக்கும் காவிரி நீரைச் சேமிக்க, கரிகால் சோழன் கல்லணையைக் கட்டினான். அதேபோல், காவிரியில் ஏற்படும் வெள்ளத்தை மேலும் கட்டுப்படுத்த, கொள்ளிடத்தில் கால்வாயை அமைத்தவர்களும் சோழ மன்னர்கள்தான். அந்த மண்ணின் மைந்தர்தான் நம்முடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1971 ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக முதலமைச்சராக வந்தபோது, பஞ்சாபிலேதான், சண்டிகரிலேதான் வேளாண்மைப் பல்கலைக்கழகம் இருந்தது. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்— 1971-லே, வேளாண்மையிலே அவருக்கு இருந்த அக்கறையின் காரணத்தினால், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைக் கோவையிலே தொடங்கியவர் இன்றைய நம்முடைய முதலமைச்சர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம்தான், பல்வேறு உயர் ரக விளைச்சல் தரும் ரகங்களான ஐ.ஆர். 5, ஐ.ஆர். 8, ஆடுதுறை 27, கோ-18, கருணா, ஜெயா, கண்ணகி, ஐ.இ.டி. 1722 போன்ற நெல் ரகங்களும்; சி.எச். 1, சி.எச். 2 போன்ற வீரிய சோள ரகங்களும், எச்.பி. 1 என்ற வீரிய கம்பு ரகங்களும் கண்டுபிடிக்கப்பட்டு, விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தப்பட்டன. இதிலேகூட ஒரு வேடிக்கை, இப்படிப் புதிய ரகங்களைக் கண்டுபிடித்து வேளாண் விஞ்ஞானிகள் வைத்த பெயரிலே ஒன்று, கருணா என்பது நம்முடைய முதலமைச்சர், முதலமைச்சராக இல்லாதபோது இடையிலே இருந்த அந்த ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி, அது M.G.R. காலமாக இருக்கலாம், அல்லது இதற்கு முன்னாலே இருந்த ஜெ ஜெயலலிதா ஆட்சிக் காலமாக இருக்கலாம். கருணா என்றாலே கலைஞர்தான் என்று, அந்த கருணா என்ற அந்தப் பெயரையே நீக்கச் சொல்லி வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உத்தரவு போட்டு நீக்கினார்கள்; அந்தப் பட்டியலிலேயிருந்து. எவ்வளவு பரந்த மனப்பான்மைக்குச் சொந்தக்காரர்கள் என்பதை இதிலேயிருந்து

நாம் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே, ஒருபோக சாகுபடியை இருபோகமாகவும், இருபோக சாகுபடியை மூன்று போக சாகுபடியாகவும், தீவிர சாகுபடிப் பரப்பளவை அதிகரிக்கும் திட்டத்தையும் செயல்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில்.

*பிற்பகல் 1-15*

1989-1990-லே மூன்றாவது முறையாகத் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, 1967 ஆம் ஆண்டு இருந்த உணவு உற்பத்தி நிலையைத்தான் எட்டியது. 54.17 மெட்ரிக் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 1990-1991 வது ஆண்டு 75 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிக்கப்பட்டது. மீண்டும் நான்காவது முறையாக 1996-1997-ல் முதலமைச்சராகப் பொறுபேற்றபோது, குறிப்பாக, 1998-1999-ல் தமிழகத்தினுடைய உணவு உற்பத்தி, வரலாறு காணாத அளவிற்கு, அதாவது 94.12 இலட்சம் மெட்ரிக் டன்னாக இன்றைய முதலமைச்சருடைய காலத்திலேதான் மகத்தான சாதனையை நாம் அடைந்தோம். இந்தச் சாதனையின் நாயகன்தான் நம்முடைய முதலமைச்சர்.

தற்போது 2006-2007 ஆம் ஆண்டிற்கு உணவு உற்பத்தி இலக்காக நாம் நிர்ணயித்திருப்பது, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது, 95.35 இலட்சம் மெட்ரிக் டன்னாக நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். நான் இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், 100 இலட்சம் மெட்ரிக் டன் அவருடைய ஆட்சிக் காலத்திலே, 5 ஆண்டு ஆட்சிக் காலத்திலே உணவு உற்பத்தியிலே மிஞ்சுவோம், சாதனை படைப்போம், செஞ்சுரி அடிப்போம் என்ற உறுதியை நான் இங்கே தர விரும்புகிறேன்.

காவிரித் தண்ணீர் உரிமையின் அடிப்படையில் கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போகும்பொழுதெல்லாம், நான் முன்பு சொன்னதைப்போல, அதற்காக நம்முடைய முதலமைச்சர் எடுத்துக்கொண்ட முயற்சிதான் தமிழகத்தினுடைய வரலாறு. மத்தியிலே தேசிய முன்னணி அரசு 1989-வது ஆண்டு அமைந்தபோது அப்பொழுது இந்தியாவினுடைய பிரதமராக இருந்த வி.பி. சிங் அவர்களிடத்திலே 1990-ல் இதற்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டுமானால், பேச்சுவார்த்தைமூலம் இனி கிடைக்காது, நீங்கள் நடுவர் மன்றம் அமையுங்கள் என்று டெல்லியிலே அங்கே பேசப்பட்டுக்கொண்டிருக்கிறபொழுதே, இங்கே தமிழகத்திலே



இதேபோல சட்டப் பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் தகவல் வந்தவுடன் வெளியே சென்று விவரத்தைத் தெரிந்துகொண்டு வந்து, அங்கே பிரதமரிடத்திலே சொன்னதை இங்கே ஒரு அறிவிப்பாகச் செய்தார்.

நடுவர் மன்றம் ஒன்றுதான் நமக்குக் கிடைக்கவேண்டிய நியாயத்தை வழங்க முடியும். பேச்சுவார்த்தையிலே நடைபெறாது, ஆகவே, நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று பிரதமரிடத்திலே நான் சொல்லியிருக்கிறேன் என்று அவர் சொன்னதை ஏற்று, அப்பொழுது இந்தியாவினுடைய பிரதமராக இருந்த வி.பி. சிங் அவர்கள் நடுவர் மன்றத்தை அமைத்தார். அதனுடைய விளைவுதான் 1991-வது ஆண்டிலே 205 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கிடைத்தது. அந்தத் தண்ணீரைக் கொண்டுதான் நம் கழக ஆட்சி இருந்த காலத்திலே சுமுகமான ஓர் அணுகுமுறையின் காரணத்தினால்; பக்கத்து மாநிலம் நமக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாம் உரிமையின் அடிப்படையிலே பெறக்கூடிய பங்கு. இருந்தாலும், நாம் உரிமைக்காகக் குரல் கொடுத்து வம்பு இழுத்துக்கொண்டு, நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்று, பேச்சுவார்த்தையின்மூலமே, ஒரு சுமுகமான அணுகுமுறையின்மூலமே, கழக ஆட்சி எப்போதெல்லாம் இருந்ததோ, நமக்குக் கிடைக்க வேண்டிய அந்த இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீரை நாம் பெற்று அனுபவித்துக்கொண்டிருந்தோம்.

அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு அவர்களோடு மோதல், மத்திய அரசாங்கத்தோடு மோதலை வளர்த்துக்கொள்வது, அந்த ஆட்சியை dismiss செய் என்று சொல்வது, இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் வெளியிட்டு, நமக்கு இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீர்கூடக் கிடைக்காமல் போனதற்கு அ.தி.மு.க. ஆட்சியாளர்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டுமே தவிர, நாம் வேறு யாரையும் குறை சொல்ல முடியாது.

இப்போதுகூட இறுதித் தீர்ப்பை நம்முடைய முதலமைச்சர் கலைஞர் காலத்திலேதான் பெறுவார், தமிழ்நாட்டினுடைய விவசாயிகளுக்குப் பெற்றுத் தருவார் என நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவரை விட்டால் தமிழகத்திற்கு வேறு நாதியில்லை. அவரால்தான் இவற்றையெல்லாம் பெற முடியும். அவருடைய அணுகுமுறையால் நிச்சயமாக இறுதித் தீர்ப்பைப் பெற்று காவிரி டெல்டா பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுடைய நீண்ட காலக் கனவை நினைவாக்குவார் என்பதை இங்கே நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2006 ஆகஸ்ட் 3

*பிற்பகல் 1-20*

இப்படிப்பட்ட முதலமைச்சரை நாம் இன்றைக்குப் பெற்று, நான் இந்த மன்றத்திலே, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்க மூன்றாவது முறையாக அமைச்சராகப் பொறுப்பு ஏற்கின்ற அந்த வாய்ப்பினைப் பெற்றேன் என்றால், அது தலைவர் கலைஞர் அவர்களால்தான். நான் என்றைக்கும் நியாயத்தின் பக்கம் எடுத்துச் சொல்வேன், விவாதிப்பேன், வாதாடுவேன், ஆனால் கட்சித் தலைமைக்குக் கட்டுப்படக்கூடிய, அதுவும் எனக்குக் கட்டுப்படக்கூடிய தம்பிகளிலே ஒருவன் வீரபாண்டி என்று அவருடைய மனதிலே நான் என்றைக்கும் நிலைத்திருப்பதற்குக் காரணம், இந்த இயக்கத்தில் எத்தனையோ சோதனைகள் வந்தாலுங்கூட, அண்ணாவிற்குப் பின்னால் கலைஞர்தான் தலைவர் என்று அவன் உறுதியோடு இருப்பது மட்டுமல்ல, இயக்கம்தான் முக்கியம் என்று அவன் இருப்பவன் என்று பலரிடத்திலே—என்னிடத்திலே சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலுங்கூட—சொல்லி மகிழ்ந்து இருக்கக்கூடிய காரணத்தினாலேதான், ஒரு மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த நான், அவரால் இன்றைக்கு மூன்றாவது முறையாக வேளாண்மைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்து, உங்களிடத்திலே இந்த மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பை இன்றைக்குப் பெற்றிருக்கின்றேன்.

1996–97 ஆம் ஆண்டில், 21.74 இலட்சம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு, நெல் உற்பத்தி 58.05 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1997–98 ஆம் ஆண்டு, 68.94 இலட்சம் மெட்ரிக் டன்னாக அது உயர்ந்து, 1998–99 ஆம் ஆண்டில் 81.41 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 1999–2000 ஆம் ஆண்டில், 75.32 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2000–2001 ஆம் ஆண்டில் நெல், சிறு தானிய பயறு வகைகள், பருத்தி, கரும்பு எண்ணெய் வித்துக்கள் எல்லாம் சேர்த்து, 48.24 எக்டேரில் 134.92 இலட்சம் டன் சாகுபடி செய்து கழக ஆட்சி சாதனை படைத்தது.

அ.தி.மு.க. ஆட்சி, கடந்த ஆட்சி வந்த பிறகு, 2001–2002-ல் பொறுப்பேற்ற பிறகு, தமிழகம் மொத்த உணவு உற்பத்தித் திறனில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதைக் காணலாம். 2001–2002 ஆம் ஆண்டு நெல் சாகுபடிப் பரப்பு 20.80 இலட்சம் எக்டேராகவும், மொத்த நெல் உற்பத்தி 73.66 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2002–2003 ஆம் ஆண்டில் நெல் சாகுபடிப் பரப்பு 15.16 இலட்சம் எக்டேராகக் குறைந்து, நெல் உற்பத்தி 35.77 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2003–2004 ஆம் ஆண்டு மேலும் குறைந்து 13.97 இலட்சம் எக்டேர் ஆகவும், நெல் உற்பத்தி 32.33 இலட்சம் மெட்ரிக் டன்னாகக் குறைந்து, 2004–2005 இல் 18.73 இலட்சம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு, நெல் உற்பத்தி 50.62 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்தது. இடையிலே 4 ஆண்டு காலம் ஒரு வேளை நிலங்களிலே பயிர் அதிகம் செய்ய முடியவில்லை, அதனாலே உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் ஒரு எக்டேர் உணவு உற்பத்தியிலே உற்பத்தித் திறன் கணக்கிடுவார்கள். அப்படிக் கணக்கிட்டதிலே தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் மாநிலமாக, உணவு உற்பத்தியிலே, நெல் உற்பத்தியிலே இருந்தது. அதைப்போல, கரும்பு உற்பத்தியில், உலகத்திலேயே தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றது. மூன்றாவதாக, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் முதல் இடத்தைப் பிடித்தது. இந்த மூன்று இடங்களையும் கலைஞருடைய ஆட்சியிலே நாம் பெற்றிருந்தோம். நெல் உற்பத்தித் திறன் குறைந்து, கரும்பு உற்பத்தித் திறனும் குறைந்து, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியும் குறைந்தது. குறைந்து கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் என்பதை, உற்பத்தித் திறனைப் பார்த்தாலுங்கூட, அதிலேதான் அவர்கள் மிகவும் குறைந்திருக்கிறார்கள் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 3] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

*பிற்பகல் 1-25*

2006–2007 ஆம் ஆண்டில் நெல் சாகுபடிக்கு இப்போது நாம் நிர்ணயித்திருப்பது 21.70 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்படும் என்றும், நெல் உற்பத்தி 78.10 இலட்சம் மெட்ரிக் டன் இருக்கும் என நாம் நிர்ணயித்து இருக்கின்றோம். அதேபோல், சிறு தானியங்கள 10.50 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு, 13.65 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், பயறு வகைகள் 7.50 இலட்சம் எக்டேரில் பயிர் செய்யப்பட்டு, 3.60 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் இருக்கும் என்றும் மொத்த உணவு தானியங்கள் உற்பத்தி 39.70 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு, மொத்த உணவு உற்பத்தி, நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருப்பது, நம்முடைய நிதி அமைச்சர் படித்த அந்த அறிக்கையில் 95.35 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும் எனவும் இங்கே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அ.தி.மு.க. ஆட்சியில், இதே அவையில் அப்போது அந்த அமைச்சரவையிலே இருந்த ஒரு வேளாண்மைத் துறை அமைச்சர் பேசுகிறபோது, எவ்வளவு உண்மைக்கு மாறான தகவலை இந்த அவையில் மானியக் கோரிக்கையின்போது தந்துள்ளார். வெட்டுத் தீர்மானங்களைத் தந்து மாமன்ற உறுப்பினர்கள் நீங்கள் எல்லாம் இங்கே பேசுகிறீர்கள். இந்த அவையிலேயே உண்மைக்கு மாறான தகவலைப் பேசக்கூடியவர்கள், எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற அளவுக்கு வந்துவிட்டவர்களைத் திருத்த முடியாது. அ.தி.மு.க. ஆட்சியில் 2005–2006 ஆம் ஆண்டில் 51.64 இலட்சம் எக்டேரில் உணவு உற்பத்தி செய்யப்பட்டு. 126.86 இலட்சம் மெட்ரிக் டன்னாக, எல்லாப் பயிர்களையும் சேர்த்துப் பார்த்தாலும், தி.மு.க. ஆட்சியின் சாதனையை அ.தி.மு.க. ஆட்சி எட்ட முடியவில்லை. நிலைமை இவ்வாறு இருக்க, இந்தப் பேரவையில் உண்மைக்கு மாறான கருத்தை முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் பேசியுள்ளது வேடிக்கையாக இருக்கிறது. 2004–2005 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவுப் பயிர் மற்றும் இதர பயிர் சாகுபடிப் பரப்பு 43.53 இலட்சம் எக்டேர்தான். ஆனால் 2005–2006 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அவர் பேசுகிறபோது, அந்த எக்டேரிலேகூட வித்தியாசமாக 52 இலட்சம் எக்டேர் என்று இந்த அவையில் பேசுகிறார், 8.47 இலட்சம் எக்டேரை அதிகப்படுத்தி. பயிரே செய்யப்படாத 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட எக்டேரைக் கூட்டி இந்த அவையிலே பேசியிருக்கின்றார்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தி.மு.க. ஆட்சியில் 2000–2001 ஆம் ஆண்டு மொத்த உணவு உற்பத்தி 76.89 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். அதே நேரத்தில், 2004–2005 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் மொத்த உணவு உற்பத்தி 61.46 இலட்சம் மெட்ரிக் டன்தான். ஆனால் அவையில் பேசப்பட்டது எவ்வளவு தெரியுமா? முன்னாள் அமைச்சர், 90 இலட்சம் மெட்ரிக் டன் என்று, 28.54 இலட்சம் மெட்ரிக் டன்னைக் கூட்டி, உற்பத்தி ஆனதாக, அவையையே திசை திருப்பக்கூடிய வகையில் அவர் அவருடைய மானியக் கோரிக்கையிலே இங்கே பேசியிருப்பதையெல்லாம் நான் எடுத்துப் படித்துப் பார்த்தேன்.



கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே பகுதி–2 திட்டத்திலே, ஒதுக்கப்பட்ட நிதி ரூ.3 கோடியே 21 இலட்சத்து 24 ஆயிரம். நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்கு, 2006–2007–ல் பகுதி–2 திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 9 கோடியே 79 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய். அ.தி.மு.க. ஆட்சியைவிட அதிகமாக இந்த ஆண்டு 6 கோடியே 51 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் நம்முடைய முதலமைச்சர் ஒதுக்கி இருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு எவ்வளவு கடன் சலுகை, எப்படிப்பட்ட திட்டம், இது விவசாய பட்ஜெட் என்று விவசாயிகள் மட்டுமல்ல, சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம், நாட்டு மக்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிற இவ்வளவு சலுகைகள் செய்தும்கூட இந்த Part II–லே இவ்வளவு தொகையைக் கூடுதலாக இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருக்கின்றார்கள்.

கடந்த 5 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் வேளாண்மைத் திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையைக் கணக்கெடுத்துப் பார்த்தால்கூட, ரூ.4,137.34 கோடி அவர்கள் ஆட்சிக் காலத்திலே, 5 ஆண்டு காலத்திலே. 1996–லிருந்து 2001 வரை தி.மு.க. ஆட்சி வேளாண்மைத் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்ட தொகை ரூ.4,215.37 கோடி. அப்பொழுதும் இதில் கூடுதல்தான். அ.தி.மு.க. ஆட்சியைவிடக் கூடுதலாக வேளாண்மைத் துறைக்கு நிதி தி.மு.க. ஆட்சியிலே தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கிறது. 2006–2007–லே வேளாணமைத் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 977 கோடியே 98 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே 2005–2006–லே, கடைசி ஆண்டு வேளாண் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாய் 854 கோடியே 40 இலட்சத்து 87 ஆயிரம் ஆகும். தி.மு.க. ஆட்சியில் இந்த ஆண்டு அவர்கள் ஒதுக்கியதைவிடக் கூடுதலாக 123 கோடியே 57 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாயை நம்முடைய முதலமைச்சர், நிதி அமைச்சர் வாயிலாக இங்கே ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே, இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையிலே இருக்கின்ற புள்ளிவிவரத்திற்கு—நான் நிறைய வைத்திருக்கிறேன்—நேரத்தின் அருமை கருதி இந்த விவரம் போதும் என்பதால் நான் அதைப் பற்றிச் சொல்லாமல், இங்கே சில துறைவாரி அறிவிப்புகளைச் செய்ய முன்வருகின்றேன்.

கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெறும் விவசாயிகளுக்கு ஏற்கெனவே காப்பீட்டுத் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதைப்போலவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க்

கடன் பெறும் விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் திட்டம் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, இந்த இரு வகை வங்கிகளின்மூலமாகக் காப்பீட்டுத் திட்டத்தின் பலனைப் பெற்றிட முடியாமல் இருக்கும் விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் காப்பீட்டுத் திட்டத்தின் பலன் கிடைத்திட வேண்டுமென்ற நோக்கத்தோடு, அவர்களுக்கெனத் தனியாகக் காப்பீட்டுத் திட்டமொன்றைத் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக ஐந்து இலட்சம் விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் காப்பீட்டுத் திட்டம், இந்த 2006–2007 ஆம் நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்படும். காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 50 சதவீதம் காப்பீட்டு மானியமாக விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூபாய் 8 கோடி வழங்க தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) Insurance தான். (குறுக்கீடு) விவசாயிகளுக்கு Insurance.

*பிற்பகல் 1–35*

அடுத்து, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம்: தற்போது வேளாண் பெருமக்களின் தேவைகளை உடனுக்குடன் கவனிக்க 28 மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களும், 206 வட்டங்களில் தற்போது 160 வட்டங்களில் மட்டுமே வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட வட்டங்களில் உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகங்கள் தொடங்கப்படவில்லை. தற்போது 46 வட்டங்களில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் இல்லாததால், முதல் கட்டமாக 2006–2007 ஆம் நிதியாண்டில் 10 வட்டங்களில் புதிய வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி உள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, விவசாயிகளுக்கு மண் வள அட்டை வழங்குதல். விவசாயிகள் தங்களது சாகுபடி நிலத்தின் பௌதீகத் தன்மை, உயிரியல் தன்மை மற்றும் இரசாயன குணங்களைத் தெரிந்துகொள்வதன்மூலமும், உரங்களைத் தேவைப்படும் அளவிற்கு மட்டுமே இட்டு, மண் வளத்திற்கேற்ற பயிர்களை விளைவித்து, குறைந்த செலவில் அதிக வருமானம் பெற முடியும். இதற்கு ஒவ்வொரு விவசாயிக்கும்



அவர்களுடைய மண்ணைப் பரிசோதனை செய்து, மண் வள அட்டை வழங்குவது அவசியமாகிறது. தமிழ்நாட்டில் உள்ள 80 இலட்சம் விவசாயக் குடும்பங்களில் இதுவரை 2.76 இலட்சம் குடும்பங்களுக்கு மட்டுமே மண் வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 77.24 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கும் மண் வள அட்டையை வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. அதற்காக மாநில அரசிலிருந்து இந்த ஆண்டு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, மண் வள அட்டை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில், 3,75,055 எக்டேர் பரப்பளவில் 8 கோடியே 36 இலட்சத்து 30 ஆயிரம் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 885 மரங்கள் வேர் வாடல் நோ-யினால் பாதிக்கப்பட்டுள்ளதால், இம்மரங்களை வெட்டி அகற்ற வேண்டுமென தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ளது. எனவே, இம்மரங்களை வெட்டி அகற்றுவதற்காக, ஒரு மரத்திற்கு ரூ.250 வீதம் ரூ.317.21 இலட்சம் செலவில் நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும், இத்திட்டம் தென்னை வளர்ச்சி வாரிய 100 சதவிகித நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு வெட்டி அகற்றப்படும் 1 இலட்சத்து 26 ஆயிரத்து 885 மரங்களுக்குப் பதில் புதிய கன்றுகளை நட்டால், அவை காய்ப்பதற்கு சுமார் 3 முதல் 5 ஆண்டுகள் ஆகும். இதனை ஈடு செய்யும்பொருட்டு, ஒரு தென்னை மரத்திற்கு ரூ.1,050/–ஐ, 2006–2007 ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு ஈட்டுத் தொகையாக, தென்னை மர உற்பத்தியாளர்களுக்கு வழங்க ரூபாய் 13.33 கோடியை தென்னை வளர்ச்சி வாரியத்திடமிருந்து அனுமதி பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் தென்னை மரங்களில் செம்பான் சிலந்தித் (ஈரியோபைட்) தாக்குதல் அதிக அளவிலே உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இங்கே பேசிய நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் சுட்டிக்காட்டினார்கள். தேங்காயின் தரம் குறைந்துள்ளது. மாநிலத்தில் உள்ள 695 இலட்சம் காய்க்கும் மரங்களில் 223.53 இலட்சம் மரங்களில் இப்பூச்சியின் தாக்குதல் கண்டறியப்பட்டுள்ளது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த தாவரப் பூச்சிக் கொல்லி

மருந்தினை மூன்று முறை வேர்மூலமாக, அல்லது மரத்தின் உச்சியில் தெளிக்க தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்துள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் தென்னை வளர்ச்சி வாரியத்தின்மூலம், ரூ.9.50 கோடி நிதியுதவியுடன் 141.43 இலட்சம் தென்னை மரங்களில் தாவரப் பூச்சிக் கொல்லி தெளிக்கப்பட்டது. இதனால் இப்பூச்சியின் தாக்கம் குறைந்த அளவே கட்டுப்படுத்தப்பட்டது. மேலும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் மீண்டும் அனைத்து பாதிக்கப்பட்ட மரங்களிலும் இப்பரிந்துரையை மேற்கொள்ளுமாறு சிபாரிசு செய்துள்ளது. இப்பரிந்துரைப்படி 223.53 இலட்சம் தென்னை மரங்களில் இப்பூச்சியைக் கட்டுப்படுத்த ரூ.53.65 கோடி செலவாகும். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, பரிட்சார்த்தமாகச் சில மாவட்டங்களில் அமல்படுத்த, தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு அனுப்பி, குறைந்தபட்சம் 50 சதவிகித நிதி உதவி பெற்று, 2006-2007 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-40

தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளபடி, மாநில அளவில் விவசாயக் கடன் உட்பட வேளாண்மையில் உள்ள பல பிரச்சினைகளை அவ்வப்போது ஆய்வு செய்து உடனடி நிவாரண நடவடிக்கைகளை அரசுக்குப் பரிந்துரை செய்யவும், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளை பொருளுக்கு உரிய நியாய விலை கிடைக்க விலை நிர்ணயம் செய்வதற்கும், விவசாய மேம்பாட்டுக் குழு 2006-2007 ஆம் ஆண்டிலேயே அமைக்கப்படும். இந்தக் குழுவில் துறைத் தலைவர்கள், விவசாயிகள், விஞ்ஞானிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை, மீன் வளம், கால்நடை, பால் உற்பத்தி, கோழி வளர்ப்பு ஆகிய பிரிவுகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்கள் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

டீசலுக்கு மாற்றாக 20 விழுக்காடு பயோ டீசல் கலந்து உபயோகிக்கும் வாகனங்களில் இருந்து வரும் புகையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாது. பயோ டீசல் காட்டாமணக்கு விதைகளில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இந்தக் காட்டாமணக்கு சாகுபடி, விவசாயிகளுக்குப் பொருளாதார ரீதியாக நல்ல பலன் தருவதுடன்,



நாட்டிற்கு அன்னியச் செலாவணியைக் குறைக்கும். இத்திட்டத்தின்கீழ் தமிழக விவசாயிகளுக்கு 2006-2007 ஆம் ஆண்டில் 20 ஆயிரம் எக்டேர் வீதம் 5 வருடங்களுக்கு ஒரு லட்சம் எக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யவும், கன்றுகள் மானிய விலையில் வழங்கவும், சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் 50 சதவிகித மானிய விலையில் வழங்கவும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகளின் விலையை ஒப்பந்தப் பண்ணை அடிப்படையில் நிர்ணயம் செய்யவும் உரிய நடவடிக்கை 2006-2007-ல் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் 162.70 லட்சம் எக்டேர் தோட்டக்கலைப் பயிர்களில் 56.51 லட்சம் எக்டேர் பரப்பளவு தென்னிந்தியாவில் உள்ளது. தோட்டக்கலைப் பயிர்களுக்கான திட்டப் பிரேரணைகள் அரியானா மாநிலத்தில் உள்ள குர்கானில் செயல்படும் தேசியத் தோட்டக்கலை வாரியத்திற்குத் தென்னிந்தியாவில் இருந்து மூலதன மானியம் கேட்டு அனுப்பப்படும் மனுக்கள் காலதாமதம் ஏற்படுவதுடன், திட்டத்தின் பயன்பாடுகள் நமது விவசாயிகளுக்கு உடன் கிடைக்க இயலாத நிலை உள்ளது.

சென்னையில் ஏற்றுமதிக்குத் தேவையான விமானப் போக்குவரத்து, துறைமுக வசதி உள்ளதால், தென்னிந்திய அளவிலான தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சிக்காக மண்டல தேசியத் தோட்டக்கலை வாரியம் ஒன்றை, சென்னையில் 2006-2007ஆம் நிதி ஆண்டில் அமைக்க, மைய அரசுக்குக் கருத்துரு அனுப்பி அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு முன்னோடி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, பிற மாநிலங்களில் கடைப்பிடிக்கும் நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சியும் மற்றும் இஸ்ரேல், சீனா மற்றும் ஐரோப்பா போன்ற வெளிநாடுகளுக்கும் அழைத்துச் சென்று உயர் தொழில்நுட்ப முறைகளான ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, இயற்கைப் பண்ணையம் மற்றும் பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்த்தல், சொட்டு நீர்ப்பாசனம், உணவு பதப்படுத்துதல், மதிப்பூட்டுதல், சொட்டு நீர் மூலம் உரமிடுதல் போன்ற பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகள், தாங்கள் அறிந்த தொழில்நுட்பங்களை இதர விவசாயிகளுக்குத் தெரிவித்து வேளாண் உற்பத்தியைத் தமிழகத்தில் பெருக்க, தேசியத் தோட்டக்கலை இயக்கக நிதியிலிருந்து 2006–2007 ஆம் நிதி ஆண்டில் ரூ.25 இலட்சம் செலவில் முன்னோடி விவசாயிகளுக்கான பயிற்சி அளிக்கப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–45

கன்னியாகுமரி மாவட்டத்தில், மல்லி, ஜாதி மல்லி, சம்பங்கி, கனகாம்பரம், அரளி போன்ற மலர்கள் 281 எக்டரில் (700 ஏக்கர்) பரப்பளவில் பயிர் செய்யப்படுகின்றன. தோவாளையில் தற்போது பூ ஏல மார்க்கெட் தினமும் நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் அல்லாமல், அருகில் உள்ள மாவட்டமான திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளும் தோவாளை தினசரி பூ ஏல மார்க்கெட்டுக்கு வந்து வியாபாரம் செய்கிறார்கள். இங்கிருந்து திருவனந்தபுரத்திற்கு வேன் மூலம் எடுத்துச் சென்று, விமானம் மூலம் உள்நாட்டிற்கும், வெளிநாட்டிற்கும் பூக்கள் அனுப்பப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, பூக்கள் உற்பத்தியைப் பெருக்க, ஒரு மலரியல் ஆராய்ச்சி நிலையம் தேசியத் தோட்டக்கலை இயக்ககம்மூலம் ரூ.342 இலட்சம் செலவில் 2006–2007 ஆம் ஆண்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத் தென்னை உற்பத்தியில் 40 சதம் பரப்பளவு ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத் தென்னை விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்யும் தேங்காய்க்கு நியாயமான விலை, நல்ல விலை கிடைத்திடும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் தென்னைக்கென ஒரு வணிக வளாகம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதனை ஏற்று, ரூ.400.00 இலட்சம் (4 கோடி) செலவில் மாநில மற்றும் மத்திய அரசு, தனியார் பங்கேற்பு நிதியுதவியுடன், 2006–2007 ஆம் நிதியாண்டிலேயே தொடங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் அந்த விவசாயிகளோடு வந்து சொன்ன அந்தக் கோரிக்கையை ஏற்று, இப்போது அறிவிக்கப்படுகிறது.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தக்காளி பயிரிடும் விவசாயிகளின் நலனுக்காக குளிர்பதனக் கிடங்கு வசதியுடன்கூடிய வணிக வளாகம், மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன், மற்றும் தனியார் பங்கேற்புடன் 2.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2006–2007–ல் அமைக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தரிசு நிலங்களில் முந்திரி சாகுபடியை ஊக்குவித்து, அதிக விளைச்சல் தரும் முந்திரி வகைகளை அதிகப்படுத்தி, ஏற்றுமதியை அதிகரிக்க கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயனடைய, கடலூரில் முந்திரி ஏற்றுமதி மண்டலம் ஒன்று ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் 2006–2007 ஆம் நிதி ஆண்டில் அமைக்கப்பட உள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.150 இலட்சம் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கென ஒரு தனி வணிக வளாகம் குளிர்பதன வசதியுடன் (cold storage) தேவையென்ற கோரிக்கையை இங்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் செங்குட்டுவன் அவர்கள்கூட வைத்தார்கள். அந்தக் கோரிக்கையையெல்லாம் ஏற்று, இன்றைக்கு 2 கோடி ரூபாய் செலவில் ஒரு வணிக வளாகம் 2006–2007–வது நிதி ஆண்டிலேயே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் திராட்சையைத் தரம் பிரித்து, பக்குவப்படுத்தி அட்டைப் பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்யும் வகையில் ரூ.3.75 கோடி செலவில் குளிர்பதனக் கிடங்கு வசதியுடன் அமைக்க 2006–2007 ஆம் நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெறும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடத்தில் ரூ.2 கோடி செலவில் வெங்காயத்திற்கென ஒரு வணிக வளாகம் அமைக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொ. ள விரும்புகிறேன்.

வேளாண் விற்பனைக் கூடங்களுக்கு விற்பனைக்கு வரும் விவசாயிகள், இரவு நேரத்தில் தங்க நேரிடும்போது உடல் நலம் பாதிக்கப்பட்டால் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக, 1990–ல் 20 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தொகுப்பூதியத்திலே மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர். அது அப்படியே உள்ளது. அதற்கு

மேல் ஒன்றும் விரிவுபடுத்தப்படவில்லை. இருந்தாலுங்கூட, அவர்களுக்குத் தொகுப்பூதியமாக அப்போது வழங்கப்பட்டது குறைவு, கூடுதலாகத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்ட காரணத்தினால், இப்பொழுது மருத்துவர்களுக்குத் தொகுப்பூதியத்தை ரூபாய் 3,500–லிருந்து ரூபாய் 4,500 ஆக உயர்த்தியும், உதவியாளருக்கு ரூபாய் 1,250–லிருந்து ரூபாய் 1,750 ஆக உயர்த்தியும் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைகளுக்குத் தேவைப்படும் பருத்தி ஆண்டொன்றுக்கு 20 இலட்சம் பேல்கள் ஆகும். ஆனால், சராசரி பருத்தி உற்பத்தி தமிழகத்திலே 5 இலட்சம் பேல்களாக உள்ளது. ஆராய்ச்சியின்மூலம் மிக நீண்ட இழைப் பருத்தி ரகங்களை உருவாக்கி, தமிழ்நாட்டின் பருத்தித் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், அகில இந்திய அளவிலும் மிக நீண்ட இழைப் பருத்தி உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி பெறும் வாய்ப்புள்ளது. இதற்காக பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் புதியதாக ஆராய்ச்சி நிலையம் 25 எக்டேர் நிலப்பரப்பில் ரூபாய் 75 இலட்சம் செலவில் 2006–2007 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்பதை இங்கே அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–50

மக்காச்சோளம் உணவாகப் பயன்படுவதோடு கால்நடை மற்றும் கோழித் தீவனத்திற்கும், அதேபோல, மற்ற தொழிற்சாலைகளின் மூலப்பொருளாகவும் பயன்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோளம் அதிகப் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் பயனளிக்கும் வகையில் தரமான வீரிய ஒட்டு ரகங்களைக் கண்டுபிடித்து, விதைகளைக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவும், விவசாயிகளே விதைகளை உற்பத்தி செய்யப் பயிற்சியும், உதவியும் அளிக்க திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம் ரூபாய் 75 இலட்சம் நிதி செலவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் 2006–2007 ஆம் நிதியாண்டில் தொடங்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



தமிழகத் தென் மாவட்டங்களின் பெரும் பகுதி மானாவாரி நிலங்களாக உள்ளன. இங்குள்ள வேளாண் பெருங்குடி மக்களின் குழந்தைகள் பள்ளிக் கல்வியை முடித்தவுடன் வேளாண்மை குறித்த உயர் கல்வியைப் பயில அப்பகுதியில் வாய்ப்பு இல்லாததாலும், வேறு மாவட்டங்களுக்குச் சென்று பயில வசதி இல்லாத நிலையில் உள்ளனர். இதனை அறிந்த நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், தேர்தலின்போது 5 தென் மாவட்டங்களில் வேளாண்மைப் பட்டயப் படிப்பு தொடங்கப்படும் என அறிவித்தார். 2006–2007 ஆம் ஆண்டு இரண்டு மாவட்டங்களில் மட்டும் பட்டயப் படிப்புகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் தொடங்கப்படும். இத்திட்டம் தொடர்ந்து மற்ற மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 133 உதவி ஆசிரியர்கள் மாதம் ரூபாய் 8,000 தொகுப்பூதியமாக வழங்கி பணி நியமனம் செய்யப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் முதுகலைப் பட்டப் படிப்புடன் முனைவர் பட்டமும் பெற்றவர்களாக உள்ளார்கள். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொகுப்பூதியம் பெறும் 133 உதவி ஆசிரியர்களுக்கும் இப்பொழுது ரூ.8,000–275–13,000 காலமுறை ஊதியமாக 1–6–2006 முதல் வழங்கப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் பருவ நிலை மாறுபாடுகளுக்கேற்ப தாவரங்களின் உயிரின மற்றும் மரபின வேறுபாடுகளை, சூழ்நிலைக்கு ஒத்துப் போகக்கூடிய பண்புகளைப் புரிந்துகொள்வது அவசியமாகிறது. அழிந்து வரும் அரிய தாவர இனங்களைப் பாதுகாக்கவும், அரிய தாவர இனங்களைப் பதிவு செய்து, அதன்மூலம் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், அகில இந்திய அளவில் ஒரு தேசியத் தாவர உயிரியல் நிறுவனம் தோற்றுவிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. தமிழகத்தில் இவ்வகை தேசிய நிறுவனம் அமைக்க நல்ல சூழல் அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கான நிதித் தேவையான ரூபாய் 45.15 கோடியை மத்திய அரசிடமிருந்து பெற்று தமிழகத்தில் தேசியத் தாவர உயிரியல் நிறுவனம் 2006–2007 ஆம் நிதியாண்டிலேயே தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் தேசிய உயிரியத் தொழில்நுட்பவியல் நிறுவனம். மனித வள மேம்பாடு மற்றும் பயிற்சி ஆகியவை வேளாண் தொழில்களில் விவசாயிகள் உள்பட அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைவது இன்றியமையாத ஒன்றாகும். மாற்று மரபுகளை வெளிப்படுத்தும் திறன் உள்ள உழவியல் முக்கியத்துவம் பெற்ற மரபணுக்களைப் பிரித்தெடுத்தல், அழிந்து வரும் தாவர இனங்களைப் பெருக்கிப் பாதுகாத்தல், ஊட்ட மருந்துகள் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் உருவாக்கம் ஆகிய பிரிவுகள் பற்றி ஆய்வுகளைச் செய்யவும், தமிழ்நாட்டில் மைய அரசின் ரூபாய் 57.60 கோடி நிதியுதவியுடன் ஒரு தேசிய உயிரியத் தொழில்நுட்பவியல் நிறுவனம் 2006–2007 ஆம் ஆண்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மைப் பாடத் திட்டத்தைப் பள்ளியில் சேர்க்க வேண்டுமென முன்பு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், நான் அப்போது அமைச்சராக இருந்த நேரத்தில் இதை அறிமுகப்படுத்தினோம். 1999–2000 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இப்பாடத் திட்டம் 200 பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதில் 100 பள்ளிகளில் வேளாண் பட்டதாரிகள் பணியில் அமர்த்தப்பட்டனர். கடந்த ஆட்சியில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படாமல் விடப்பட்டுள்ளது. மீண்டும் இப்பாடத் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி, அனைத்துப் பள்ளிகளிலும் செயல்படுத்தும் இத்திட்டத்தை வரும் கல்வி ஆண்டில் கூடுதலாக 100 பள்ளிகளில் செயல்படுத்துவதோடு, தொடர்ந்து ஐந்து ஆண்டுகளில் அனைத்துப் பள்ளிகளிலும் வேளாண்மையை ஒரு பாடமாகக் கொண்டு வ்ர நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–55

தமிழகத்தில் உயிரி தொழில்நுட்பம், கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் தாக்கம் அதிக அளவில் உள்ள நிலையில், நமது பாடத் திட்டங்களையும் மாற்றி, புதிய பாடத் திட்டங்களை அமைப்பது அவசியம் ஆகிறது. இதனைக் கருத்திலே கொண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2006–2007 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள் தொடங்கப்பட உள்ளன.



B. Tech. (உயிர் தகவலியல்) 4 ஆண்டு பட்டப் படிப்பு, 40 மாணவர்கள்

முதுநிலைப் பட்டயப் படிப்பு (மூலதனம் மற்றும் வணிகப் பொருள் சந்தைகள்), 25 மாணவர்கள்

முதுநிலைப் பட்டயப் படிப்பு (அங்க வேளாண்மை) 25 மாணவர்கள்

ஒரு பட்டப் படிப்புக்கும், இரண்டு பட்டயப் படிப்புகளுக்கும் ஆகும் செலவு, சுய நிதிக் கல்வித் திட்டத்தின்மூலமே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

2006–2007 ஆம் ஆண்டில் புதிய சர்க்கரை ஆலைகள், Co-generation, எத்தனால் உடன் சேர்த்து அமைக்க ஆத்தூர், சங்கராபுரம், திருக்கோவிலூர், அரியலூர், ஈரோடு, அம்பாசமுத்திரம், கும்மிடிப்பூண்டி, பட்டுக்கோட்டை, மொடக்குறிச்சி ஆகிய பகுதிகளிலிருந்து அரசுக்கு அனுமதி கேட்டு, தனியார்களிடமிருந்து விண்ணப்பங்கள் நிறைய வந்துள்ளன.

இதனைத் தமிழக அரசு பரிசீலித்து, புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, சொட்டு நீர்ப்பாசன முறையைச் செயல்படுத்தி நீர் மேலாண்மை, உயிரியியல் ஆய்வு மையம், திசு வளர்ப்பு மையம் மற்றும் புதிய கரும்பு ரகங்கள் சாகுபடி செய்தல் போன்ற புதிய தொழில்நுட்பங்களை அவர்களது ஆலைப் பரப்பில் செயல்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையோடு, 2006–2007 ஆம் ஆண்டில் புதிய சர்க்கரை ஆலையை அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ள பகுதிகளில் புதியதாக சர்க்கரை ஆலைகள் அந்தப் பகுதிகளிலே தொடங்க அனுமதி வழங்க அரசு யோசித்து வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கரும்பு உற்பத்தித் திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 40 சதவீதம் பாசன நீர் சேமிக்கப்படுகிறது. ஆகையால், விவசாயிகள் பயன் பெறும் வகையில், சொட்டு நீர்ப்பாசனத்தை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையிலும், 2006–2007 ஆம் ஆண்டில் 15,000 ஹெக்டேர் பரப்பில் ரூ.84 கோடி திட்டச் செலவில் சொட்டு நீர்ப்பாசன வயல்கள் அமைக்கப்பட உள்ளன. ஒரு எக்டேர் சொட்டு நீர்ப்பாசன வயல் அமைக்க ரூ.56,000 செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இச்செலவில் 50 சதவீதம் மானியமாக, ரூ.28,000–க்கு மிகாமல் அரசு ஏற்றுக்கொள்ளும். மேலும், அனைத்துக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில்

8.5 எக்டேரில் மாதிரி வயல்களை ஆலைக் கரும்புப் பண்ணைகளில் அமைத்து, கரும்பு விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை விரிவாக்கம் செய்ததாலும், நவீனப்படுத்தியதாலும் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டது. ரூ.20 கோடி லாபமாக இருந்த ஆலை நஷ்டத்திற்கு வந்தது. 2001–2002 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்திலே நிறுத்திவிட்டார்கள். பொதுத் துறை பாண்டியராஜபுரம், மதுரா சர்க்கரை ஆலையைப் போதிய கரும்பு இல்லாததன் காரணமாக 2002–2003 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்திலே மூடிவிட்டார்கள். தற்போது அப்பகுதிக் கரும்பு விவசாயிகள் மீண்டும் இவ்வாலைகளைத் துவக்கி, தொடர்ந்து அரைவை செய்ய வேண்டி அரசிடம் கோரிக்கை வைத்துள்ளார்கள். இதைப் பரிசீலித்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று; மீண்டும் மதுராந்தகம் சர்க்கரை ஆலை மற்றும் பொதுத் துறை பாண்டியராஜபுரம், மதுரா சர்க்கரை ஆலையைத் தொடங்குவது குறித்துப் பரிசீலித்து, தனியார் முன் வந்தாலும் அவர்களுக்குக் கொடுத்து விடலாம் அல்லது ஏற்கெனவே இருந்த பொதுத் துறை—கூட்டுறவுத் துறையின்மூலமே அது தொடங்குவதாக இருந்தாலும் ஒரு முடிவு எடுக்கலாம் என்று ஆலோசனை வழங்கி இருக்கிறார்கள். ஆகவே, இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 2–00*

தரிசு நிலம். அதை மேம்படுத்தி நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களும், 110 வது விதியின்கீழ் இந்த அவையிலே ஒரு அறிக்கை தந்திருக்கின்றார்கள். அதன்படி, ஒவ்வொரு மாவட்டந்தோறும் அறிக்கைகளைப் பெற்று, அதனுடைய விவரங்களையெல்லாம் சொல்லி, 5 இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவது குறித்தும், தரிசு நிலங்களைப் பயன்படாமல் வைத்திருக்கின்ற நில உரிமையாளர்களுக்கு, அவர்களுடைய நிலங்களை மேம்படுத்தி, அவர்களிடத்திலே ஒப்படைக்கப்படும் என்று விரிவான அறிக்கையைத் தந்திருக்கின்றார்கள். இப்பொழுது அந்தப் பணி—தரிசு நிலங்களை மேம்படுத்துகின்ற பணி



வேளாண்மைத் துறைமூலம் நம்முடைய முதலமைச்சருடைய அறிவிப்புக்கிணங்க, விரைவாக அதைச் சமப்படுத்தி முதலமைச்சருடைய வழிகாட்டுதலின்பேரில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத் தேர்தல் நேரத்திலே சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றும், நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும் இந்தத் துறை என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, தமிழ்நாட்டின் வேளாண் குடிமக்களுக்கு மட்டுமல்ல, வேளாண் தொழிலாளர்களுக்கும், அனைவருக்கும் ஒரு பாதுகாவலராக தமிழகத்திலே அவர் பொது வாழ்க்கையிலே ஈடுபட்ட காலந்தொட்டு, அவர் ஆட்சியிலே இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருப்பவர், அவருடைய வழிகாட்டுதலின்பேரிலே இந்த வேளாண்மைத் துறை இந்த 5 ஆண்டு காலத்தில் மிகச் சிறப்பாக நடைபெற இங்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர்களுடைய குறிப்புகளை எல்லாம் நான் படித்துப் பார்த்து, அதைப்போல, கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் மீண்டும் நான் படித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, முடிந்தால் அந்த பகுதிக்கே நான் வருகை தந்து, அங்கே அந்த விவரங்களையும் நேரிலே பார்த்து, நல்ல தீர்வைக் காண்பேன் என்ற அந்த உறுதியை இங்கே நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்து, இங்கே கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டு, அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் மானியக் கோரிக்கையின்மீது பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிற நமது அரசுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வாழ்த்துதலையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் குணசேகரன் அவர்கள், குறிப்பிட்டு ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்தார்கள். சென்ற

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே வறட்சிக் கொடுமையின் காரணத்தினாலே பயிர்கள் கருகுவதைப் பார்த்து, மிகப் பெரிய இன்னலுக்குள்ளான விவசாயிகள் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களிலே சுமார் 22 பேர் தற்கொலை செய்துகொண்டு இறந்து போனார்கள். அவர்களுக்கெல்லாம் நிவாரணம் வேண்டுமென்று சென்ற ஆட்சியிலே நாங்கள் கோரிக்கை வைத்தபொழுது, அன்றைய முதலமைச்சர் அதை ஏறெடுத்துக்கூடப் பார்க்க மறுத்து விட்டார்கள். ஆகவே, 7,000 கோடி ரூபாய்க்கு விவசாயிகளுக்கான கடன் சலுகைகளை அளித்து, தள்ளுபடி செய்து, இலட்சக்கணக்கான விவசாயிகளுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நெருக்கடியான வறட்சிக் கொடுமையாலே தற்கொலை செய்துகொண்ட அந்த 22 விவசாயக் குடும்பங்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு நிதியுதவி செய்வார்களா? செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** என்னையே பார்க்க மாட்டார்லே! (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை மிக, மிக உருக்கமான ஒன்று. 22 விவசாயிகள் வறுமையின் காரணமாக, வறட்சியின் காரணமாக, நஞ்சை குலுங்கும் தஞ்சைத் தரணியில் திருவாரூர் மாவட்டத்திலும், நாகை மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் உயிர் துறந்திருக்கிறார்கள், தற்கொலை செய்துகொண்டார்கள், வறுமையினால் உயிரிழந்திருக்கிறார்கள். அந்த 22 பேருக்கும் நிதியுதவி, வாழ்க்கை வசதிக்காக அந்தக் குடும்பங்களுக்கு அளிக்கப்படுமா என்று கேட்டிருக்கின்றார்கள். இதுவரையிலே அளிக்கப்படவில்லை. இருந்தாலுங்கூட, அவருடைய கோரிக்கையையும், நண்பர் குணசேகரன் அவர்களுடைய கோரிக்கையையும், இந்த மாமன்றத்திலே உள்ள விவசாயிகள்பால் அக்கறையுள்ள அத்தனை பேருடைய கோரிக்கையாகக் கருதி, அவர்களுக்கெல்லாம் ஆகஸ்டு 15 ஆம் தேதி அன்று ஒவ்வொரு குடும்பத்திற்கும் 50 ஆயிரம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) நிதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



பிற்பகல் 2-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று, இன்னலுற்று மரணமுற்ற, தற்கொலை செய்துகொண்ட அந்த 22 விவசாயக் குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பினைச் செய்து, மீண்டும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான செய்தியை, நம்பிக்கையைத் தமிழகத்திலே ஏற்படுத்தியிருக்கிற ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னையைப் பெத்தா இளநீரு, பிள்ளையைப் பெத்தா கண்ணீரு' என்ற பிரபலமான பாடல் உண்டு. ஆனால் இன்றைக்குத் தென்னையை வளர்த்துவிட்டு, கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுடைய வயிற்றிலே பால் வார்ப்பதுபோல, தென்னை விவசாயிகளுக்கு ஆதரவாக வணிக வளாகம் அமைக்கவும், பல்வேறு நல்ல திட்டங்களையும் அளித்த நமது முத்தமிழ் வித்தகர், மரியாதைக்குரிய ஐயா டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னவுடன் நடவடிக்கை எடுத்துக் கொடுத்த மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியை, தஞ்சை மாவட்டத் தென்னை விவசாயிகள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் உயிரிழந்த விவசாயிகளுக்கு நிவாரணம் கேட்டுப் பல முறை விவசாய அமைப்புகள் கோரிக்கை வைத்தபோது, அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாது கடந்த கால ஆட்சி நடந்தது. ஆகவே இதுபோன்ற மக்கள் கோரிக்கைகளுக்கு உரிய மதிப்பளித்து

பல்வேறு பணிகளை ஆற்றி வருகிற நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள், தஞ்சையில் மரணம் அடைந்த விவசாயக் குடும்பங்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் (மேசையைத் தட்டும் ஒலி) மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கடலூர் மாவட்டத்தில் ரூபாய் 10 கோடி செலவில் ஒரு முந்திரி வணிக வளாகம் அமைக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பைத் தந்தமைக்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், நம் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையில், இந்த அறிவிப்பு கடந்த கால ஆட்சியில் அறிவிக்கப்பட்டது. கடந்த கால ஆட்சியில் அறிவித்தார்களே தவிர, அதற்கான நிதியும் ஒதுக்கவில்லை, அந்தப் பணியும் தொடங்கப்படவில்லை. கடந்த காலத்தில் நான் பேசுகின்றபோது, இந்த முந்திரி வணிக வளாகம் பண்ருட்டியில் அமையப் பெற வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தேன். அதற்கும் செவிசாய்க்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் இதைப் பரிசீலனை செய்து, பண்ருட்டியில் அந்த வணிக வளாகம் அமைவதற்கும், அந்தப் பணியைத் தொடங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலேயே இது அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியில் சொன்னதைச் செய்யவில்லை என்று சொன்னார். அவர்கள் பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் செய்யமாட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில் நிதி அமைச்சர் உறுதி செய்து அறிவித்திருக்கிறார். 2006–2007–லே பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். உங்கள் கட்சியில் பேசிவிட்டார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியின் சார்பில் ரங்கராஜன் பேசிவிட்டார். (குறுக்கீடு) சரி, விடியல் சேகர் அவர்கள்.

பிற்பகல் 2–10

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பக்கத்துத் தொகுதியாக இருக்கின்ற ஈரோடு மாவட்ட விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க, எனது பகுதி விவசாயிகளுக்கும் பயன்படுகிற வகையிலே மொடக்குறிச்சியிலே கரும்பு ஆலை அமைக்கப்படும்; அது பரிசீலனையில் இருக்கிறது என்கின்ற நல்ல ஒரு செய்தியை, இனிக்கிற செய்தியை, கரும்பைப்போல இனிக்கிற செய்தியை, கழகத் தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே சொல்லியிருக்கிற வேளாண்மைத் துறை அமைச்சருடைய அறிவிப்புக்கு, ஈரோடு மாவட்ட விவசாயிகள் சார்பிலே, எனது தொகுதி மற்றும் பக்கத்திலே இருக்கிற மொடக்குறிச்சி தொகுதி விவசாயிகளின் சார்பிலே நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.



திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 913,73,60,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 64,24,65,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4–8–2006) வெள்ளிக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

24. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

25. வேளாண்மைத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

26. வேளாண்மைத் துறை பற்றிய "மக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்)

## இணைப்பு

*(66 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

## அத்தியாயம்–1

## முன்னுரை

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

–அய்யன் திருவள்ளுவர்

பல தொழில்களைச் செய்து சுழன்றுகொண்டிருக்கும் இந்த உலகம் ஏர்த்தொழிலின் பின்னேதான் நடைபோடுகிறது. ஆகவே எவ்வளவுதான் துன்புற்றாலும் உழவுத் தொழிலே உயர்வுடையது.

– டாக்டர் கலைஞரின் குறளோவியம்.

தமிழ்நாடு அரசு வேளாண்மைக்குத் தரும் முக்கியத்துவம் வேளாண்மைத் துறைக்கு மட்டுமல்லாது, தமிழ்நாட்டின் மொத்த முன்னேற்றத்திற்கும் பயனளிப்பதாக உள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு தொழிற்கூடங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வேளாண்மையின் பங்கு அமைந்துள்ளது.

வேளாண்மைத் தொழில்நுட்பங்களிலும், விற்பனை மேம்பாடுகளிலும் சரியான அளவில் முதலீடு செய்வதால், உணவு தானிய உற்பத்தியை மேலும் கணிசமாக உயர்த்த முடியும். குறிப்பாக, பயிற்சித் திட்ட அணுகுமுறை, ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம், உயிர் உரங்கள் பயன்பாடு, உயிரிய தீவிரம் கொண்ட பயிர்ப் பாதுகாப்பு முறை, ஒருங்கிணைந்த உரம் மற்றும் நீர்ப்பாசனம், இயற்கை சார்ந்த வேளாண்மை, வீரிய ஒட்டு பயிர் இரகங்கள், மாற்று மரபணு 'பயிர் வகைகள்' ஆகியன, உணவு உற்பத்திற்கு ஊன்றுகோலாக உள்ளன. இனிவரும் காலக்கட்டங்களில் விவசாய வளர்ச்சியை அதிகரிக்கத் தேவையான வழிமுறைகளை ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டும்.

[2006 ஆகஸ்ட் 3

குறிப்பாக, நெல் மற்றும் எண்ணெய் வித்து பயிர்களின் நிலப்பரப்பு பல்வேறு காரணங்களால் குறைந்துக் கொண்டே வந்தாலும், கூடுதல் உற்பத்தித் திறன் காரணமாக அதிக அளவில் வேளாண் உற்பத்தியை அடைய முடியும். கோழி மற்றும் மாட்டுத் தீவனத் தேவைகள் அதிகரித்ததால், மக்காச்சோளத்தின் பயிர்ப் பரப்பு மற்றும் உற்பத்தி வெகுவாக அதிகரித்துள்ளது. என்றாலும், பணப் பயிர்களின் முக்கியமான பயிரான கரும்பின் உற்பத்தித் திறனில் ஓரளவே முன்னேற்றம் இருந்தபோதிலும், சாகுபடிபரப்பு அதிகரித்த காரணத்தினால், மொத்த உற்பத்தி பெரிதும் அதிகரித்துள்ளது. இதனால் சர்க்கரை ஆலைகள் மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்கூடங்கள் வளர வழிவகுக்கிறது. பருத்தி பெருவாரியாக மானாவாரியில் பயிரிடுவதால், உற்பத்தித் திறன் 0.20 விழுக்காடு மட்டுமே வளர்ச்சியை அடைய முடிந்தது. முக்கிய எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை மற்றும் எள்ளின் உற்பத்தித் திறன் அதிகரித்திருப்பினும், பரப்பளவு குறைந்த காரணத்தால் தேவையான உற்பத்தியை அடைய முடியவில்லை.

**எதிர்கொள்ள வேண்டிய சவரல்கள் மற்றும் அணுகுமுறைகள்**

குறைந்து வரும் வேளாண் சாகுபடி பரப்பு, மழையளவு, வேளாண்மையில் குறைவான முதலீடு, நிலத்தடி நீரின் மித மிஞ்சிய பயன்பாடு, பாசன ஏரிகளின் சீர்குலைவு மற்றும் பராமரிப்பின்மை, அறுவடைக்குப் பின் நேர்த்தி மற்றும் தானிய சேமிப்பு வசதிகளின் பற்றாக்குறைகள் பெரிதளவு வேளாண்மையின் வளர்ச்சியை பாதிக்க வாய்ப்புண்டு.

இந்தச் சவால்களை அரசு பல்முனை அறிவியல்பூர்வமான அணுகுமுறைகளால் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் பருத்தி, பயறு மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது. பருத்தியை பொறுத்தமட்டில், குறைவான இலாபம் காரணமாக சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. சந்தைக்குத் தேவையான தரமான பருத்தியினை உற்பத்தி செய்வது இன்றைய முக்கியத் தேவையாகும். பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும், தற்போதைய தேவைகளைச் சமாளிக்க ஆண்டுக்கு 1.8 இலட்சம் டன் கூடுதலாக உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியிலும் இதே நிலை நிலவுகின்றது.

தமிழ்நாட்டில் சாகுபடி பரப்பளவு குறைந்து வரும் தருவாயில், உற்பத்தியைப் பெருக்க வளம் குன்றிய நிலங்களில் கவனம் செலுத்துவது மட்டுமின்றி, மண்ணின் வளத்தை மேம்படுத்தப் பல்வேறு



2006 ஆகஸ்ட் 3]

அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. காவிரி மற்றும் பிற நதி நீர்ப் பாசனப் பகுதிகளில் 1.5 இலட்சம் எக்டர் நிலம் உவர்தன்மையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற வளம் குன்றிய நிலங்களைச் சீர்திருத்தி பயிர்ச் சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும்.

தமிழ்நாட்டில் 52 விழுக்காடு நிலப்பரப்பு மானாவாரி வேளாண்மைக்கு உட்பட்டது. இந்நிலங்களில் பயிர் உற்பத்தி உரிய பாசன முறை இல்லாமையால், 50 விழுக்காடு உற்பத்தித் திறன் மட்டுமே பெறப்படுகிறது. மானாவாரி நிலத்தின் வளத்தை மேம்படுத்த உரிய தொழில்நுட்பங்கள், இடுபொருட்கள் மற்றும் முதலீடு ஆகியன அவசியமாகத் தேவைப்படுகின்றன. மானாவாரி நிலங்களில் உற்பத்தித்திறனை அதிகரிக்கத் தேவையான அதிக உற்பத்தித்திறன் கொண்ட பயிர் இரகங்களையும், நீர் மற்றும் மண்வளம் சேமிப்பு தொழில்நுட்பங்களையும் கடைப்பிடிக்க வேண்டும். நீர்பிடிப்பு மேம்பாடு திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், நீர் மேலாண்மைத் திட்டம், நீர்ப்பாசன ஏரிகள் மற்றும் கால்வாய்கள் தூர் வாருதல், உழவர்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் உழவர் சந்தை ஆகியன முக்கியமான வழிமுறைகளாகும்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் கிணற்றுப் பாசனப் பரப்பு மூன்று மடங்கு அதிகரித்துள்ளதால், நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்து, பெருமளவில் நீர்ப் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளது. குறைந்து வரும் நிலத்தடி நீர்மட்டத்தால், 25 விழுக்காடு விளைச்சல் இழக்க நேரும். எனவே, நீர் பாசனத்திறனை அதிகரிக்கும் முறைகளைப் பின்பற்ற வேண்டும். நீர் சேமிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பயிர் இரகங்கள் மேலும் உருவாக்கப்பட வேண்டும். சொட்டு நீர்ப்பாசன முறை 20 முதல் 40 விழுக்காடு வரை நீர் சேமிப்பதோடு, 10 முதல் 20 விழுக்காடு வரை உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. சொட்டு நீர் மற்றும் நீர்மூலம் உரமிடுவது போன்ற தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க உழவர்களுக்குப் பயிற்சிகள் முக்கியம்.

விவசாயிகளுக்குத் தேவையான ஆராய்ச்சிகள், ஆத்மா (ATMA– Agricultural Technology Management Agency) அடிப்படையில் விரிவாக்கம், இடுபொருள் விநியோகம், உறுதியான மற்றும் இலாபகரமான விற்பனை வாய்ப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்து மறுசீரமைக்க வேண்டும். ஒப்பந்தப் பண்ணையம், கூட்டுப் பண்ணையம், பங்கேற்புப் பண்ணையம், பொது மற்றும் தனியார்த் துறைகளுடன் சேர்ந்து கூட்டு முயற்சியில் வேளாண்மை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்மூலம் அதிகப் பலன் கிடைக்க வாய்ப்புண்டு.

ஏழைகளுக்கு, குறிப்பாக, விவசாயம் சார்ந்த பெண்களின் நேரம் மற்றும் உழைப்பின் பொருளாதார மதிப்பை உயர்த்த உதவும் தொழில்நுட்பங்கள் தேவை. சிறிய பண்ணைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது, பலநோக்கு பண்ணைய முறையில் பயிர் மற்றும் கால்நடை வளர்ப்புமூலம் வாழ்வு ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதல் ஆகியவை நல்ல பலன் அளிக்கும்.

மண்ணில் அங்கக கரிமச் சத்தின் அளவினை ஒரு விழுக்காடாகவும், மொத்த இயற்கை உரச் சத்து அளவினை பத்து விழுக்காடாகவும் உயர்த்துவதே இன்றைய இயற்கைப் பண்ணைய விவசாயிகளுக்குச் சவாலாக உள்ளது. மண்வள மேம்பாடு குறிப்பாக, சிறிய பண்ணைகளின் உற்பத்தித் திறனை அதிகரித்து, விவசாயிகளின் நிகர வருமானத்தை உயர்த்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. தரிசு நிலங்களைச் சீர்திருத்தி அவற்றின் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை மற்றும் திறனை மேம்படுத்த சரியான தொழில்நுட்ப ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. மேலும் நடைமுறைக்கு ஒப்ப, தட்ப வெட்ப நிலைக்கு உகந்த, சந்தையில் அதிக விலை கிடைக்கக்கூடிய வகையில், நில வளம் காக்கக்கூடிய, சுற்றுச்சூழலை பாதுகாக்கக்கூடிய, சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்பட வேண்டும்.

மேலும், உலகமயமாக்கப்பட்ட நிலையில், நமது மாநிலத்திலிருந்து பல வேளாண்மை விளைப்பொருட்களை ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அதே சமயம், உலகச் சந்தை தாராளமயமாக்கப்பட்டதால், ஏற்படும் விளைவுகளை எதிர்கொண்டு உழவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஏற்றுமதியை மேம்படுத்த அரிய திட்டங்களையும், ஆய்வுத் திட்டங்களையும் செயல்படுத்த வேண்டும். காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றிக்கு அதிக ஏற்றுமதி வாய்ப்பு இருக்கிறது. சந்தையின் தேவையை அறிந்து வேளாண்மையில் பயிர்தேர்வு மற்றும் சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

எனவே, தமிழ்நாடு வேளாண்மையில் நான்கு விழுக்காடு மற்றும் தோட்டக்கலையில் எட்டு விழுக்காடு வளர்ச்சியை அடைய பல்வேறு வகையான வழிகளைக் கையாண்டு அதற்கான கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டும். இந்தத் தருணத்தில், வேளாண்மை வளர்ச்சி ஏற்படுத்த ஒரு வாய்ப்பாக அரசின் முதலீடுகள் இருக்கும் வகையில், அரசின் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி கொள்கைகள் வகுக்கப்படும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு வரும் ஆண்டில் பல திட்டங்களைச் செயல்படுத்த முனைந்துள்ளது.





## அத்தியாயம்–2

## வேளாண்மை

### 1. முன்னுரை

வேளாண்மையும் அதனைச் சார்ந்த தொழில்களும் கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. சுமார் 80 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் நேரடியாக வேளாண்மையைச் சார்ந்துள்ளபோதிலும், மொத்த மக்கள் தொகையில் சுமார் 75 சதவிகிதத்தினர் வேளாண்மையிலும், வேளாண் சார்ந்த, சாகுபடிக்குப் பிந்திய நடவடிக்கைகள், விளைபொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர். வேளாண்மையின்மூலம் கிடைக்கும் வருவாய் மாநிலத்தின் நிகர உள்நாட்டு உற்பத்தியில் 17 விழுக்காடு ஆகும். வேளாண்மைமூலமே அனைத்து மக்களுக்கும் தேவையான உணவும், வேலைவாய்ப்பும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களும் கிடைக்கின்றன. சமுதாயத்திற்கு அன்றாடம் தேவைப்படும் வேளாண் விளைபொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் முக்கிய பொறுப்பு வேளாண் தொழிலுக்கு உள்ளது என்பதால், இது பற்றிய தொழில்நுட்பம் மற்றும் தகவல் பரிமாற்றம் விவசாயிகளிடையேயும், பல்வேறு விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களிடையேயும் மற்றும் மாநிலங்களிடையேயும் ஏற்படுத்துவது அவசியமாகிறது.

பெருகி வரும் தொழில்கள், நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றால் ஆண்டுதோறும் விளை நிலங்களின் பரப்பளவு குறைந்து கொண்டு வருவதோடு, நீடித்த வேளாண் உற்பத்திக்கு ஆதாரமாக விளங்கும் நிலத்தடி நீர் அளவும் குறைந்து கொண்டு வருகிறது. சாகுபடி செய்யப்படும் நிலத்தின் வளம் மற்றும் பாசன நீரின் உற்பத்தித் திறனை அதிக அளவிற்கு உயர்த்துவது மட்டுமே உற்பத்தி இலக்கினை அடைவதற்கும், அதனை எதிர்காலத்தில் தக்கவைத்துக்கொள்வதற்குமான வழிமுறைகளாகும். விளை பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல், இயற்கை வளங்களை முழுமையாக உபயோகித்தல் மற்றும் ஒருங்கிணைந்த உற்பத்தி முறைகளைக் கடைப்பிடிப்பதன்மூலம் விவசாயத்தை இலாபகரமாக மாற்றி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்திட இயலும். இதன்மூலம் உணவு உற்பத்தி இலக்கினை எய்துவதோடு, கிராமப்புற வேலைவாய்ப்பின்மையைக் குறைப்பதும் சாத்தியமாகும்.

தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்துவிட்ட பயிர் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், உடனடி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. மாற்றுப் பயிர் சாகுபடி, அதிக

[2006 ஆகஸ்ட் 3

வருவாய் தரும் பயிர்ச் சாகுபடி மற்றும் விற்பனை வாய்ப்பிற்கேற்ற பயிர்ச் சாகுபடி முறைகளில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் தொழில்நுட்பங்கள் வழங்குவதோடு, இடுபொருள் விநியோகம் மற்றும் இதர உதவிகளையும் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். இடுபொருட்கள் மேலாண்மையில், சீரிய விதைகள், பயிர் ஊட்டச்சத்து பயன்பாடு, பூச்சி மற்றும் நீர் மேலாண்மை ஆகியவற்றுடன், பின் அறுவடை நேர்த்தியையும் விவசாயிகள் கடைப்பிடித்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்வது அவசியமாகிறது. மானாவாரியில் பயிர்களுக்குச் சிறப்புக் கவனம் அளித்து நீர்ப் பாதுகாப்பு அமைப்புகள், மண் வளப் பாதுகாப்பு, வறட்சியைத் தாங்கும் இரகங்கள் சாகுபடி போன்ற செயல்பாடுகள்மூலம் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

வேளாண் விளைபொருட்களுக்கு, குறிப்பாக, சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள் போன்ற மானாவாரிப் பயிர்களுக்கு முன்னரே நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பதற்கும், சந்தைத் தேவைக்கேற்ப, விவசாயிகள் சாகுபடியினை மேற்கொள்வதற்கும் ஒப்பந்தப் பண்ணைய முறை சிறப்பான பலனைத் தரும் எனக் கருதப்படுகிறது.

2002 ஆம் ஆண்டிலிருந்து, வேளாண்மையில் ஏற்பட்ட வறட்சி மற்றும் வெள்ளப் பாதிப்பினால், விவசாயிகள் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்படைந்ததோடு, அவர்களின் கடன்சுமையும் அதிகரித்துள்ளது. இத்தகைய கடுமையான நிதி இடர்ப்பாடுகளிலிருந்து விவசாயிகளை மீளச் செய்யும் நோக்கத்துடன், கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் நடப்பு ஆண்டில் விவசாயிகள் புதிய உற்சாகத்துடன் சாகுபடியினை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 1.1. வேளாண்மையில் தற்போதைய நிலை

நாட்டின் மக்கள் தொகையில் 7 சத மக்கள் தமிழகத்தில் உள்ளனர். ஆனால், நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 4 சதமும், நீர் வளத்தில் 3 சதமும் மட்டுமே தமிழகத்தில் உள்ளன. மொத்தச் சாகுபடி பரப்பில், 48 சத பரப்பில் மட்டுமே, பாசன வசதி உள்ளது. சுமார் 52 சத நிலப் பரப்பு மானாவாரி சாகுபடியின்கீழ் உள்ளது. 1950 ஆம் ஆண்டுகளில், 17.6 இலட்சம் எக்டேராக இருந்த தரிசு நிலப் பரப்பு, 2004–2005 ஆம் ஆண்டில் 23.96 இலட்சம் எக்டேராக உயர்ந்துள்ளது. 2000–2001 ஆம் ஆண்டு 63.38 இலட்சம் எக்டேராக இருந்த மொத்தச் சாகுபடி பரப்பு (தோட்டக்கலை பயிர்கள் உட்பட), 2004–2005 ஆம் ஆண்டு 58.89 இலட்சம் எக்டேராகக் குறைந்துள்ளது.



2006 ஆகஸ்ட் 3]

கீழ்க்கண்ட காரணங்களினால், தரிசு நிலப் பரப்பு அதிகரித்து, மொத்தச் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது:—

- நகர்ப்புற வளர்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சி
- நீர்ப் பற்றாக்குறை மற்றும் குறைந்துவரும் நிலத்தடி நீர்
- தவறும் பருவ மழை
- காவிரி நீர் திறந்துவிடுதலில் நிலையற்றத் தன்மை
- பயிர்ச் சாகுபடி செலவு அதிகரித்தல், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறை மற்றும் பொருளாதார ரீதியில் இலாபகரமற்ற வருவாய்

கடந்த 15 ஆண்டுகளின் தமிழக நிலப் பயன்பாட்டு விவரம் பின்வருமாறு:—

(இலட்சம் எக்டேர்)

| வ. எண் | விவரம் | 1990–91 | 1995–96 | 2000–01 | 2001–02 | 2002–03 | 2003–04 | 2004–05 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காடுகள் | 21.6 | 21.4 | 21.34 | 21.3 | 21.31 | 21.2 | 21.22 |
| 2 | தரிசு மற்றும் பயிரிடுவதற்கு இலாயக்கற்ற நிலங்கள் | 5.1 | 4.9 | 4.76 | 4.77 | 4.78 | 5.09 | 5.09 |
| 3 | வேளாண்மை தவிர பிற உபயோகத்திற்குப் பயன்படும் நிலம் | 18.2 | 19.1 | 19.86 | 19.98 | 20.12 | 21.1 | 21.25 |
| 4 | சாகுபடிக்கு ஏற்ற தரிசு நிலம் | 2.9 | 3.5 | 3.52 | 3.87 | 3.89 | 3.79 | 3.74 |
| 5 | மேய்ச்சல் நிலம் | 1.2 | 1.3 | 1.23 | 1.18 | 1.18 | 1.14 | 1.14 |
| 6 | மரப்பயிர் சாகுபடிப் பரப்பு | 2.3 | 2.2 | 2.55 | 2.71 | 2.77 | 2.83 | 2.9 |
| 7 | நடப்பு தரிசு நிலங்கள் | 12.7 | 12.9 | 11.34 | 10.26 | 15.02 | 9.54 | 6.92 |
| 8 | இதர தரிசு நிலங்கள் | 10.5 | 11.3 | 12.28 | 14.09 | 14.91 | 18.6 | 17.04 |
| 9 | நிகர சாகுபடிப் பரப்பு | 55.8 | 53.5 | 53.03 | 51.72 | 45.9 | 46.9 | 50.97 |
| 10 | ஒருமுறைக்குமேல் சாகுபடி செய்யப்பட்டப் பரப்பு | 10.5 | 9.3 | 10.35 | 10.54 | 6.01 | 6.27 | 7.92 |
| 11 | மொத்த சாகுபடிப் பரப்பு | 66.3 | 62.7 | 63.38 | 62.26 | 51.91 | 53.2 | 58.89 |
| 12 | பயிரிடு திறன் | 118.9 | 117.3 | 119.5 | 120.3 | 113.1 | 113.0 | 119.0 |
| 13 | மொத்த நிலப்பரப்பு | 130.2 | 130.0 | 129.9 | 129.9 | 129.9 | 130.0 | 130.3 |

[2006 ஆகஸ்ட் 3

## 1.2. பயிர் சாகுபடி சாதனை விவரம்

கடந்த ஆண்டுகளில் முக்கியப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் விவரம் பின்வருமாறு:-

| பயிர் | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 | 2004-2005 | 2005-2006 (முன் மதிப்பீடு) (**) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பரப்பு (இலட்சம் எக்டேரில்) | | | | | | | |
| நெல் | 22.75 | 21.64 | 20.80 | 20.60 | 15.17 | 13.97 | 18.73 | 21.63 |
| சிறு தானியங்கள் | 7.64 | 7.76 | 7.33 | 7.06 | 7.12 | 9.03 | 8.24 | 10.12 |
| பயறு வகைகள் | 6.37 | 6.93 | 6.88 | 6.85 | 5.63 | 5.37 | 5.90 | 6.88 |
| மொத்த உணவு தானியங்கள் | 36.76 | 36.33 | 35.01 | 34.51 | 27.92 | 28.37 | 32.87 | 38.63 |
| பருத்தி | 2.19 | 1.78 | 1.69 | 1.64 | 0.76 | 0.98 | 1.29 | 1.41 |
| கரும்பு | 3.06 | 3.16 | 3.15 | 3.21 | 2.61 | 1.92 | 2.22 | 3.44 |
| எண்ணெய் வித்துக்கள் | 9.99 | 9.14 | 8.39 | 7.80 | 5.93 | 6.96 | 7.15 | 8.16 |
| மொத்தம் | 52.00 | 50.41 | 48.24 | 47.16 | 37.22 | 38.23 | 43.53 | 51.64 |
| உற்பத்தி (இலட்சம் மெட்ன்) | | | | | | | | |
| நெல் | 81.41 | 75.32 | 73.66 | 65.84 | 35.77 | 32.23 | 50.62 | 61.27 |
| சிறு தானியங்கள் | 9.67 | 10.19 | 9.38 | 8.34 | 6.84 | 8.88 | 8.68 | 10.18 |
| பயறு வகைகள் | 3.04 | 2.91 | 3.13 | 2.71 | 2.00 | 2.01 | 2.16 | 2.69 |
| மொத்த உணவு தானியங்கள் | 94.12 | 88.42 | 86.17 | 76.89 | 44.61 | 43.12 | 61.46 | 74.14 |
| பருத்தி (ல.பொதிகள்) | 4.06 | 3.40 | 3.16 | 2.30 | 0.84 | 1.27 | 1.86 | 2.13 |
| கரும்பு (வெல்லமாக) | 33.76 | 34.29 | 33.18 | 32.61 | 24.16 | 17.66 | 24.46 | 38.03 |
| எண்ணெய் வித்துக்கள் | 16.48 | 14.07 | 14.41 | 13.12 | 7.60 | 9.64 | 10.61 | 12.56 |



2006 ஆகஸ்ட் 3]

| பயிர் | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 | 2004-2005 | 2005-2006 (முன் மதிப்பீடு) (**) |
|---|---|---|---|---|---|---|---|---|
| பரப்பு (இலட்சம் எக்டேரில்) | | | | | | | | |
| உற்பத்தித் திறன் (கிலோ/எக்டேர்) | | | | | | | | |
| நெல் | 3579 | 3481 | 3541 | 3196 | 2359 | 2308 | 2703 | 2833 |
| சிறுதானியங்கள் | 1264 | 1311 | 1284 | 1181 | 959 | 983 | 1053 | 1006 |
| பயறு வகைகள் | 478 | 419 | 454 | 395 | 356 | 374 | 367 | 391 |
| மொத்த உணவு தானியங்கள் | 2560 | 2434 | 2461 | 2228 | 1597 | 1520 | 1870 | 1919 |
| பருத்தி | 316 | 324 | 316 | 238 | 188 | 213 | 244 | 257 |
| கரும்பு | 11026 | 10835 | 10525 | 10155 | 9244 | 9192 | 11018 | 11055 |
| எண்ணெய் வித்துக்கள் | 1649 | 1541 | 1717 | 1684 | 1282 | 1385 | 1484 | 1539 |

(**) பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை ஆணையர் அவர்களின் முன்மதிப்பீட்டு அறிக்கையின்படி

## 2. பருவ நிலை மற்றும் பயிர் நிலை

### 2.1. மழை

பருவம் வாரியாகப் பெறப்பட்ட மழை அளவு விவரம் பின்வருமாறு:—

(அளவு: மிமீ)

| பருவம் | இயல்பான மழை அளவு | பெறப்பட்ட மழை அளவு | | வேறுபாடு விழுக்காடு இயல்பு மழையுடன் | |
|---|---|---|---|---|---|
| | | 2005 | 2006 | 2005 | 2006 |
| குளிர் காலம் (ஜனவரி–பிப்ரவரி) | 37.5 | 13.9 | 15.6 | (–) 62.9 | (–) 58.0 |
| கோடை காலம் (மார்ச்–மே) | 128.4 | 231.7 | 150.4 | (+) 80.0 | (+) 17.0 |
| தென்மேற்கு பருவம் (ஜூன்–செப்டம்பர்) | | 314.6 | 305.9 | | (–) 2.8 |
| வடகிழக்கு பருவம் (அக்–டிசம்பர்) | 459.2 | 829.4 | | (+) 80.6 | |
| மொத்தம் | 939.7 | 1380.9 | | (+) 47.0 | |

[2006 ஆகஸ்ட் 3

## 2.2. 2006–07 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி இலக்கு

2006 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட தேதியான ஜூன் 12 இல் மேட்டூர் அணை திறக்கப்பட்டு குறுவை சாகுபடி முழு அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதையொட்டியும், இயல்பான மழை மற்றும் சாதகமான சூழ்நிலையை எதிர்நோக்கியும், 2006–07 ஆம் ஆண்டிற்கான வேளாண் பயிர் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி இலக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| பயிர் | பரப்பு (இலட்சம் எக்டேரில்) | உற்பத்தி (இலட்சம் மெட்ன்னில்) |
|---|---|---|
| நெல் | 21.70 | 78.10 |
| சிறு தானியங்கள் | 10.50 | 13.65 |
| பயறு வகைகள் | 7.50 | 3.60 |
| மொத்த உணவு தானியங்கள் | 39.70 | 95.35 |
| எண்ணெய் வித்துக்கள் | 10.00 | 17.00 |
| பருத்தி (ல.பொதிகள்) | 2.00 | 3.80 |
| கரும்பு (வெல்லமாக) | 3.30 | 39.60 |

## 2.3. 2006–2007 ஆம் ஆண்டிற்கான செயல் உத்திகள் மற்றும் திட்டங்கள்

- காரீப் மற்றும் ராபி பருவங்களில் பயிர் சாகுபடிக்கு முன்பாகவே வேளாண் தொழில்நுட்ப உதவிகளை வழங்க, தீவிர முன்பருவ முகாம்கள் நடத்துதல்.
- சாகுபடிக்கு ஏற்ற அனைத்து நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வருதல் மற்றும் தரிசு நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தல்
- தரமான இடுபொருட்களை உரிய நேரத்தில் இருப்பு வைத்து விநியோகித்தல்
- ஒப்பந்த பண்ணை முறையில் அதிக பரப்பினை சாகுபடிக்குக் கொண்டுவருதல்



2006 ஆகஸ்ட் 3]

- விரிவாக்கப் பணிகள், விதை உற்பத்தி, விநியோகம் மற்றும் கன்றுகள் உற்பத்தி ஆகியவற்றில் தமிழ்நாடு வேளாண் பண்ணை மகளிர் (வேளாண்மை வணிகம் மற்றும் விரிவாக்கத்தில் பண்ணை மகளிர்–டான்வாபே) குழுக்களை ஈடுபடுத்துதல்.
- உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களைச் சொந்தமாக வாங்கி வாடகைக்கு விடுதல் போன்ற பணிகளில் தெரிவு செய்யப்பட்ட பண்ணை மகளிர் குழுக்களை ஈடுபடுத்துதல்.
- காட்டாமணக்கு சாகுபடியை ஊக்குவித்து, அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுடன் முறையான இணைப்பை ஏற்படுத்துதல்.
- விவசாயிகள் ஆர்வலர் குழுக்களை (Farmers Interest Group) மேலும் அதிக அளவில் உருவாக்கி விரிவாக்கப் பணிகளில் ஈடுபடுத்துதல்.
- புஞ்சைப் பயிர் சாகுபடி மேம்படுத்துவதற்காக, அன்னா பண்ணையில் நீர்ப்பாதுகாப்பு தொழில்நுட்ப செயல்விளக்கப் பூங்கா மற்றும் பயிற்சி நிலையம் அமைத்தல், சிறப்பு நீர்வடிப் பகுதிகளை உருவாக்குதல் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- புதிதாக உருவாக்கியுள்ள திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை அதிகமான பரப்பில் விரிவுபடுத்தி அதன்மூலம் நெல் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- மாற்றுப் பயிர் சாகுபடி நடவடிக்கைகளை தீவிரப்படுத்துதல். குறைந்த நீர்த்தேவைப் பயிர்களான சிறுதானியங்கள், பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- தென்னை, கரும்பு, நிலக்கடலை, எண்ணெய்ப் பனை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் நுண்நீர்ப் பாசன முறையை அதிக பரப்பில் மேற்கொள்வதை ஊக்குவித்தல்.
- தென்னை சாகுபடி பரப்பினையும், உற்பத்தித் திறனையும் உயர்த்த சிறப்புத் திட்டங்கள்மூலம் விவசாயிகளுக்கு உதவுதல்.

[2006 ஆகஸ்ட் 3

## 3. மாநிலத் திட்டங்கள்

### 3.1. இடுபொருள் விநியோகம்

#### 3.1.1 விதைகள்

பயிர் உற்பத்தித் திறனை உயர்த்துவதில், விதையின் பங்கு முக்கியமானது. மற்ற மாநிலங்களைப்போல் அல்லாது தமிழகத்தில் வேளாண் துறையே நேரடியாக விதை உற்பத்திப் பணியில் ஈடுபட்டுள்ளது. தரமான விதைளை விவசாயிகளுக்கு வழங்குவதில் அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற இரகம் மற்றும் வீரிய ஒட்டு இரக விதைகளின் தேவை மற்றும் அவற்றின் அதிக உற்பத்தித் திறனைக் கருத்தில் கொண்டு, 2006–07 ஆம் ஆண்டிற்கான விதை உற்பத்திப் பணி நன்கு திட்டமிடப்பட்டு சிறப்பான முறையில் மேற்கொள்ளப்படும். அதற்கான முயற்சிகள் பின்வருமாறு:—

- விதை மாற்று விகிதத்தின்படி தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகித்தல்.
- அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற அதிக மகசூல் தரும்/வீரிய ஒட்டு விதைகளை போதிய அளவில் விவசாயிகளுக்கு வழங்குவதை உறுதி செய்தல்.
- மாற்றுப்பயிர் சாகுபடி முறையினை மேம்படுத்த, சிறு தானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கான விதைகளைப் போதிய அளவு உரிய காலத்தில் விநியோகம் செய்வதில் சிறப்புக் கவனம் செலுத்துதல்.

மாநில அரசு முழு செலவையும் ஏற்கும் வகையில், விதை உற்பத்திப் பணியினை விரிவான விதைப் பெருக்குத் திட்டத்தின்மூலம் வேளாண் துறை மேற்கொண்டு வருகிறது. விதைப் பெருக்குத் திட்டத்தில், 37 அரசு விதைப் பண்ணைகளிலும், 5 மாநில எண்ணெய் வித்துப் பண்ணைகளிலும், ஒரு பயறு விதைப் பண்ணையிலும் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதையினைப் பயன்படுத்தி, விவசாயிகளின் வயல்களில் சான்று விதை உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. தேவையான வல்லுநர் விதைகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திலிருந்தும், தேசிய இரகங்களுக்கான விதைகள் இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்திலிருந்தும் (ICAR) பெறப்படுகின்றன.



2006 ஆகஸ்ட் 3]

துறைமூலம் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைகளும், சான்று விதைகளும், அரசுக்குச் சொந்தமான 74 விதை சுத்திகரிப்பு நிலையங்களில் (16 பெரிய நிலையங்கள், 3 நடுத்தர மற்றும் 55 சிறிய சுத்திகரிப்பு நிலையங்கள்) சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. அனைத்து விதை உற்பத்திப் பணிகளும் கடுமையான தர நிர்ணயம் உறுதி செய்யப்படும் வகையில் விதைச்சான்றுத் துறையினை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்படுகிறது. விதைச் சான்றுத் துறையினால் அங்கீகரிக்கப்பட்டு, சான்றளிக்கப்பட்ட விதைகள் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து வட்டாரங்களிலும் இயங்கும் 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

விதை கொள்முதல் மற்றும் விநியோகத்தில், கடந்த ஐந்து ஆண்டு சாதனைகளின் சராசரி மற்றும் 2006–2007 ஆம் ஆண்டிற்கான இலக்கு விவரம் பின்வருமாறு:— (மெ.டன்)

| பயிர் | 2001–02 முதல் 2005–06 முடிய 5 ஆண்டுகளின் சராசரி | 2006–07 ஆண்டுக்கான திட்டம் |
|---|---|---|
| (அ) கொள்முதல் | | |
| 1. நெல் | 14925 | 18000 |
| 2. சிறு தானியங்கள் | 387 | 450 |
| 3. பயறு வகைகள் | 1169 | 1600 |
| 4. எண்ணெய் வித்துக்கள் | 3687 | 4500 |
| 5. பருத்தி | 138 | 250 |
| (ஆ) விநியோகம் | | |
| 1. நெல் | 14939 | 18000 |
| 2. சிறு தானியங்கள் | 407 | 450 |
| 3. பயறு வகைகள் | 1149 | 1600 |
| 4. எண்ணெய் வித்துக்கள் | 3815 | 4500 |
| 5. பருத்தி | 168 | 250 |

[2006 ஆகஸ்ட் 3

### 3.1.2. உரம்

உணவுப் பாதுகாப்பிற்கான எதிர்கால சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதில் மண் வளத்திற்கேற்ப உரமிடுவது முக்கிய பங்கு வகிக்கிறது. செயற்கை மற்றும் இயற்கை உரங்களை தேவைக்கேற்ப பெருமளவில் பயன்படுத்துவதன்மூலம் இறவை மற்றும் மானாவாரியில் பயிர்களின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நீக்க முடியும். சமச்சீரற்ற முறையில், உரத்தினைப் பயன்படுத்துவதனால், சாகுபடிச் செலவு அதிகமாகுமே தவிர, உற்பத்தியை உயர்த்திட அது உதவாது. பயிரின் உண்மையான தேவைக்கேற்ப இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து உதவினால், உரப்பயன்பாட்டுத் திறன் உயரும் என்பதோடு, சாகுபடி செலவும் குறையும். இதற்காக, மண் ஆய்வுப் பரிந்துரைக்கேற்ப உரங்களை இடும் முறையானது பெருமளவில் பரிந்துரைக்கப்படுகிறது. விவசாயிகள் உரப்பரிந்துரைகளைப் பின்பற்றுவதற்காக மண்வள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தழைச்சத்து உரத்தினை தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும், பயிரின் தேவைக்கேற்ப, தழைச்சத்து உரம் இடும் அளவை விவசாயிகளே முடிவெடுக்கும் வகையில் வண்ண அட்டையை நெற்பயிருடன் ஒப்பிட்டு, பயன்படுத்த வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டு 2.15 இலட்சம் வண்ண அட்டைகள் ரூ.49 இலட்சம் செலவில் விநியோகிக்கப்பட்டன. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் 2.25 இலட்சம் வண்ண அட்டைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளன.

உரங்கள் இருப்பு மற்றும் விநியோக அளவினை வேளாண் துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. உரக்கட்டுப்பாடு சட்டம் 1985–ஐ வேளாண் துறையின் தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு கடுமையாகச் செயல்படுத்தி, தரமான உரங்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்கிறது.



2006 ஆகஸ்ட் 3]

2005–2006 ஆம் ஆண்டு இரசாயன உரங்கள் விநியோகம் மற்றும் 2006–2007 ஆம் ஆண்டுக்கான திட்ட விவரங்கள் வருமாறு:–

(இல.மெ.டன்)

| சத்துக்கள் | 2005–06 | | 2006–07 |
|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | ஆண்டுத் திட்டம் |
| தழைச் சத்து | 5.45 | 5.06 | 5.50 |
| மணிச் சத்து | 2.34 | 2.37 | 2.36 |
| சாம்பல் சத்து | 2.26 | 2.58 | 2.29 |
| மொத்தம் | 10.05 | 10.01 | 10.15 |

### 3.1.3. நுண்ணூட்டச் சத்துக்கள்

பலஆண்டுகளாக தொடர்ந்து தீவிர சாகுபடி மேற்கொள்வதால் மாநிலத்தில் பெரும்பாலான விளை நிலங்களில் நுண்ணூட்டச் சத்து குறைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, தேவையான அளவு நுண்ணூட்டச் சத்தினை இடுவது பரிந்துரைக்கப்படுகிறது. மண்ணிலும், உரங்களிலும் உள்ள நுண்ணூட்டச் சத்துக்களின் அளவைப் பகுப்பாய்வு செய்து அறிவதற்கான நவீன கருவி (Atomic Absorption Spectro Photo Meter) "அணுக்கதிர் ஈர்ப்பு அலை நிழற்படமானி" தமிழ்நாட்டில் 20 மண் பரிசோதனை நிலையங்களிலும், 2 உரப் பரிசோதனை நிலையங்களிலும் உள்ளது. பயிர்களுக்குத் தேவையான 14 வகையான நுண்ணூட்டக் கலவைகளை ஆண்டுதோறும் 1,250 மெ.டன் என்ற அளவுக்கு உற்பத்தி செய்து விநியோகிப்பதற்காக குடுமியான்மலையில் நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி நிலையம் இயங்கி வருகிறது. 2005–06 ஆம் ஆண்டில் 1,286 மெ.டன் நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

நுண்ணூட்டச் சத்துப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்குத் தேவையான, தரமான நுண்ணூட்டச் சத்து அதிக அளவில் விநியோகம் செய்ய 2006–07 ஆம் ஆண்டு உற்பத்தி இலக்கு 1,400 மெ.டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 3

### 3.2. உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

உரக் கட்டுப்பாடு சட்டம் 1985–ஐ கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த, உர விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களிலிருந்து உர மாதிரிகள் எடுக்கப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள 14 அறிவிக்கை செய்யப்பட்ட உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. 2005–2006 ஆம் ஆண்டு, 16,800 உர மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 17,100 உரமாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன.

இத்திட்டத்தில் 2006–07 ஆம் ஆண்டு 17,500 உர மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 3.3. இயற்கை எரு

பயிருக்குக் கிடைக்காத நிலையில் உள்ள ஊட்டச்சத்துக்களை, கிடைக்கும் நிலைக்கு மாற்றுவதற்கு மண்ணில் உள்ள நுண்ணுயிர் செயல்பாட்டினை விரைவுபடுத்த வேண்டும். அதற்கு இயற்கை உரம் பெரும்பங்கு வகிக்கிறது. இயற்கையின் இந்த நிகழ்ச்சி, உற்பத்தியை அதிகரிப்பதில் மறைமுகமாக உதவுகிறது. தொடர்ந்து தீவிர சாகுபடி மேற்கொள்ளப்பட்டதால், மண்ணின் ஊட்டச்சத்து குறைந்து, வளத்தினை இழந்துள்ளது. மேலும் நிலத்தில் இடுவதற்குத் தேவைப்படும் தொழுஉரம் மற்றும் மக்கிய உரங்கள் போதிய அளவில் கிடைப்பதில்லை. மேற்கூறப்பட்ட காரணங்களினால், விவசாயிகள் தங்கள் வயல்களிலேயே அவர்களின் தேவைக்கு வேண்டிய மக்கிய எருவினை உற்பத்தி செய்து கொள்வதற்கான பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

### 3.3.1. புளூரோட்டஸ் பூஞ்சாணம்மூலம் பண்ணைக் கழிவுகளை கம்போஸ்ட் உரமாக்கல்

பண்ணைக் கழிவுகளை புளூரோட்டஸ் பூஞ்சாணம் கொண்டு கம்போஸ்ட் உரமாக்கும் திட்டம் ஒன்று ரூ.2.80 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் 1 கிலோ புளூரோட்டஸ், 5 கிலோ யூரியா மற்றும் வேளாண் தொழில்நுட்ப விவரங்கள் அடங்கிய பிரசுரம் அடங்கிய ரூ.140/– மதிப்புள்ள 2,000 சிறுதளைப்பைகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. 2006–07 ஆம் ஆண்டில் ரூ.7.00 இலட்சம் செலவில், 5,000 சிறுதளைப் பைகள் விநியோகம் செய்யும் வகையில், இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2006 ஆகஸ்ட் 3]

### 3.3.2. மண்புழு உரப் பயன்பாட்டினை மேம்படுத்தும் திட்டம்

மண்புழு உரத் தொழில்நுட்பம் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. வணிகரீதியான மண்புழு உர உற்பத்தியினைச் சுமார் 10 சுய உதவிக் குழுக்களும், 100 அரசு சாரா நிறுவனங்களும் பல்வேறு தனிப்பட்ட நபர்களும் மேற்கொண்டு வருகின்றனர். மண்புழு உரத் தயாரிப்பு தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், விவசாயிகளே மண்புழு உரத்தினை உற்பத்தி செய்ய அவர்களுக்குத் தகுந்த வாய்ப்பு வசதிகளை வழங்கவும், இத்திட்டத்தில் செயல் விளக்கமும், பயிற்சியும் அளிக்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.3.60 இலட்சம் செலவில் 100 செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டு, 5,000 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2006–2007 ஆம் ஆண்டு ரூ.11.55 இலட்சம் செலவில் 300 செயல் விளக்கங்கள் அமைத்து, 15,000 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ரூ.3,850 செலவில் ஒரு செயல் விளக்கம் அமைக்க இடுபொருள் செலவிற்கு ரூ.1,200–ம், பங்குபெறும் 50 விவசாயிகளுக்கு உதவித் தொகையாக இடைநிகழ்ச் செலவிற்குத் தலா ரூ.50–ம் வழங்கப்படும்.

### 3.3.3. உயிர் உரங்கள் உற்பத்தி மற்றும் விநியோகம்

சுற்றுப்புறச் சூழலுக்கு இணக்கமான, விலை குறைந்த இடுபொருளாக ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையில், உயிர் உரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பயிர் வளர்ச்சியின் பல்வேறு நிலைகளில், உயிர் உரங்களைப் பயன்படுத்த வேளாண்மைத் துறை தொடர்ந்து பரிந்துரை செய்து வருகின்றது. விவசாயிகளுக்கு அதிக அளவில் உயிர் உரங்கள் கிடைக்கச் செய்ய, ரைசோபியம், அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியம் ஆகிய உயிர் உரங்கள் கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 இடங்களில் இயங்கி வரும் உயிர் உர உற்பத்தி மையங்கள்மூலம் ஆண்டுக்கு 1,400 மெ.டன் (ஒரு பொட்டலம் 200 கிராம் வீதம், 70 இலட்சம் பொட்டலங்கள்) என்ற அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த 6 மையங்களில் உற்பத்தி செய்யப்படும் உயிர் உரங்களின் தரத்தினைக் கண்காணிக்க திருச்சியில் உயிர் உரத் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் இயங்கி வருகிறது. 2005–06 ஆம் ஆண்டு, 1,485 மெ.டன். உயிர் உரங்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டன.

[2006 ஆகஸ்ட் 3

இத்திட்டத்தில், 2006-2007 ஆம் ஆண்டு 1,600 மெ.டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படும்.

### 3.3.4. நீலப்பச்சைப் பாசி மற்றும் அசோலா

நீலப்பச்சைப் பாசி மற்றும் அசோலா, காற்றில் உள்ள தழைச்சத்தினைக் கிரகித்து, நெற்பயிருக்குக் கிடைக்கச் செய்வதால், அரசுப் பண்ணைகளில் ஒவ்வொன்றும் 500 மெ.டன் என்ற அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

2006–2007 ஆம் ஆண்டு, 525 மெ.டன் நீலப்பச்சைப் பாசி உற்பத்தி செய்து விநியோகம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நீலப்பச்சைப் பாசி ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 1.312 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு விநியோகம் செய்யப்படும்.

### 3.3.5. பசுந்தாள் உர விதை விநியோகத் திட்டம்

சணப்பு, தக்கைப்பூண்டு, சீமை அகத்தி, கொளிஞ்சி போன்ற பசுந்தாள் உரப் பயிர்களைச் சாகுபடி செய்து அவை பூப்பதற்குமுன், வயல்களிலேயே மடக்கி உழுதால், மண்ணில் உள்ள இயற்கை உர அளவு பெருமளவில் அதிகரிக்கும். மண்ணிற்குத் தேவைப்படும் இயற்கை உரத்தினை அளிக்கக்கூடிய மாற்று ஆதாரம் இது ஒன்றே ஆகும். பசுந்தாள் உரப் பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்வதை ஊக்குவிப்பதற்காக, 2005–2006 ஆம் ஆண்டு ரூ.25 இலட்சம் செலவில் 125 மெ.டன் பசுந்தாள் உர விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, 25 சத மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2006–2007 ஆம் ஆண்டில், 250 மெ.டன் பசுந்தாள் உர விதைகள், ரூ.50 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டு, 25 சத மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.4. மண் மேலாண்மை மற்றும் மண் ஆய்வு

### 3.4.1. சுனாமியால் பாதிக்கப்பட்ட வேளாண் விளை நிலங்கள் சீரமைப்பு

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி அன்று சுனாமி பேரலைகளின் தாக்குதலால் கடலோர மாவட்டங்கள், குறிப்பாக நாகப்பட்டினம், கடலூர், கன்னியாகுமரி, விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. பயிர்ப் பாதிப்பு ஏற்பட்டது மட்டுமின்றி, இந்த சுனாமி அலையினால், விளைநிலங்களும் ஏறக்குறைய நிரந்தரப் பாதிப்பிற்குள்ளாயின. கடல் நீர் புகுந்து விளைநிலங்கள் மூழ்கியதால், அம்மண்ணில் உப்புத்தன்மை மற்றும் மின் கடத்தும் அளவு (EC) ஆகியவை அளவுக்கு அதிகமாக உயர்ந்துள்ளது. சில நிலங்கள் கடல் மண் அல்லது வண்டலால் மூடப்பட்டுள்ளது. இக்காரணங்களால் இவை சாகுபடி செய்ய முடியாத நிலங்களாக மாறியுள்ளன.



2006 ஆகஸ்ட் 3]

#### சுனாமியால் பாதிக்கப்பட்ட பரப்பு

மாவட்ட வாரியாக பாதிக்கப்பட்ட பரப்பு பின்வருமாறு :—

| வ. எண் | மாவட்டம் | கணக்கெடுப்பின்படி பயிர் பாதிக்கப்பட்ட பரப்பு (எக்.) | நிலம் சீரமைக்கப்பட வேண்டிய பரப்பு (எக்.) | சீரமைக்கப்பட வேண்டிய மொத்தப் பரப்பு (எக்.) |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 90.40 | 158.08 | 248.48 |
| 2. | கடலூர் | 311.32 | 1614.16 | 1925.48 |
| 3. | விழுப்புரம் | 66.34 | 1550.00 | 1616.34 |
| 4. | நாகப்பட்டினம் | 4315.47 | 342.00 | 4657.47 |
| 5. | கன்னியாகுமரி | 12.57 | 0.00 | 12.57 |
| | மொத்தம் | 4796.10 | 3664.24 | 8460.34 |

28–12–2005 அன்று நடைபெற்ற பேரிடர் மேலாண்மை அதிகார குழுக் கூட்ட முடிவின்படி, ஒரு எக்டேருக்கு ரூ.15,000 வீதம் சுனாமியால் பாதிக்கப்பட்ட 8,460.34 எக்டேர் நிலத்தினைச் சீரமைப்பதற்கு அரசு ரூ.1,269.05 இலட்சம் நிவாரண நிதி வழங்கியுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட 5 மாவட்டங்களில், 478 விவசாயிகள் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. மேலும், மண் ஆய்வு மற்றும் வேளாண் அறிவியல் மையம்மூலமாக விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஜிப்சம், பசுந்தாள் உர விதைகள் மற்றும் பயிர்ச் சாகுபடிக்கான விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன. முதலாம் ஆண்டில் (2005–2006) சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் துறைமூலம் இடுபொருட்கள் விநியோகம், பயிற்சி, மண் பரிசோதனை முதலான இனங்களில் ரூ.279.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 3

2006–2007 ஆம் ஆண்டில், மீதித் தொகையான ரூ.989.86 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட செயல்பாடுகளை மேற்கொள்ள பேரிடர் மேலாண்மை அதிகாரக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

1. சுனாமி தாக்குதலுக்குப்பின் பாதிக்கப்பட்ட விவசாயிகள் உடனடியாக மேற்கொண்ட நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு நிவாரண உதவி
2. பொது விழிப்புணர்வு, விவசாயிகளின் திறன் மேம்பாடு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு
3. நிலச் சீர்திருத்தம் மற்றும் மண் வளம் மீட்பு (மண் பரிசோதனை, ஜிப்சம், பசுந்தாள் உர விதை, பயிர் விதைகள் ஆகிய இடுபொருட்கள் விநியோகம், இரண்டு ஆண்டுகளுக்கான காப்பீட்டுத் தவணைத் தொகை)
4. உள்கட்டமைப்பு வசதிகள் (சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள், பண்ணைக் குட்டைகள் ஏற்படுத்துதல் மற்றும் பிவிசி குழாய்கள், சொட்டு நீர்ப்பாசன கருவிகள் அமைத்தல்)
5. வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள்/ஆயில் எஞ்சின்கள் வழங்குதல்.
6. அறிவியல் மற்றும் விரிவாக்க ஆதரவு (விவசாயிகள் பயிற்சி, விவசாயிகள் வயல்வெளிப் பள்ளிகள் அமைத்தல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மை, பின் அறுவடைத் தொழில்நுட்பங்கள், மண் வள அட்டை, மண் மற்றும் நீர் தர ஆய்வு)
7. வரன்முறை மற்றும் மதிப்பீடு (ஆவணங்கள், தகவல் பரிமாற்றம், எரிபொருள், இதர செலவினம், ஒளிப்படத் தொகுப்பு, வரன்முறை மற்றும் மதிப்பீடு)

### 3.4.2. மண் பரிசோதனை நிலையங்கள்

மண் வளத்திற்கு ஏற்ப, ஒவ்வொரு இடத்திற்கும் தகுதியான உரப் பரிந்துரைகளை விவசாயிகளுக்கு வழங்க, 19 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள்மூலம் மண் மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டு



2006 ஆகஸ்ட் 3]

4.46 இலட்சம் மண் மாதிரிகள் மண் பரிசோதனை நிலையங்கள் மூலமும், 1.84 இலட்சம் மண் மாதிரிகள் நடமாடும் மண் ஆய்வுக்கூடங்கள் மூலமும், ஆக மொத்தம் 6.30 இலட்சம் மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு விவசாயிகளுக்கு உரிய பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2006–2007 ஆம் ஆண்டில் மண் பரிசோதனை நிலையங்கள்மூலம் 4.50 இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள்மூலம் 2.00 இலட்சம் மண் மாதிரிகளும், ஆக மொத்தம் 6.50 இலட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. களர்/உவர் நிலங்களுக்கானச் சீர்திருத்த முறைகள், கிராம அளவிலான மண்வள அட்டவணை தயாரித்தல் மற்றும் பாசன நீர்த் தரத்தை அறிதல் போன்ற பணிகளையும் இந்த ஆய்வகங்கள் மேற்கொண்டு, உரிய பரிந்துரைகளை வழங்கி வருகின்றன. கிராம ஏற்புத் திட்டம், மண் பரிசோதனை முகாம் மற்றும் கருத்துக் காட்சிகள்மூலம் மண் மேலாண்மை, உயிர் உரம் மற்றும் நுண்ணூட்டச் சத்து பயன்பாடு போன்ற தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாக்குவதில் நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் சிறந்த விளம்பர சாதனமாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், குடுமியான்மலையில் உள்ள மத்தியக் கட்டுப்பாட்டு ஆய்வகம், வேளாண்மைத் துறையின்கீழ் உள்ள அனைத்து ஆய்வகங்கள் மேற்கொள்ளும் பகுப்பாய்வு முடிவுகளின் துல்லிய தன்மையைக் கண்காணிக்கவும், பரிசோதனைக்கூட அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சி அளித்திடவும் செயல்பட்டு வருகிறது.

### 3.4.3. மண் அளவை மற்றும் நிலப் பயன்பாட்டு அமைப்பு

கள ஆய்வு மற்றும் பரிசோதனைக்கூட ஆய்வுகளின்மூலம் மண்ணின் தன்மை, உருவாக்கவியல், அதன் பௌதீக மற்றும் இரசாயன பண்புகளைக் கண்டறிந்து, மண்ணை வகைப்படுத்தி, நில அமைப்பியலின்படி வரைபடம் தயாரித்து, பல வகைகளிலும் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில், மண் அளவை அமைப்புகள் இயங்கி வருகின்றன.

2006–2007 ஆம் நிதி ஆண்டில், இவ்வமைப்புகள்மூலம் 1.10 இலட்சம் எக்டேர் பரப்பில் விரிவான மண் அளவைப் பணி மேற்கொள்ளப்படும்.

### 3.4.4. களர் மற்றும் உவர் நிலங்கள் சீர்திருத்தம்

நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 500 ஏக்கர் வீதம் 4,000 ஏக்கர் பரப்பில் களர் மற்றும் உவர் நிலங்களைச் சீர்திருத்தம் செய்யும் பணி இத்திட்டம்மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2005–06 ஆம் ஆண்டு 3,336 ஏக்கர் பரப்பில் நிலங்கள் சீர்திருத்தப்பட்டுள்ளன.

2006–07 ஆம் ஆண்டு, 4,000 ஏக்கர் பரப்பில் களர் உவர் நிலங்களை சீர்திருத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மண் பரிசோதனை பரிந்துரைகளின்படி, ஜிப்சம் மற்றும் துத்தநாக சல்பேட் 50 சதவீத மானியத்தில் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், வடிகால் வசதியினை ஏற்படுத்தித் தர, ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.1,000/– மானியமாக வழங்கப்படுகிறது.

### 3.5. பயிர்ப் பாதுகாப்பு

### 3.5.1. பூச்சி நோய்க் கண்காணிப்பு

முறையான பூச்சி கண்காணிப்புப் பணிகள்மூலம் தமிழகத்தில் பூச்சி மற்றும் நோய் நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து வயல்மட்ட விவரங்கள் மாவட்டங்களிலிருந்து தொடர்ந்து சேகரிக்கப்பட்டு, அதனை ஆய்வு செய்து, பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலின் வாய்ப்புகள் குறித்து விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யப்படுகிறது.

### 3.5.2. பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

2005–06 ஆம் ஆண்டு, உணவுப் பயிர்களில் 37.5 இலட்சம் எக்டேர் பரப்பிலும், உணவு அல்லாத பயிர்களில் 18.2 இலட்சம் எக்டேர் பரப்பிலும் மற்றும் விதை நேர்த்தி 22.0 இலட்சம் எக்டேர் பரப்பிலும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, உணவுப் பயிர்களில் 29.29 இலட்சம் எக்டேரிலும், உணவு அல்லாத பயிர்களில் 13.34 இலட்சம் எக்டேரிலும், விதை நேர்த்தி 18.93 இலட்சம் எக்டேரிலும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டம் 2006–07 ஆம் ஆண்டு உணவுப் பயிர்களில் 38 இலட்சம் எக்டேர் பரப்பிலும், உணவு அல்லாத பயிர்களில் 19 இலட்சம் எக்டேர்





பரப்பிலும், விதை நேர்த்தி 23 இலட்சம் எக்டேர் பரப்பிலும் பயிர்ப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து, பயறு மற்றும் மக்காச்சோள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தானிய உற்பத்தித் திட்டம் ஆகிய மத்திய சார்புத் திட்டங்களில் விவசாயிகளுக்கு மானியமாக விநியோகிக்கப்படும் தாவரக் கட்டுப்பாட்டு காரணிகள் மற்றும் உயிரியல் பூச்சிக்கொல்லிகள் ஆகிய இடுபொருட்களைக் கொள்முதல் செய்வதற்கான நிதிச் செலவினம், இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டு, இத்திட்டத்தில் ரூ.113.73 இலட்சம் செலவிடப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டு, இத்திட்டம் ரூ.117.76 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

### 3.5.3. பூச்சி மருந்துப் பரிசோதனை நிலையங்கள்

10,500 தனியார் விற்பனை நிலையங்கள்மூலம் பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. தமிழகத்தில் 138 பூச்சிக்கொல்லி மருந்து உற்பத்தி நிலையங்கள்மூலமும் பூச்சி மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பூச்சி மருந்துகள் அனைத்தும் தனியார் நிறுவனங்களால் மட்டுமே விற்பனை செய்யப்பட்டாலும், தரமான மருந்துகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்யும் பொறுப்பினை வேளாண் துறை ஏற்றுள்ளது. பூச்சிக்கொல்லி மருந்து சட்டம் 1968–ஐ கண்டிப்புடன் செயல்படுத்துவதற்காக, தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களால் பூச்சிக்கொல்லி மருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு, மாநிலத்தில் ஆண்டிற்கு 13,860 மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்டு இயங்கும் 9 பூச்சிமருந்து பரிசோதனை நிலையங்களில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. போலியான மற்றும் தரம் குறைந்த மருந்தினை விற்பனை செய்யும் தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டு 13,963 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 106 மாதிரிகள் தரமற்றவை எனக் கண்டறியப்பட்டு, குற்றத்தின் தன்மைக்கேற்ப, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில், 2006–2007 ஆம் ஆண்டு 14,500 பூச்சி மருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும்.

[2006 ஆகஸ்ட் 3

### 3.5.4. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை – வயல்வெளிப் பள்ளி

ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைத் திட்டங்களை வயல்வெளிப் பள்ளி அணுகுமுறைப்படி செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. வயல்வெளிப் பள்ளி அணுகுமுறை, விவசாயிகளால் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வயல்களில் பயிரைத் தாக்கும் பூச்சி மற்றும் இயற்கை எதிரிப் பூச்சிகள் நிலையினைக் கண்காணித்து, அதற்கேற்ப தடுப்பு முறைகளை மேற்கொள்ள உரிய முடிவெடுக்கும் வகையில், விவசாயிகளுக்கு உரிய பயிற்சியை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பூச்சித் தாக்குதல் மிக அதிக அளவில் பொருளாதார சேத நிலையினைக் கடந்து இருந்தால் மட்டுமே, இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளிப்பது பரிந்துரை செய்யப்படுகிறது. குறைவான அளவில் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தினால், சாகுபடி செலவு குறைவதோடு, சுற்றுப்புறச்சூழல் சீர்கேடு, விளைபொருட்களில் தங்கும் நச்சுத்தன்மை மற்றும் இதர பூச்சிகள் அதிக அளவில் பெருகுதல் போன்ற தீய விளைவுகளும் வெகுவாகக் குறைகின்றன. ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பயறு வகைகள், மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் மற்றும் தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் போன்ற மத்திய சார்புத் திட்டங்கள்மூலம் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு பிரபலப்படுத்தப்படுகின்றன. 2005–2006 ஆம் ஆண்டு பல்வேறு மத்திய சார்புத் திட்டங்களின்மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைத் திட்டங்கள் மற்றும் 2006–2007 ஆம் ஆண்டிற்கான இலக்கு பின்வருமாறு:–

(அலகு எண்கள்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 2005–2006 இலக்கு | 2005–2006 சாதனை | 2006–2007 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | தானிய மேம்பாட்டுத் திட்டம் – அரிசி | 332 | 320 | 417 |
| 2. | தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் | 600 | 600 | 400 |
| 3. | எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச்சோளத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம் (ஐசோபாம்) | | | |
| | மக்காச்சோளம் | 24 | 24 | 24 |
| | எண்ணெய் வித்துக்கள் | 66 | 66 | 70 |
| | பயறு வகைகள் | 51 | 51 | 55 |



2006 ஆகஸ்ட் 3]

### 3.5.5. உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மையம் மற்றும் மாநில ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையம்

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு திட்ட நடவடிக்கைகளை வலுப்படுத்தவும், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளைப் பயன்படுத்தி, பயிரைத் தாக்கும் பல்வேறு பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், மாநிலத்தில் வேளாண் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 62 உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மையங்களில் டிரைகோடெர்மா விரிடி, என்.பி. வைரஸ், சூடோமோனாஸ் ப்ளூரோசன்ஸ் போன்ற உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் பூச்சி உண்ணிகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

2005–2006 ஆம் ஆண்டு அடையப்பெற்ற சாதனை மற்றும் 2006–2007 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட இலக்கு விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள்/ பூச்சிகள் | மையங்களின் எண்ணிக்கை | சாதனை 2005–2006 (எக்டேர்) | 2006–2007 ஆம் ஆண்டுக்கான திட்டம் (எக்டேர்) |
|---|---|---|---|---|
| 1 | டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் (கரும்பு இடைக்கணுப்புழு) | 21 | 10,500 | 11,000 |
| 2 | பெத்திலிட், பிரகோனிட்ஸ் யூலோபிட்ஸ் (தென்னை கருந்தலைப்புழு) | 20 | 10,250 | 10,500 |
| 3 | என்.பி.வி (பருத்தி காய்ப்புழு) | 3 | 1,500 | 2,000 |
| 4 | என்.பி.வி (மணிலா சிகப்பு கம்பளிப்புழு மற்றும் புரோடீனியா) | 4 | 480 | 600 |
| 5 | பச்சை மஸ்கார்டைன் பூஞ்சாண குப்பிகள் (தென்னை காண்டாமிருகவண்டு) | 2 | 10,000 | 11,000 |
| 6 | தாவர பூச்சிக்கொல்லி, என்.பி.வி. மற்றும் டிரைகோகிரம்மா கைலோனிஸ் (பருத்தி, நெல், பயறு வகைகள், மணிலா) | 12 | 60,000 | 62,000 |

[2006 ஆகஸ்ட் 3

### 3.6. தென்னை மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தென்னை சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், மகசூல் தராத வயதான மரங்களை அகற்றி மீண்டும் நடுவதற்கும் தேவையான, நெட்டை மற்றும் வீரிய ஒட்டு ரகங்களான நெட்டைxகுட்டை மற்றும் குட்டைxநெட்டை தென்னங்கன்றுகள், மாநிலத்திலுள்ள 22 தென்னை நாற்றுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. நெட்டை தென்னங்கன்றுகள் கன்று ஒன்றுக்கு ரூ. 12 வீதமும், நெட்டை x குட்டை ஒட்டுக் கன்றுகள், கன்று ஒன்றுக்கு ரூ. 20 வீதமும், குட்டை x நெட்டை ஒட்டுக் கன்றுகள், கன்று ஒன்றுக்கு ரூ. 75 வீதமும் விநியோகிக்கப்படுகின்றன. ஒட்டு தென்னங்கன்றுகளுக்கு விவசாயிகளிடையே அதிக வரவேற்பு இருப்பதால், 2006–2007 ஆம் ஆண்டில், இலக்கு கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டின் செயல்பாடு மற்றும் 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்டம் பின்வருமாறு:–

(இலட்சம் எண்களில்)

| வ. எண் | இரகங்கள்/ வீரிய ஒட்டு | 2005–2006 | | 2006–07ஆம் ஆண்டுக்கான திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | நெற்றுக்கள் கொள்முதல் | கன்றுகள் கொள்முதல் | நெற்றுக்கள் விநியோகம் | கன்றுகள் விநியோகம் |
| 1. | நெட்டை | 4.692 | 5.486 | 8.55 | 6.41 |
| 2. | நெட்டை X குட்டை | 4.333 | 2.482 | 6.00 | 4.10 |
| 3. | குட்டை X நெட்டை | 0.287 | 0.071 | 1.00 | 0.30 |
| | மொத்தம் | 9.312 | 8.039 | 15.55 | 10.81 |

### 3.7. பருத்தி மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்தில் பருத்தி சாகுபடியின் இயல்பான பரப்பு சுமார் 1.50 இலட்சம் எக்டேராகக் குறைந்துள்ளது. தற்போது, 2 முதல் 3 இலட்சம் பொதிகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. நமது மாநிலத்தின் தேவையான 55 முதல் 60 இலட்சம் பொதிகள் பருத்திக்குப் பதிலாக 5 சதம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் உள்ளூர் சந்தை



2006 ஆகஸ்ட் 3]

தேவைக்கும் உற்பத்திக்கும் இடையில் பெரும் இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, விரிவாக்கப் பணிகளைத் தீவிரப்படுத்துவதன்மூலமும், தரமான இடுபொருட்களை வழங்குவதன்மூலமும் பருத்திச் சாகுபடிப் பரப்பினை உயர்த்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இறவை மற்றும் நெல் தரிசு நிலங்களில், பருத்தியின் பரப்பளவை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. 2005–2006 ஆம் ஆண்டு 1.41 இலட்சம் எக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டு 2.00 இலட்சம் எக்டேர் பரப்பில் பருத்தி சாகுபடி செய்யவும், 3.80 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்வதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பருத்தி மேம்பாட்டிற்கான கீழ்க்கண்ட திட்டங்களை வேளாண்மைத் துறை தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறது:—

#### 3.7.1. என்.பி.வி. உற்பத்திக்கான மாநிலத் திட்டம்

பருத்தியைத் தாக்கும் முக்கிய பூச்சியான புரோடினியா புழுவினை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் என்.பி.வி.-யை உற்பத்தி செய்து, விநியோகம் செய்யும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் மேலூர், விழுப்புரம் மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் ஆகிய 3 என்.பி.வி. உற்பத்தி மையங்களில் என்.பி.வி உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒரு எக்டேர் பரப்புக்கு என்.பி.வைரஸ் வெளியிட ரூ.53 வீதம் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும்.

2005–2006 ஆம் ஆண்டின் செயல்பாடு மற்றும் 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்டம் பின்வருமாறு:–

| வ. எண். | இனம் | 2005–2006 ஆம் ஆண்டின் செயல்பாடு | 2006–2007ஆம் ஆண்டுக்கான திட்டம் |
|---|---|---|---|
| 1. | என்.பி.வி. உற்பத்தி (எக்டேர்) | 1,500 | 2,000 |
| 2. | நிதி (இலட்சம் ரூபாயில்) | 0.58 | 0.79 |

#### 3.7.2. பருத்தியில் ஒப்பந்தப் பண்ணை முறை

தமிழ்நாட்டில் பருத்தித் தேவை அதிகமாக இருப்பதால், விற்பனைக்கு உறுதி வழங்கி விவசாயிகளை ஒருங்கிணைத்து, விவசாயிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில்,

[2006 ஆகஸ்ட் 3

ஒப்பந்தப் பண்ணைய சாகுபடி முறையை வேளாண்மைத் துறைமூலம் தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது.

ஒப்பந்தப் பண்ணைய முறையில், சந்தை ஏற்பாடு, இடுபொருட்கள், தொழில்நுட்ப உதவி, நிதி உதவி, உற்பத்தி மேலாண்மை, காப்பீடு முதலான பல்வகைப்பட்ட உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பொள்ளாச்சியில் உள்ள அப்பாச்சி பருத்தி நிறுவனம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள சூப்பர் ஸ்பின்னிங் ஆலை லிமிடெட் போன்ற தனியார் நிறுவனங்களால், ஒப்பந்தப் பண்ணைய முறை உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இடுபொருள் விநியோகம், காப்பீடு உதவிகள், பயிர்க்கடன் போன்ற உதவியோடு விளைப்பொருட்களை வாங்கிக்கொள்ளும் உத்தரவாதத்தினையும் விவசாயிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் வழங்குகின்றன.

2006–2007 ஆம் ஆண்டு பருத்தி ஒப்பந்தப் பண்ணைய சாகுபடித் திட்டம் முனைப்புடன் மேற்கொள்ளப்படும்.

### 3.8. மக்காச்சோளம், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களில் ஒப்பந்தப் பண்ணைய முறை

மக்காச்சோளம், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் போன்ற குறைந்த நீரில் அதிக வருவாய் தரக்கூடிய பயிர்களின் சாகுபடியை மேம்படுத்த, 2005–2006 ஆம் ஆண்டில், ஒப்பந்தப் பண்ணை முறை நாஃபெட் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில், 401.5 மெ.டன். மக்காச்சோளம் நாஃபெட் நிறுவனம்மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும், பயறு வகைகள் மற்றும் நிலக்கடலைப் பயிர்களில் ஒப்பந்தப் பண்ணை சாகுபடி மேற்கொள்ளப்பட்ட போதிலும், உள்ளூர் சந்தை விலை அதிகமாக இருந்ததால் கொள்முதல் செய்யப்படவில்லை.

2006–2007 ஆம் ஆண்டு, 10,000 மெ.டன்கள் மக்காச்சோளம், 2,000 மெ.டன்கள் நிலக்கடலை மற்றும் 5,000 மெ.டன்கள் பயறு வகைகள் நாஃபெட் நிறுவனத்துடன் இணைந்து ஒப்பந்தப் பண்ணை சாகுபடிமூலம் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளிடமிருந்து விளை பொருட்களைக் கொள்முதல் செய்து நாஃபெட் நிறுவனத்திற்கு வழங்கும் பணிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.



2006 ஆகஸ்ட் 3]

### 3.9. கரும்பு

கடந்த பல வருடங்களாக கரும்பு உற்பத்தித் திறனில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. சுமார் 2.75 இலட்சம் எக்டேர் முதல் 3 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இது மாநிலத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 2 விழுக்காடாக உள்ளது.

### 3.9.1. தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளின் செயல்பாடு

தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. தற்போது 35 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இதில் நட்டத்தில் இயங்கி வந்த மூன்று சர்க்கரை ஆலைகள், அதாவது மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, மதுரா சர்க்கரை ஆலை மற்றும் அருணாசலம் சர்க்கரை ஆலைகள் தற்போது இயங்கவில்லை. 2005–2006 ஆம் பிரதம அரவைப் பருவத்தில் (2005 அக்டோபர் முதல் 2006 மே மாதம் வரை) தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலைகளிலும் 164.50 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்யப்பட்டு, சராசரி 9.45 சதவிகித சர்க்கரை கட்டுமானத்துடன் 15.55 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டுக்கான பிரதம மற்றும் சிறப்புப் பட்டம் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) அரவைப் பருவத்தில் தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 210 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்து, 9.20% சர்க்கரை கட்டுமானத்துடன் 19.32 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.9.2. கரும்பு விலை நிர்ணயித்தல்:

மத்திய அரசு 2005–2006 ஆம் அரவைப் பருவத்திற்கு 9 சதவீத சராசரி சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலை ரூ. 795.00 எனவும், ஒவ்வொரு 0.1 சதவீத கூடுதல் கட்டுமானத்திற்கும் டன் ஒன்றிற்கு ரூ.8.80 ஊக்கத் தொகை எனவும் அறிவித்துள்ளது. 2005–2006 ஆம் அரவைப் பருவத்திற்கு 9 சதவீத சராசரி சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பிற்கு மாநில அரசு பரிந்துரை விலையாக டன் ஒன்றுக்கு ரூ.1,014 எனவும், ஒவ்வொரு 0.1 சதவீத கூடுதல் கட்டுமானத்திற்கும், டன் ஒன்றுக்கு ஊக்கத் தொகை ரூ.8.80 எனவும் அறிவித்துள்ளது.

[2006 ஆகஸ்ட் 3

### 3.9.3. அதிக சர்க்கரைச் சத்து தரும் கரும்பு இரகங்களை ஊக்குவித்தல்

சராசரி சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்தும் பொருட்டு, அதிக சர்க்கரை சத்து இரகங்களான கோ. 86032, கோ.உ.92102, கோ.உ.94101 ஆகிய இரகங்கள் ஒவ்வொரு பருவத்திலும் 85–90 சதவிகிதம் அளவிற்கு நடவு செய்யப்பட்டு வருகிறது. இதனால் கரும்பு விவசாயிகள் அதிக வருமானம் பெறுவதோடு, சர்க்கரை ஆலைகளின் நட்டம் குறைந்து ஆலைகள் இலாபத்தில் இயங்க வாய்ப்புள்ளது. மேலும், செவ்வழுகல் நோய் எதிர்ப்பு சக்தி உள்ள புதிய ரகம் கோ.க.23 வெளியிடப்பட்டு, தற்போது 200 எக்டேர் பரப்பில் நாற்றங்கால் சாகுபடி செய்யப்பட்டு, 2006–2007 பருவத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யத் தயாராக உள்ளது.

### 3.9.4. சொட்டு நீர்ப்பாசனம்

நடப்பு ஆண்டில் கரும்பில் சொட்டு நீர்ப்பாசன முறையை அதிக அளவில் விவசாயிகள் பயன்படுத்திப் பயன்பெறும் வகையிலும், இம்முறையை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையிலும், அரசு மானியமாக சொட்டு நீர்ப்பாசனத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 2006–07 ஆம் ஆண்டில் 15,000 எக்டேர் பரப்பில் ரூபாய் 84.00 கோடி திட்ட அளவில் 50 சதம் மானியத்தில் சொட்டு நீர்ப்பாசன வயல்கள் அமைக்கப்படவுள்ளது. எக்டேர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.28,000 மானியமாக வழங்கப்படும். இதன்மூலம் 15,000 கரும்பு விவசாயிகள் பயன் அடைவார்கள். மேலும், 8.5 எக்டேரில் மாதிரி வயல்கள் ஆலைகளின் கரும்புப் பண்ணைகளில் அமைக்கப்பட்டு கரும்பு விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படும்.

### 3.9.5. ஒருங்கிணைந்த கரும்பு அபிவிருத்தித் திட்டம் – ஒட்டுண்ணி வெளியிடுதல்

கரும்பில் இடைக்கணு புழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்த மாநிலத்தில் இயங்கி வரும் 21 ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்களில் டிரைகோகிராமா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணி உற்பத்திச் செய்யப்பட்டு, கரும்புப் பயிர் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் வெளியிடப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 3]

2005–2006 ஆம் ஆண்டு திட்ட செயல்பாடு மற்றும் 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்டம் பின்வருமாறு:—

| வ எண். | திட்டத்தின் பெயர் | 2005–2006 ஆம் ஆண்டுக்கான திட்டச் செயல்பாடு | 2006–2007 ஆம் ஆண்டுக்கான திட்டம் |
|---|---|---|---|
| 1. | ஒட்டுண்ணி வெளியிடும் பரப்பு (எக்டேரில்) | 10,500 | 11,000 |
| 2. | நிதி (இலட்சம் ரூபாயில்) | 3.929 | 4.234 |

### 3.10. தமிழகத்தில் காட்டாமணக்கு சாகுபடியை மேம்படுத்துதல்

### 3.10.1. தரமான காட்டாமணக்கு தாய்த் தோப்பு உருவாக்குதல்

கிராமப்புற வறுமையினைப் போக்குவதற்காக, தமிழகத்தில் காட்டாமணக்கு சாகுபடி பிரபலப்படுத்தப்படுகிறது. நல்ல, தரமான விதை கிடைப்பதில் இடர்ப்பாடுகள் இருப்பதால், 2005–2006 ஆம் ஆண்டு, தரமான காட்டாமணக்கு தாய்த்தோப்பு உருவாக்கும் திட்டம் ஒன்று மத்திய அரசின் தேசிய எண்ணெய் வித்து மற்றும் தாவர எண்ணெய் மேம்பாட்டு வாரியத்தின் 100 சத நிதி உதவியுடன் ரூ.75 இலட்சம் செலவில் வேளாண்மைத் துறையினால் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில், தமிழகத்தில் உள்ள அண்ணா பண்ணை, வம்பன், வெள்ளாளவிடுதி, நெய்வேலி, எட்டாங்குளம், இருவேல்பட்டு, காக்குப்பம், வானூர், டானிஷ்பட்டு, பாப்பாரப்பட்டி, சாக்கோட்டை மற்றும் இனுங்கூர் ஆகிய 12 அரசு விதைப் பண்ணைகள் மற்றும் தென்னை நாற்றுப் பண்ணைகளில் 300 எக்டேர் பரப்பளவில் தரமான காட்டாமணக்கு தாய்த் தோப்பினை அமைக்கத் திட்டமிடப்பட்டு, 260 எக்டேர் பரப்பளவில் ரூ.47.66 இலட்சம் செலவில் தாய்த் தோப்பு உருவாக்கப்பட்டது.

2006–2007 ஆம் ஆண்டு மீதமுள்ள 40 எக்டேர் பரப்பளவில், காட்டாமணக்கு தாய்த் தோப்பு அமைக்கப்படும். மேலும், 2006–2007 ஆம் ஆண்டு, 300 எக்டேர் பரப்பில் உள்ள காட்டாமணக்கு தாய்த் தோப்பினைப் பராமரிப்பு செய்வதற்காக ஒரு எக்டேருக்கு ரூ.2500 வீதம் ரூ.7.5 இலட்சம் நிதி வழங்க, தேசிய எண்ணெய் வித்து மற்றும் தாவர எண்ணெய் மேம்பாட்டு வாரியம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

### 3.10.2. அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களின்மூலம் சாகுபடி பரப்பு விரிவாக்கம்

காட்டாமணக்கு சாகுபடியில் ஒப்பந்தப் பண்ணையம் மற்றும் எண்ணெய் பிழியும் ஆலை நிறுவுவதற்காக, மோகன் புரூவரிஸ் மற்றும் டிஸ்டில்லரிஸ் லிமிடெட், சிவா டிஸ்டில்லரிஸ் லிமிடெட், தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் மற்றும் ரிவர்வே அக்ரோ புராடக்ஸ் லிமிடெட் ஆகிய 4 தனியார் நிறுவனங்கள் தெரிவித்த விருப்பத்தின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. இதுவரை, இந்த தனியார் நிறுவனங்களின்மூலம் ஒப்பந்தப் பண்ணைய முறையின்கீழ், 5481.8 எக்டேரில் காட்டாமணக்குச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட நிறுவனங்கள் தவிர, இதர தனியார் நிறுவனதாரர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் முன்னோடி விவசாயிகள்மூலம் சுமார் 9500 எக்டேர் பரப்பில் காட்டாமணக்குச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2006–2007 ஆம் ஆண்டு காட்டாமணக்குச் சாகுபடிப் பரப்பினை விரிவுபடுத்தவும், தாவர எரிபொருள் உற்பத்தியை மேற்கொள்ளவும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

- தனியார் நிறுவனங்கள்மூலம் 32,000 எக்டேர் பரப்பில் காட்டாமணக்குச் சாகுபடி மேற்கொள்ளப்படும்.
- சிவா டிஸ்டிலரீஸ் நிறுவனத்தின் தாவர எரிபொருள் எண்ணெய் பிழியும் ஆலை செப்டம்பர், 2006–லும், மோகன் ப்ரூவரீஸ் நிறுவனம்மூலம் அமைக்கப்பட உள்ள ஆலை டிசம்பர், 2006–லும், வணிகரீதியாக உற்பத்தியைத் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறைமூலம் தரமான காட்டாமணக்கு விதைகள்/ கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

### 3.11. வேளாண்மைக்கென ஒரு வலைதளம் உருவாக்குதல்

விவசாயிகளுக்குத் தகவல் மற்றும் தொடர்பு வசதிகளை மேம்படுத்தி பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள், இடுபொருள் இருப்பு, விளைபொருட்களின் விலை, சந்தை நிலவரம் மற்றும் பல்வேறு திட்டங்களில் வழங்கப்படும் உதவிகள் பற்றிய தகவல்களை



விவசாயிகளுக்கு வழங்குவதற்காக வேளாண்மைக்கு என ஒரு தனி வலைதளம் ரூ.5.00 இலட்சம் செலவில் www.tnagriculture.gov.in என்ற முகவரியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

### 3.12. சர்வதேச அளவில் விளைபொருட்களின் விற்பனைத் திறன் குறித்த ஆய்வு

ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள பயிர்கள் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு வழிகாட்டுவதற்காக "சர்வதேச அளவில் விளைபொருட்களின் விற்பனைத் திறன் குறித்த ஆய்வு" மேற்கொள்ள, 2005–2006 ஆம் ஆண்டு, பகுதி 2 திட்டத்தின்கீழ், ரூ.10.00 இலட்சம் செலவில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் பரிந்துரை அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, வேளாண் விளைபொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்த உரிய அணுகுமுறைகள் 2006–2007 ஆம் ஆண்டில் வகுக்கப்படும்.

### 3.13. மாநில வேளாண் மேலாண்மைப் பயிற்சி நிலையம் (ஸ்டாமின்)

வேளாண் துறை, சகோதர துறைகள், மாணவர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்குத் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் மேலாண்மைத் திறன் தொடர்பான புத்தாட்டப் பயிற்சிகள் அளிக்கும் நோக்கத்துடன், குடுமியான்மலையில் மாநில வேளாண் மேலாண்மைப் பயிற்சி நிலையம் (ஸ்டாமின்) செயல்பட்டு வருகிறது.

2006–2007 ஆம் ஆண்டில் அளிக்கப்பட உள்ள பயிற்சிகளின் விவரம் பின்வருமாறு:

(எண்கள்)

| வ. எண். | பயிற்சி விவரம் | பயிற்சிபெறும் அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அலுவலக நிர்வாகப் பயிற்சி | 240 |
| 2. | அலுவலக மேலாண்மைப் பயிற்சி | 180 |
| 3. | கணினிப் பயிற்சி | 60 |
| | மொத்தம் | 480 |
| | நிதி (இலட்சம் ரூபாயில்) | 2.25 |

[2006 ஆகஸ்ட் 3

### 3.14. உழவர் பயிற்சி மையம்

மாற்றுப் பயிர் சாகுபடி உத்திகள், ஒருங்கிணைந்த மண், நீர், பூச்சி நோய் மற்றும் ஊட்டச்சத்துக்கள் நிர்வாகம், அதிக விலை கிடைக்கும் வகையில் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல் ஆகியவை அண்மையில் உருவாக்கப்பட்ட மேம்பாட்டுச் செயல்பாடுகளாகும் என்பதோடு, இவை ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ப மேற்கொள்ள சரியான முடிவு எடுக்கும் திறன் அவசியமாகிறது. எனவே, விவசாயிகளிடையே தொழில்நுட்பத்திறன் மற்றும் முடிவு எடுக்கும் திறனை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, காஞ்சிபுரம், திண்டிவனம், வேலூர், சேலம், தருமபுரி, ஈரோடு, லால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை, நாகர்கோவில், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 22 மாவட்டங்களிலும், வேளாண்மை உழவர் பயிற்சி நிலையங்களும், உதக மண்டலத்தில் தோட்டக்கலைக்கென ஒரு உழவர் பயிற்சி நிலையமும், ஆக மொத்தம் 23 மாவட்டங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2005–06 ஆம் ஆண்டின் செயல்பாடு மற்றும் 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்டம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | அலகு | 2005–2006 ஆம் ஆண்டுக்கான திட்டச் செயல்பாடு | 2006–2007ஆம் ஆண்டுக்கான திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | கிராம அடிப்படையில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான பயிற்சி | எண்கள் | 153 | 223 |
| 2. | உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கான கிராம அடிப்படைப் பயிற்சி | எண்கள் | 60 | 100 |
| 3. | வயல் விளக்கங்கள் | எண்கள் | 660 | 1100 |
| 4. | செயல் விளக்கங்கள் | எண்கள் | 296 | 440 |



2006 ஆகஸ்ட் 3]

### 3.15. பயிர் விளைச்சல் போட்டி

நெல், மணிலா, சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, உற்பத்தித் திறனை உயர்த்துவதில், விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

உற்பத்தித் திறனில் அதிக அளவில் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை விவரம் பின்வருமாறு:

(ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் இடம் | இரண்டாம் இடம் | முதல் இடம் | இரண்டாம் இடம் |
| நெல் மற்றும் மணிலா | 25000 | 15000 | 8000 | 4000 |
| பிற பயிர்கள் | 8000 | 4000 | 4000 | 2000 |

நெல் மற்றும் மணிலாப் பயிர்களுக்கு, மாநில அளவிலான போட்டிக்கான நுழைவுக் கட்டணம் ரூ.100 ஆகவும், பிற பயிர்களுக்கு ரூ.50 ஆகவும், நெல் மற்றும் மணிலாப் பயிர்களுக்கு, மாவட்ட அளவிலான போட்டி நுழைவுக் கட்டணம் ரூ.50 ஆகவும், பிற பயிர்களுக்கு ரூ. 25 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டு, இத்திட்டத்தின்கீழ் ரூ.13.66 இலட்சம் செலவிடப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.15.26 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 3.16. மானாவாரிப் பயிர்களின் உற்பத்தித் திறனை நிலைத்து மேம்படுத்த மானாவாரிப் பண்ணைய குழுமத் திட்டம்

தமிழக சாகுபடிப் பரப்பில் சுமார் 52 விழுக்காடு மானாவாரியாகப் பயிரிடப்படுகிறது. இவற்றின் உற்பத்தித் திறன், எதிர்பார்ப்புக்கேற்ற வகையில் அதிகரிக்கவில்லை. எனவே, பன்னாட்டு ஆராய்ச்சி மையத்தின் (ICRISAT) நீர்ப்பிடிப்பு மற்றும் மானாவாரி தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்துப் பின்பற்றுவதன்மூலம், உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க மானாவாரி

[2006 ஆகஸ்ட் 3

சாகுபடியில் குழும அணுகுமுறை துவங்கப்பட்டுள்ளது. இதன் நோக்கங்கள் பின்வருமாறு:—

- பயிர் உற்பத்தித் திறனை அதிகரித்தல் (ஒரு எக்டேருக்கு ஒரு டன் என்ற தற்போதைய நிலையிலிருந்து, எக்டேருக்கு 2 டன் என்ற நிலைக்கு)
- ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு அணுகுமுறையினைப் பின்பற்றி, உரிய மழை நீர் சேகரிப்பு முறைகளின்மூலம் நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்துதல். (நிலத்தடி நீர்மட்டத்தினை 400 அடி ஆழத்திலிருந்து 150 அடி என்ற அளவிற்கு உயர்த்துதல்)
- மண் அரிமானத்தைக் குறைத்தல் (ஆண்டுக்கு 15 டன்னிலிருந்து 1.5 டன்னுக்கு)
- பயிர் மாற்றுத் திட்டம், பயறு வகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள் மற்றும் பசுந்தாளுரப் பயிர்களை பயிர்சுழற்சி முறையில் பயிரிடுதல் ஆகியவைமூலம் மண் வளத்தினை அதிகரித்தல்
- கால்நடை/ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, உள்நாட்டு மீன்வளர்ப்பு, இயற்கை முறையில் நிலப் போர்வையிடல் (Organic mulch) போன்றவற்றை மேம்படுத்தி, இயற்கை கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்காக கலப்பின பண்ணையத்தினைக் கடைப்பிடித்தல்.
- பண்ணைக் குடும்பங்கள் மற்றும் நிலமில்லா வேளாண் தொழிலாளர்களுக்கு பண்ணை அல்லாத வேறு தொழிலிலிருந்து கிடைக்கும் வருவாய்மூலம் வேலைவாய்ப்பினை அதிகரித்தல்.

மேற்கண்ட குறிக்கோளின்படி, பன்னாட்டு ஆராய்ச்சி மைய (ICRISAT) நீர்ப்பிடிப்புத் திட்டத்தினை, 2006-இல் தொடங்கி, 2010 ஆம் ஆண்டுக்குள் படிப்படியாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் பின்வரும் நான்கு உபதிட்டங்கள் அடங்கும்.

**(அ) நீர்ப் பாதுகாப்பு செயல் விளக்கப் பூங்கா**

புதுக்கோட்டை மாவட்டம் அண்ணா பண்ணையில் மாதிரி நீர்ப் பாதுகாப்பு செயல் விளக்கப் பூங்கா ரூ.1.20 கோடி செலவில் பன்னாட்டு ஆராய்ச்சி மைய (ICRISAT) உதவியுடன் 2006 ஆம் ஆண்டு தொடங்கி இரண்டு ஆண்டுகளில் நிறுவப்படும்.



2006 ஆகஸ்ட் 3]

**(ஆ) தலைமைப் பயிற்சி நிலையம் அமைத்தல்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது இயங்கி வரும் "ஸ்டாமின்" பயிற்சி நிலையம், மானாவாரி பகுதிக்கான, தலைமைப் பயிற்சி நிலையமாக மேம்படுத்தப்படும். மானாவாரி பயிர்களுக்கான பன்னாட்டு ஆராய்ச்சி மையத்துடன் (ICRISAT) இணைந்து, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் அனைத்து கிராமங்களையும் தகவல் தொழில்நுட்பம்மூலம் இணைப்பதற்கு முக்கியத்துவம் தருவதோடு, பயிற்சியும் வழங்கப்படும்.

**(இ) பயிற்சி அளித்தல்**

மானாவாரி சாகுபடி பங்கேற்பாளர்கள் மற்றும் கொள்கையினை உருவாக்குபவர்களுக்கு பன்னாட்டு ஆராய்ச்சி மையத்திலும் (ICRISAT), மாநில மானாவாரி பகுதிக்கான தலைமைப் பயிற்சி நிலையத்திலும் 80 இலட்ச ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

**(ஈ) மானாவாரி நீர்பிடிப்பு மையங்களை மேம்படுத்துதல்**

முதல் கட்டமாக 2006–2007ஆம் ஆண்டில், 9 முதல் 12 முக்கிய நீர்ப்பிடிப்பு பகுதிகளும், 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து 2010-க்குள் 2.00 இலட்சம் எக்டேர் பரப்பிலிருந்து 4.00 இலட்சம் எக்டேர் பரப்பில் 36-லிருந்து 48 மாதிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளும் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தில் நீர்ப்பிடிப்புப் அணுகுமுறையினை பின்பற்றி, இதர பகுதிகளிலும் படிப்படியாக இத்திட்டச்செயல்பாடுகள் விரிவுபடுத்தப்படும்.

மானாவாரி பகுதிகளுக்கான மத்திய ஆராய்ச்சி மையம் (CRIDA) மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்ற குழு பங்கேற்பாளர்களை, தமிழ்நாடு நீர்ப்பிடிப்பு மேம்பாட்டு முகமைமூலம் ஒருங்கிணைத்து, மானாவாரி பயிர்களுக்கான பன்னாட்டு ஆராய்ச்சி மையத்தின் (ICRISAT) தலைமையில் ஒரு தொகுப்பு அமைப்பு (Consortium) ஏற்படுத்தப்பட்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான நிதி உதவி பல்வேறு மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து பெறப்படும். இத்திட்டத்தின் முன்னேற்றத்தினை மேற்பார்வையிட, பல்வேறு துறைகளை உள்ளடக்கிய ஓர் உயர்மட்டக் குழு, அரசினால் அமைக்கப்படும்.

## 4. மத்திய – மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 4.1. பேரியல் மேலாண்மைத் திட்டம்

உற்பத்தித் திறனையும், விவசாயிகளின் பொருளாதார நிலைமையினையும் உயர்த்துவதற்கு முன்னுரிமை அளித்து, ஒவ்வொரு மாநிலத்தின் தேவைக்கேற்ப மாநில அரசுகள் திட்டத்தினை வகுத்துக்கொள்ளும் வகையில், பேரியல் மேலாண்மைத் திட்டத்தை மத்திய அரசு 2000 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அறிமுகப்படுத்தியது.

இத்திட்டங்களின் செலவினங்களை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 90:10 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. மத்திய அரசின் 90 விழுக்காடு நிதிப் பங்கீட்டில் 80 விழுக்காடு மானிய உதவியாகவும், 20 விழுக்காடு மாநில அரசுக்குக் கடனாகவும் வழங்கப்படுகின்றது. பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் வேளாண்மைத் துறைமூலம் செயல்படுத்தப்படும் திட்ட விவரங்கள் வருமாறு:

### 4.1.1. தானிய மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் நெல் முக்கியமாகப் பயிரிடப்படும் பகுதிகளில், பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தானிய உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நெல் மற்றும் சிறுதானியப் பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தும் முக்கிய இடுபொருட்கள் இத்திட்டத்தில் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

2005–2006 ஆம் ஆண்டு இன வாரியான திட்ட செயல்பாட்டு விவரமும், 2006–2007 ஆம் ஆண்டு திட்டமும் பின்வருமாறு::–

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | இனங்கள் | அலகு | 2005–2006 | | | | 2006–2007 ஆண்டிற்கான திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | பொருள் | நிதி |
| 1 | சான்று பெற்ற நெல் விதை விநியோகம் (கிலோவிற்கு ரூ.2 வீதம்) | மெ. டன் | 9500 | 9582 | 190.00 | 191.794 | 15000 | 300.00 |





| வ. எண். | இனங்கள் | அலகு | 2005–2006 | | | | 2006–2007 ஆண்டிற்கான திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | பொருள் | நிதி |
| 2 | சான்று பெற்ற சிறு தானிய விதை விநியோகம் (கிலோவிற்கு ரூ.4 வீதம்) | மெ. டன் | 400 | 369.5 | 8.00 | 8.198 | 400 | 16.00 |
| 3 | திருந்திய நெல் சாகுபடி விளக்கத் திடல்கள் | எண் | 2415 | 2412 | 48.30 | 47.943 | 3500 | 70.00 |
| 4 | வீரிய சிறு தானிய பயிர்கள்செயல் விளக்கம் (ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ.1000 வீதம்) | எண் | .. | .. | .. | .. | 1000 | 10.00 |
| 5 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல் விளக்கம் மற்றும் பயிற்சி (ஒன்றுக்கு ரூ. 17,000 வீதம்) | எண் | 332 | 320 | 56.44 | 54.219 | 417 | 70.89 |
| 6 | கிராமப் பஞ்சாயத்துக் களுக்கு உற்பத்தித் திறன் பரிசு நெல் சிறுதானியங்கள் | எண் | 28<br>22 | 28<br>22 | 15.40<br>12.05 | 15.20<br>12.10 | | |
| 7 | விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி பற்றிய பயிற்சி (பயிற்சி ஒன்றுக்கு ரூ.5,000 வீதம்) | எண் | .. | .. | .. | .. | 600 | 30.00 |

| வ. எண். | இனங்கள் | அலகு | 2005–2006 | | | | 2006–2007 ஆண்டிற்கான திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | பொருள் | நிதி |
| 8 | விவசாயத் தொழிலாளர் களுக்குப் பயிற்சி ஒரு நபருக்கு ரூ.80 வீதம் | எண் | .. | .. | .. | .. | 62500 | 50.00 |
| 9 | உற்பத்தித் தொழில்நுட்ப செய்முறை செயல் விளக்கம் (எக்டேருக்கு ரூ.2,500 வீதம்) | எண் | 2000 | 2000 | 30.00 | 29.995 | .. | .. |
| 10 | முன்பருவ முகாம்/ கருத்தரங்குகள்/ விளம்பரம் | எண் | 16700 | 16688 | 101.192 | 101.169 | 17000 | 88.00 |
| 11 | இதர செலவினங்கள்/ எரிபொருள் செலவினம் | | .. | .. | 8.40 | 8.399 | 28 | 8.40 |
| 12 | புதிய திட்டங்கள் | | | | | | | |
| (அ) | உயிர் உர விநியோகம் (எக்டேருக்கு 25 பாக்கெட்டுகள் 25% மானிய விலையில்) | எக் | .. | .. | .. | .. | 50000 | 18.75 |



| வ. எண். | இனங்கள் | அலகு | 2005–2006 | | | | 2006–2007 ஆண்டிற்கான திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | பொருள் | நிதி |
| (ஆ) | நுண்ணூட்டக் கலவை விநியோகம் (எக்டேருக்கு 12.5 கிலோ 25% மானிய விலையில்) | எக் | .. | .. | .. | .. | 10000 | 4.00 |
| (இ) | நெல் வயல் வரப்புகளில் பசுந்தாளுரம் மற்றும் பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்தல் (ஒரு எக்டேருக்கு ரூ.50 வீதம்) | எக் | .. | .. | .. | .. | 50000 | 25.00 |
| | மொத்தம் | | | | 469.832 | 468.967 | | 691.040 |

**4.1.2. பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படும் கரும்பு அபிவிருத்தித் திட்டம்**

2000–2001 ஆம் ஆண்டிலிருந்து கரும்பு அபிவிருத்தித் திட்டம் (SUBACS), பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் இராமநாதபுரம், நீலகிரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்கள் தவிர, ஏனைய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. 2006–2007 ஆம் ஆண்டு, கரும்பு உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன், கரும்பில் இடைக்கணுப் புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி வெளியிடுதல், விவசாயிகள் பயிற்சி, செயல் விளக்கம் மற்றும் மாநில அளவில் விரிவாக்க அலுவலர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சி போன்ற திட்டங்களை பின்வருமாறு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன:

[2006 ஆகஸ்ட் 3

| வ. எண். | திட்டம் | அலகு | 2006-2007 ஆண்டுத் திட்டம் | |
|---|---|---|---|---|
| | | | பொருள் இலக்கு | நிதி ஒதுக்கீடு (இலட்சத்தில்) |
| 1. | இடைக்கணுப் புழுவைக் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி வெளியிடுதல் (ரூ.25 மானியம் அதிகபட்சமாக ரூ.10 எக்டேர்) | எக் | 6000 | 0.600 |
| 2. | விவசாயிகள் பயிற்சி (ரூ.5,000 பயிற்சி ஒன்றுக்கு – 2 நாட்கள் பயிற்சி 50 விவசாயிகளுக்கு) | எண் | 200 | 10.000 |
| 3. | செயல் விளக்கம் (செயல் விளக்கம் ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் மாவட்டம் ஒன்றிற்கு 10 செயல்விளக்கம்) | எண் | 250 | 12.500 |
| 4. | மாநில வேளாண் மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் விரிவாக்க அலுவலர்களுக்கான மாநில அளவில் நடத்தப்படும் பயிற்சி ரூ.12,500 பயிற்சி ஒன்றுக்கு (3 நாள் பயிற்சி 30 அலுவலர்களுக்கு) | எண் | 2 | 0.250 |
| 5. | இதர செலவினம் (ரூ.30,000 மாவட்டம் ஒன்றிற்கு) | எண் | 25 | 7.500 |
| 6. | உழவு மாடுகளைக் கொண்டு பயன்படுத்தப்படும் கருவிகள் அல்லது டிராக்டர் கொண்டு இயங்கும் கருவிகள் விநியோகம் | எண் | 4 | 0.960 |
| 7. | விளம்பரச் செலவினம் | | | 0.500 |
| | மொத்தம் | | | 32.310 |

**4.1.3. சமச்சீர் மற்றும் ஒருங்கிணைந்த உரப் பயன்பாட்டுத் திட்டம்**

*இத்திட்டமும் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது.*



2006 ஆகஸ்ட் 3]

*2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் செயல்பாடு மற்றும் 2006–2007ஆம் ஆண்டிற்கான திட்ட விவரம் வருமாறு–*

(நிதி ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | இனம் | அலகு | 2005–2006 ஆம் ஆண்டு சாதனை | | 2006–2007ஆம் ஆண்டு திட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | நிதி | பொருள் | நிதி |
| 1 | தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் புத்தூட்டப் பயிற்சி | எண்கள் | 12 | 1.20 | 12 | 1.20 |
| 2 | மண்வள அட்டைக்காகக் கணினி வாங்குதல் (3 ஆய்வகங்கள்) | எண்கள் | 3 | 3.40 | .. | .. |
| 3 | தழைச் சத்துத் தேவை அறிய வண்ண அட்டை விநியோகம் | இல. எண்கள் | 2.15 | 49.0 | 2.25 | 50.00 |
| 4 | மண்ஆய்வுக்கூடத்திற்காக ஆய்வு உபகரணங்கள் வாங்குதல் | எண்கள் | 2 | 10.0 | .. | .. |
| 5 | உரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தைக் கணினிமூலம் மேம்படுத்துதல் | மையங்கள் | .. | .. | 5 | 5.00 |
| 6 | உரப் பரிசோதனை நிலையங்களை வலுப்படுத்த அணுக்கதிர் ஈர்ப்பு அலை நிழற்படமானி வாங்குதல் | எண்கள் | .. | .. | 4 | 60.00 |
| 7 | மண்வள அட்டை அச்சிட்டு விநியோகம் செய்தல் | இல. எண்கள் | .. | .. | 5 | 10.00 |
| | மொத்தம் | | | 63.6 | | 126.20 |

### 4.1.4. புதிய திட்டங்கள்

கீழ்க்காணும் புதிய திட்டங்கள் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 4.1.4.1. பயிர் வாரியான விவசாயிகள் ஆர்வலர் குழு அமைத்தல்

தற்போதைய சூழ்நிலையில், வேளாண் உற்பத்தி அதிகரிப்பு நீடித்திருப்பதில், வேளாண் விரிவாக்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது. தேவையான தொழில்நுட்பங்களையும், உழவியல் முறைகளையும் விவசாயிகளுக்குக் கொண்டு செல்லும் வேளாண் விரிவாக்கத்தின் வழக்கமான பணி மட்டும் போதுமானதாக இல்லை. ஒரு பணியில் ஈடுபடுவோர்களின் ஒருமித்த பங்கேற்பு, அப்பணியின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்ற அடிப்படையில், தேர்வு செய்யப்பட்ட பயிர்களில் "விவசாயிகள் ஆர்வலர் குழு" அமைத்தல் எனும் ஒரு சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்பட்ட மானாவாரிப் பயிர்களில், கிராம அளவில் 10 முதல் 15 உறுப்பினர்களைக் கொண்ட விவசாயிகள் ஆர்வலர் குழு ஒன்று இத்திட்டத்தில் அமைக்கப்படுகிறது. படிப்படியாக உருவாக்கப்படும் இத்தகைய விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் வட்டம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்படும் என்பதோடு, பின்னர் பயிர் மேம்பாட்டு உத்திகள் மற்றும் திட்டங்களை உருவாக்கும் பணியிலும் இத்தகைய குழுக்கள் ஈடுபடுத்தப்படும். அலுவலக உபயோகத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல், நூலகம் அமைத்துத் தருதல், தொழில்நுட்ப காலமுறை செய்தித்தாள்கள் விநியோகம் போன்ற தொழில்நுட்ப உதவிகளைச் செய்து தருவதன்மூலம், இத்தகைய விவசாயிகள் ஆர்வலர் குழுவினை பலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகள் ஆர்வலர் குழு மேம்படுத்தப்பட்டு, ஒருங்கிணைக்கப்படும் பட்சத்தில் அனைத்து தொழில்நுட்பச் செய்திகள், இடுபொருள் இருப்பு, விலை மற்றும் சந்தை நிலவரம் போன்ற இதர தகவல்களும் நேரடியாக விவசாயிகள் ஆர்வலர் குழுக்களுக்குத் தகவல் இணையம்மூலம் வழங்க வழிவகை செய்யப்படும்.

2005–2006 ஆம் ஆண்டு பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் புதிய அணுகுமுறையின்கீழ் "பயிர் வாரியான 600 விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள் ரூ.30 இலட்சம் செலவில் கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், ஈரோடு, புதுக்கோட்டை,



திருச்சி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 18 மாவட்டங்களில் அமைக்கப்பட்டன.

2006–2007 ஆம் ஆண்டு இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு அனைத்து மானாவாரி பயிர்களுக்கு புதிய 600 விவசாய ஆர்வலர் குழுக்கள் உருவாக்கப்படும். அக்குழுக்களுக்கு அலுவலகம் மற்றும் நூலகம் அமைத்திட ஒரு குழுவிற்கு ரூ.5000 வீதம் நிதி உதவி வழங்கப்படும். மேலும், கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட 600 விவசாய ஆர்வலர் குழுக்களின் செயல்பாட்டினை வலுப்படுத்தும் வகையில் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படுவதோடு, இக்குழுக்கள் மாவட்ட மற்றும் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டம், ரூ.60 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

#### 4.1.4.2. சர்க்கரைக் கிழங்கு மேம்பாடு

மாற்றுப் பயிர்த் திட்டத்தின் ஒரு பகுதியாக, சுற்றுச்சூழலுக்கு இணக்கமான குறைந்த விலையுடைய தாவர எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக, சர்க்கரைக் கிழங்கு சாகுபடி மேம்படுத்தப்பட்டு வருகிறது. பேரியல் மேலாண்மை திட்டத்தின்கீழ் இந்த ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

#### 4.1.4.3. கரும்புப் பயிரில் சொட்டு நீர் வழி உரமிடுதல்

கரும்புப் பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக, இரு வரிசை நடவு மற்றும் குழி நடவு முறையுடன் கூடிய சொட்டு நீர் வழி உரமிடும் ஒரு புதிய தொழில்நுட்பத்தினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. வழக்கமாகப் பின்பற்றப்படும் நடவு முறையினால், ஒரு எக்டேரில் 138 மெ.டன் வரை கிடைக்கும் மகசூல் அளவை ஒப்பிடும்போது, வரிசை நடவு / குழி நடவு முறையுடன் கூடிய சொட்டுநீர் உரமிடல் முறையினால் ஒரு எக்டேருக்கு 188 மெ.டன் என்ற உற்பத்தித் திறனை அடைய முடியும். கரும்பு உற்பத்தியில் நீடித்த மேம்பாட்டை அடைய இத்தொழில் நுட்பத்தை அதிக பரப்பில் கடைபிடிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனவே கரும்பு பயிரில் சொட்டுநீர் வழி உரமிடும் தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதற்காக, பேரியல் மேலாண்மை திட்டத்தின்கீழ், ஒரு சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.120.07 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

[2006 ஆகஸ்ட் 3

2006–2007ஆம் ஆண்டு, 464 எக்டேர் பரப்பளவில் ரூ.139.46 இலட்சம் செலவில் சொட்டு நீர் வழி உரமிடும் முறை செயல்விளக்கத்தினை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒரு எக்டேருக்கு அரசு மானியமாக ரூ.25,000–ம், சர்க்கரை ஆலைகள்மூலம் ரூ.12,500/–ம் மானியமாக வழங்கப்படும்.

2005–2006 ஆம் ஆண்டு இத்திட்டத்தில் அடையப்பெற்ற இன வாரியான சாதனை மற்றும் 2006–2007ஆம் ஆண்டிற்கான திட்ட விவரம் வருமாறு:–

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | இனங்கள் | அலகு | 2005–2006 | | | | 2006–2007 ஆண்டிற்கான திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | பொருள் | நிதி |
| 1. | வரிசை நடவு முறையில் சொட்டு நீர்ப் பாசன செயல் விளக்கம் (எக்டேருக்கு ரூ.25,000/–) | எக் | 375 | 375 | 93.75 | 93.75 | 464 | 116.00 |
| 2. | குழி நடவு முறையில் சொட்டு நீர்ப் பாசன செயல் விளக்கம் எக்டேருக்கு ரூ.30,000/– | எக் | 30 | 30 | 9.00 | 9.00 | | |
| 3. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் ஆலோசனை சேவைக் கட்டணம் | – | – | – | 16.82 | 16.82 | .. | 19.26 |
| 4. | குழி அமைக்கும் இயந்திரம் வாங்குதல் | எண் | 1 | 1 | 0.50 | 0.50 | 5 | 4.20 |
| | மொத்தம் | | | | 120.07 | 120.07 | | 139.46 |



2006 ஆகஸ்ட் 3]

### 4.1.4.4. தமிழ்நாடு மகளிர் வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டம் (டான்வேப்)

கடந்த ஆண்டு பண்ணை மகளிர் மற்றும் பண்ணை பெண் தொழிலாளர்கள் கொண்ட 22,600 குழுக்கள் உருவாக்கப்பட்டன. இக்குழுக்களுக்கு, தொழில் தொடங்கவும் வேளாண் சார்ந்த பணிகளை மேற்கொள்ளவும் பல்வேறு திட்டங்களை 2006–07 ஆம் ஆண்டு அரசு மேற்கொள்ளும். அதன் விவரம் வருமாறு:

**(அ) பண்ணை மகளிர் குழுக்கள் சுய தொழில் தொடங்க உதவி வழங்கும் திட்டம்**

2006–2007ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட 6,000 பண்ணை மகளிர் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு பயிற்சி அளிக்க ரூ. 1000 வீதமும், தொழில் மேம்பாட்டுத் திறன் அடிப்படையில் சிறு தொழில் துவங்க ஒரு குழுவிற்கு ரூ. 3,500 வீதமும் உரிய உதவிகள் வழங்க பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.291.79 இலட்சம் செலவில் புதிய அணுகுமுறைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

2006–2007ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள செயல்பாட்டு விவரம் பின்வருமாறு:

| வ. எண் | இனம் | அலகு (ரூபாயில்) | எண்கள் | நிதி (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 6,000 பண்ணை மகளிர் குழுக்களுக்கு தொழில் நிறுவன மேம்பாட்டுத் திறன் பற்றி ஒரு நாள் புத்தூட்டப் பயிற்சி (குழு ஒன்றிற்கு 15 உறுப்பினர்கள் வீதம்) | குழு ஒன்றிற்கு ரூ.1,000 வீதம் | 6,000 | 60.00 |
| 2 | 6,000 பண்ணை மகளிர் குழுக்களுக்குத் தெரிவு செய்யப் பட்ட தொழில் மேம்பாட்டுத் திறனில் சிறு தொழில் துவங்க உதவுதல் | குழு ஒன்றிற்கு ரூ.3,500 வீதம் | 6,000 | 210.00 |
| 3 | திட்டப் பணித் தொகுப்பு மற்றும் இதர செலவினம் (ஆண்டுக்கு மாவட்டம் ஒன்றிற்கு) | ரூ.7,820 | 28 | 2.19 |
| 4 | புள்ளி விவர சேகரிப்பு / இணையதள இணைப்பு | ஆண்டுக்கு மாவட்டம் ஒன்றிற்கு ரூ.70,000 | 28 | 19.60 |
| | மொத்தம் | | | 291.79 |

வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை பண்ணை மகளிர் குழுக்கள் துவங்குவதற்கு இத்திட்டம் உதவிபுரியும். இதனால் மகளிர் குழுக்கள் பொருளாதார ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மேம்பாடு அடைய வழிவகை செய்யப்படும்.

**(ஆ) பண்ணை மகளிர் குழுக்களுக்கு வேளாண் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்**

2006–2007ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட 100 பண்ணை மகளிர் குழுக்களுக்கு பவர் டில்லர், கல்டிவேட்டர், சட்டிக்கலப்பை, கதிரடிக்கும் இயந்திரம், கரும்பு நடவு இயந்திரம் ஆகிய வேளாண் இயந்திரங்கள் 25 சத மானியத்தில் ரூ.66.75 இலட்சம் செலவில் வழங்கப்படும். இதன்மூலம் பெறப்படும் இயந்திரங்களை பிற விவசாயிகளுக்கு வாடகைக்கு விடவும், குழு உறுப்பினர்களின் சொந்த உபயோகத்திற்கும் பயன்படுத்தி குழுக்களின் வருவாயை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**(இ) பண்ணை மகளிர் குழுக்கள் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மேற்கொள்ள உதவும் திட்டம்**

2006–2007ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட 9 பண்ணை மகளிர் குழுக்களுக்கு உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையம் துவக்குவதற்கு ஒரு குழுவிற்கு ரூ.5 இலட்சம் வீதம் சுழல்நிதி வழங்கப்படும். இதன்மூலம் கிராமப்புறங்களில் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் எளிதாக விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதோடு இத்தகைய மையங்களை மேலும் துவக்குவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் இத்திட்டம் அமையும்.

**4.2. எண்ணெய்வித்து, பயறு, எண்ணெய்ப்பனை மற்றும் மக்காச்சோளப் பயிர்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம்**

தீவிர மக்காச்சோள உற்பத்தித் திட்டம், தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம், எண்ணெய் வித்துக்கள் பெருக்குத் திட்டம், எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டம் ஆகிய மத்திய அரசு சார்பு தொழில்நுட்பவியல் குழுமத் திட்டங்களை ஒருங்கிணைத்து, 2004–2005ஆம் ஆண்டு முதல் "ஐசோபாம்" எனும் ஒருங்கிணைந்த திட்டமாக மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், எண்ணெய் பனை மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக





மாநில அரசு அந்தந்த பகுதிக்கு ஏற்றவாறு திட்டங்களை தேர்வு செய்து செயல்படுத்த முடியும். இத்திட்டச் செலவினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

2005–2006 ஆம் ஆண்டுச் செலவினம் மற்றும் 2006–2007ஆம் ஆண்டிற்கான பயிர்வாரியான திட்ட விபரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

| பயிர் | 2005–2006 ஆம் ஆண்டு செலவினம் | 2006–2007 திட்டத் தொகை |
|---|---|---|
| எண்ணெய் வித்துக்கள் | 756.433 | 1111.378 |
| பயறு வகைகள் | 422.467 | 603.399 |
| மக்காச்சோளம் | 66.065 | 66.000 |
| எண்ணெய்ப் பனை | 312.137 | 450.307 |
| மொத்தம் | 1557.102 | 2231.084 |

இத்திட்டத்தில் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்கவும், உற்பத்தியை உயர்த்தவும், தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், பாசன வசதிகளை ஏற்படுத்துதல், பெருவிளக்கப் பண்ணை அமைத்தல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, ஜிப்சம், உயிர் உரம், தாவர பூச்சிக் கொல்லி மருந்து, பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள், களைக்கொல்லிகள் ஆகியவை மானியத்தில் வழங்கப்படும் என்பதோடு விவசாயிகளுக்குப் பயிற்சியும் கிராம அளவில் தீவிர முன்பருவ முகாம்களும் நடத்தப்படும்.

**4.3. தொழில்நுட்பவியல் குழுமத் திட்டம்**

**4.3.1. சிறு குழுமம் II-ன் கீழ் தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம்**

பருத்தி சாகுபடி மற்றும் உற்பத்தியை உயர்த்த பருத்தி தொழில்நுட்பக் குழுமத் திட்டம் நீலகிரி, கன்னியாகுமரி, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் நீங்கலாக மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

[2006 ஆகஸ்ட் 3

2006–2007 ஆம் ஆண்டு தரமான விதை உற்பத்தி, வயல்வெளிப் பள்ளி, பயிர்ப் பாதுகாப்புப் பணிகள், தெளிப்பான்கள் விநியோகம், நுண்நீர்ப் பாசன கருவிகள் விநியோகம், உயிர் உரம், நுண்ணூட்டக் கலவை விநியோகம் மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கு உரிய மானியங்கள் வழங்கப்படும் வகையில் ரூ.419.81 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

### 4.4. விதை கிராமத் திட்டம்

பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் மிக முக்கிய இடுபொருளான விதை பெரும் பங்கு வகிக்கிறது. கிராமங்களில் தரமான விதைகள் போதிய அளவிற்குக் கிடைப்பதை உறுதி செய்ய 2006-2007 ஆம் ஆண்டில் நெல், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்களுக்கான விதை கிராமத் திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில், நெல், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் அதிகம் சாகுபடி செய்யப்படும் கிராமங்களில், நெற்பயிருக்கு 5,000 கிராமங்களும், பயறுவகைப் பயிர்களுக்கு 500 கிராமங்களும், எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு 500 கிராமங்களும் தேர்வு செய்யப்பட்டு, வேளாண்மைத் துறைமூலம் மானிய விலையில் தரமான அடிப்படை ஆதார விதைகளை வழங்கி விதை கிராமத் திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்மூலம் மேற்கண்ட கிராமங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் தரமான விதைகளை பெற்று சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்படும்.

### 4.5. இயற்கைப் பண்ணையம் – தேசிய திட்டம்

இயற்கைப் பண்ணையம் பற்றிய பயிற்சி, கருத்தரங்குகள், பணிமனை கூட்டங்கள் நடத்துதல் மற்றும் அரசு விதைப் பண்ணைகளில் இயற்கைப் பண்ணைய செயல் விளக்கப் பண்ணை அமைத்தல் மூலமாக இயற்கைப் பண்ணைய முறையினை தமிழகத்தில் பிரபலப்படுத்துவதற்காக ஒரு திட்டப் பிரேரணை ரூ.76.77 இலட்சம் நிதியில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு இயற்கைப் பண்ணைய தேசியத் திட்டத்தின்கீழ் மேற்கண்ட கருத்துருவை அங்கீகரித்து, முதல் தவணையாக ரூ.55.57 இலட்சம் நிதியினை வழங்கியுள்ளது.



2006 ஆகஸ்ட் 3]

2006–2007 ஆம் ஆண்டில், அனுமதிக்கப்பட்ட நிதி விவரம் இனவாரியாகக் கீழே தரப்பட்டுள்ளது:

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | இனம் | ஒரு அலகிற்கு நிதி உதவி | பொருள் (எண்கள்) | நிதி | முதல் தவணை |
|---|---|---|---|---|---|
| 1. | சான்று மற்றும் ஆய்வு முகமைகளுக்கான பயிற்சி | 0.51 | 2 | 1.02 | 0.765 |
| 2. | இயற்கைப் பண்ணைய இடுபொருள் உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாட்டுக்கான பயிற்சி | 0.51 | 2 | 1.02 | 0.765 |
| 3. | களப் பணியாளர்கள் மற்றும் விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி | 0.39 | 3 | 1.17 | 0.877 |
| 4. | விவசாயிகளுக்கான பயிற்சி | 0.13 | 2 | 0.26 | 0.195 |
| 5. | இயற்கை இடுபொருள் பற்றிய செயல் விளக்கம் | 0.10 | 13 | 1.30 | 0.975 |
| 6. | இயற்கைப் பண்ணைய செயல் விளக்கப் பண்ணை அமைத்தல் | 4.00 | 10 | 40.00 | 20.000 |
| 7. | மாநில மற்றும் மண்டல பணிமனைக் கூட்டங்கள் நடத்துதல் | -- | 1+4 | 2.00 | 2.000 |
| 8. | அரசு விதைப் பண்ணைகளில் மண்புழு பெருக்கும் அமைப்புகள் ஏற்படுத்துதல் | 1.50 | 20 | 30.00 | 30.000 |
| | மொத்தம் | | | 76.77 | 55.577 |

இயற்கைப் பண்ணைய முறையினைப் பின்பற்றி வரும் விவசாயிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களை ஈடுபடுத்தி, மேற்கண்ட திட்டத்தினை 2006–2007 ஆம் ஆண்டில், செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 3

## 4.6. தென்னை வளர்ச்சி வாரியத்தினால் செயல்படுத்தப்படும் / நிதி உதவி பெறும் திட்டங்கள்

### 4.6.1. தென்னை சாகுபடி பரப்பினை அதிகரித்தல்

தென்னை வளர்ச்சி வாரியத்தின் 100 சதவீதம் நிதி உதவியுடன் தென்னையின் சாகுபடி பரப்பினை அதிகரிக்க இத்திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது. புதிதாக தென்னந்தோப்புகள் உருவாக்குவதற்காக, முதலாம் ஆண்டில், தென்னங்கன்றுகள் வழங்குதல், குழிதோண்டுதல், நடவு செய்தல் மற்றும் இதர செலவினங்களுக்காக ஒரு எக்டேருக்கு ரூ.4000/– வீதமும் நடவு செய்யப்பட்ட தென்னங்கன்றுகளின் பராமரிப்பிற்காக இரண்டாவது ஆண்டுக்கு ரூ.4000/– மானியமும் வழங்கப்படுகிறது. இவ்வாறு இத்திட்டத்தின்கீழ் ஒரு எக்டேருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு கொச்சியிலுள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தின்மூலம் நேரடி நிதியுதவியாக ரூ8000/– மானியமாக வழங்கப்படுகிறது.

2006–2007 ஆம் ஆண்டில் தென்னை வளர்ச்சி வாரியம் 300 எக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடிப் பரப்பினை விரிவுபடுத்துவதற்கு நிதி உதவி அளிப்பதற்காக ரூ.18.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.6.2. தென்னை நாற்றுப் பண்ணைகளுக்கு மானியம்

தமிழ்நாட்டில் தனியார் தென்னை நாற்றுப் பண்ணைகள் அமைப்பதை ஊக்குவிக்க சிறிய தென்னை நாற்றுப் பண்ணைகளுக்கு ரூ.3 இலட்சம் வீதமும், பெரிய தென்னை நாற்றுப் பண்ணைகளுக்கு ரூ.6 இலட்சம் வீதமும் தென்னை வளர்ச்சி வாரியம் நிதியுதவி அளிக்கிறது.

2006–2007 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.17.00 இலட்சம் செலவில் தென்னை வளர்ச்சி வாரியத்தினால் நேரடியாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.6.3. தென்னை வளர்ப்பில் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்

தென்னந்தோப்புகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்த, 100 சதவீத செலவினை மத்திய அரசே ஏற்கும் இத்திட்டம் தமிழகத்தில் தென்னை வளர்ச்சி வாரியத்தினால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் வயது முதிர்ந்த, உற்பத்தித் திறன் குறைந்த,



2006 ஆகஸ்ட் 3]

நோயுற்ற மரங்களை அகற்றுதல், செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல் மற்றும் இயற்கை எரு உற்பத்தி மேற்கொள்ளுதல் ஆகிய இனங்கள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

2005–2006 ஆம் ஆண்டின் சாதனை மற்றும் 2006–07 ஆம் ஆண்டிற்கான திட்ட விவரங்கள் பின்வருமாறு:–

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | இனம் | அலகு | 2005–2006 | | | | 2006–2007 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | இலக்கு |
| 1 | நோய் தாக்கிய மரங்களைப் பராமரித்தல் | எண் | 5000 | 5000 | 12.500 | 12.500 | 20000 | 50.000 |
| 2 | செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல் | எக் | 690 | 690 | 120.75 | 120.75 | 1150 | 201.250 |
| 3 | இயற்கை எருத் தயாரிப்பு மேற்கொள்ளுதல் | எண் | 100 | 100 | 20.000 | 20.00 | 80 | 16.000 |
| 4 | கொப்பரை உலர்த்தும் கருவி விநியோகம் | எண் | 100 | 68 | 6.750 | 4.521 | – | – |
| | மொத்தம் | | | | 160.00 | 157.771 | | 267.250 |

### 4.6.4. நவ்லாக் தென்னை நாற்றுப் பண்ணைமூலம் தரமான நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்வதற்காக, வேலூர் மாவட்டம் நவ்லாக்கில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் 50 சத நிதியுதவியுடன் தென்னை நாற்றுப் பண்ணை ஒன்று இயங்கி வருகிறது. இத்திட்டத்தில் மீதி 50 சத செலவை மாநிலஅரசு ஏற்கிறது. இத்திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டு 99,000 தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 50,000 நெட்டை x குட்டை கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டன.

2006–2007ஆம் ஆண்டு இத்திட்டத்தில் 75,000 நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் ரூ.18.75 இலட்சம் செலவில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**4.7. வேளாண்மைக்கான தகவல் வலைதள இணைப்புத் திட்டம்**

வேளாண்மையில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பப் பயன்பாடு அதிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. தொழில்நுட்பச் செய்திகள், இடுபொருள் இருப்பு, விலை விவரம் பல்வேறு திட்டங்களின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியம் மற்றும் தரக் கட்டுப்பாட்டுப் பணிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இணைய தளம் மூலமாக விவசாயிகளுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். மேலும் துறையின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், தகவல் தொழில்நுட்பம் மிகவும் அத்தியாவசியமாகிறது. வேளாண்மைத் துறை, வேளாண் பல்கலைக்கழகம், மகளிர் குழுக்கள் மற்றும் விவசாயிகள் ஆர்வலர் குழுக்களுக்கு தற்போது உத்தேசிக்கப்பட்ட இணையதளமானது, தகவல் பரிமாற்றத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். இதன் அடிப்படையில், வேளாண்மைக்கான தகவல் வலைதள இணைப்புத் திட்டத்தின் (AGRISNET) கீழ் துறையின் அனைத்து அலுவலகங்களையும் கணினிமயமாக்குவதற்கு மத்திய அரசு ரூ.831.40 இலட்சம் நிதியினை அனுமதித்துள்ளது. வட்டாரம் மற்றும் மாவட்டத் தலைமை அலுவலகங்களை மாநிலத் தலைமையிடத்தோடு கணினிமூலம் இணைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2006–2007ஆம் ஆண்டில் இதற்காக ஒப்பளிக்கப்பட்ட ரூ.302.40 இலட்சம் நிதியில், முதல் தவணையாக ரூ.131.90 இலட்சம் நிதியினை மைய அரசு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில், இணைப்பு வசதியினை உருவாக்கித் தருவதற்குத் தேவையான கணினிகள் வாங்குதல், இணைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், புள்ளி விவரங்கள் பதிவு செய்தல் மற்றும் மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி முதலான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**4.8. ஒருங்கிணைந்த விரிவாக்கப் பணிகளுக்கான மாநில உதவித் திட்டம்**

வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன்வளம், வனம், வேளாண் பொறியியல் மற்றும் வேளாண் விற்பனை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து மாநில விரிவாக்க உதவித் திட்டம் ஒன்று மைய, மாநில அரசின் 90:10 நிதி பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி, வட்டார அளவில்



விவசாயிகளின் தேவைக்கேற்ப திட்டங்கள் உருவாக்கப்பட்டு, மாவட்ட தன்னாட்சி அமைப்பான வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் (ATMA) ஒப்புதலுடன் செயல்படுத்தப்படவுள்ளது. முதல் கட்டமாக தமிழகத்தில் சேலம், வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, புதுக்கோட்டை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 9 மாவட்டங்களில் உள்ள 133 வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.259.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, தனது பங்களிப்பாக முதற்கட்டமாக ரூ.128.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. மாநில அரசு தனது பங்களிப்பாக, ரூ.14.22 இலட்சம் நிதி வழங்கியுள்ளது.

விரிவாக்கப் பணிகளுக்கான மாநில விரிவாக்க உதவித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி, விளக்கத் தளை அமைத்தல், மாநில மற்றும் மாவட்டங்களுக்கிடையேயான சுற்றுலா, விவசாயிகளுக்கான குழுக்கள், அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் அமைத்தல், சுழற்சி நிதி ஏற்படுத்துதல், ஊக்கத் தொகை, பரிசுத் தொகை வழங்குதல், மரபு சார்ந்த விளம்பர சாதனங்கள் மற்றும் எலக்ட்ரானிக் சாதனங்கள் மூலமாக விளம்பரம் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் அளித்தல், விவசாயிகள் – ஆராய்ச்சியாளர்கள் .– விரிவாக்க அலுவலர்களிடையே கலந்துரையாடல், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிக்குகந்தவற்றை உள்ளூர் விவசாய அறிவியல் மன்றம் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் கையாளுதல், மாநில இசைவு அலுவலகம் மாவட்ட குழு மற்றும் வட்டாரப் பண்ணைத் தகவல் மையம் ஆகியவற்றிற்குக் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

2006–2007ஆம் ஆண்டிற்கான திட்ட வரைவுப் பணி மேற்கொள்ள மாவட்ட அனைத்துத் துறை வல்லுநர் குழு பயிற்சி நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் கணக்கெடுப்புப் பணிமூலம் விவசாயிகளின் தேவையினை அடிப்படையாகக் கொண்டு, திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலோடு செயல்படுத்தப்பட உள்ளன.

[2006 ஆகஸ்ட் 3

## அட்டவணை – 1

### வேளாண்மை விரிவாக்க மையங்கள் பற்றிய விவரங்கள்

| மாவட்டங்கள் | உட் கோட்டங்கள் | முதன்மை வேளாண் விரிவாக்க மையங்கள் | துணை வேளாண் விரிவாக்க மையங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| திருவள்ளூர் | 7 | 14 | 21 | 35 |
| காஞ்சிபுரம் | 6 | 13 | 16 | 29 |
| வேலூர் | 7 | 20 | 24 | 44 |
| திருவண்ணாமலை | 6 | 17 | 24 | 41 |
| கடலூர் | 6 | 13 | 17 | 30 |
| விழுப்புரம் | 8 | 21 | 27 | 48 |
| திருச்சி | 5 | 15 | 10 | 25 |
| பெரம்பலூர் | 3 | 10 | 7 | 17 |
| கரூர் | 2 | 8 | 4 | 12 |
| புதுக்கோட்டை | 7 | 13 | 20 | 33 |
| தஞ்சாவூர் | 8 | 14 | 47 | 61 |
| திருவாரூர் | 7 | 10 | 32 | 42 |
| நாகப்பட்டினம் | 6 | 11 | 33 | 44 |
| இராமநாதபுரம் | 5 | 11 | 6 | 17 |
| மதுரை | 6 | 14 | 18 | 32 |
| தேனி | 3 | 9 | 12 | 21 |
| திண்டுக்கல் | 5 | 13 | 15 | 28 |
| சேலம் | 5 | 20 | 11 | 31 |
| நாமக்கல் | 4 | 15 | 17 | 32 |
| தருமபுரி | 5 | 8 | 8 | 16 |
| கிருஷ்ணகிரி | 3 | 10 | 7 | 17 |
| ஈரோடு | 7 | 20 | 26 | 46 |
| கோயம்புத்தூர் | 7 | 22 | 21 | 43 |
| விருதுநகர் | 6 | 11 | 5 | 16 |
| சிவகங்கை | 6 | 11 | 10 | 21 |
| தூத்துக்குடி | 7 | 12 | 16 | 28 |
| திருநெல்வேலி | 9 | 19 | 31 | 50 |
| கன்னியாகுமரி | 4 | 10 | 11 | 21 |
| மொத்தம் | 160 | 384 | 496 | 880 |



2006 ஆகஸ்ட் 3]

## அட்டவணை – 2

### அரசு விதைப் பண்ணைகள் (37)

| இடம் | மாவட்டம் |
|---|---|
| காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| கொளந்தலூர் | திருவள்ளூர் |
| வானூர், இருவேல்பட்டு, காக்குப்பம், வடக்குனேந்தல் | விழுப்புரம் |
| பிராலூர், வண்டுராயன்பேட்டு | கடலூர் |
| அத்தியந்தல், வாழவச்சனூர் | திருவண்ணாமலை |
| மேட்டூர் அணை, டேனிஷ்பேட் | சேலம் |
| பாப்பாரப்பட்டி | தருமபுரி |
| பொங்கலூர், பாப்பன்குளம் | கோயம்புத்தூர் |
| சத்தியமங்கலம், பவானி | ஈரோடு |
| இனுங்கூர் | கரூர் |
| நெய்க்குப்பைபூதூர், புதூர்பாளையம் | திருச்சிராப்பள்ளி |
| அண்ணாப்பண்ணை | புதுக்கோட்டை |
| சாக்கோட்டை | தஞ்சாவூர் |
| தீவாம்பாள்பட்டினம், காஞ்சிக்குடிக்காடு கீராந்தி, நெடும்பலம், தியாகராஜபுரம், சக்கரமங்கலம், மூங்கில்குடி | திருவாரூர் |
| நாகமங்கலம், திருக்கடையூர் | நாகப்பட்டினம் |
| விநாயகபுரம் | மதுரை |
| கீழகூடலூர் | தேனி |
| தேவதானம் | விருதுநகர் |
| கரையிருப்பு, மேலகரம் | திருநெல்வேலி |
| திருப்பதிசாரம் | கன்னியாகுமரி |

மாநில எண்ணெய் வித்துப் பண்ணை

| வ. எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | முசரவாக்கம் | காஞ்சிபுரம் |
| 2 | அகசிபள்ளி | கிருஷ்ணகிரி |
| 3 | வெள்ளாளவிடுதி | புதுக்கோட்டை |
| 4 | நவ்லாக் | வேலூர் |
| 5 | பவானிசாகர் | ஈரோடு |
| பயறு பண்ணை | | |
| வ. எண் | இடம் | மாவட்டம் |
| 1 | வம்பன் | புதுக்கோட்டை |

## அட்டவணை – 3

### விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

| வ. எண் | மாவட்டங்கள் | நிலையங்களின் எண்ணிக்கை | | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பெரியது | நடுத்தரம் | சிறியது | |
| 1 | காஞ்சிபுரம் | 1 | .. | 6 | 7 |
| 2 | திருவள்ளூர் | 1 | .. | 3 | 4 |
| 3 | கடலூர் | .. | .. | 2 | 2 |
| 4 | விழுப்புரம் | 2 | .. | 2 | 4 |
| 5 | வேலூர் | .. | .. | 2 | 2 |
| 6 | திருவண்ணாமலை | 2 | .. | 5 | 7 |
| 7 | சேலம் | 1 | .. | 1 | 2 |
| 8 | நாமக்கல் | .. | .. | 1 | 1 |
| 9 | தருமபுரி | .. | .. | 2 | 2 |
| 10 | கிருஷ்ணகிரி | .. | 1 | 1 | 2 |
| 11 | கோயம்புத்தூர் | .. | .. | 3 | 3 |
| 12 | ஈரோடு | 1 | .. | 1 | 2 |
| 13 | திருச்சி | .. | .. | 2 | 2 |
| 14 | பெரம்பலூர் | .. | .. | 1 | 1 |
| 15 | கரூர் | 1 | .. | .. | 1 |





| வ. எண் | மாவட்டங்கள் | நிலையங்களின் எண்ணிக்கை | | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | பெரியது | நடுத்தரம் | சிறியது | |
| 16 | புதுக்கோட்டை | 1 | 1 | 2 | 4 |
| 17 | தஞ்சாவூர் | 2 | .. | 1 | 3 |
| 18 | நாகப்பட்டினம் | .. | .. | 3 | 3 |
| 19 | திருவாரூர் | 1 | .. | 3 | 4 |
| 20 | மதுரை | 1 | .. | 2 | 3 |
| 21 | தேனி | .. | .. | 1 | 1 |
| 22 | திண்டுக்கல் | 1 | .. | .. | 1 |
| 23 | இராமநாதபுரம் | .. | 1 | 1 | 2 |
| 24 | சிவகங்கை | .. | .. | 2 | 2 |
| 25 | விருதுநகர் | .. | .. | 3 | 3 |
| 26 | திருநெல்வேலி | .. | .. | 3 | 3 |
| 27 | தூத்துக்குடி | 1 | .. | 1 | 2 |
| 28 | கன்னியாகுமரி | .. | .. | 1 | 1 |
| | மொத்தம் | 16 | 3 | 55 | 74 |

## அட்டவணை – 4

| வ. எண் | மாவட்டம் | உரப் பரிசோதனை நிலையம் | | நடமாடும் மண் பரிசோதனை நிலையம் | | மண் பரிசோதனை நிலையம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | காஞ்சிபுரம் | | | 1 | காஞ்சிபுரம் |
| 2 | திருவள்ளூர் | | | 1 | திருவள்ளூர் | | |
| 3 | கடலூர் | | | | | 2 | கடலூர் |
| 4 | விழுப்புரம் | 2 | விழுப்புரம் | 2 | விழுப்புரம் | | |
| 5 | வேலூர் | | | | | 3 | மேலாலத்தூர் |
| 6 | திருவண்ணாமலை | | | 3 | திருவண்ணா மலை | | |
| 7 | சேலம் | 3 | சேலம் | | | 4 | சேலம் |
| 8 | நாமக்கல் | | | 4 | நாமக்கல் | | |
| 9 | தருமபுரி | 4 | தருமபுரி | | | 5 | தருமபுரி |
| 10 | கிருஷ்ணகிரி | | | 5 | கிருஷ்ணகிரி | | |
| 11 | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | 6 | கோயம்புத்தூர் | 6 | கோயம்புத்தூர் |

[2006 ஆகஸ்ட் 3

| வ. எண் | மாவட்டம் | உரப் பரிசோதனை நிலையம் | | நடமாடும் மண் பரிசோதனை நிலையம் | | மண் பரிசோதனை நிலையம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | ஈரோடு | | | 7 | ஈரோடு | 7 | ஈரோடு |
| 13 | திருச்சி | 6 | திருச்சி | | | 8 | திருச்சி |
| 14 | பெரம்பலூர் | | | 8 | பெரம்பலூர் | | |
| 15 | கரூர் | | | 9 | கரூர் | | |
| 16 | புதுக்கோட்டை | | | | | 9 | குடுமியான்மலை |
| 17 | தஞ்சாவூர் | 7 | கும்பகோணம் | | | 10 | ஆடுதுறை |
| 18 | நாகப்பட்டினம் | | | 10 | நாகப்பட்டினம் | | |
| 19 | திருவாரூர் | 8 | திருவாரூர் | 11 | திருவாரூர் | | |
| 20 | மதுரை | 9 | மதுரை | 12 | மதுரை | 11 | மதுரை |
| 21 | தேனி | | | | | 12 | தேனி |
| 22 | திண்டுக்கல் | 10 | திண்டுக்கல் | | | 13 | திண்டுக்கல் |
| 23 | இராமநாதபுரம் | 11 | பரமக்குடி | 13 | பரமக்குடி | 14 | பரமக்குடி |
| 24 | சிவகங்கை | | | | | 15 | சிவகங்கை |
| 25 | விருதுநகர் | | | 14 | அருப்புக்கோட்டை | | |
| 26 | திருநெல்வேலி | | | | | 16 | திருநெல்வேலி |
| 27 | தூத்துக்குடி | 12 | கோவில்பட்டி | 15 | கோவில்பட்டி | 17 | கோவில்பட்டி |
| 28 | கன்னியாகுமரி | 13 | நாகர்கோவில் | 16 | நாகர்கோவில் | 18 | நாகர்கோவில் |
| 29 | ஊட்டி | 14 | ஊட்டி | | | 19 | ஊட்டி |

## அட்டவணை – 5

| வ. எண் | மாவட்டம் | பூச்சி மருந்து ஆய்வகம் | | உயிர் உர ஆய்வகங்கள் | | உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் | | நுண்ணூட்டச் சத்துக்கலவை தயாரிப்பு நிலையம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | காஞ்சிபுரம் | | | 1 | பஞ்சுப்பேட்டை (ஐபிஎம் மையம்) | | |
| 2 | கடலூர் | 2 | கடலூர் | 1 | கடலூர் | | | | |
| 3 | விழுப்புரம் | | | | | 2 | விழுப்புரம் | | |
| 4 | சேலம் | 3 | சேலம் | 2 | சேலம் | 3 | சீலை நாயக்கம்பட்டி | | |
| 5 | நாமக்கல் | | | | | 4 | நாமக்கல் | | |
| 6 | தருமபுரி | | | | | 5 | பாப்பாரப் பட்டி | | |
| 7 | கோயம் புத்தூர் | 4 | கோயம் புத்தூர் | | | 6 | கோயம் புத்தூர் | | |
| 8 | ஈரோடு | 5 | ஈரோடு | | | 7 | பவானி | | |
| 9 | திருச்சி | 6 | திருச்சி | 3 | திருச்சி | 8 | திருச்சி | | |
| 10 | புதுக் கோட்டை | | | 4 | குடுமியான் மலை | | | 1 | குடுமியான் மலை |
| 11 | தஞ்சாவூர் | 7 | ஆடுதுறை | 5 | சாக்கோட்டை | 9 | காட்டுத் தோட்டம் | | |
| 12 | மதுரை | 8 | மதுரை | | | 10<br>11 | மேலூர்<br>வினாயக புரம் (ஐபிஎம் மையம்) | | |
| 13 | இராமநாத புரம் | | | 6 | இராமநாத புரம் | | | | |
| 14 | திருநெல் வேலி | | | | | 12 | பாளையங் கோட்டை | | |
| 15 | தூத்துக்குடி | 9 | கோவில் பட்டி | | | | | | |



2006 ஆகஸ்ட் 3]

## அட்டவணை – 6

| வ. எண் | மாவட்டம் | உழவர் பயிற்சி நிலையங்கள் | | தென்னை நாற்றுப் பண்ணைகள் | | பசை மஸ்கார்டைன் காளான் உற்பத்தி மையங்கள் | | என்பிவி நச்சுயிரி உற்பத்தி மையங்கள்– நிலக்கடலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | காஞ்சிபுரம் | 1 | பிச்சிவாக்கம் | | | 1 | காஞ்சிபுரம் |
| 2 | திருவள்ளூர் | | | 2 | மாதவரம் | | | | |
| 3 | கடலூர் | | | 3 | கடலூர் | 1 | விருத்தா சலம் | | |
| 4 | விழுப்புரம் | 2 | திண்டிவனம் | | | | | | |
| 5 | வேலூர் | 3 | வேலூர் | 4 | நவ்லாக் | | | | |
| 6 | திருவண்ணா மலை | 4 | திருவண்ணா மலை | 5 | வாழவச்சனூர் | | | | |

| வ. எண் | மாவட்டம் | உழவர் பயிற்சி நிலையங்கள் | | தென்னை நாற்றுப் பண்ணைகள் | | பச்சை மஸ்கார்டைன் காளான் உற்பத்தி மையங்கள் | | என்பிவி நச்சுயிரி உற்பத்தி மையங்கள்—நிலக்கடலை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | சேலம் | 5 | சேலம் | 6 | டேனிஷ் பேட்டை | | | | |
| 8 | நாமக்கல் | 6 | நாமக்கல் | | | | | | |
| 9 | தருமபுரி | 7 | தருமபுரி | | | | | | |
| 10 | கிருஷ்ணகிரி | 8 | கிருஷ்ணகிரி | 7 | பி.ஜி. புதூர் | | | | |
| 11 | கோயம்புத்தூர் | | | 8 | ஆழியார்நகர் | | | 2 | கோயம் புத்தூர் |
| 12 | ஈரோடு | 9 | ஈரோடு | 9 | பவானிசாகர் | | | | |
| 13 | திருச்சி | 10 | லால்குடி | 10 | திருவரங்கம் | | | 3 | திருச்சி |
| 14 | பெரம்பலூர் | 11 | பெரம்பலூர் | | | | | | |
| 15 | கரூர் | 12 | கரூர் | | | | | | |
| 16 | புதுக்கோட்டை | 13 | குடுமியான் மலை | 11 | வெள்ளாள விடுதி | | | | |
| 17 | தஞ்சாவூர் | 14 | சாக் கோட்டை | 12 | பட்டுக் கோட்டை | | | | |
| 18 | நாகப்பட்டினம் | | | 13 | மல்லியம் | | | | |
| 19 | திருவாரூர் | | | | | | | | |
| 20 | மதுரை | | | | | | | 4 | மதுரை |
| 21 | தேனி | 15 | தேனி | 14 | வைகை அணை | | | | |
| 22 | திண்டுக்கல் | 16 | திண்டுக்கல் | | | | | | |
| 23 | இராமநாதபுரம் | 17 | பரமகுடி | 15<br>16 | உச்சிப்புளி<br>தேவிப்பட்டினம் | | | | |
| 24 | சிவகங்கை | 18 | சிவகங்கை | 17 | சதுர்வேத மங்கலம் | | | | |
| 25 | விருதுநகர் | 19 | விருதுநகர் | 18 | தேவதானம் | | | | |
| 26 | திருநெல்வேலி | 20 | பாளையங் கோட்டை | 19<br>20 | செங்கோட்டை<br>வடகரை | | | | |
| 27 | தூத்துக்குடி | 21 | தூத்துக்குடி | 21 | கிள்ளிக்குளம் | | | | |
| 28 | கன்னியா குமரி | 22 | நாகர் கோவில் | 22 | புத்தளம் | 2 | நாகர் கோவில் | | |
| 29 | ஊட்டி | 23 | ஊட்டி | | | | | | |





## அட்டவணை – 7

| வ. எண் | மாவட்டம் | கரும்பு ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | | தென்னை ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | | பருத்தி ஒட்டுண்ணி வளர்ப்பு மையம் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1<br>2 | காஞ்சிபுரம்<br>திருவள்ளூர் | 1 | மதுராந்தகம் | 1<br>2 | செங்கற்பட்டு<br>புட்லூர் | | |
| 3 | கடலூர் | 2 | விருத்தாசலம் | 3 | கடலூர் | | |
| 4 | விழுப்புரம் | 3<br>4 | விழுப்புரம்<br>கள்ளக்குறிச்சி | | | 1 | விழுப்புரம் |
| | | 5 | திண்டிவனம் | | | | |
| 5 | வேலூர் | 6<br>7 | ஆம்பூர்<br>குடியாத்தம் | 4<br>5 | மேலாளத்தூர்<br>வாணியம்பாடி | | |
| | | 8 | திருப்பத்தூர் | 6 | நாட்ராம்பள்ளி (திருப்பத்தூர்) | | |
| 6 | திருவண்ணா மலை | 9 | திருவண்ணா மலை | | | | |
| 7 | சேலம் | 10 | மோகனூர் | 7 | சுக்கம்பட்டி | | |
| 8 | நாமக்கல் | | | 8 | பரமத்திவேலூர் | | |
| 9 | தருமபுரி | 11 | பாப்பாரப்பட்டி | 9 | தருமபுரி | | |
| 10 | கிருஷ்ணகிரி | | | | | | |
| 11 | கோயம்புத்தூர் | 12 | உடுமலைப்பேட்டை | 10 | பொள்ளாச்சி | | |
| 12 | ஈரோடு | 13 | கோபி | 11 | கோபி | 2 | கோபி |
| 13 | திருச்சி | 14 | லால்குடி | 12 | திருச்சிராப்பள்ளி | | |
| 14 | பெரம்பலூர் | 15 | பெரம்பலூர் | | | | |
| 15 | கரூர் | 16 | கரூர் | | | | |
| | | 17 | குளித்தலை | | | | |
| 16 | புதுக்கோட்டை | | | | | | |
| 17 | தஞ்சாவூர் | 18 | தஞ்சாவூர் | 13 | தஞ்சாவூர் | | |
| 18 | நாகப்பட்டினம் | 19 | மயிலாடுதுறை | | | | |
| 19 | திருவாரூர் | | | | | | |
| 20 | மதுரை | 20 | மேலூர் | 14 | மதுரை (வ) | 3 | மேலூர் |
| 21 | தேனி | | | | | | |
| 22 | திண்டுக்கல் | 21 | நிலக்கோட்டை | | | | |
| 23 | இராமநாதபுரம் | | | 15 | உச்சிப்புளி | | |
| 24 | சிவகங்கை | | | 16 | சிங்கம்புணரி | | |
| 25 | விருதுநகர் | | | 17 | தேவதானம் | | |
| 26 | திருநெல்வேலி | | | 18 | செங்கோட்டை | | |
| 27 | தூத்துக்குடி | | | 19 | உடன்குடி | | |
| 28 | கன்னியாகுமரி | | | 20 | நாகர்கோவில் | | |
| 29 | ஊட்டி | | | | | | |

[2006 ஆகஸ்ட் 3

# அத்தியாயம்–3

# தோட்டக்கலை

## 1. முன்னுரை

தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணச்சுவைப் பயிர்கள், மலைப் பயிர்கள், மலர்கள் மற்றும் மூலிகைப் பயிர்களைப் பயிரிடுவதற்கேற்ற பல்வேறு தட்பவெப்ப நிலைகளைத் தமிழகம் பெற்றுள்ளது. தமிழகம் தோட்டக்கலை சாகுபடியில் நாட்டின் தேசியப் பரப்பளவில் 5.3 சதம் ஆகும். தோட்டக்கலை விளைபொருள் உற்பத்தியில் 8.7 சதம் ஆகும். இம்மாநிலத்தில், தோட்டக்கலை வளர்ச்சிக்கு ஏதுவாக, அதிக அளவில் தரிசு நிலங்களும், சரிவரப் பயன்படுத்தப்படாத நிலங்களும் உள்ளன. தமிழ்நாடு 1076 கி.மீ. நீண்ட நெடிய கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ளது. முந்திரி, வெப்ப மண்டல ஆர்க்கிட் மலர்கள் முதலியவற்றைப் பயிரிடச் சாதகமாக இக்கடலோரப் பகுதிகள் அமைந்துள்ளது. தென் தமிழ்நாடு மா மற்றும் திராட்சை போன்ற பயிர்களின் இடைப்பருவக் காய்ப்பிற்கான வாய்ப்பு வளத்தைப் பெற்றுள்ளது.

விவசாயிகளிடம், உயர் மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி குறித்து அதிக விழிப்புணர்வு அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 8 விழுக்காடு ஆண்டு வளர்ச்சி விகிதத்தைத் தோட்டக்கலைத் துறையில் அடையத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதி ஆண்டான 2011–2012-ல் உற்பத்தியை இரண்டுமடங்காக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(பரப்பு : இலட்சம் – எக்டேரில், உற்பத்தி: இலட்சம் மெட்ரிக் டன்னில், உற்பத்தித் திறன் : மெட்ரிக் டன் / எக்டேர்.)

| வ. எண் | பயிர் வகை | 2000–2001 | | | 2005–2006 (உத்தேசம்) | | | 2006–2007 (இலக்கு) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | உற் பத்தி | உற் பத்தித் திறன் | பரப்பு | உற் பத்தி | உற் பத்தித் திறன் | பரப்பு | உற் பத்தி | உற் பத்தித் திறன் |
| 1 | பழங்கள் | 2.23 | 40.06 | 17.96 | 2.55 | 48.56 | 19.07 | 2.75 | 52.53 | 19.10 |
| 2 | காய்கறிகள் | 2.20 | 59.39 | 26.99 | 2.32 | 68.00 | 29.33 | 2.50 | 73.50 | 29.40 |



2006 ஆகஸ்ட் 3]

| வ. எண் | பயிர் வகை | 2000–2001 | | | 2005–2006 (உத்தேசம்) | | | 2006–2007 (இலக்கு) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | உற் பத்தி | உற் பத்தித் திறன் | பரப்பு | உற் பத்தி | உற் பத்தித் திறன் | பரப்பு | உற் பத்தி | உற் பத்தித் திறன் |
| 3 | நறுமணப் பயிர்கள் | 1.68 | 6.62 | 3.94 | 1.54 | 8.68 | 5.64 | 1.66 | 9.96 | 6.00 |
| 4 | மலைப் பயிர்கள் | 2.20 | 7.73 | 3.51 | 2.49 | 8.30 | 3.23 | 2.34 | 9.24 | 3.50 |
| 5 | மலர்கள் | 0.19 | 1.45 | 7.75 | 0.25 | 2.02 | 8.11 | 0.27 | 2.30 | 8.50 |
| 6 | மூலிகைப் பயிர்கள் | 0.01 | 0.02 | 0.02 | 0.06 | 0.11 | 2.00 | 0.06 | 0.13 | 2.10 |
| | மொத்தம் | 8.51 | 115.27 | 13.55 | 9.21 | 135.67 | 14.77 | 9.88 | 147.66 | 14.95 |

## 2. மாநிலத் திட்டங்கள்

### 2.1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

#### அ. பரப்பு விரிவாக்கம்

இத்திட்டம் தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர இதர 29 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தரமான நடவுச் செடிகள், உயர் விளைச்சல்/வீரிய ஒட்டுக் காய்கறி விதைகள் 50 சதவிகித மான்ய விலையில் தோட்டக்கலை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

#### ஆ. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

இத்துறையின்கீழ் 51 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் 4 பூங்காக்கள் (தாவரவியல் பூங்கா, உதகை உட்பட) இயங்கி வருகிறது. பல்வேறு திட்டத்தின்கீழ் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் தாய்க்குணமுள்ள தரமான நடவுச் செடிகள் உற்பத்தி செய்து தோட்டக்கலை விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இப்பண்ணைகள் அப்பகுதி விவசாயிகளுக்கு மாதிரி செயல் விளக்கப் பண்ணைகளாகவும் விளங்குகின்றன. தாவரவியல் பூங்கா மற்றும் பூங்காக்கள் மாணவர்கள் கல்விக்குப் பயனுள்ளதாகவும், பொது மக்கள் கண்டுகளிக்கச் சுற்றுலாத்தலமாகவும் உள்ளது. 2005–2006 ஆம் ஆண்டு இத்தோட்டக்கலைப் பண்ணைகளில் 88.842 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

2006–2007 ஆம் நிதியாண்டில் இத்தோட்டக்கலைப் பண்ணைகளின்மூலம் 95 இலட்சம் பழக்கன்றுகள், மலர்ச்செடிகள், நறுமணப்பயிர்கள், அலங்காரச் செடிகள், நிழல் தரும் மரக் கன்றுகள்,

[2006 ஆகஸ்ட் 3

மருத்துவ மற்றும் மூலிகைச் செடிகள் உற்பத்தி செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

**இ. தோட்டக்கலைப் பயிற்சி மையம்**

இத்துறையின்கீழ் ஏற்கெனவே செயல்பட்டு வரும் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை மற்றும் திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு தோட்டக்கலைப் பயிற்சி மையங்களைத் தவிர, கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் ஒரு பயிற்சி மையமும், நீலகிரி மாவட்டத்தில் ஒரு பயிற்சி மையமும் துவங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையங்களில் உயர் தொழில்நுட்ப முறைகளில் விவசாயிகளுக்கும் களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2005–06 ஆம் ஆண்டில் 492 களப் பணியாளர்களுக்கு இப்பயிற்சி மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. 2006–07 ஆம் ஆண்டில் 1500 விவசாயிகளுக்கும், 600 களப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்படும்.

2005–06–ல் ரூ.854.010 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் 2006–07 நிதியாண்டில் ரூ. 876.710 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**2.2. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பழங்குடி விவசாயிகளுக்கு 75 சதவீத மான்யத்தில் தரமான நடவுச் செடிகள், காய்கறி விதைகள் விநியோகிக்கப்படுகின்றன. உயர் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்க சுற்றுலா மற்றும் பயிற்சியும் வழங்கப்படுகிறது. 2005–06ஆம் ஆண்டில் ரூ.39.321 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2006–07-ம் நிதியாண்டில் ரூ.40.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**2.3. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலை விவசாயிகளுக்கு 25 சதவீத மான்யத்தில் தரமான மா, நெல்லி, சப்போட்டா நடவுச் செடிகள் மற்றும் இதர தோட்டக்கலை இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம் தற்போது பல மாவட்டங்களில் செயல்படுத்துவதை கருத்திற்



2006 ஆகஸ்ட் 3]

கொண்டு 2006–2007 ஆம் நிதியாண்டில் ரூ.77.67 இலட்சம் நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**2.4. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்மூலம் தரமான பழக்கன்றுகள், உயர் விளைச்சல் காய்கறி விதைகள், நறுமணப் பயிர்களின் நடவுச் செடிகள் 25 சத மானியத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 2005–06ஆம் ஆண்டு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ரூ.298.250 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. நீலகிரி மாவட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டச் செயலாக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால் 2006–07–ம் நிதியாண்டில் ரூ.299.06 இலட்சம் நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**2.5. பகுதி–2 திட்டங்கள்**

பகுதி–2 திட்டங்கள் ரூ.50.00 இலட்சம் செலவில் 25 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு விசை உழுவான் (பலநோக்கு நீர்த் தொட்டியுடன்) வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, ரூ.9.580 இலட்சம் செலவில் இத்திட்டத்தின் கீழ் 15 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு 18 எக்டேர் பரப்பளவில் இயற்கைப் பண்ணையம் அமைக்கப்பட்டது. 2006–07ஆம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படாத 15 மாவட்டங்களில் இயங்கும் 11 தோட்டக்கலைப் பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.40.02 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

**2.6. நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம்**

சென்னை நகர்வாழ் மக்களுக்கு செடிகள், உரம் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் நகர காய்கறி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படுவதுடன் தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. 2005–06ஆம் ஆண்டில் ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 2006–07–ம் நிதியாண்டில் ரூ.3.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**2.7. அ. தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் (தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்).**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 400 எக்டேர் பரப்பில் விவசாயிகளின் நிலங்களில் ரூ.720.60 இலட்சம் செலவில் துல்லியப்

[2006 ஆகஸ்ட் 3

பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உயர் மதிப்புள்ள பயிர்களான கெர்கின்ஸ், வீரிய தக்காளி, கொடைமிளகாய், பச்சைமிளகாய், பேபி மக்காச்சோளம், வெள்ளை வெங்காயம், வெண்டை, முட்டைகோஸ் மற்றும் காலிபிளவர் போன்றவை உயர் தொழில்நுட்பங்களைக் கையாண்டு பயிரிடப்படுகின்றன. இத்திட்டம் அறிமுகத் திட்டம் என்பதால் முதலாண்டு தேர்வு செய்யப்படும் பயனாளிக்கு 100 சத மானியமும், இரண்டாமாண்டில் தேர்வு செய்யப்படும் பயனாளிக்கு 90 சத மானியமும், மூன்றாமாண்டில் தேர்வு செய்யப்படும் பயனாளிக்கு 80 சத மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டமானது மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

2004–05 ஆம் ஆண்டில் 100 எக்டேர் பரப்பளவிலும் 2005–06 ஆம் ஆண்டில் 200 எக்டேர் பரப்பளவிலும் துல்லியப் பண்ணையம் அமைக்கப்பட்டது. 2006–07-ம் ஆண்டில் 100 எக்டேர் பரப்பில் ரூ.120.850 இலட்சம் நிதிச் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் செயல் திட்ட அடிப்படையில் (Turnkey Project) செயல்படுத்தப்படுகிறது.

### (ஆ) தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் (ஏழு மாவட்டங்களில்)

வேலூர், ஈரோடு, மதுரை, தேனி, திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் 90% மானியத்துடன் செயல்படுத்திட ரூ.992.950 இலட்சம் 2005–2006 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு பழப் பயிர்கள், காய்கறிகள் மற்றும் மலர்கள் ஆகியன 735 எக்டேர் பரப்பளவில் துல்லிய பண்ணைய முறைப்படி அமைக்கப்படும். மேலும், 2006–07-ம் நிதியாண்டில் ரூ.1000.00 இலட்சம் நிதியில் இத்திட்டம் 735 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.8. நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப்பயிர் திட்டம்

நீலகிரி மாவட்டதில் மாற்றுப்பயிர் திட்டம் செயல்படுகிறது. பல அடுக்குப் பயிர்ச் சாகுபடி முறைகளில் சில்வர் ஓக், மிளகு, ஏலம், கமலா, ஆரஞ்சு ஆகிய பயிர்களைத் தேயிலையுடன் ஊடு பயிராக பயிரிடும் முறையினைப் பிரபலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் நிலவும் வேளாண் தட்ப வெப்ப நிலையைக் கருத்தில் கொண்டு புதிய வகைப் பயிர்களான மெக்கடமியா மற்றும் பீக்கான்கொட்டை ஆகிய பயிர்கள்



2006 ஆகஸ்ட் 3]

அறிமுகப்படுத்தப்படவுள்ளன. சோதனை அடிப்படையில், இப்பயிர்களை நஞ்சநாடு மற்றும் கோல்கிரைன் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் வளர்த்து பின்னர் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் விவசாயிகளின் நிலங்களில் இவை அறிமுகப்படுத்தப்படும். கடந்த நிதியாண்டைப் போலவே 2006–07 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 2.9. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின்கீழ் மா மற்றும் முந்திரி அடர் நடவினை தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்த ரூ.16.12 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் 50 எண்கள் மா மற்றும் முந்திரி செயல் விளக்கப் பாத்திகள் நடப்பு ஆண்டில் அமைக்கப்படும். மேலும் நவீன முறையில் இப்பயிர்களின் சாகுபடி மற்றும் அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி முதலிய அம்சங்களும் விவசாயிகளுக்குக் கற்றுத்தரப்படும்.

### 3. மாநில மற்றும் மைய அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்கள்

### 3.1. புதுமைத் திட்டம் (மைய அரசு 90% மாநில அரசு 10%)

இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலை விளைபொருட்களை சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், சிப்பமிடுதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படும். 2004–05-ம் ஆண்டில் மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாத ரூ.169.98 இலட்சம் மறு செல்லுபடியாக்கம் செய்யப்பட்டு ரூ.73.260 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. 2006–07 ஆம் ஆண்டில் ரூ.96.72 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 3.2. நுண்ணீர்ப் பாசனத் திட்டம் (மைய அரசு 80% மாநில அரசு 20%)

இத்திட்டத்தின்கீழ் நுண்ணீர்ப் பாசன முறைகளான சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் தோட்டக்கலைப் பயிர்களில் அமைக்கப்படும். மேற்கண்ட பாசன கருவிகள் 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 5 எக்டேர் வரை மானியம் வழங்கப்படும். 2006–07ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.15,742.62 இலட்சம் செலவில் 80,167 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படும். இதனால் 80,200 விவசாயிகள் பயன்பெறுவார்கள். இத்திட்டம் 29 மாவட்டங்களில்

அம்மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட இயக்க குழுமூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

**மைய அரசின் முழுப் பங்குத் திட்டங்கள்**

**4. தேசிய தோட்டக்கலை இயக்கம்**

உரிய இரகங்களைத் தேர்ந்தெடுத்து நடவு செய்தல், உயர் வேளாண் தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தல், அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி, பதனிடுதல் மற்றும் வணிகத் தொடர்புகள் முதலியவற்றை உள்ளடக்கி இணைந்து செயல்படுத்தும் ஒரு சிறப்புத் திட்டமாகும். இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதி உதவிகள் பின்வருமாறு:—

(அ) தரமான நடவுச் செடிகளை உற்பத்தி செய்ய ஏதுவாக 4 எக்டேர் பரப்பில் 'மாதிரி நாற்றங்கால்' அமைக்க ரூ.18 இலட்சமும், 1 எக்டேர் பரப்பில் சிறிய நாற்றங்கால் அமைக்க ரூ.3 இலட்சமும், நிதியுதவி செய்யப்படுகிறது. அரசு நிறுவனங்களுக்கு 100% மானியமும், தனியாருக்கு 50% மானியமும் வழங்கப்படுகிறது.

(ஆ) காய்கறி விதை உற்பத்திக்காக ஒரு எக்டேருக்கு ரூ.50,000/–ம் முழு மானியமாக அரசு நிறுவனங்களுக்கும், 50% மானியம் தனியாருக்கும் வழங்கப்படுகிறது.

(இ) நிரந்தர பழப்பயிர் சாகுபடிக்கு 75% மானியமாக ஒரு எக்டேருக்கு ரூ. 22,500/–க்கு மிகாமலும் ஆண்டு பழப்பயிர் சாகுபடிக்கு 50 சத மானியமாக ரூ.15,000/–க்கு மிகாமலும் மூன்று ஆண்டுகளில் வழங்கப்படுகிறது.

(ஈ) பல்வேறு மலர்கள் சாகுபடிக்கு 50% மானியமாக எக்டேருக்கு ரூ. 12,000/– முதல் ரூ. 35,000/– வரை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும், 33% மானியமாக எக்டேருக்கு ரூ. 7,920/– முதல் ரூ. 29,700/– வரை இதர விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.

(உ) வாசனைத் திரவியப் பயிர்கள், மருத்துவம் மற்றும் நறுமண பயிர்கள் மற்றும் மலைப்பயிர்கள் சாகுபடிக்கு 75% மானியமாக எக்டேருக்கு ரூ. 11,250/–க்கு மிகாமல் வழங்கப்படுகிறது.

(ஊ) நலிவடைந்த தோட்டங்களைப் புதுப்பிக்க 50% மானியமாக எக்டேருக்கு ரூ. 15,000/– வரை வழங்கப்படுகிறது.

(எ) பொதுக் குளங்கள், ஏரிகள் மற்றும் பண்ணைக் குட்டைகள் அமைக்க 10 எக்டேருக்கு ரூ.10 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.



(ஏ) பசுமைக்குடில் அமைக்க ஒரு சதுர மீட்டருக்கு 50% மானியமாக ரூ.215 முதல் ரூ.325 வரை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் 33% மானியமாக 1 சதுர மீட்டருக்கு ரூ.67/– முதல் ரூ.125/– வரை இதர விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது.

(ஐ) நிலப்போர்வை அமைக்க ஒரு எக்டேருக்கு 50% மானியமாக ரூ. 7,000/–ம் மற்றும் நிழல்வலை அமைக்க ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 7/–ம் வழங்கப்படுகிறது.

(ஒ) ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள 50% மானியமாக ஒரு எக்டேருக்கு ரூ. 1,000/– வழங்கப்படுகிறது.

(ஓ) இயற்கை வேளாண்மை முறைகளைப் பிரபலப்படுத்த 50% மானியமாக ஒரு எக்டேருக்கு ரூ. 10,000/–க்கு மிகாமலும், மண்புழு உரம் தயாரிக்க 50% மானியமாக ஒரு அலகிற்கு ரூ. 15,000/–மும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட இரகப் பயிர்களாக மா, நெல்லி, வாழை, முந்திரி, மிளகாய், மஞ்சள், மணமூட்டும் பயிர்கள் மற்றும் மலர்கள் தேர்வு செய்யப்பட்டு தொகுதியாக சாகுபடி செய்யப்படுகிறது. கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, கடலூர், மதுரை, தேனி, திண்டுக்கல், திருச்சி, சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 13 மாவட்டங்களில் மைய அரசால் விடுவிக்கப்பட்ட ரூ. 3891.67 இலட்சத்தில், ரூ.2462.67 இலட்சம் மட்டும் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 2006–07ஆம் நிதியாண்டில் நீலகிரியையும் சேர்த்து 14 மாவட்டங்களில் ரூ.9304.72 இலட்சம் செலவினத்தில் 29,730 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் மாவட்ட இயக்க குழுமூலம் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் இக்குழுவின் உறுப்பினர்–செயலாளர் ஆவார்.

**5. தமிழ்நாடு தோட்டக்கலை நாற்றங்கால் (ஒழுங்குமுறை) சட்டம்**

நல்ல தரமுள்ள மரபணு மாறாத நடவுச் செடிகள் விவசாயிகளுக்கு வழங்குவது இன்றியமையாதது. ஆண்டுதோறும் தோட்டக்கலைத் துறையின்கீழ் செயல்படும் 55 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்,

[2006 ஆகஸ்ட் 3

பூங்காக்கள் மற்றும் 285 தனியார் தோட்டக்கலை நாற்றங்கால்கள்மூலம் 2.05 கோடி நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நடவுச் செடிகளின் தரத்தினை உறுதி செய்ய தற்பொழுது தகுந்த வழிமுறைகளோ, சட்டமோ இல்லாததால், தமிழக அரசு சட்ட வரைவு ஒன்றை மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியது. இதற்கான சட்ட முன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கான ஒப்புதலைக் குடியரசுத் தலைவர் அளித்திருப்பதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு தோட்டக்கலை நாற்றங்கால் (ஒழுங்குமுறை) சட்டம் விரைவில் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு சட்டமாக்கப்படும்.

## 6. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை 18-6-2004ல் அமைக்கப்பட்டு, 1975 ஆம் ஆண்டைய தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த இவ்வமைப்பு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, இந்திய அரசின் திட்டங்களான தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர்ப் பாசனம் போன்ற திட்டங்கள் மற்றும் மத்திய அரசால் நிதியுதவி பெறும் தேசிய தோட்டக்கலை வாரியம், வேளாண்மைப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றின் திட்டத்தினைச் செயல்படுத்தும் சிறப்பு நோக்க ஊர்தியாகச் செயல்படும்.

## 7. சுனாமி நிவாரணம்

2004 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட சுனாமியால் விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 669.82 எக்டேர் தோட்டக்கலைப் பயிர்கள் பாதிக்கப்பட்டன. மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளவிருக்கும் நிவாரண நடவடிக்கைகளுக்காக ரூ. 100.48 இலட்சம் மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் முதலாண்டு தொகையான ரூ.63.36 இலட்சம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் 2,507 விவசாயிகளுக்கு நிலச் சீர்திருத்தம் செய்தல், செம்மண், ஜிப்சம் இடுதல் மற்றும் இப்பகுதிகளில் உயர் விளைச்சல் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்யும் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. மீதத் தொகை ரூ.37.12 இலட்சம் இரண்டு மற்றும் மூன்றாவது ஆண்டுகளில் (2006–2007, 2007–2008) பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீராக்கம் செய்வதற்காக செலவிடப்படும்.



2006 ஆகஸ்ட் 3]

## 8. இலக்கு மற்றும் சாதனை

மாநிலத் திட்டங்கள், மைய மற்றும் மாநில அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்கள் மற்றும் மைய அரசின் முழுப் பங்குத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான 2005–2006ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் 2006–2007ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

### 8.1. மாநிலத் திட்டங்கள்

அலகு-ரூபாய் இலட்சங்களில்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | அலகு | 2005–2006 | | | | 2006–07 முன்மொழிவு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | பொருள் இலக்கு | நிதி ஒதுக்கீடு |
| 1 | ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம் | | | | | | | |
| (அ) | பரப்பு விரிவாக்கம் | எக். | 16802 | 16802 | 261.000 | 261.280 | 16800 | 272.410 |
| (ஆ) | அரசு தோட்டக் கலைப் பண்ணை | இல எண் | 86.467 | 88.842 | 594.580 | 587.490 | 95 | 593.080 |
| (இ) | தோட்டக்கலைப் பயிற்சி மையம் விவசாயிகள் களப் பணியாளர்கள் | எண் | 1400<br>600 | 492 | 11.640 | 5.240 | 1500<br>600 | 11.220 |
| | மொத்தம் | | – | – | 867.220 | 854.010 | – | 876.710 |
| 2 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | எக். | 904 | 904 | 39.330 | 39.321 | 900 | 40.000 |

[2006 ஆகஸ்ட் 3

| வ. எண். | திட்டத்தின் பெயர் | அலகு | 2005–2006 | | | | 2006–07 முன்மொழிவு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | | |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | பொருள் இலக்கு | நிதி ஒதுக்கீடு |
| 3 | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | எக். | 2828 | 2828 | 133.770 | 105.520 | 1500 | 77.670 |
| 4 | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | எக். | 2659 | 2659 | 297.500 | 298.250 | 2000 | 299.060 |
| 5 | பகுதி–2 திட்டங்கள் | எண்<br>எக்டேர் | 25<br>24 | 25<br>18 | 50.00<br>10.00 | 50.000<br>9.580 | – | 40.02 |
| 6 | நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம் | எண் | 100 | 100 | 2.90 | 2.900 | 100 | 3.00 |
| 7.a. | தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் (தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) | எக். | 200 | 200 | 166.08 | 83.080 | 100 | 120.85 |
| 7.b. | தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் ( 7 மாவட்டங்களில்) | எக். | 735 | 735 | 992.95 | 992.950 | 735 | 1000.00 |
| 8 | நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர்த் திட்டம் | எக்டேர் | 11.5 | 11.5 | 50.00 | 50.000 | 12 | 50.00 |
| 9 | தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் | எக். | 50 | 50 | 16.12 | 16.120 | – | – |
| | ஆக மொத்தம் | | – | – | 2625.87 | 2501.731 | – | 2507.31 |



2006 ஆகஸ்ட் 3]

**8.2. மைய மற்றும் மாநில அரசு பகிர்வு பெறும் திட்டங்கள்**

அலகு – ரூபாய் இலட்சங்களில்

| வ. எண். | திட்டங்களின் பெயர் | அலகு | 2005–06 | | | | 2006–07 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி | | பொருள் | நிதி |
| | | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | இலக்கு |
| 1 | தோட்டக் கலையில் புதுமைத் திட்டங்கள் | எண் | 39 | 17 | 169.98 | 73.26 | 22 | 96.72 |
| 2 | நுண்ணீர்ப் பாசனம் | எக். | – | – | – | – | 80167 | 15742.62 |
| | மொத்தம் | | | | 169.98 | 73.26 | | 15839.34 |

**8.3. மைய அரசின் முழு பங்குத் திட்டங்கள்**

அலகு – ரூபாய் இலட்சங்களில்

| திட்டத்தின் பெயர் | விவரங்கள் | நிதி | | |
|---|---|---|---|---|
| | | 2005–06 | | 2006–07 |
| | | விடுவிப்பு | சாதனை | முன்மொழிவு |
| 1 தேசிய தோட்டக்கலை இயக்கம் | | | | |
| (அ) நடவுப் பொருட்கள் உற்பத்தி | | 858.00 | 658.00 | 183.00 |
| (ஆ) புதிய தோட்டங்கள் அமைத்தல் | | 1251.00 | 851.00 | 3547.70 |
| (இ) பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல் | | 138.90 | 138.90 | 375.00 |
| (ஈ) நீர் ஆதாரங்களை உருவாக்குதல் | | 530.00 | 330.00 | 1000.00 |
| (உ) பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி செய்தல் | | 121.00 | 121.00 | 299.09 |
| (ஊ) ஒருங்கிணைந்த உர மேலாண்மை/ ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மை | | 309.00 | 109.00 | 508.00 |
| (எ) இயற்கைப் பண்ணையம் | | 152.60 | 152.60 | 474.00 |
| (ஏ) மனிதவள மேம்பாடு | | 188.00 | 80.00 | 172.50 |

[2006 ஆகஸ்ட் 3

| திட்டத்தின் பெயர் | விவரங்கள் | நிதி | | |
|---|---|---|---|---|
| | | 2005–06 | | 2006–07 |
| | | விடுவிப்பு | சாதனை | முன்மொழிவு |
| (ஐ) தேனீக்கள் வாயிலாக மகரந்தச் சேர்க்கைக்கு உதவிடல் | | 10.24 | 10.24 | 11.20 |
| (ஒ) அறுவடைக்குப் பின் மேலாண்மை உத்திகள் | | 224.78 | – | 1391.74 |
| (ஓ) இயக்கக மேலாண்மை | | 108.15 | 11.93 | 600.00 |
| (ஔ) புதிய இனங்கள் | | 0.00 | 0.00 | 742.50 |
| மொத்தம் | | 3891.67 | 2462.67 | 9304.72 |

**9. முக்கிய திட்டக் கோட்பாடுகள் 2006–07**

1. நுண்ணீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடுதல் உள்ளிட்ட உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலையினை மேம்படுத்துதல்.
2. ஒருங்கிணைந்த, பூச்சி மேலாண்மை / ஒருங்கிணைந்த உர மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்தல்.
3. உயர் தொழில்நுட்பம் / திசு வளர்ப்பு மேம்பாடு
4. தோட்டக்கலை சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்
5. மா; திராட்சையில் இடைப்பருவக் காய்ப்பினை மையப்படுத்துதல்.
6. தரமான நடவுச் செடிகளை உற்பத்தி செய்தல்
7. இயற்கைப் பண்ணையத்தினைப் பிரபலப்படுத்துதல்
8. ஏற்றுமதியை ஊக்குவிக்க வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைத்தல்.
9. பயிற்சியின்மூலம் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குக் கற்பித்தல்.
10. விரிவாக்க அலுவலர்களுக்கு அதிக திறன் கொண்ட பயிற்சியின்மூலம் மனித வள மேம்பாட்டை ஏற்படுத்துதல்.
11. அறுவடைக்குப் பின் மேலாண்மை மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பைக் குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.



2006 ஆகஸ்ட் 3]

**இணைப்பு**

**அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | இருப்பிடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 12.00 |
| 2 | கோயம்புத்தூர் | கல்லார் | 8.72 |
| 3 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 27.66 |
| 4 | கடலூர் | நெய்வேலி | 40.48 |
| 5 | கடலூர் | விருத்தாச்சலம் | 10.53 |
| 6 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 9.89 |
| 7 | தருமபுரி | ஜீனூர் | 122.38 |
| 8 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 5.16 |
| 9 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா, கொடைக்கானல் | 8.30 |
| 10 | திண்டுக்கல் | தாண்டிக்குடி | 5.45 |
| 11 | திண்டுக்கல் | ரெட்டியார்சத்திரம் | 5.33 |
| 12 | திண்டுக்கல் | சிறுமலை | 202.47 |
| 13 | காஞ்சிபுரம் | ஆத்தூர் | 12.24 |
| 14 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 22.96 |
| 15 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 42.12 |
| 16 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 20.36 |
| 17 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 12.80 |
| 18 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 6.07 |
| 19 | நாமக்கல் | செம்மேடு | 11.62 |
| 20 | நாமக்கல் | படசோலை | 28.14 |
| 21 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 118.68 |
| 22 | புதுக்கோட்டை | மாபெரும் பழப்பண்ணை, வல்லத்திராக்கோட்டை | 521.20 |
| 23 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 53.02 |
| 24 | சேலம் | ஏற்காடு | 10.12 |
| 25 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை, கருமந்துறை | 419.77 |
| 26 | சேலம் | மணியார்குண்டம் | 100.00 |

[2006 ஆகஸ்ட் 3

| வ. எண் | மாவட்டம் | இருப்பிடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 27 | சேலம் | காய்கறி விதை உற்பத்தி மையம், கருமந்துறை | 5.49 |
| 28 | சேலம் | கருமந்துறை | 39.35 |
| 29 | சேலம் | முள்ளுவாடி | 48.20 |
| 30 | சேலம் | சிறுமலை (அறுநூத்துமலை) | 8.10 |
| 31 | சிவகங்கை | தேவக்கோட்டை | 81.20 |
| 32 | சிவகங்கை | நேமம் | 38.77 |
| 33 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 8.80 |
| 34 | தஞ்சாவூர் | மருங்குளம் | 10.58 |
| 35 | நீலகிரி | பர்லியார் | 6.25 |
| 36 | நீலகிரி | காட்டேரி | 18.96 |
| 37 | நீலகிரி | குன்னூர் | 4.05 |
| 38 | நீலகிரி | பழவியல் நிலையம், குன்னூர் | 6.52 |
| 39 | நீலகிரி | குன்னூர், சிம்ஸ் பூங்கா | 12.14 |
| 40 | நீலகிரி | தொட்டபெட்டா | 4.00 |
| 41 | நீலகிரி | தும்மனட்டி | 9.80 |
| 42 | நீலகிரி | விஜயநகரம் | 14.40 |
| 43 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, உதகை | 22.00 |
| 44 | நீலகிரி | நஞ்சநாடு | 85.18 |
| 45 | நீலகிரி | தேவாலா | 80.00 |
| 46 | தேனி | பெரியகுளம் | 9.31 |
| 47 | திருவள்ளூர் | மாதவரம் | 5.76 |
| 48 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 40.43 |
| 49 | திருநெல்வேலி | குற்றாலம் | 14.89 |
| 50 | கரூர் | முதலைப்பட்டி | 23.96 |
| 51 | வேலூர் | தகரக்குப்பம் | 34.40 |
| 52 | வேலூர் | கூடப்பட்டு | 10.40 |
| 53 | வேலூர் | நவ்லாக் | 84.45 |
| 54 | விருதுநகர் | பூவானி | 9.57 |
| 55 | விருதுநகர் | மாபெரும் பழப்பண்ணை, ஸ்ரீவில்லிப்புத்தூர் | 46.27 |
| | | மொத்தம் | 2620.70 |



2006 ஆகஸ்ட் 3]

# அத்தியாயம்–4

## வேளாண்மைப் பொறியியல்

### 1. முன்னுரை

நிலம் மற்றும் நீர் மேலாண்மைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வேளாண்மைப் பொறியியல் துறை முக்கியப் பங்காற்றுகிறது. நுண்ணிய நீர்வடிப் பகுதி மேம்பாடு அடிப்படையில் நிலத்தின் சரிவிற்கேற்ப சம உயர கற்சுவர், சம உயர வரப்புகள், தடுப்பணைகள் போன்ற மண் வளப் பாதுகாப்புப் பணிகள், பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க் குட்டைகள் போன்ற மழை நீர் சேகரிப்பு கட்டுமானப் பணிகள் மற்றும் கால்வாய், ஏரி, கிணற்றுப் பாசனப் பகுதிகளில் நீர் மேலாண்மைப் பணிகள் ஆகியன துறையின் முக்கியச் செயல்பாடுகள் ஆகும். வேளாண்மைக் கருவிகளின் செயல்விளக்கம் மற்றும் பயிற்சி, வேளாண்மைக் கருவிகள் வழங்குதல் ஆகியனமூலம் வேளாண்மை இயந்திரமயமாக்குதலைப் பிரபலப்படுத்துதல், பழைய திறனற்ற பம்பு செட்டுகளுக்குப் பதிலாக புதிய திறனுடைய பம்புசெட்டுகள் வழங்குதல் ஆகியன இத்துறையின் சமீப காலத்து முயற்சிகளாகும்.

### 2. நீர்வடிப் பகுதி மேலாண்மை

### 2.1. நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் (மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்)

நீர்த்தேக்கங்களில் வண்டல் சேர்வதைக் குறைத்திட தமிழகத்திலுள்ள நதிப் பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய மண் மற்றும் நிலப் பயன்பாட்டு அளவை நிறுவனம் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்திய மற்றும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள நீர்வடிப் பகுதிகளில், ஒவ்வொரு நீர்வடிப் பகுதிவாரியாக பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், 90 : 10 என்ற விகிதத்தில், செயல்படுத்தப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் தென் பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நதிப் பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 7,700 எக்டே[illegible] ரூ.900.00 இலட்சம் செலவில் இத்திட்டத்தைச் [illegible] திட்டமிடப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 3

**2.2. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள்**

பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளை ஒருங்கிணைத்து முன்னேற்றம் காணும் வகையில் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள ஜவ்வாது மலைப் பகுதி, சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள கல்ராயன் மலைப் பகுதி, சேலம் மாவட்டத்திலுள்ள சேர்வராயன் மலைப் பகுதி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள சித்தேரி மலைப் பகுதி, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலைப் பகுதி, திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சைமலைப் பகுதி ஆகிய பகுதிகளில் வாழும் பழங்குடி விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இப்பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் நிலச் சமன்பாடு, சம உயர கல் வரப்புகள், தாவர வேலிகள் மற்றும் தடுப்பு அணைகள் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 100 விழுக்காடு அரசு மானியத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், சீரமைத்த நிலங்களில் விவசாயம் செய்யவும் வழி வகுக்கிறது. 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.138.00 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.3. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள்.**

ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாடு அடிப்படையில் நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலை மீட்டு மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். நீலகிரி மாவட்டம் 75 நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்வடிப் பகுதிகளில், மிகவும் பாதிக்கப்பட்ட முன்னுரிமை நீர்வடிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்புப் பணிகளுடன் நிலச் சரிவு தடுப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு பயனாளிகளின் பங்காக 10% பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன உழவர்களின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கும் 5% பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. மீதச் செலவு அரசினால் ஏற்கப்படுகிறது. நிலச்சரிவு தடுப்புப் பணிகள் அரசின் 100% மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.350.00 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 3]

**2.4. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள்.**

கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் நீர்வடிப் பகுதி அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. தனியார் நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு பயனாளிகளின் பங்காக 10% பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன உழவர்களின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கும் 5% பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. மீதச் செலவு அரசினால் ஏற்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.590.16 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.5. தமிழ்நாட்டின் நீர்வடிப் பகுதிகளில் மழை நீர் சேகரிப்பு மற்றும் மழை நீர் மேலாண்மைப் பணிகள்.**

மாநிலத்தில் பல பகுதிகளில் நிலத்தடி நீரை மிக அதிகமாகப் பயன்படுத்துவதால், நிலத்தடி நீர் மட்டம் இறவை இயந்திரங்களின் இழுவைச் சக்திக்கும் மிகவும் கீழே குறைந்து கொண்டே வருகிறது. கிணற்றுப் பாசனப் பகுதிகளில் மழை நீர் சேகரிப்பதற்கும் மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கும் சிறப்பான தொழில் நுட்பங்கள் தேவைப்படுகின்றன. நீர்வடிப் பகுதிகளில் மண்ணின் ஈரத்தன்மையைக் காத்து அதிக பரப்பில் விவசாயம் மேற்கொள்ளும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் மழை நீர் சேகரிப்பு மற்றும் மழை நீர் மேலாண்மைப் பணிகள் நீர்வடிப் பகுதி அடிப்படையில் 2006–2007 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.64.09 கோடி செலவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதில், மாநில அரசின் நிதி உதவியுடன் மழை நீர் சேகரிப்பு மற்றும் மழை நீர் மேலாண்மைப் பணிகள் ரூ.17.28 கோடி செலவிலும் மற்றும் நபார்டு வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் மழை நீர் சேகரிப்பு பணிகள் ரூ.47.81 கோடி கடனுதவியுடனும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3. நீர் மேலாண்மை**

**3.1. பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மை (மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்).**

மாநிலத்தில் கால்வாய்மூலம் பாசனம் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் நீர் உபயோகிக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தற்சமயம் இத்திட்டம் மத்திய மற்றும்

மாநில அரசுகளின் நிதி உதவியுடன், 50:50 என்ற விகிதத்தில், காவிரிப் பாசனப் பகுதி, பரம்பிக்குளம்-ஆழியார் திட்டம், தாமிரபரணி நீர்த் தேக்கத் திட்டம், கடானா–ராமா நதி நீர்ப்பாசனத் திட்டம், நம்பியாறு ஆற்றுப்படுகைத் திட்டம், பச்சையாறு ஆற்றுப்படுகைத் திட்டம், மணிமுத்தாறு நீர்ப்பாசனத் திட்டம், ஆனைமடுவு திட்டம், சின்னாறு நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் மருதா நதித் திட்டம் முதலிய பாசனப் பகுதிகளில் செயலாக்கம் செய்யப்படுகின்றது. பயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்க, மதகுக்குக் கீழ் பாசனம் பெறும் நிலங்களுக்குப் பாசன நீர் மேலாண்மைக் கொள்கையை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் ஐந்து முக்கியப் பணிகள் மற்றும் 2006–2007 ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், தருமபுரி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ள செயல்திட்ட விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

| பணிகள் | 2006–2007ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம் | |
|---|---|---|
| | செயல் (எக்டேரில்) | நிதி (ரூ. இலட்சத்தில்) |
| 1. வயல் வாய்க்கால்கள் அமைத்தல் | 35120 | 2223.36 |
| 2. வயல் வடிகால்கள் அமைத்தல் | 40000 | 1205.00 |
| 3. சுழற்சி முறை நீர்ப் பாசனம் | 44540 | 133.62 |
| 4. விவசாயிகள் பங்கேற்புடன் பாசன மேலாண்மை | பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் விவசாயிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையில், மதகு அளவில் விவசாய சங்கங்கள், பிரிவு கால்வாய் அளவில் விவசாய சபைகள் மற்றும் திட்ட அளவில் விவசாயிகள் பேரவை அமைக்கப்படுகின்றன. | |
| 5. செயல்பாட்டு மானியம் | பதிவு செய்யப்பட்ட விவசாய சபைகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.540/– வீதம் செயல்பாட்டு மானியமாக நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இச்செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமவிகிதத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த நிதி உதவியினைப் பெறுவதற்கு விவசாயிகள் எக்டேருக்கு ரூ.60/– வீதம் தங்கள் பங்காகக் கொடுக்க வேண்டும். | |





### 3.2. நுண்ணிய நீர்ப்பாசனம்

கிணற்றுப் பாசனத்தின் நெருக்கடியைக் குறைக்கவும், பாசன நீரை முறையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்தவும் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் வேளாண்மைப் பொறியியல் துறையினால் 1985–86 ஆம் ஆண்டில் இருந்து விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன. 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனைத்துத் தோட்டக்கலைப் பயிர்களான பழப் பயிர், உருளை, வெங்காயம் மற்றும் இதர கிழங்கு வகைப் பயிர்கள் உட்பட அனைத்து வகை காய்கறிகள், நறுமணச் சுவைப் பயிர்கள், மூலிகை மற்றும் வாசனைப் பயிர்கள் மற்றும் தேயிலை, காபி, ரப்பர், எண்ணெய்பனை நீங்கலாக அனைத்து மலைப் பயிர்களையும் விளைவிக்கும் விவசாயிகள் தங்கள் நிலங்களில் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகளை அமைத்திட மத்திய அரசின் வழிகாட்டு முறைகளின்படி மானியம் வழங்கப்படும். இதைத்தவிர, சொட்டு நீர்ப்பாசன முறைகளைப் பிரபலப்படுத்திட நபார்டு வங்கி தனது ஊரகக் கட்டமைப்பு நிதியின்கீழ் ரூ.38.76 கோடி கடனுதவி வழங்கிட இசைந்துள்ளது.

### 3.3. சிறு பாசனம்

இத்திட்டத்தின்கீழ் நில நீர்ஆய்வுக் கருவி மற்றும் மின்னியல் ஆய்வுக் கருவிகள்மூலம் உழவர்களுக்கு, நீர் ஊற்று இருக்குமிடம், கிணறு அமைக்கும் இடம் முதலியன கண்டறியப்படுகிறது. விசைத் துளைக் கருவி, சிறுவிசைத் துளைக் கருவி, கைத்துளைக் கருவி, பாறை தகர்க்கும் கருவி மற்றும் நீள்துளைக் கருவி போன்ற இயந்திரங்கள்மூலம் பணிகள் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த வாடகையில் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக இத்துறையிடம் பல்வகையான சிறு பாசன இயந்திரங்கள் உள்ளன. 2006–2007 ஆம் ஆண்டில் நிலத்தடி நீர்வளம் உள்ள இடங்களில் இத்திட்டம் தொடரப்பட்டு 2,000 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும். மழை நீர் சேகரிப்பின்மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டுவதற்கான முயற்சிகளை வேளாண்மைப் பொறியியல் துறை தொடர்ந்திடும். ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து நிலத்தடி நீர் செறிவூட்டுதல் போன்ற புதிய தொழில்நுட்பங்களும் மேற்கொள்ளப்படும்.

[2006 ஆகஸ்ட் 3

## 4. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்

### 4.1. வேளாண் இயந்திரங்களை பிரபலப்படுத்தும் திட்டம் (மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பண்ணை இயந்திரங்களை விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வேளாண்மையில் இயந்திரங்களைப் புகுத்துவதன்மூலம் கூடுதலாக பண்ணை சக்தியை வழங்கிடவும், வேளாண் பணியாளர்களின் வேலைப் பளுவைக் குறைத்திடவும், வேளாண் பணிகளை உரிய காலத்தில் முடித்திடவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கிடவும் ஏதுவாக வேளாண் இயந்திரங்களை வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உழவர்களுக்கு பவர் டில்லர்கள், டிராக்டர்கள் போன்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் நாற்று நடும் கருவி, அறுவடை இயந்திரம், கதிர் அறுப்பான் போன்ற பண்ணைக் கருவிகள் சொந்தமாக வாங்கிட இயந்திரங்களின் விலையில் 25 விழுக்காடு அல்லது ரூ.30,000/- இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.450.00 இலட்சம் மானியத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.2. விவசாயிகளுக்கு இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்

வேளாண்மைப் பொறியியல் துறையில் 95 புல்டோசர்கள், 125 டிராக்டர்கள் மற்றும் 4 நெல் அறுவடை இயந்திரங்கள், வாடகைக் கட்டணத்தில் நில மேம்பாட்டுப் பணிகளுக்கு விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இயங்கி வருகின்றன. இத்திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த இயந்திரங்களின்மூலம் அரசு நிர்ணயித்த வாடகை விகிதங்கள்படி விவசாயிகளுக்கு நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தரிசு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் பண்படுத்துவதற்கான பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை உறுதுணையாக இருந்து உரிய பங்கினை ஆற்றும்.



2006 ஆகஸ்ட் 3]

### 4.3. நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல் விளக்கம் (மத்திய அரசு திட்டம்).

நவீன வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்திடும் நோக்கத்துடன் விவசாயிகளின் நிலங்களில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்விளக்கம் மேற்கொள்ளப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.68.01 இலட்சம் செலவில் 611 செயல் விளக்கங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.4. வேளாண்மை இயந்திரங்களைக் கையாள்வதில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் மத்திய அரசின் திட்டம்.

விவசாயப் பயிர்களின் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் ஆண்டு வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனும், பயிர் உற்பத்திக்கான இடுபொருட்களைப் பாதுகாத்து சேமிக்கும் பொருட்டும், வேளாண்மை இயந்திரமயமாக்குதலில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கும் புதிய தொழில்நுட்பங்களின்மீதான புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதனடிப்படையில், 2005-2006 ஆம் ஆண்டில் இத்துறையின்மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரமயமாக்கல் பிரிவின்கீழ் 128 பயிற்சி வகுப்புகள் ரூ.31.68 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.109.50 இலட்சம் செலவில் 438 பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. சிறப்புத் திட்டங்கள்

### 5.1. களர் நிலச் சீராக்கத் திட்டம் (மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்).

களர் நிலங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்கத்துடன் களர் நிலச் சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், 90:10 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலைப் பயிர்கள் வளர்ப்பு, தீவனப் பயிர்கள் மற்றும் எரிபொருள் மரங்கள் வளர்ப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 502 எக்டேர் பரப்பில் ரூ.10.00 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**5.2. பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்புசெட்டுகள் வழங்கும் திட்டம்.**

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் பம்புசெட்டுகள் பழமையானவையாக இருப்பதாலும், தேவைக்கு அதிகமான சக்தி வாய்ந்த பம்புகள் பயன்படுத்தப்படுவதாலும், மின் சக்திப் பயன்பாட்டுத் திறன் மிகக் குறைவாக உள்ளது. இதனால் இந்தப் பம்பு செட்டுகள் உரிய குதிரை சக்திக்குக் குறைவான தண்ணீரையே வெளிக் கொண்டு வருகின்றன. இதைத் தவிர, மின்சாரத் தொடர்புகள், சுவிட்சுகள், இதர சாதனங்கள் முறைப்படி அமைக்கப்படாததாலும் மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆதலால் மின்சாரத்தைச் சேமிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாகப் புதிய பம்புசெட்டுகள் வழங்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாகப் புதிய பம்புசெட்டுகள் வாங்கவும் மற்றும் பழுதடைந்த மின் சாதனங்களைப் புதுப்பித்துக்கொள்ளவும் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு, 5 குதிரைத் திறனுக்குக்கீழ் உள்ள பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாகப் புதிய பம்பு செட்டுகள் அமைக்க ரூ. 2,500/– அல்லது அதன் விலையில் 25 விழுக்காடு இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. 5 மற்றும் 5-க்கு மேற்பட்ட குதிரைத் திறன் உள்ள பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாகப் புதிய பம்புசெட்டுகள் அமைக்க ரூ. 5,000/– அல்லது அதன் விலையில் 25 விழுக்காடு, இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் மின்சார பாகங்கள், வால்வுகள் முதலியன புதுப்பிக்க ரூ. 1,500/– அல்லது அவற்றின் விலையில் 50 விழுக்காடு, இதில் எது குறைவோ அது மானியாக வழங்கப்படுகிறது. 2006–2007ஆம் ஆண்டில் ரூ.10.00 கோடி மானியத்தில் 18,000 விவசாயிகள் பயனடையும் வகையில் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**6. புவியியல் தகவல் அமைப்பு மையங்கள்**

நீர்வடிப் பகுதிகளில் திட்டமிடுவதற்கு வரைபடத் தகவல்கள் மிகவும் தேவையான ஒன்றாகும். புவியியல் தகவல் அமைப்பின்மூலம் தேவைக்கேற்றபடி சரியான மற்றும் துல்லியமான தகவல்களைக் கொண்டு வரைபடங்களைத் தயாரிக்கலாம். கணினிமயமாக்கப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு, வரைபடம் தயாரிக்கும் பணிகள் மற்றும் வரைபடங்கள் இணைப்பு வேலைகளுக்கு எளிதானதாக அமைகின்றது. தொலை உணர்வு தொழில்நுட்பம், இயற்கைவள தகவல்களை அறிந்து



நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் நீர்வடிப் பகுதிகளைத் தேர்வு செய்யவும், நிலையான வளர்ச்சி அடையும் பொருட்டு உரிய பரிந்துரைகளைத் தெரிவிக்கவும், புவியியல் தகவல் அமைப்புடன் ஒருங்கிணைத்து, நீர்வடிப் பகுதி திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்யவும் உதவுகிறது. புவியியல் தகவல் அமைப்பு மையம் இதுவரையில் 16 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.81.00 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், கரூர், நாமக்கல், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் புவியியல் தகவல் அமைப்பு மையம் அமைக்கப்படவுள்ளது. துல்லியமான முறையில் திட்டமிடுவதற்கு இந்தப் புவியியல் தகவல் அமைப்பு மையங்கள் உதவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 3

# அத்தியாயம்–5

## நீர்வடிப் பகுதி மேம்பாடு

### தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை

### 1. மக்கள் பங்கேற்புடன் கூடிய விரிவான தரிசுநில திட்டம்

*2001–02 ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் திட்டமாக, 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை 5 ஆண்டு காலத்தில் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்காக மக்கள் பங்கேற்புடன் கூடிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டு நீர்வடிப் பகுதிகள் கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட்டது.*

*2002–03 ஆம் ஆண்டில் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் தற்போது கன்னியாகுமரி, நீலகிரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகபபட்டினம், சென்னை நீங்கலாக இதர 24 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தரிசு நில மேம்பாட்டிற்காக விவசாயிகளுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.8,500/– மானியத்துடன் ரூ.81.60 கோடி செலவில் 80,000 எக்டேர் தரிசு நிலங்களில் (விவசாயிகளின் பட்டா நிலம்) இந்நிதி ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பணி வாரியான விவரங்கள் மற்றும் இலக்கு பின்வருமாறு:*

**I. பணிகள் வாரியாக விவரங்கள்**

| வ. எண் | பணிகள் | ஒரு எக்டேருக்கு விவசாயிகளின் பங்கு (ரூபாயில்) | ஒரு எக்டேருக்கு அரசு மானியம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | ஆழ்குழாய்க் கிணறு கைப் பம்புடன் அமைக்க | -- | 2,000 |
| 2. | வட்டக் கலப்பையினால் உழவு செய்ய | 200 | 1,000 |
| 3. | நடவுக் கன்றுகள் | -- | 1,200 |
| 4. | புதர்களை அழிப்பது மற்றும் நிலம் பண்படுத்துதல் | 500 | -- |
| 5. | குழி எடுத்தல் மற்றும் நடவு | 600 | -- |
| 6. | உரமிடல் மற்றும் ஆரம்ப நீர்ப் பாசனம் | 500 | 300 |
| 7. | உயிரி உரம் | -- | 800 |
| 8. | பராமரிப்பு ஊக்கத் தொகை (தண்ணீர் ஊற்ற)<br>முதல் ஆண்டு (100%)<br>இரண்டாம் ஆண்டு (50%) | <br>--<br>900 | <br>1800<br>900 |
| 9. | இரண்டாம் ஆண்டு உழவு செய்ய | 50 | 350 |
| 10. | பட்டுப் போன செடிகளுக்குப் பதிலாக புதிய செடிகள் நட | 100 | 150 |
| 11. | உயிரின வேலி மற்றும் பயிர்க் காவல் | 800 | -- |
| | மொத்தம் .. | 3650 | 8500 |
| | ஆக மொத்தம் .. | | 12,150 |



2006 ஆகஸ்ட் 3]

**II. உத்தேச இலக்கு**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | 2006–07 உத்தேச இலக்கு |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 3000 |
| 2 | கடலூர் | 3000 |
| 3 | தருமபுரி | 5000 |
| 4 | திண்டுக்கல் | 3500 |
| 5 | ஈரோடு | 3500 |
| 6 | காஞ்சிபுரம் | 3000 |
| 7 | கரூர் | 3000 |
| 8 | கிருஷ்ணகிரி | 3000 |
| 9 | மதுரை | 2000 |
| 10 | நாமக்கல் | 2500 |
| 11 | பெரம்பலூர் | 4000 |
| 12 | புதுக்கோட்டை | 3500 |
| 13 | இராமநாதபுரம் | 2500 |
| 14 | சேலம் | 5000 |
| 15 | சிவகங்கை | 2000 |
| 16 | தேனி | 2000 |
| 17 | தூத்துக்குடி | 5000 |
| 18 | திருச்சி | 2500 |
| 19 | திருநெல்வேலி | 5000 |
| 20 | திருவள்ளூர் | 2000 |
| 21 | திருவண்ணாமலை | 4000 |
| 22 | வேலூர் | 4000 |
| 23 | விழுப்புரம் | 3500 |
| 24 | விருதுநகர் | 3500 |
| | மொத்தம் | 80,000 |

**2. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

*நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு 2 ஏக்கர் வீதம் தரிசு நிலம் இலவசமாக வழங்கிட அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. அரசு வசம் தரிசாக உள்ள புறம்போக்கு நிலங்களும் மற்றும் தரிசாக உள்ள பட்டாதாரர்களின் நிலங்களும் சீர்திருத்தப்பட்டு விவசாயம் செய்திட ஏதுவாக விளைநிலங்களாக மாற்றி வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*நில நிர்வாக ஆணையம் மாவட்ட வாரியாக தமிழகத்திலுள்ள தரிசு நிலங்களைக் கண்டறிய தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், தரிசு நிலங்களைச் சீர்திருத்தம் செய்து விளைநிலங்களாக மாற்றிட ஆகும் செலவினம் குறித்தும் புள்ளி விவரம் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

*இவ்வாறு தேர்வு செய்யப்படும் நிலங்களை ஒரு குடும்பத்துக்கு 2 ஏக்கர் வீதம் நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்குவதுடன் நிலங்களுக்கு ஏற்ற வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் மானிய உதவிகள் வழங்கப்படும்.*

**3. தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நவப்ரா)**

*பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2002–2003 முதல் 2006–2007 முடிய திருத்தியமைக்கப்பட்ட தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டச் செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் முறையே 90% மற்றும் 10% என்ற அளவில் பகிர்ந்துகொள்கின்றன. இத்திட்டமானது 755 நீர்வடிப் பகுதிகளில் நீர்ப்பாசன வசதி 30%–க்குக் குறைவாக உள்ள மற்றும் 8% நிலச் சரிவிற்கு குறைவாக உள்ள நீர்வடிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு நீர்வடிப் பகுதி என்பது குறைந்தபட்சம் 500 எக்டேர் பரப்பளவு கொண்டதாகும். ஒரு எக்டேருக்கு ரூ.4,500/– வீதம் ஒரு நீர்வடிப் பகுதிக்கு 5 ஆண்டுகளில் ரூ.22.50 லட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது.*

**குறிக்கோள்:**

- *இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாத்து, பெருக்கி, திறம்படப் பயன்படுத்துதல்.*
- *வேளாண்மை உற்பத்தியை நீடித்து, பெருக்குதல்.*





- *பசுமை தரும் மரங்கள், தாவரங்களை வளர்த்து நலிவடைந்துள்ள இயற்கைச் சூழலை மேம்படுத்துதல்.*
- *மானாவாரி மற்றும் பாசன நிலங்களுக்கிடையே உள்ள மகசூல் வேறுபாட்டினைக் களைதல்.*
- *கிராமப்புற வேலைவாய்ப்பைப் பெருக்குதல்.*

**திட்டச் செயலாக்கப் பகுதிகள்:**

*தமிழ்நாட்டில் இத்திட்டமானது தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், நீலகிரி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் சென்னை தவிர இதர 23 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை வழியாக கிராம அளவில், நீர்வடிப் பகுதி சங்கங்கள்/குழுக்கள்மூலம் செயல்படுத்தப்படுகிறது.*

**திட்டத்தின் முன்னேற்றம்**

*இந்தத் திட்டத்தில் இதுவரை அடைந்த நிதி அளவு / பொருளளவு சாதனை விவரம் கீழ்வருமாறு:*

| ஆண்டு | நிதியளவு (ரூபாய் இலட்சத்தில்) | | பொருளளவு பரப்பு (எக்டேரில்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 2002–03 | 1407.067 | 1344.658 | 31268 | 29881 |
| 2003–04 | 1525.000 | 1501.265 | 33888 | 33361 |
| 2004–05 | 2089.063 | 1963.849 | 46424 | 43641 |
| 2005–06 | 1990.160 | 637.328 | 44227 | 14163 |
| மொத்தம் | 7011.290 | 5447.100 | 155807 | 121046 |

**2006–07 ஆண்டுத் திட்டம்**

*2006–07 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைத் தொடர்ந்து 83,082 எக்டேர் பரப்பளவில் ரூ.37.39 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.*

**4. நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி–நபார்டு**

*நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதித் திட்டம், நபார்டு வங்கி உதவியுடன் 6 ஆண்டு திட்டக் காலத்தில் 2004–2005 ஆம் ஆண்டு*

[2006 ஆகஸ்ட் 3

முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ.60 கோடி மதிப்பீட்டில் 100 நீர்வடிப் பகுதிகளில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**குறிக்கோள்:**

1. நீர்வடிப் பகுதி பங்கேற்பு தொடர்பான செய்திகளைப் பரப்புவது இதன் முக்கிய நோக்கமாகும். 2. அரசு, அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின்மூலம் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் வெற்றியின் அடிப்படையில் பெருமளவில் பயன்படக்கூடிய வகையில் இத்திட்ட நிதி செலவு செய்யப்பட்டு வருகிறது.

**நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதியின் இனங்கள்**

1. மூன்றில் ஒரு பகுதி மானியம்
2. 2/3 பகுதி மாநில அரசுக்கு நபார்டு வழங்கும் கடன்
3. வட்டி விகிதம் – 4.5%
4. திருப்பிச் செலுத்தும் காலம் – ஒன்பது ஆண்டுகள் – 3 ஆம் ஆண்டு முதல் திருப்பிச் செலுத்த வேண்டும்

**திட்டச் செயலாக்கப் பகுதி**

இத்திட்டம் சென்னை, தஞ்சாவூர், திருவாரூர், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், நீலகிரி, ஈரோடு மாவட்டங்கள் தவிர இதர 23 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டக் காலம்

1. கொள்திறன் வளர்ப்பு நிலை– 18 மாதங்கள் (50 முதல் 100 எக்டேர்)
2. திட்டம் செயல்படுத்த ஆரம்ப அறிக்கை தயாரிக்க – 6 மாதங்கள்
3. முழு செயலாக்க நிலை – 4 வருடங்கள்

**மொத்தக் காலம் – 6 வருடங்கள்**



2006 ஆகஸ்ட் 3]

பல்வேறு இனங்களுக்கு நிலையான நிதி ஒதுக்கீடு

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒரு எக்டேருக்கான செலவு | – | ரூ.6,000.00 |
| 2. | திட்டச் செயலாக்கம் | – 70% | ரூ.4,200.00 |
| 3. | நிர்வாகச் செலவு | – 10% | ரூ.600.00 |
| 4. | நிலமற்ற பெண்களுக்கு வாழ்க்கைத் தர மேம்பாடு | – 7.5% | ரூ.450.00 |
| 5. | சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பயிற்சித் திட்டம் | –12.5% | ரூ.750.00 |

**செயல்படுத்துதலில் முன்னேற்றம்**

2004–05 ஆம் ஆண்டில், 59 நீர்வடிப் பகுதித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 5 நீர்வடிப் பகுதி முன் கொள்திறன் வளர்ப்பு நிலையில் உள்ளன. 36 தகுதி நிலை/செய்யத்தக்கன ்க்கான ஆராய்வு அறிக்கையிலும் மற்றும் 18 முழுச் செயல்பாட்டு நிலையிலும் உள்ளன.

முழுச் செயல்பாட்டு நிலையிலுள்ள 18 நீர்வடிப் பகுதித் திட்டங்களில், 11 கடன் இனத்திலும், 7 மானிய இனத்திலும் உள்ளன. தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை 9 திட்டங்களுக்குக் கடன் தொகையாக ரூ.115.487 இலட்சத்தை விடுவித்துள்ளது. இதுவரையில் 22,023 எக்டேர் பரப்பளவைப் பண்படுத்தத் திட்டமிட்டதில் 6,107 எக்டேர் பரப்பளவு 13 மாவட்டங்களில் 31 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் பண்படுத்தப்பட்டுள்ளது.

2005–06 ஆம் ஆண்டில் மாநில இயக்கக் குழு (State Steering Committee) 68 நீர்வடிப் பகுதிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் நபார்டு 53 நீர்வடிப் பகுதிகளுக்கு இசைவுக் கடிதம் அளித்துள்ளது. 74,800 எக்டேர் பரப்பளவை 6 ஆண்டு காலத்தில் 14 மாவட்டங்களில் 37 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் பண்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2006–07 ஆம் ஆண்டிலும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

### 5. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம்

தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதி வறண்ட சீதோஷ்ண நிலையைக் கொண்டதாகவும் மற்றும் பருவ மழை பொய்ப்பிக்கும் தன்மையை உடையனதாகவும் உள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் சில பகுதிகளில் 1972-73 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 17 மாவட்டங்களில் உள்ள 80 ஊராட்சி ஒன்றியங்கள் வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகள் என்று மைய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு, அந்தப் பகுதிகளுக்கு வறட்சியால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு இத்திட்டம்மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு காலக் கட்டங்களில் இத்திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் திட்டச் செயலாக்க முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முதலில் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கும் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் இத்திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளிக்கப்பட்டது; அது படிப்படியாக மாற்றம் செய்யப்பட்டு தற்போது மழை நீரினைச் சேமித்து, நீர் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்தப் பொருளாதார மேம்பாட்டினை நீர்வடிப்பகுதிகளில் உருவாக்குவதாகும். அதுபோலவே திட்டச் செயலாக்க முறைகளில் மாற்றம் செய்யப்பட்டு அரசுத் துறைகளின்மூலம் செய்யப்பட்டுவந்த பணிகள் தற்போது அரியாலி நெறிமுறையின்படி ஊராட்சி மன்றம் மற்றும் பயனாளி குழுக்கள் இணைந்து பணிகளைத் தேர்வு செய்து, அவர்கள் மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறட்சியின் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு மக்கள் பங்கேற்புடன் கூடிய நீர்வடிப் பகுதி அணுகுமுறைக்கு இத்திட்டத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஐந்நூறு எக்டேர் கொண்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டிற்கான செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் தற்சமயம் 75:25 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் பங்கிட்டுக்கொள்கின்றன. இத்திட்டச் செயலாக்க காலம் ஐந்தாண்டு காலம் ஆகும். ஒரு எக்டேர் மேம்பாட்டிற்கு செலவினத் தொகையாக ரூ.6,000/- அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் திட்டச் செலவினத்திலேயே மேற்கொள்ளப்பட்டாலும்



பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 சதவீதம் பெறப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான பங்களிப்பு 5 சதவீதம் ஆகும்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ்க்கண்ட அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

| | |
|---|---|
| நில மேம்பாடு: | நிலம் சமப்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் அடித்தல். கல் வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி எடுத்தல். |
| நீர்வள மேம்பாடு: | கால்நடை குட்டை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், ஊரணி சீரமைத்தல், கண்மாய் தூர் வாருதல், வரத்துக் கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டை அமைத்தல் மற்றும் குடிநீர் ஆதார மேம்பாடு செய்தல். |
| தாவரவள மேம்பாடு: | வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக் கன்றுகள் வளர்த்தல், தீவனப் பயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப் பாத்தி அமைத்தல், சமுதாய நாற்றங்கால் பண்ணை அமைத்தல், சமூகக் காடுகள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல். |

மைய அரசின் உத்திகளின்படி புதிய நீர்வடிப் பகுதித் திட்டங்கள் தொகுதிகளாக ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகின்றன. இதுகாறும் இத்திட்டத்தின்கீழ் ரூ.35,410.25 இலட்சங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு 1,414 நீர்வடிப் பகுதிகள் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இவற்றில் ரூ.5920.25 இலட்சங்கள் செலவில் 297 நீர்வடிப் பகுதித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இதனால் மேம்படுத்தப்பட்ட மொத்த நிலப்பரப்பின் அளவு 1,48,911 எக்டேர்கள் ஆகும். மீதமுள்ள 1,117 நீர்வடிப் பகுதிகளில் ரூ.29,490 இலட்சம் செலவினில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் 5,62,598 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்படும்.

[2006 ஆகஸ்ட் 3

## வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (ரூபாய் இலட்சத்தில்)



2006 ஆகஸ்ட் 3] .

| தொகுதி மற்றும் திட்டக் காலம் | பங்களிப்பு | நீர்வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | திட்டச் செயலாக்கப் பரப்பு (எக்டேரில்) | மொத்த நிதி ஒதுக்கீடு | | | நிதி வழங்கியது (ஜூன்) 2006 வரை | | | ஜூன் 2006 முடிய செலவினம் | ஜூன் 2006 முடிய பயன்பெற்ற பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | | |
| 4–ம் தொகுதி (1998–99 முதல் 2002–03 வரை)* | 50:50 | 103 | 52456 | 1030.00 | 1030.00 | 2060.00 | 940.90 | 940.68 | 1881.58 | 1865.16 (99%) | 47959 |
| 5–ம் தொகுதி (1999–2000 முதல் 2003–04 வரை)** | 75:25 | 299 | 150772 | 4485.00 | 1495.00 | 5980.00 | 4170.32 | 1389.77 | 5560.09 | 5513.25 (99%) | 136531 |
| 7–ம் தொகுதி (2001–02 முதல் 2005–06 வரை) | 75:25 | 61 | 30500 | 1372.50 | 457.50 | 1830.00 | 833.50 | 235.61 | 1069.11 | 924.59 (86%) | 16180 |
| 8–ம் தொகுதி (2002–03 முதல் 2006–07 வரை) | 75:25 | 144 | 73457 | 3240.00 | 1080.00 | 4320.00 | 1686.00 | 525.95 | 2211.95 | 2043.91 (92%) | 35826 |
| 9–ம் தொகுதி (2003–04 முதல் 2007–08 வரை) | 75:25 | 160 | 80413 | 3600.00 | 1200.00 | 4800.00 | 1565.95 | 508.46 | 2074.41 | 1928.89 (93%) | 33381 |
| 10–ம் தொகுதி (2004–05 முதல் 2008–09 வரை) | 75:25 | 160 | 80000 | 3600.00 | 1200.00 | 4800.00 | 728.88 | 242.96 | 971.84 | 862.88 (89%) | 13988 |
| 11–ம் தொகுதி (2005–06 முதல் 2009–10 வரை) | 75:25 | 190 | 95000 | 4275.00 | 1425.00 | 5700.00 | 641.28 | 213.75 | 855.03 | 489.11 (57%) | 4504 |
| மொத்தம் | | 1117 | 562598 | 21602.50 | 7887.50 | 29490.00 | 10566.83 | 4057.18 | 14624.01 | 13627.79 (93%) | 288369 |

*குறிப்பு: *திட்டச் செய்லாக்க காலம் 31–3–2005 வரை. நீட்டிப்பு செய்யப்பட்டது. ** திட்டச் செயலாக்க காலம் 31–3–2006 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது*

### 6. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், வனம் அல்லாத தரிசு நிலங்களை வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம் செயல்படுத்தப்படாத ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மழை நீரை சேமித்து அதன் உதவியுடன் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதாகும். இது வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளுக்கான திட்டம்போல் அல்லாமல், மாநில அரசுக்கு வனம் சாரா தரிசு நிலங்களை திட்ட

அனுகுமுறையின்மூலம் மேம்படுத்துவதற்கு ஓர் வாய்ப்பளித்துள்ளது. தற்போது கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், ஈரோடு, தேனி, மதுரை, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 24 மாவட்டங்களில் உள்ள 89 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தமிழ்நாட்டில் 1993–94 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏப்ரல் 1995 ஆம் ஆண்டு முதல் பொது நெறிமுறைகளின்கீழ் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்போல் இத்திட்டமும் கொண்டுவரப்பட்டு, தற்போது அரியாலி நெறிமுறைகளின்படி ஊராட்சி மன்றம் மற்றும் பயனாளிக் குழுக்கள் இணைந்து பணிகளைத் தேர்வு செய்து, அவர்கள்மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டச் செயலாக்க காலம் ஐந்தாண்டு காலங்கள் ஆகும். ஒரு எக்டேருக்கான மேம்பாட்டிற்கு செலவினத் தொகையாக ரூ. 6,000/– அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் திட்டச் செலவினத்திலேயே மேற்கொள்ளப்பட்டாலும், பயனாளிகளின் பங்குத் தொகையாக 10 சதவீதம் பெறப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்காக பங்களிப்பு 5 சதவீதம் ஆகும். இத்திட்டச் செயலாகத்திற்கான செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் 11:1 என்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் பகிர்ந்துகொள்கின்றன.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கீழ்க்கண்ட அம்சங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்:

**நில மேம்பாடு:** நிலம் சமப்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், வண்டல் மண் அடித்தல், கல் வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி எடுத்தல்.

**நீர்வள மேம்பாடு:** கால்நடைக் குட்டை அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், ஊரணி சீரமைத்தல், கண்மாய் தூர் வாருதல், வரத்துக் கால்வாய் அமைத்தல் மற்றும் சீரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டை அமைத்தல் மற்றும் குடிநீர் ஆதார மேம்பாடு செய்தல்.





**தாவரவள மேம்பாடு:** வேளாண் காடுகள் அமைத்தல், பழமரக் கன்றுகள் வளர்த்தல், தீவனப் பயிர் மேம்பாடு செய்தல், செயல் விளக்கப் பாத்தி அமைத்தல், சமுதாய நாற்றங்கால் பண்ணை அமைத்தல், சமூகக் காடுகள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்.

இத்திட்டத்தில் இதுவரை ரூ. 24,262.90 இலட்சங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 24 மாவட்டங்களில் 75 திட்டங்கள் 4,25,017 எக்டேர் நிலப் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை 5 திட்டங்கள் ரூ. 1,086.39 இலட்சங்கள் செலவில் 18,151 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் 2006–2007 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி, மதுரை, திண்டுக்கல், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், நாமக்கல், காஞ்சிபுரம் மற்றும் கரூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள 50,730 எக்டேர் தரிசு நிலங்கள் மேம்படுத்த முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்துள்ளது. மைய அரசின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

[2006 ஆகஸ்ட் 3

# அத்தியாயம்–6

## வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

### 1. முன்னுரை

தமிழக வேளாண்மையைத் தன்னிறைவு நிலை மட்டுமின்றி, வளம்குன்றா வேளாண்மை நிலைக்குக் கொண்டு செல்லும் அடிப்படையில், ஆதார வளங்களைக் கண்டறிந்து, கிராமப்புறப் பொருளாதாரம் மேம்பாடு அடையும்வண்ணம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தனது வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றது. தரிசு நிலங்கள் மற்றும் மானாவாரி நிலங்களில் நுண் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மேம்பாடு மற்றும் மண் மற்றும் நீர்வளப் பராமரிப்புத் திட்டங்கள்மூலம் வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். குறைவான உற்பத்தித் திறன் கொண்ட நிலங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில் புதிய பயிர் வகைகள் மற்றும் பயிர் இரகங்களைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் தீவிரப்படுத்தப்படும். இத்துடன் உயிர் எரிசக்திப் பயிர்களான காட்டாமணக்கு போன்ற பயிர்களிலும் கவனம் செலுத்தப்படும். நீர்வள மேலாண்மையில் உழவர்களின் பங்கேற்பை செம்மைப்படுத்துவதற்கான சமூகப் பொருளியல் ஆய்வுகள் செயல்படுத்தப்படும். புதிய அரசின் கொள்கைகளான நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்குதல், கூட்டுறவுக் கடன் தள்ளுபடி மற்றும் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்த கொள்கையியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். மற்றும் வேளாண்மை விற்பனை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மேற்கொள்ளவிருக்கும் குறிப்பான ஆய்வுத திட்டங்கள், கல்வி மற்றும் விரிவாக்கப் பணிகள் பின்வரும் பகுதிகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

### 2. ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நமது மாநிலம் எதிர்கொண்டுள்ள முக்கிய வேளாண்மைப் பிரச்சினைகள் பற்றி பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. பல்கலைக்கழகம் தன்கீழுள்ள 10 கல்லூரிகளிலும், 33 ஆராய்ச்சி நிலையங்களிலும், 14 வேளாண் தொழில்நுட்ப விரிவாக்க மையங்களிலும், 5 பயிர் மருத்துவ மையங்களிலும் (இணைப்பு–I). 3,000 உபஆராய்ச்சித் திட்டங்களையும்,



2006 ஆகஸ்ட் 3]

507 ஆராய்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. இதற்கான நிதியுதவியினை மாநில அரசு, மத்திய அரசு, வெளிநாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களும் அளித்து வருகின்றன. உழவர் பெருமக்கள் வேளாண்மைத் தொழிலில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் தமிழகத்திலுள்ள ஏழு வேளாண்மை மண்டலங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நடப்பு ஆராய்ச்சி மற்றும் எதிர்காலத் திட்டங்கள்

வரும் 2006–2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஆராய்ச்சித் திட்டங்களாவன:

- தரிசு நிலங்கள் மற்றும் மானாவாரி நிலங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்த புதிய பயிர் வகைகள் மற்றும் உழவியல் தொழில் நுட்பங்களைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை வெளியிடப்பட்ட இரகங்கள் தவிர, இராமநாதபுரம் 1 நெல், கோ 4 சாமை, திண்டிவனம் 13 நிலக்கடலை, கோவில்பட்டி 3 பருத்தி, கோ.க.23 கரும்பு ஆகிய புதிய இரகங்கள் இந்த ஆண்டு வெளியிடப்படும். மேலும், வி.ஜி. 9816 கொத்து (Bunch) நிலக்கடலை மற்றும் வி.ஜி. 9902 மிதப்படர்வு (semi spreading) இரகமும் வெளியிடப்பட உள்ளது.

- மானாவாரி மற்றும் தரிசு நில சாகுபடிக்கேற்ற முந்திரிப் பயிர் இரகங்களைக் கண்டறிதல்.

வி.ஆர்.ஐ. 3 இரகம் தரிசு நிலத்திற்கு ஏற்றதாக உள்ளதால் தரிசு நிலங்களில் விளக்கப்பாத்தி அமைக்கப்படுகின்றன. மேலும், தரிசு நிலத்திற்கு உகந்த எச். 10 என்ற முந்திரி வீரிய ஒட்டு வளர்ப்பும், வறட்சி தாங்கவல்ல ஏற்றுமதிக்கு உகந்த வி.எஸ்.கே. 2 வளர்ப்பும் தற்போது பரிசோதனையில் உள்ளது. இந்த வளர்ப்புகள் அடுத்த ஆண்டு இறுதியில் வெளியிடப்படும்.

- பல்கலைக்கழகத்திலுள்ள உயிர்த் தொழில்நுட்பத் துறையை நேசிய அளவிலான ஒரு உயர் நிலை ஆய்வு மையமாக மாற்றுதல்:

நிதி உதவிக்காக இந்தத் திட்டம் மத்திய அரசின் உயிரியல் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் உயிரியல் ஆராய்ச்சிமூலம் 2007 ஆம் ஆண்டு இறுதியில் மரபணு மாற்றப்பட்ட புதிய பிடி. கத்திரி இரகம் வெளியிடப்படவுள்ளது. மரவள்ளிக் கிழங்கில்

வைரஸ் நோயின் தாக்குதல் மிகவும் அதிகமாக இருப்பதால் வைரஸ் தாக்காத மரவள்ளி இரகத்தை வெளியிட தற்பொழுது உயிரியல் ஆராய்ச்சி துவங்கப்பட்டுள்ளது.

- பயிர்களின் உயிர் எரிசக்திப் பயன்பாட்டை அதிகரிக்கும் ஆராய்ச்சியைப் பலப்படுத்தும் பொருட்டு, ஒரு புதிய "உயிர் ஆற்றல் ஆய்வு மையம்" அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக, ரூபாய் 149 இலட்சம் நிதி உதவியுடன் 2006–2007 ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படவுள்ளது.

- கரும்பின் உறபத்தியை அதிகரிக்க, சொட்டு நீர்ப்பாசனம்மூலம் உரம் கொடுத்தல், குழிநடவு முறை, இணைவரிசை முறை நடவு, ஒருபரு விதைக்கரணை உபயோகித்தல் ஆகிய தொழில்நுட்பங்கள், "நிலையான கரும்பு சார்ந்த பயிர்த் திட்டம்", ரூபாய் 108 இலட்சம் நிதி உதவியுடன் பல்கலைக்கழகத்தின் மூலமாக கோயம்புத்தூர், கடலூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. மேலே கூறப்பட்டுள்ள நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்ற கரும்பு சாகுபடி செய்யும் மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட உள்ளது. மேலும், அதிக எத்தனால் (Ethanol) மற்றும் மின் உற்பத்திக்கு உதவிடும் கரும்பு இரகங்களை உருவாக்க ஆராய்ச்சி செயல்பாட்டில் உள்ளது.

- தென்னை சிலந்திப் பூச்சியைக் கட்டுப்படுத்த இரசாயன தாவர அடிப்படையைக் கொண்ட மற்றும் உயிரிப் பூச்சிக்கொல்லிகள் ஆராய்ச்சிமூலம், ஓரளவுதான் வெற்றி அடைய முடிந்தது. சிலந்திப் பூச்சியைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த ஆராய்ச்சி முறையை வலுப்படுத்த இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திற்கு ரூபாய் 60 இலட்சம் நிதி உதவி வேண்டி ஒரு ஆராய்ச்சித் திட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. மேலும் தென்னையைத் தாக்கக்கூடிய ஸ்லக் (Slug) புழு, கருந்தலைப்புழு, சிகப்புக்கூண் வண்டு, காண்டாமிருக வண்டு, கேரளா வாடல் நோய் மேலும் பைட்டோப்ளாஸ்மா (Phytoplasma) ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்த நிபுணர் குழுக்கள் அமைத்து உடனுக்குடன் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று கட்டுப்படுத்துவதற்கான முறைகள் பரிந்துரைக்கப்பட்டு வருகின்றன.



- தகுந்த உற்பத்தி மற்றும் உற்பத்திக்குப் பிந்திய தொழில் நுட்பங்கள்மூலம் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் உற்பத்தி பற்றிய ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. குறிப்பாக, கனடாவிலுள்ள மெக்கில் பல்கலைக்கழகமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் கூட்டு முயற்சியில் சுமார் ரூ. 225 இலட்சம் முதலீட்டில், ஒரு முன்னோடி உணவு பதப்படுத்தும் மாதிரித் தொழிற்சாலையை கோயம்புத்தூர் பல்கலைக்கழக வளாகத்தில் உருவாக்கியுள்ளது. புதிதாக தொழில் முனைவோர், முன்னோடி விவசாயிகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் இந்த வசதியை பயன்படுத்தி வருகின்றனர். மேலும், பல வேளாண் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான ஆராய்ச்சி இங்கு தொடரப்படும.

- நுகர்வோர் விரும்பும் தன்மை கொண்ட பூச்சி மற்றும் நோய்களுக்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட வீரிய ஒட்டு நெல் இரகங்களை உருவாக்குதல்:

இதுவரை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஏடிடிஆர்.எச். 1, கோ.ஆர்.எச். 1 மற்றும் கோ.ஆர்.எச். 2 ஆகிய வீரிய ஒட்டு நெல் இரகங்களை வெளியிட்டுள்ளது. நுகர்வோரின் தேவைகளை அறிந்து கூடுதலாக சிறந்த குணாதிசயங்களுடன் கோ.ஆர்.எச். 3 என்ற வீரிய ஒட்டு நெல் இரகம் இந்த ஆண்டு வெளியிடப்பட உள்ளது நெல் வீரிய ஒட்டு இரக விதை உற்பத்தி கடினமான செயல் என்பதால், பொதுத் துறை மட்டுமல்லாது, தனியார் துறைகள் மூலமும் விதை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், சிறப்பான குணாதிசயங்களைக் கொண்ட சீனாவின் வீரிய ஒட்டு இரகங்களை விட சிறந்த நெல் ஒட்டு இரகங்களை அடுத்த இரண்டு ஆண்டுகளில் வெளியிடுவதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

- காய்ப்புழு மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட பருத்தி இரகங்களை உருவாக்குதல்:

தற்போது தமிழ்நாடு வேளாணமைப் பல்கலைக்கழகம், அமெரிக்கன் பருத்திக்காய்ப் புழுவைக் கட்டுப்படுத்தக்கூடிய க்ரை 1 (Cry-1), க்ரை 2 ஏபி (Cry-2 ab) பி.டி. மரபணுவைக் கண்டுபிடித்துள்ளது. இந்த மரபணு ஒட்டு இரகம் அல்லாத சாதாரண இரகங்களில் புகுத்தப்பட்டு, குறைந்த விலையில் பி.டி. விதை கிடைக்க உதவிடும்.

[2006 ஆகஸ்ட 3

- அதிக எண்ணெய்ச் சத்து மற்றும் நச்சுயிரி எதிர்ப்புத் தன்மை கொண்ட சூரியகாந்தி ஒட்டு இரகங்களை உருவாக்குதல்:

நடப்பு ஆண்டில் கோ (எஸ்.எப்.) எச் 5 என்ற வீரிய ஒட்டு இரகம் ஆகஸ்ட் 2006-ல் வெளியிடப்படும்.

- அதிக மற்றும் தரத்துடன் நுகர்வோர் விரும்பும் தன்மை கொண்ட வீரிய காய்கறி வகைகளை உருவாக்குதல்:

இந்த ஆண்டில் இலைச்சுருட்டு வைரஸ் நோயைத் தாங்கி வளரக்கூடிய கோ.எல்.சி.ஆர்.எச். 3 என்ற ஒட்டு இரகத் தக்காளி வெளியிடப்படும். இது இந்தியாவிலேயே இலைச் சுருட்டு வைரஸ் நோய்க்கு எதிர்ப்புச் சக்தி கொண்ட ஒரே வீரிய ஒட்டு இரகமாகும்.

- உயிரி எரிசக்திப் பயிர்களை ஊக்குவிக்கும் பொருட்டு உலகிலேயே புதிய முதல் ஒட்டு இரக காட்டாமணக்கு 2007-ல் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட உள்ளது. மற்றும் சர்க்கரைக் கிழங்கு, சர்க்கரைச் சோளம் ஆகிய பயிர்களிலிருந்து எத்தனால் (Ethanol) எடுக்கப்படுவதற்கான ஆராய்ச்சிகள் தற்போது செயல்படுத்தப்படுகின்றன. இத்துடன் மக்காச்சோளம், சர்க்கரைவள்ளிக் கிழங்கு, சோளம் மற்றும் சிறு தானியங்களிலிருந்தும் எத்தனால் எடுப்பதற்கான தொழில்நுட்பம் தயார் நிலையில் இருக்கிறது. விருப்பப்படும் தொழில் முனைவோருக்கு தொழில்நுட்பத்தைக் கொடுத்து உதவிசெய்ய பல்கலைக்கழகம் தயாராக உள்ளது. காட்டாமணக்கிலிருந்து பயோடீசல் உருவாக்கும் இயந்திரத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கி உள்ளது. இதுவரை இரண்டு தொழில்முனைவோர் இந்த இயந்திரத்தை நகல் செய்து, பயோடீசல் எடுக்கும் சிறு தொழிற்சாலையை கோவை மற்றும் சென்னையில் நிறுவி உள்ளார்கள். இந்த இயந்திரத்தின் மற்றுமொரு நகல் டெல்லியிலுள்ள மேதகு குடியரசுத் தலைவர் மாளிகைக்கு செய்து கொடுக்கப்பட உள்ளது.

- சொட்டு நீர்மூலம் இரசாயன உரம், உயிரி உரம், சூடோமோனாஸ் போன்ற பயிர் வளர்ச்சி ஊக்கி மற்றும் நோய்த் தடுப்பு சக்தி கொண்ட இடுபொருட்களைப் பயிர்களுக்குச் செலுத்தக்கூடிய தொழில்நுட்பம், கரும்பு, வாழை, தென்னை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆராய்ச்சி, பருத்தி மற்றும் மக்காச்சோளப் பயிர்களுக்கு நடப்பு ஆண்டில் விரிவுபடுத்தப்படும்.



2006 ஆகஸ்ட் 3]

- உழவர் சந்தைகளின் பயன்கள் பற்றியும், அவற்றை மேலும் வலுப்படுத்துதல் பற்றியுமான சமூக–பொருளாதார ஆராய்ச்சி நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**3. கல்வி**

வேளாண் அறிவியலில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு வேளாண் கல்வியின் தரத்தைத் தொடர்ந்து மேம்படுத்துவதற்கான முயற்சிகளைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது. ஏற்கெனவே உள்ள கல்வித் திட்டங்களோடு 2006–2007 ஆம் ஆண்டில் இளம் தொழில்நுட்பவியல் (உயிரி தகவல் தொழில்நுட்பம்) பட்டப் படிப்பு, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பாடங்களில் இரு புதிய பட்டயப் படிப்புகள், அங்கக வேளாண்மை, மூலதன மற்றும் பண்டக சந்தை பற்றிய புதிய முதுநிலைப் பட்டயப் படிப்புகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

வணிக வேளாண்மைக்கான அறிவு, தொழில்நுட்பம் மற்றும் ஆளுமைத் திறமைகளை வேளாண் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு காளான் வளர்ப்பு, நாற்றங்கால் தொழில் நுட்பம், கோழிப் பண்ணை, பால் பண்ணை, தேனீ வளர்ப்பு, உயிரியல் உரங்கள் தயாரித்தல், உயிரியல் பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பு மற்றும் நகர்ப்புற பூச்சியியல் மற்றும் திசு வளர்ப்பு ஆகிய புதிய வணிகப் பாடங்கள் துவங்கப்படவுள்ளன. இந்தப் பாடங்களில் தொழில்நுட்பம் மட்டுமல்லாது, மேலாண்மைக் கருத்துகளும் போதிய அளவு கற்பிக்கப்படுகிறது.

முதறிவியல் பட்டப் படிப்பில் ஆராய்ச்சிக்கு உழவர்கள் எதிர்கொள்ளும் பண்ணைப் பிரச்சினைகளையே மேற்கொண்டு அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டறிய முக்கியத்துவம் தரப்படுகின்றது. மேலும், முதறிவியல் மாணவர்கள் மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்து சர்வதேசத் தரத்துடன் தங்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றனர். முனைவர் பட்டப் படிப்பு மாணவர்கள் படிப்பின் ஒரு பகுதியைத் தனியார் மற்றும் அகில உலக நிறுவனங்களுக்குச் சென்று ஆராய்ச்சி செய்யவும் வாய்ப்பு தரப்படுகிறது.

வேளாண்மை நமது நாட்டின் முக்கியத் தொழிலாகும். எந்த ஒரு காலக்கட்டத்திலும் வேளாண்மையின் முக்கியத்துவத்தை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. எனவே, மேல்நிலைப் பள்ளிகளில் வேளாண்மையை ஒரு பாடமாக வைக்க வேண்டுமென்ற ஒரு கொள்கையை 1998–99 ஆம் ஆண்டுகளில் இந்த அரசு செயல்படுத்தியது.

[2006 ஆகஸ்ட் 3

இதன் அடிப்படையில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை வேளாண் தொழில் சார்ந்த பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்காக 100 வேளாண்மைப் பட்டதாரிகள் மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். வேளாண்மை சம்பந்தப்பட்ட கருத்துகள் மற்றும் நவீன வேளாண்மைத் தொழில்நுட்பங்களும் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே, வேளாண்மையை பள்ளிகளில் ஒரு கட்டாயப் பாடமாகக் கற்பிப்பதற்கு இந்த அரசு மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

தற்போது, மகாராஷ்ட்ரா மாநிலத்தில் ஜல்கான் நகரிலுள்ள ஜெயின் பாசன நிறுவனத்தில் இரண்டு மாணவர்களும், ஹைதராபாத்திலுள்ள இக்ரிசாட் (ICRISAT) ஆராய்ச்சி அமைப்பில் ஆறு மாணவர்களும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டப்படிப்பு ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளனர். இந்த கூட்டு அணுகுமுறை, முனைவர் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும்.

### 4. கொள்கை ஆலோசனைகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண்மையில் ஏற்பட்டுவரும் பயிர் மாற்றங்கள், மழை அளவு, வேளாண் வளர்ச்சி போன்றவற்றைக் கூர்ந்து ஆய்ந்து, அதன் அடிப்படையில் வகுக்க வேண்டிய திட்டங்களுக்கான கொள்கை மற்றும் கோட்பாடுகளைத் தயாரித்து, அரசுக்கு அளித்து வருகின்றது. ஒப்பந்த சாகுபடி முறை, வேளாண் சந்தைகளை மறுசீரமைத்தல், மானாவாரி வேளாண்மையை மேம்படுத்துதல் மற்றும் தமிழக வேளாண்மையின் ஒட்டுமொத்த வளர்ச்சி போன்ற கொள்கை சார்ந்த பிரச்சினைகளில் மேலும் பல்வேறு ஆராய்ச்சிகள் தமிழக அரசுக்கான வேளாண் வளர்ச்சி கொள்கைகளை வகுக்க உதவிடும்.

### 5. விரிவாக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கிய புதிய வீரிய இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் புதிய சாகுபடித் தொழில்நுட்பங்கள் தமிழக உழவர்கட்கு உடனுக்குடன் சென்றடையச் செய்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. விரிவாக்கத்தை வலுப்படுத்த இந்த ஆண்டில் புதிதாக 6 வேளாண் அறிவியல் மையங்கள் மத்திய அரசின் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன் அமைத்துள்ளது. இந்த மையங்கள் இராமநாதபுரம், திருவாரூர், நாகப்பட்டினம், திருவள்ளூர், வேலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஆக, பல்கலைக்கழகத்தின்கீழ் 14 வேளாண் அறிவியல் மையங்கள் சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்றன.



2006 ஆகஸ்ட் 3]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைத் தகவல் மையத்தின்மூலம் வேளாண் விளைபொருட்களை அதிக இலாபம் ஈட்டக்கூடிய முறையில் சந்தைப்படுத்த உரிய தகவல்கள் அளிக்கப்பட்டு வருகின்றது. இம்மையத்தின் பணிகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

மேலே கூறப்பட்ட வேளாண்மை அறிவியல் நிலையங்கள்மூலம் அதிநவீன தொழில்நுட்பங்கள் உழவர்களிடையே சென்றடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**செயல்படுத்தப்பட உள்ள தொழில்நுட்பங்கள்:**

நுண் நீர்ப் பாசனம், துல்லிய வேளாண்மை, தீவிர நெல் சாகுபடி (SRI), பண்ணைக் கருவிகள் பற்றிய செயல் முறை, மண்புழு அங்கக உரம் தயாரித்தல், பாக்டீரியா அங்கக உரம் தயாரித்தல், நெல்லில் பச்சை வண்ண அட்டைமூலம் தழைச் சத்தைக் கணக்கிடல், 1,218 விவசாயப் பண்ணைகளில் செயல் விளக்கம் அமைத்தல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் மக்காச்சோளம் சம்பந்தப்பட்ட 493 உயிரியல் தொழில்நுட்ப செயல் விளக்கப் பண்ணைகள் விவசாய நிலங்களில் அமைத்தல் ஆகியவையாகும்.

### 6. தொலைதூரக் கல்வி

காளான் வளர்ப்பு, மூலிகைப் பயிர் வளர்ப்பு மற்றும் வணிகப் பூந்தோட்டம் அமைத்தல் ஆகிய பாடங்களில் ஆறு மாத கால சான்றிதழ் வழங்கக்கூடிய தொலைதூரக் கல்வி வழங்கப்படுகின்றது. வரும் கல்வியாண்டில் உயிரித் தகவல் தொழில்நுட்பத்தில் புதிய முதுநிலைத் தொழில்நுட்ப இயல் (எம்.டெக்) ஒன்றும் துவங்கப்பட உள்ளது.

### 7. பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

பல்கலைக்கழகப் பட்டதாரிகள் பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளில் வேலையில் சேரவும், வெளிநாடுகளில் சென்று உயர் படிப்புகள் படிக்கவும், மாணவர்கள் நல இயக்ககம் உயிர்ப்பிக்கப்பட்டு.

பெரிய அளவில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தில் வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட நூலகம், கணினிகள், ஒளி, ஒலி அமைக்கப்பட்ட அரங்கம், நேர்முகம் காணலுக்கான அறைகள், தொலைபேசிமூலம் நேர்காணல் செய்வதற்கான இணைப்பு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த இயக்ககம் கடந்த 23 மாதங்களில் 820-க்கும் மேற்பட்ட வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்க உதவியுள்ளது. மேலும், 25 வேளாண்மை சார்ந்த தொழில் முனைவோரை உருவாக்கியுள்ளது. 32 மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கும், வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்காக வெளிநாட்டில் வேலை கிடைப்பதற்கான வாய்ப்பை இந்த மையம் ஏற்படுத்தியுள்ளது.

**8. புதிய பயிற்சிகள்**

கீழ்க்காணும் முக்கியத் தலைப்புகளில் உழவர் பெருமக்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:

- ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்
- மழை நீர் சேகரிப்பும், தரிசு நில மேம்பாடும்
- கிராம அளவில் வேளாண் விளைபொருட்களை மதிப்பூட்டுதல்
- அறுவடைக்குப் பிந்திய செய் நேர்த்தி முறைகள்
- வேளாண் மகளிரிடையே தலைமைப் பண்புகளை உருவாக்குதல்
- கிராமப்புற வடிகால் பண்ணைகள் உருவாக்குதல்.





# இணைப்பு I

## 1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கல்லூரிகள்

| வ. எண் | கல்லூரி | முகவரி |
|---|---|---|
| 1 | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641 003 |
| 2 | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641 003 |
| 3 | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் – 641 003 |
| 4 | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மதுரை – 625 104 |
| 5 | மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மதுரை – 625 104 |
| 6 | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கிள்ளிகுளம் – 628 252 |
| 7 | அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | நாவலூர் குட்டப்பட்டு, திருச்சி – 620 009 |
| 8 | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | குமுளூர், திருச்சி – 621 712 |
| 9 | வன இயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மேட்டுப்பாளையம் – 641 301 |
| 10 | தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | பெரியகுளம் – 625 604 |
| **அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள்** | | |
| | பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | காரைக்கால் – 609 603 |
| | ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி | கலவை, வேலூர் – 632 506 |

[2006 ஆகஸ்ட் 3

## 2. ஆராய்ச்சி நிலையங்கள்

| | |
|---|---|
| 1. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் – 628 501 |
| 2. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி – 627 701 |
| 3. | பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிப்புத்தூர் – 626 125 |
| 4. | மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர் – 635 112 |
| 5. | மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை – 626 107 |
| 6. | தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார்நகர் - 642 101 |
| 7. | நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம் – 627 401 |
| 8. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கூடலூர் – 643 212 |
| 9. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல் – 624 103 |
| 10. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை – 625 512 |
| 11. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி – 623 707 |
| 12. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை – 629 181 |
| 13. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம் – 629 901 |
| 14. | கடலோர உவர் ஆராய்ச்சி நிலையம், இராமநாதபுரம் – 623 501 |
| 15. | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், சந்தியூர்–636 203 |
| 16. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை – 624 602 |
| 17. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு – 636 602 |
| 18. | தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகமண்டலம் – 643 001 |
| 19. | எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் – 602 002 |
| 20. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர் – 607 001 |
| 21. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி – 639 115 |
| 22. | கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர் – 635 806 |
| 23. | தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம் – 614 908 |
| 24. | மண் மற்றும் நீர் நிர்வாக ஆராய்ச்சி நிலையம், தஞ்சாவூர் – 613 501 |
| 25. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் – 632 104 |
| 26. | நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர் – 602 025 |
| 27. | மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம் – 606 001 |
| 28. | தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், வம்பன் – 622 303 |
| 29. | காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர் – 607 113 |
| 30. | வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை – 614 602 |
| 31. | தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101 |
| 32. | மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர் – 636 117 |
| 33. | நகர்ப்புற தோட்டக்கலை வளர்ச்சி மையம், சென்னை – 600 040 |



2006 ஆகஸ்ட் 3]

## 3. வேளாண் தொழில்நுட்ப விரிவாக்க மையங்கள் (வேளாண்மை அறிவியல் நிலையங்கள்)

(1) வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் – 641 003.

(2) வேளாண்மை அறிவியல நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை – 625 104.

(3) வேளாண்மை அறிவியல் நிலையம், மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம் – 606 001.

(4) வேளாண்மை அறிவியல் நிலையம், கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி–639 115.

(5) வேளாண்மை அறிவியல் நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், சந்தியூர், சேலம் மாவட்டம் – 636 203.

(6) வேளாண்மை அறிவியல் நிலையம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் – 604 002.

(7) வேளாண்மை அறிவியல் நிலையம், மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவிலாங்குளம், அருப்புக்கோட்டை – 626 107.

(8) வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் – 632 104, வேலூர் மாவட்டம்.

(9) வேளாண்மை அறிவியல் நிலையம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை – 629 161, கன்னியாகுமரி மாவட்டம்.

(10) வேளாண்மை அறிவியல் நிலையம், கடலோர உவர்ப்பு நில ஆராய்ச்சி நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இராமநாதபுரம் – 623 503.

(11) வேளாண்மை அறிவியல் நிலையம், தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், வம்பன் காலனி, புதுக்கோட்டை மாவட்டம் – 622 303.

[2006 ஆகஸ்ட் 3

(12) வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம் மாவட்டம் – 611 108.

(13) வேளாண்மை அறிவியல் நிலையம, நீடாமங்கலம், திருவாரூர் மாவட்டம் – 614 404.

(14) வேளாண்மை அறிவியல் நிலையம், நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர் – 602 025, திருவள்ளூர் மாவட்டம்.

**4. பயிர் மருத்துவ மையங்கள்**

1. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம்.
2. பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிப்புத்தூர்.
3. நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம்.
4. மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர்.
5. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்.



2006 ஆகஸ்ட் 3]

# அத்தியாயம்–7

## விதைச் சான்றளிப்பு

**1. முன்னுரை**

தரமான வித்தே தரமான விளைச்சலுக்கு அடிப்படையாகும். வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க விதையே மிக முக்கிய இடுபொருளாகும். உழவர்களின் நலன் காக்க ஓர் வலுவான விதை உற்பத்தி மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டுத் திட்டம் மிகவும் அவசியமானது. வேளாண்மை உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்கப் போதிய அளவு தரமான விதைகளை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்வது அவசியம். இதனை அடைய விதைச் சான்றளிப்புத் துறை விதைச் சான்றளிப்பு, விதைத் தரக் கட்டுப்பாடு, விதைப் பரிசோதனை மற்றும் பயிற்சி முதலிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**2. விதைச் சான்றளிப்பு**

தரமான மற்றும் இனத்தூய்மை கொண்ட விதை உற்பத்தியைத் தேவையான அளவில், குறிப்பாக விவசாயிகளால் விரும்பப்பட்ட உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுக்களில் மேற்கொள்ள ஊக்குவிக்கவே விதைச் சான்றளிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இக்குறிக்கோளை அடைய விதைச் சான்றளிப்புத் துறை இந்திய விதைகள் சட்டம் 1966–இன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட இரக விதைகளில் சான்றளிப்புப் பணிகளை விதை விதிகள் 1968–இன் அடிப்படையில் மேற்கொண்டு, மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் சான்று விதைகளின் தரத்தை உறுதி செய்கிறது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் அதாவது, 2006–07 ஆம் ஆண்டில் 50,500 மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்றளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மொத்த விதைத் தேவையில் சுமார் பதினைந்து விழுக்காடு சான்றளிக்கப்பட்ட விதைகள்மூலம் நிறைவு செய்யப்படுகிறது. இது தவிர, சுமார் பத்து விழுக்காடு விதைத் தேவை உண்மை நிலை விதைகள்மூலம் நிறைவு செய்யப்படுகிறது. கடந்த கால அனுபவங்களின்படி, தனியார்மூலம் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியை ஊக்குவித்து, மொத்த சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்கும், தேவைக்கும் உள்ள இடைவெளியை நிறைவு செய்ய தனியார் விதை உற்பத்தியாளர்களை மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

## 3. விதைத் தரக் கட்டுப்பாடு

வேளாண்மையின் அடிப்படை இடுபொருளான சான்று விதைத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், விதை விற்பனை நிலையங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து, வழங்குவதற்காக வைக்கப்பட்டிருக்கும் விதைகளில் மாதிரிகள் எடுத்து, விதைப் பரிசோதனை செய்து, உழவர்களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டியது முக்கியமானதாகும். தனியார் விதை உற்பத்தி அதிகரித்து வரும் இந்நிலையில், இப்பணி மிக முக்கியமானதாகும். விதை மாதிரிகள் எடுத்து அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. விதைப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தரக்குறைவான விதை வழங்கப்படும் நிகழ்வுகள் கண்டறியப்பட்டு, உரியவர்கள் மீது துறை மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விதைகள் சட்டம் 1966, விதை விதிகள் 1968 மற்றும் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983 ஆகியவற்றின் அடிப்படையில் இத்துறையின் விதை ஆய்வுப் பிரிவு விதைத் தரக் கட்டுப்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983-இன்படி விதை விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை உரிமங்களும் வழங்கப்படுகின்றன.

2006–07 ஆம் நிதி ஆண்டு திட்ட காலத்தின் இறுதி ஆண்டான 2006–07-ல் தமிழகத்தில் உள்ள உரிமம் பெற்ற 6,286 விதை விற்பனை நிலையங்களில் சராசரியாக ஒரு விற்பனை நிலையத்தில் வருடம் ஒன்றுக்கு 4 முதல் 5 ஆய்வுகள் மேற்கொள்வதன்மூலம் 31,200 ஆய்வுகள் மேற்கொண்டு, 6,286 விதை விற்பனை நிலையங்களிலிருந்து 23,000 விதை மாதிரிகள் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 4. விதைப் பரிசோதனை

நவீன வேளாண்மையில் விதைப் பரிசோதனைத் திட்டம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்திட்டத்தில் விதைகளின் தரத்தை அறிய முளைப்புத்திறன், புறச்சுத்தம், ஈரப்பதம், விதை நலம் மற்றும் பிற ரக கலவன்கள் கண்டறியப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் விதைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. விதைச் சான்றளிப்பு மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டுப் பணிகளை உரிய முறையில் செயல்படுத்த விதைப் பரிசோதனைத் திட்டம் அவசியமானது. விதைப் பரிசோதனை நிலையங்களில் சான்று விதை மற்றும் தரக் கட்டுப்பாட்டு



ஆய்வு விதை மாதிரிகள் மட்டுமன்றி உழவர்களிடமிருந்தும், விற்பனையாளர்களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும், பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. விதைகளின் இனத் தூய்மையை அறிய விதைச் சான்று இயக்ககத்திலுள்ள கண்ணாடி ஆய்வகத்திலும், கோயம்புத்தூர் மாவட்ட கண்ணம்பாளையம் பண்ணையிலும் பயிர் வளர்ப்புப் பரிசோதனை செய்யப்படுகிறது. இப்பரிசோதனையானது, தாயாதி மற்றும் வீரிய பருத்தி, ஆதாரநிலை பருத்தி, வீரிய ஆமணக்கு ஆகிய பயிர் விதைகளின் சான்றளிப்புக்கு முன்னதாகச் செய்யப்படுகிறது. விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகளும் இனத்தூய்மைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. 2006–07 ஆம் நிதி ஆண்டில் 70,000 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 5. பயிற்சி

தரமான விதை உற்பத்தியையும், வழங்குதலையும் ஊக்குவிக்க இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலமாகக் கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகள் நடத்தப்படுகின்றன:

இத்துறையில் புதிதாகப் பணியேற்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு விதைச் சான்றளிப்பு, விதைப் பரிசோதனை மற்றும் விதைத் தரக் கட்டுப்பாடு குறித்த புத்தறிவுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்துறையில் ஏற்கெனவே பணியாற்றும் அலுவலர்களுக்குப் புதிய விதை உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் கண்டறிதல் குறித்த புத்தாக்கப் பயிற்சியளிக்கப்படுகிறது.

விதை உற்பத்தியாளர்கள் மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகள் உட்பட விதை உற்பத்தி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

விதை விற்பனையில் விதைத் தரம் பேணிக் காத்தல் தொடர்பாகவும், விதை இருப்பு வைப்பதிலும், விற்பனை செய்வதிலும் கையாள வேண்டிய நெறிமுறைகள் குறித்தும், விதைப் பிரிவை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான சட்டங்கள் குறித்தும் விதை விற்பனையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 3

*2006–07ஆம் நிதியாண்டில் 29,000 நபர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**மைய அரசு திட்டம்**

*மைய அரசின் முழு நிதி உதவியுடன் ரூ.215.48 இலட்சம் செலவில் 7 விதைப் பரிசோதனை நிலையங்கள் மேம்படுத்தப்படுவதுடன், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு இந்நிதியாண்டில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.*

**அட்டவணை 1**

சான்று செய்த விதை அளவு மெடன்

| வ.எண் | பயிர் | 2005–06 | | 2006–07 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு |
| 1 | நெல் | 42400 | 49778 | 44200 |
| 2 | ரக சிறு தானியம் | 550 | 484 | 500 |
| 3 | வீரிய சிறு தானியம் | 10 | 1 | 10 |
| 4 | ரகப் பருத்தி | 1000 | 1212 | 1200 |
| 5 | வீரியப் பருத்தி | 20 | 9 | 20 |
| 6 | பயறு வகை | 1200 | 1158 | 1200 |
| 7 | எண்ணெய் வித்து | 3250 | 3373 | 3300 |
| 8 | காய்கறிகள் | 70 | 59 | 70 |
| | மொத்தம் | 48500 | 56074 | 50500 |

**அட்டவணை 2**

விதை ஆய்வு

| வ. எண் | விவரம் | 2005–06 | | 2006–07 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு |
| 1 | விற்பனை நிலைய ஆய்வுகள் | 30000 | 33533 | 31200 |
| 2 | விதை மாதிரிகள் எடுத்தது | 20000 | 23002 | 23000 |



2006 ஆகஸ்ட் 3]

**அட்டவணை 3**

விதைப் பரிசோதனை

| வ. எண் | விவரம் | 2005–06 | | 2006–07 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு |
| 1 | விதைப் பகுப்பாய்வுப் பரிசோதனை செய்தது | 65000 | 55215 | 70000 |

**அட்டவணை 4**

விதைச் சான்றுப் பயிற்சி

| வ. எண் | விவரம் | 2005–06 | | 2006–07 |
|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு |
| 1 | பயனாளிகள் | 28000 | 29450 | 29000 |

**இணைப்பு**

**விதைச் சான்றளிப்புப் பகுதிகள்**

| வ எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு |
| 3 | சேலம் | சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | விழுப்புரம் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | திருவண்ணாமலை | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |


[2006 ஆகஸ்ட் 3

| விதை ஆய்வுப் பகுதிகள் | | |
|---|---|---|
| வ எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு, நாமக்கல் |
| 3 | சேலம் | சேலம் மற்றும் தருமபுரி |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | கடலூர் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |
| விதைப் பரிசோதனை நிலையங்கள் | | |
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி |
| 2 | மதுரை | மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை |
| 3 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 4 | தருமபுரி | தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 7 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவள்ளூர் |




2006 ஆகஸ்ட் 3]

## விதைச் சான்றளிப்புத் துறை திட்டங்கள் செயலாக்கம் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி (மெ. டன்)






| | 2000- | 2001- | 2002- | 2003- | 2004- | 2005- |
|---|---|---|---|---|---|---|
| தனியார் | 15345 | 18142 | 19475 | 22323 | 29747 | 35934 |
| அரசு சார்பு | 1767 | 2188 | 1672 | 1058 | 1399 | 1816 |
| அரசு | 25699 | 22886 | 20178 | 17950 | 17123 | 18324 |

### விதைத் தரக் கட்டுப்பாட்டுப் பணிகள்



[2006 ஆகஸ்ட் 3






2006 ஆகஸ்ட் 3]

# அத்தியாயம்–8

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

### எண்ணங்களும், செயல்பாடுகளும்

உலகத் தரம் வாய்ந்த பொருட்களையே விரும்பும் நுகர்வோர் மத்தியில் தற்போதைய போட்டி நிறைந்த சூழ்நிலையில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வதே வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் தொலை நோக்கமாகும். இதற்கென இயற்றப்பட்ட சட்டத்தை முறையாகச் செயல்படுத்தி புதிய தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதன்மூலம் அறுவடைக்குப் பின் மற்றும் போக்குவரத்தில் ஏற்படும் சேதாரங்களைக் குறைப்பதுடன், சரியான வகையில் தரம் பிரித்தும், விளைபொருட்களின் மதிப்பினைக்கூட்டுவதன் மூலமும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யத் தக்க நடவடிக்கை மேற்கொள்வதுமாகும்.

### 1.1 முன்னுரை

கிராமங்களின் வளர்ச்சியிலும், நாட்டின் கிராமப் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதிலும், வேளாண் அங்காடிகளின் உள்கட்டமைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் செயல்திறன் மேம்படுவதற்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சாகுபடி எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்கு மதிப்பு கூட்டும் நேர்த்தி செய்யப்பட்ட விற்பனையும் முக்கியமாகத் திகழ்கிறது. தேசிய வேளாண் குழுவின் அறிக்கையின்படி (12-வது அறிக்கை) வேளாண்மை விற்பனை என்பது ஒரு விளைபொருளை உற்பத்தி செய்திட முடிவெடுக்கும்போதே தொடங்குகிறது. மேலும், வேளாண்மை விற்பனை என்பது அங்காடி முறையில் அனைத்து வேளாண் கூறுகளையும் உள்ளடக்கியது என்பதோடு, அறுவடைக்கு முன்னும் பின்னும் செய்கின்ற செய்நேர்த்திகள், விளைபொருளை ஓரிடத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பது, தரம் பிரிப்பது, சேமிப்பது மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது மற்றும் வழங்குவது ஆகியவற்றையும் கொண்டது. இந்நடவடிக்கைகள் வேளாண் விளைபொருளுக்கு மதிப்பினைக் கூட்டுவதுடன், விளைவிப்போருக்குச் சிறந்த விலை கிடைக்க வழி வகுக்கின்றது.

[2006 ஆகஸ்ட் 3

இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் விற்பனைக்கான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கும்பொருட்டும் மற்றும் வேளாண் விளைபொருள் வணிகத்தை ஒழுங்குபடுத்தும் வகையிலும் தமிழ்நாடு அரசு 'தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 மற்றும் விதிகள் 1991'-ஐ உருவாக்கியது. இச்சட்டம் 1959 ஆம் ஆண்டில் இயற்றிய சட்டத்திற்கு மாற்றாகக் கொண்டு வரப்பட்டது.

வேளாண்மை விற்பனையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறை 1977 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகின்றது. வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமன்றி, உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி ஆகிய பொறுப்புகள் கூடுதலாக வழங்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு முதல் "வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முக்கியச் செயல்பாடுகள்:

1. விவசாயிகள் மற்றும் நுகர்வோர் நேரடியாக முழுப் பயன்பெறும் வகையில் உழவர் சந்தைகளை ஏற்படுத்தி, செயல்படுத்துதல்.

2. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு காய்கறிகள், பழங்கள் மற்றும் வாசனை மலர்கள் ஆகியவற்றின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளைப் பெருக்கிடும் வகையில் குழுக்களை ஏற்படுத்தி விற்பனை வசதிகளை உருவாக்குதல்.

3. விவசாயிகள் நலன் கருதி, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருள் விற்பது மற்றும் வாங்குவது போன்ற செயல்களை ஒழுங்குபடுத்துதல்.

4. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக விற்பனை செய்வதனால் அடையும் பயன்களைப் பற்றி ஊடகங்கள்மூலம் விளம்பரம் செய்தல், பயிற்சிகள் அளித்து அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.



2006 ஆகஸ்ட் 3]

5. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவிலான விளைபொருட்களைத் தரம் பிரித்து, சிறந்த விலை கிடைத்திட உதவுதல்.

6. வேளாண் பொருட்கள், கால்நடைகள்மூலம் கிடைக்கும் பொருட்கள் மற்றும் வனப் பொருட்கள் ஆகியவற்றிற்கு நுகர்வோர் பயன்பெறும் வகையில் அக்மார்க் தர முத்திரை வழங்கும் திட்டத்தினை அமலாக்குதல்.

7. வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைப்பதன்மூலம் ஏற்றுமதி செய்யும் வேளாண் விளைபொருட்களின் பரப்பினை அதிகரித்தல், அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை குறித்த விவரங்களை அளித்தல், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் சர்வதேசச் சந்தையில் நிலவும் விலை விவரத்தை ஒருங்கிணைத்து அளித்தல்.

8. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்குச் சரியான விலை கிடைக்க உறுதி செய்திட, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய குளிர்பதனக் கிட்டங்கிகளை அமைத்தல் (பண்ணையிலிருந்து சந்தை முடிய குளிரூட்டுத் தொடர் அமைத்தல்).

9. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவப்பட முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

**1.2. விற்பனைக் குழுக்கள்**

தமிழ்நாட்டில் தற்போது 21 விற்பனைக் குழுக்கள் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன.

**1.3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 273 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 சோதனைச் சாவடிகள், 108 ஊரகக் கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

புதியதாக உருவாக்கப்பட்ட நீலகிரி விற்பனைக் குழுவின்கீழ் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் விரைவில்

[2006 ஆகஸ்ட் 3

செயல்படவுள்ளன. நீலகிரி விற்பனைக் குழு மற்றும் நான்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கும் நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை ஒரு சேர விற்பனைக் கூட வளாகத்தில் கூட்டி, விளைபொருள் விற்கும் செயல்களை முறைப்படுத்தி, மறைமுக ஏலமுறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி, அதிகபட்ச விலை பெற்றுத் தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

வணிகர்கள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஆற்றப்படும் பணிகளுக்காக உற்பத்தியாளர்/விற்பனை செய்வோரிடம் எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. உரிமம் பெற்ற வணிகர்களிடம் விளைபொருள் மதிப்பில் ஒரு விழுக்காட்டளவு விற்பனைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1- ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.3.1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வழங்கப்படும் சேவைகள்

மின்னனு எடை மேடை மற்றும் எடை தராசு கொண்டு சரியான எடையிடுதல் வசதி, கிட்டங்கி வசதி, வங்கி வசதி, உடனடியாகப் பணம் வழங்கல், அன்றைய அங்காடி விலை விவர நிலவரம் அறிய வாய்ப்பு, விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, குடிநீர் வசதி, வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி, இலவச மருத்துவ வசதி, இடுபொருள் மையம், தொலைபேசி மற்றும் நிகரி வசதி போன்ற பல வசதிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மைய அரசின் 'அக்மார்க் நெட்' திட்டத்தின்கீழ் 93 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு தொலைபேசி இணையதள வசதியுடன் கூடிய கணினி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாய விளைபொருட்களுக்கு நிலவும் அன்றாட விலை விவரத்தை தேசிய தகவல் மையத்திற்கு அனுப்பப்படுவதன்மூலம் விவசாயிகள் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரத்தை அறிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் வரும் ஆண்டுகளில் அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் கணினி ஒருங்கிணைந்த வலைதளம்மூலம் இணைக்கப்படும்.



2006 ஆகஸ்ட் 3]

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக் குழு வாரியான உட்கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 1.3.2. விளைபொருட்கள் அறிவிக்கை செய்தல்

இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 42 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

### 1.4. வணிக முறை தரம் பிரித்தல்

உற்பத்தியாளர்களின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ற சிறந்த விலை கிடைக்க உதவும் நோக்கத்துடன் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 96 வணிக முறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தித் தரம் பிரிப்பு மையங்கள், 1 புகையிலை தரம் பிரிப்பு மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும் கிராமங்களில் விவசாயிகளின் பொருட்களுக்கும், வணிகத்திற்கும் ஏற்ற முறையாகத் தரம் பிரிப்பு செய்யப்படுகிறது. இம்மையங்கள் தற்போது 'அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி தொழில் நுட்பத் தகவல் மையம்' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இம்மையங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய செய் நேர்த்தி தொழில் நுட்பப் பணி பற்றி விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கின்றார்கள்.

### 1.5. விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன்

சிறு/குறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் பாதிப்பு ஏற்படுத்தும் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும்பொருட்டு, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கிட்டங்கிகளில் 6 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, அதிகபட்சமாக ரூ.50,000/– வரை பெறலாம். இதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக வட்டி வசூலிக்கப்படுகிறது. வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 3

### 1.6 தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள், விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ/நிரந்தர ஊனமுற்றாலோ அல்லது விஷப்பாம்பு கடியின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ ரூ. 1,00,000/– வரை உதவி வழங்கப்படும். அதேபோன்று, விபத்தின் காரணமாக இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் அல்லது இரு கண்கள் இழக்க நேரிட்டால் ரூ. 75,000/- மானியமும் மற்றும் விபத்தின் காரணமாக ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் இழக்க நேரிட்டால் ரூ. 50,000/– மானியமும் தகுதியுடைய விவசாயிகள்/குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், ஒருவருக்கு வருடத்திற்குத் தவணைக் கட்டணமாக ரூ. 10/–ஐ உரிய விற்பனைக் குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சம பங்காகச் செலுத்துகின்றன.

### 1.7. "அக்மார்க்" தரம் பிரித்தல்

"அக்மார்க்" என்பது உணவுப் பண்டங்களின் தரத்திற்கு அளிக்கப்படும் முத்திரையாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் ஒரு முதன்மை ஆய்வகம் மற்றும் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும், 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 'அக்மார்க்' தரம் பிரிப்பின்கீழ், மையத் தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்களுக்கும், மையத் தொகுப்பிற்கு உட்படாத உணவுப் பண்டங்களுக்கும், தரம் பிரிக்கும் பணியானது பயிற்சி பெற்ற தொழில் நுட்ப அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உணவுப் பண்டங்கள் தரம் மற்றும் தன்மை அடிப்படையில் சிப்பமிடப்படுகின்றன. 'அக்மார்க்' முத்திரைச் சீட்டுகள் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மேற்பார்வையில் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் மாநில அக்மார்க் ஆய்வகங்கள் மற்றும் அக்மார்க் தரம் பிரிப்பு மையம் நுகர்வோர்கள் மற்றும் சிப்பம் கட்டுபவர்கள் பயன்பெறும் வகையில் நவீன உபகரணங்கள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2006 ஆகஸ்ட் 3]

### 1.8. கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்

அறுவடைக்குப் பின் ஏற்படும் தானிய இழப்பினைக் குறைக்கும் வகையில் இத் துறையின் மூலமாகக் கிராமங்களில் உலர் களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் திட்டமாகும். இது வரை ரூ. 17.24 கோடி செலவில் 930 உலர் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2005–06 ஆம் நிதியாண்டில் ரூ. 4.00 கோடி செலவில் 200 உலர் களங்கள் அமைக்கும் பணி இன்னும் நடைபெற்று வருகின்றது. 2006–07 ஆம் நிதியாண்டில் ரூ. 2.25 கோடி செலவில் 100 இடங்களில் உலர் களங்கள் அமைக்கப்படும்.

### 2. உழவர் சந்தைகள்

தமிழ்நாட்டில் விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் பயன்பெறும் வகையில் நகரப் பகுதிகளில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே செயல்பட்டு வந்த 75 உழவர் சந்தைகள் புனரமைக்கப்பட்டும் மற்றும் மூடப்பட்ட 28 உழவர் சந்தைகள் அனைத்தும் திறக்கப்பட்டும், தற்சமயம் மொத்தம் 103 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சந்தைகள்மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க உறுதி செய்யப்படுவதுடன், நுகர்வோருக்கு வெளிச்சந்தையைக் காட்டிலும் குறைவான விலையில் தரமான, சரியான எடையுள்ள காய்கறிகள், கனிகள், மூலிகைகள், சிறு தானியங்கள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சராசரியாக நாளொன்றிற்கு 950 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் பழங்கள் ரூபாய் 1.00 கோடி மதிப்பில் சுமார் 6,500 விவசாயிகள்மூலம் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகின்றன. இதன்மூலம் தினந்தோறும் 1,50,000 நுகர்வோர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

### 2.1. உழவர் சந்தையை மேம்படுத்துதல்

உழவர் சந்தைகளில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் மின்னணு எடை தராசு, பிளாஸ்டிக் கிரேட்டுக்கள், காய்கறிகளை எடுத்துச் செல்ல தள்ளு வண்டிகள், காய்கறிக் கழிவுகளைச் சேகரித்து அப்புறப்படுத்த பிளாஸ்டிக் கழிவுத் தொட்டி ஆகிய வசதிகள் செய்யப்பட உள்ளன. இது தவிர, காய்கறி மற்றும் பழங்களைப் பாதுகாத்திட குளிர்பதன அறைகள், காய்கறிகளை எடுத்து வர குளிரூட்டியுடன் கூடிய மினி வேன் வசதி, கணினி மற்றும் நிகரி வசதி, புதிய ரக வீரிய காய்கறி விதைகள், கன்றுகள், சொட்டு நீர்ப் பாசனக் கருவிகள், இயற்கை வேளாண்மை.

முறைகள் மற்றும் அறுவடைக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய செய் நோத்தி குறித்த பயிற்சிகள் போன்ற வசதிகள் உழவர் சந்தைகளில் ஏற்படுத்தப்பட உள்ளன. இவ் வசதிகள் சம்பந்தப்பட்ட விற்பனைக் குழு மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதிமூலம் மானியம் பெற்று நிறைவேற்றப்படும்.

**3. வணிக வளாகம் அமைத்தல்**

**3.1. நெல் வணிக வளாகம்**

நெல் பயிருக்கென ரூ. 12.00 கோடி செலவில் மதுரையில் விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயன் பெறும் வகையில் நெல் வணிக வளாகம் கட்டுமானப் பணி நடைபெற்று, முடிவுறும் தருவாயில் உள்ளது. இந்த வளாகத்தில் மொத்தம் 314 கடைகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 143 கடைகள் நெல் வணிகத்திற்கும், 54 கடைகள் இடுபொருள் வணிகத்திற்கும், 100 கடைகள் மலர் வணிகத்திற்கும், 17 கடைகள் அலுவலகப் பயன்பாட்டிற்கும் மற்றும் அஞ்சல் அலுவலகம், தொலைபேசி தொடர்பகம், சிற்றுண்டி சாலை, கூட்டுறவுப் பண்டகசாலை ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை 127 கடைகள் நெல் வணிகர்களுக்கும், 44 கடைகள் இடுபொருள் வணிகர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதர கடைகள் வணிகர்களுக்கு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கையில் உள்ளது.

**3.2. மஞ்சள் வணிக வளாகம்**

தமிழ்நாட்டில் மஞ்சள் வணிகத்திற்கென ஈரோட்டிற்கு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ. 36.32 கோடி செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த மஞ்சள் வணிக வளாகம் இம்மாநிலம் மற்றும் இந்நாட்டு விவசாயிகள், வணிகர்கள் பயன் பெறும் வகையில் அமையும். இந்த மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்காக மஞ்சள் வணிகர் சங்கத்தால் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் ஈரோடு விற்பனைக் குழுவிற்கு 17.55 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இதில் ரூ. 11.32 கோடி செலவில் பொதுவான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





**3.3. மாங்கனி மற்றும் வெங்காயம் விற்பனைக்கான வணிக வளாகம்**

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடத்தில் வெங்காயத்திற்கும் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கும் குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் தலா ரூ. 2.00 கோடி வீதம் மொத்தம் ரூ. 4.00 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது.

**3.4. தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் திராட்சைக்கென குளிர்பதனக் கிட்டங்கி ஏற்படுத்துதல்**

திராட்சை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் திராட்சைக்கென தரம் பிரித்து, பக்குவப்படுத்தி அட்டைப் பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்யத்தக்க வகையில் குளிர்பதனக் கிட்டங்கி ரூ. 3.75 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**3.5. காவேரிப்பட்டினத்தில் நெல் வணிகத்திற்கென விற்பனைக்கூடம் அமைத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் நெல் பயிரிடும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் உலர் களம் மற்றும் கிட்டங்கி வசதியுடன்கூடிய நெல் வணிகத்திற்கென ஒரு விற்பனைக் கூடம் ஏற்படுத்தப்பட உள்ளது.

**3.6. விற்பனை முனையங்கள் ஏற்படுத்துதல்**

மைய அரசின் நெறிமுறைப்படி அமைந்த அழுகும் பொருட்களான காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து, பதப்படுத்தி விற்பனை செய்திட அனைத்து வசதிகளுடன் கூடிய விற்பனை முனையங்கள் (Terminal Markets) சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மூன்று பெரு நகரங்களின் அருகில் ஏற்படுத்தப்பட உள்ளன.

**4. வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம்**

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதில் சந்தையறிவுத் திறம் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. விவசாயிகள் பல்வேறு சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரத்தினை அறிவதன்மூலம் அவர்களின் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலை பெற ஏதுவாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, அனைத்து வசதிகளுடன்கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத்

[2006 ஆகஸ்ட் 3

தகவல் மையங்கள் ரூ. 45.00 இலட்சம் செலவில் 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் இணையதளம் வசதியுடன் கூடிய கணினி மற்றும் மின்னணு தகவல் பலகை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில் கணினி மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரப்பெற்ற விளைபொருட்களின் வரத்து மற்றும் அதற்கு நிலவும் விலை நிலவரம் மற்றும் அறுவடைக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து மின்னணுத் தகவல் பலகையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

**5. வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்**

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் குறிப்பிட்ட வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக கீழ்க்காணும் மூன்று இடங்களில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளன:

**5.1. தருமபுரி மாவட்டத்தில் கொய் மலர் ஏற்றுமதி மண்டலம்**

தமிழ்நாட்டில் கொய் மலருக்கென ஏற்றுமதி மண்டலம் அமைப்பது குறித்து மைய அரசின் நிறுவனமான அபிடா (APEDA)-வுடன் வேளாண்மைத் துறை, தமிழ்நாடு அரசு, 20-3-2002-ல் ஒரு செயலாக்க ஒப்பந்தம் கையெழுத்திட்டது. கொய் மலருக்கென தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கியதாக இம்மண்டலம் அமையும். இதற்கென ஓசூரில் 198.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 24.85 கோடி மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனமும் தனியார் நிறுவனமும் இணைந்து எற்படுத்தியுள்ள "டான்ஃப்ளோரா" என்ற கூட்டு நிறுவனம் தரம் பிரித்தல், சிப்பம் கட்டுதல் உள்ளடக்கிய மத்திய சிப்பம் கட்டும் கூடம் (Central Pack House), பதப்படுத்தும் நிலையம், விற்பனை வசதி ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்த வசதிகள் அனைத்தும் 2007-க்குள் நடைமுறைக்கு வரத்தக்க வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**5.2. நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம்**

நீலகிரி மாவட்டம், ஊட்டியில் மலர்களுக்கென ரூ. 15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் தனியார் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலம் அமைப்பது குறித்து மைய அரசின் நிறுவனமான அபிடா (APEDA)-வுடன் வேளாண்மைத் துறை, தமிழ்நாடு அரசு, 6-2-2003ல் ஒரு செயலாக்க ஒப்பந்தம்



2006 ஆகஸ்ட் 3]

கையெழுத்திட்டது. இந்த ஏற்றுமதி மண்டலத்தில் ஏல மையம், முன்குளிர்விப்பான், குளிர்பதனக் கிட்டங்கிகள், குளிரூட்டி பொருத்தப்பட்ட ஊர்தி, நவீன மலா சாகுபடிப் பயிற்சி மையம், விற்பனை வசதிகள் போன்ற உள் கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்வுள்ளன. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள துறையின் மூலமாக விவசாயிகளுக்கு நவீன மலர் சாகுபடிக்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், சாகுபடிக்குத் தேவையான மலர்ச் செடிக் கன்றுகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இதுதவிர, பசுமைக்குடில் மற்றும் நிழல் வலைகள் அமைத்திட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. மேலும், இத்துறை மூலமாக மலர்கள் சாகுபடிக்குத் தேவையான தொழில்நுட்ப விவரம் குறித்த விவரங்களை விவசாயிகள் அறிய ஏதுவாகத் தகவல் மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**5.3. தேனி மாவட்டத்தில் மாம்பழத்திற்கான ஏற்றுமதி மண்டலம்**

மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி, வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ. 24.60 கோடி மதிப்பீட்டில் தனியார் துறை பங்கேற்புடன் அமைக்கப்பட்டு வருகின்றது. அபிடா நிறுவனமும், தமிழ்நாடு அரசும் 6-2-2003-ல் இதற்கான செயலாக்க ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன. இந்த வேளாண் ஏற்றுமதி மண்டலத்தில் மாகிரிட்டா (M/S. Maagrita Export Limited) என்ற தனியார் நிறுவனத்தால் சிப்பம் கட்டும்கூடம், சேகரிப்பு மையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், தரம் பிரிப்புக்கூடம், சுடு நீர் பதப்படுத்தும் இயந்திரம், மின்னணு தரம் பிரிப்பு, கூழாக்கும் நிலையம், உலர்ப்பான், பழக்கூழை பதப்படுத்தும் நிலையம் போன்ற வசதிகள் நிலக்கோட்டை உணவுப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளன.

**5.4. கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம்**

முந்திரிக்கென கடலூர் மாவட்டத்தில் ரூ. 10.36 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார் துறை பங்கேற்புடன் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான செயலாக்க ஒப்பந்தம் அபிடா நிறுவனத்தாலும், தமிழ்நாடு அரசாலும 12-4-2005-ல் செய்து கொள்ளப்பட்டது. இம்மண்டலத்தில் பொது கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட Messrs. சத்துவா ஏற்றுமதி நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report)

[2006 ஆகஸ்ட் 3

அந்நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்தில் மாநில அரசின் பங்காக ரூ. 150.00 இலட்சத்தில் பொதுவான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

**புதியதாகத் தோற்றுவிக்கப்படவுள்ள வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்**

**5.5. திருச்சி மாவட்டத்தில் வாழைக்கான ஏற்றுமதி மண்டலம்**

வாழைக்கென திருச்சி மாவட்டத்தில் ரூ. 10.00 கோடி திட்டச் செலவில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார் துறை பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இம்மண்டலத்தில் 85 மெ. டன் கொள்ளளவு கொண்ட 5 சேகரிப்பு மையங்கள், 500 மெ.டன் கொண்ட கிட்டங்கி, 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சீதோஷ்ணம் கட்டுப்படுத்தப்பட்ட கிட்டங்கி, நாள் ஒன்றுக்கு 500 மெ.டன் அளவு தரம் பிரிப்பு செய்யக்கூடிய 2 தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் ஆண்டு ஒன்றுக்கு 15,000 மெ.டன் பதப்படுத்தக்கூடிய திறன் கொண்ட பதப்படுத்தும் நிலையங்கள் தனியார் உதவியுடன் அமைக்கப்படவுள்ளன. இம்மண்டலம் அமைப்பதற்கான கருத்துரு அரசு மூலமாக மைய அரசின் அபிடா நிறுவனத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**6. குளிர்பதனக் கிட்டங்கி அமைத்தல்**

தமிழ்நாட்டில் 100 இலட்சம் மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள், 65 இலட்சம் மெ.டன் தானிய வகைகள், 3 இலட்சம் மெ.டன் வாசனைப் பயிர்கள் மற்றும் 5 இலட்சம் மெ.டன் மலைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அடுத்த ஐந்தாண்டுகளில் மேற்கண்ட பயிர்களின் உற்பத்தி 30 விழுக்காடு கூடுதலாக வாய்ப்புள்ளது. வேளாண் விளை பொருட்களில், குறிப்பாக மொத்த உற்பத்தியில் 8 முதல் 10 விழுக்காடு தானிய வகைகள், 30 முதல் 35 விழுக்காடு காய்கறிகள் மற்றும் பழங்கள் போதிய சேமிப்பு வசதி மற்றும் குளிர்பதன வசதி இல்லாமையால் கெட்டு விடுகின்றன. இதனால் விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு 15 முதல் 25 விழுக்காடு குறைவான விலை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.

காய்கறிகள் மற்றும் பழங்கள், தானிய வகைகள், வாசனைப் பயிர்கள் மற்றும் மலைப் பயிர்களில அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திடும் நோக்கில் இத்துறையின் மூலமாக 15 இடங்களில் தனியார் துறைமூலம் குளிர்பதனக் கிட்டங்கிகள் கிராமிய உள்கட்டமைப்பு



2006 ஆகஸ்ட் 3]

நிதியுதவி நபார்டு வங்கிமூலம் பெற்றும், தேசிய தோட்டக்கலை வாரியத்தின் மானியம் பெற்றும் அமைத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்குளிர்பதனக் கிட்டங்கிகள் காய்கறிகள் மற்றும் பழங்கள் அதிக அளவில் விளையக்கூடிய பகுதிகள், விற்பனைப் பகுதிகள் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்கள் அமைந்துள்ள பகுதியில் அமைக்கப்படும்.

**7. உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள்**

விவசாயிகளுக்கு நிலையான நியாய விலையை உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் உறுதியளித்தலைத் தொடர்ந்து உணவு பதப்படுத்தும் தொழில் தற்போது வளர்ச்சி பெற்று வருவதுடன், பதப்படுத்தப்பட்ட வகையில் நுகர்வோருக்கு ஆண்டு முழுதும் உணவுப் பண்டங்கள் கிடைப்பதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. இதன்மூலம் பெருமளவில் உணவுப் பொருள் இழப்பும் தவிர்க்கப்படுகிறது. விவசாயிகள் பதப்படுத்துதலுக்கேற்ப தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்வதன்மூலம் அவர்களுக்குக் கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்பு கிடைக்கின்றது. நிலக்கோட்டைத் தொழிற்பேட்டையில் (திண்டுக்கல் மாவட்டம்) ரூ. 13.00 கோடி செலவில் உணவுப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. 2005–06ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் ரூ. 108.28 கோடி முதலீட்டுத் தொகையில் 63 உணவு பதப்படுத்தும் தொழிலகங்களுக்கு ரூ. 11.67 கோடி முதலீட்டு மானியத் தொகை பெற மைய அரசின் உணவு பதப்படுத்தும் அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**8. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் முக்கியப் பணிகள்:

**8.1. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்**

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள மையங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்வதால் கிடைக்கும் ஆதாயங்கள் குறித்த விளம்பரம் மற்றும்

[2006 ஆகஸ்ட் 3

பிரச்சாரப் பணிகளைச் செய்து வருகிறது. மேலும், 3 மையங்களில் இந்தப் பணி விரிவுபடுத்தப்படும்.

## 8.2. பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்

சேலத்தை மையமாகக் கொண்டு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறைப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின்மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சி மையத்திலிருந்து தரம் பிரிப்பாளர் பயிற்சி ஆண்டு ஒன்றுக்கு 1 அணி வீதம் விற்பனைக் குழுவில் பணிபுரியும் பணியாளர்கள் 20 நபர்களுக்கு 30 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேபோன்று விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி ஆண்டு ஒன்றுக்கு 1 அணி வீதம் 20 நபர்களுக்கு 28 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், விவசாயிகளுக்கான நேரடித் தொடர்புத் திட்டம் குறித்த பயிற்சி ஆண்டு ஒன்றுக்கு, 5 அணிகளாக 1 அணிக்கு 20 விவசாயிகள் வீதம் மொத்தம் 100 விவசாயிகளுக்கு 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இது தவிர, வேளாண்மை உதவி இயக்குநர் (விளம்பரம் மற்றும் பிரச்சாரம்) சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மையங்கள் மூலமாக அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலேயே வைத்து நேரிடையாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 8.3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விற்பனை அறக்கட்டளை அறிவுப்பீடம் அமைத்தல்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக் கல்வி மையத்திற்கு ரூ.50.00 இலட்சம் வைப்பு நிதியாக அளித்து ஓர் அறக்கட்டளை அறிவுப்பீடம் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியிலிருந்து பெறப்படும் வட்டியின்மூலம் பல ஆராய்ச்சிகளும், பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.



2006 ஆகஸ்ட் 3]

## 8.4. கட்டுமானப் பணிகள்

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், ஊரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணம் வழங்கல் அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உட்புறச் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் உழவர் சந்தைகளின் மராமத்துப் பணிகளை ரூ.42.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள அரசு அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது. முதற்கட்ட பராமரிப்புப் பணிகள் முடிவுற்று, புதுப்பொலிவுடன் உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன.

## 8.5. விற்பனை மேம்பாட்டு நிதி

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தமக்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு, சந்தை மேம்பாட்டு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலிருந்து விற்பனை மேம்பாடுகளுக்கான விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

## 8.6. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத் திறம் தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்துதல்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் ரூ. 20.00 இலட்சத்தில் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பங்களிப்புடன் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத் திறம் தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரிவு, சர்வதேசச் சநதையில் முக்கிய விளைபொருட்களுக்கான முந்தைய, தற்போதைய விலை விவரங்களைச் சேகரித்து, அவற்றை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் எதிர்கால ஏற்றுமதிக்கான விலையை முன்னறிவிப்புச் செய்தல், ஏற்றுமதிக்கு உகந்த நாடுகளைக் கண்டறிதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும். சர்வதேச மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விளைபொருட்களுக்கு

எதிர்வரும் மாதங்களில் நிலவக்கூடிய விலை விவரங்களைக் கண்டறிந்து அவ்விவரங்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யப்படும். இது தவிர, அண்டை மாநிலங்களில் முக்கிய விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரங்களை அறிந்து விவசாயிகளுக்குத் தெரிவிப்பதன்மூலம், விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறவும், பருவத்திற்கேற்ற பயிர்களைத் தேர்வு செய்யவும், அவர்களுடைய விளைபொருட்களைக் குறித்த நேரத்தில் விற்பனை செய்யவும் வழிவகை செய்யப்படும். மேலும், இப்பிரிவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையத்துடன் இணையதளத்தின் வாயிலாக இணைக்கப்படவுள்ளது.

### 9. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு

தமிழகத்தில் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பூட்டுதல் முறைகளைக் கடைபிடிக்கச் செய்து அதன்மூலம் வேளாண் வணிகத்தில் அவர்களை ஈடுபடுத்த ஏதுவாக பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து 'தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்புச் சங்கம்' உருவாக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் அரசு, தனியார் துறை, விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும். இச்சங்கம் 'தமிழ்நாடு சங்கப் பதிவு விதிகள் 1975'–ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின்மூலம் 31–3–2006 முடிய 6 நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ.345.51 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ. 374.50 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

### 10. ஒருங்கிணைந்த நவீன வேளாண்மை மற்றும் நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டம் (IAMWARM)

ஒருங்கிணைந்த நவீன வேளாண்மை மற்றும் நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டம் (Integrated Agricultural Modernisation and Water Resources Management) என்பது உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த இருக்கும் திட்டமாகும். இத்திட்டத்தில் பல துறைகளான



பொதுப் பணித் துறை, வேளாண்மை, வேளாண்மை விற்பனை, வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலை, மீன்வளர்ப்புத் துறை, வனத் துறை, சமூக நலத் துறை ஆகிய அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படும் திட்டமாகும்.

முதற்கட்டமாக தமிழ்நாட்டிலுள்ள 16 நீர் வடி நிலத்திலுள்ள (காவேரி நீர் வடி நிலத்தைத் தவிர) 17 உப வடி நிலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தேர்வு செய்யப்பட்ட 17 உப வடி நிலங்களை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் திட்டங்கள் தயாரிக்கும் நிலையில் உள்ளன. நவீன முறை பாசனமான தெளிப்பு நீர் மற்றும் சொட்டு நீர்ப் பாசனத்தைக் கையாண்டு, அதிலிருந்து சேமிக்கும் நீரைக்கொண்டு விவசாயிகளுக்கு பயன் தரும் வகையில் தீவிர பயிரிடும் முறை (intensive & extensive cropping change in cropping pattern) கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

விளைவித்த விளைபொருளை விற்பனை செய்வதில் வேளாண் விற்பனைத் துறை தனி பங்கு வகிக்கிறது. பல துறைகளோடு வேளாண் விற்பனைத் துறையும் சேர்ந்து 17 உப வடி நிலங்களையும் மேம்படுத்த உள்ளது.

17 உப வடி நிலங்களிலும் ஒருங்கிணைந்த நவீன வேளாண்மை மற்றும் நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டம் (IAMWARM Project) செயல்படுத்த திட்ட அலுவலர்கள் (Nodal Officers) ஒதுக்கீடு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உலர்களம், சேமிப்பு கிட்டங்கி, மினி வேன் போன்றவை அந்தந்த உப வடி நில நீர் உபயோகிப்போர் (விவசாயிகள்) சங்கத்திற்கு வழங்கப்படும்.

## அட்டவணை– 1

**மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சோதனைச் சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறைத் தரம்பிரிப்பு மையங்கள், பருத்தித் தரம்பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலைத் தரம்பிரிப்பு மையம் குறித்த விவரங்கள்**

(எண்களில்)

| தொ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | சோதனைச் சாவடிகள் | ஊரகக் கிட்டங்கி | வணிக முறைத் தரம் பிரிப்பு மையம் | பருத்தி தரம் பிரிப்பு மையம் | புகை யிலை தரம் பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 14 | 2 | 5 | 7 | -- | -- |
| 2 | வேலூர் | 12 | -- | 4 | 5 | -- | -- |
| 3 | தி.மலை | 16 | -- | 7 | 10 | -- | -- |
| 4 | கடலூர் | 10 | -- | 3 | 6 | -- | -- |
| 5 | விழுப்புரம் | 18 | -- | 9 | 13 | 1 | -- |
| 6 | சேலம் | 19 | -- | 2 | 6 | -- | -- |
| 7 | தருமபுரி | 16 | 2 | 4 | 5 | -- | -- |
| 8 | கோவை | 18 | -- | 11 | 2 | 3 | -- |
| 9 | ஈரோடு | 25 | 1 | 9 | 10 | 2 | 1 |
| 10 | திருச்சி | 19 | 4 | 10 | 4 | -- | -- |
| 11 | தஞ்சாவூர் | 13 | 2 | 4 | 3 | -- | -- |
| 12 | புதுக்கோட்டை | 10 | 1 | 2 | 2 | -- | -- |
| 13 | மதுரை | 6 | -- | 2 | 2 | -- | -- |
| 14 | இராமநாதபுரம் | 20 | 1 | 10 | 6 | 1 | -- |
| 15 | திருநெல்வேலி | 20 | -- | 12 | 6 | 3 | -- |
| 16 | கன்னியாகுமரி | 6 | 2 | 5 | 2 | -- | -- |
| 17 | தேனி | 7 | -- | 2 | 1 | 1 | -- |
| 18 | திண்டுக்கல் | 8 | -- | 4 | 4 | -- | -- |
| 19 | நாகப்பட்டினம் | 8 | -- | 1 | 1 | -- | -- |
| 20 | திருவாரூர் | 8 | -- | 2 | 1 | -- | -- |
| 21 | நீலகிரி | 4 | -- | -- | -- | -- | -- |
| | மொத்தம் | 277 | 15 | 108 | 96 | 11 | 1 |





## அட்டவணை– 2

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள உள்கட்டமைப்பு வசதிகள்**

(எண்களில்)

| தொ. எண். | விற்பனைக் குழுக்கள் | சொந்த நிலம் | கிட் டங்கி | ஊரகக் கிட் டங்கி | பரிவர்த் தனைக் கூடம் | உலர் களம் | விவசாயி கள் ஒய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7 | -- | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2 | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3 | திருவண்ணா மலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4 | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5 | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6 | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | -- | 4 | 3 |
| 7 | தருமபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9 | ஈரோடு | 14 | 12 | 9 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10 | திருச்சி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11 | தஞ்சாவூர் | 10 | 11 | 4 | 17 | 7 | 6 | 9 | 9 |
| 12 | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13 | மதுரை | 4 | -- | 2 | 1 | 3 | 3 | 2 | 3 |
| 14 | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15 | திருநெல்வேலி | 15 | 3 | 12 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16 | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| 17 | தேனி | 4 | -- | 2 | 3 | 6 | 1 | 3 | 4 |
| 18 | திண்டுக்கல் | 6 | 1 | 4 | 6 | 7 | -- | 5 | 5 |
| 19 | நாகப்பட்டினம் | 1 | 1 | 1 | 2 | 1 | -- | 1 | 1 |
| 20 | திருவாரூர் | 1 | -- | 2 | 1 | 1 | 2 | 1 | 1 |
| 21 | நீலகிரி | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| | மொத்தம் | 167 | 129 | 108 | 194 | 158 | 68 | 171 | 143 |

[2006 ஆகஸ்ட் 3

## அட்டவணை-3

**வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

| 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|
| வேலூர் | திருவண்ணாமலை |
| திருப்பத்தூர் | ஆரணி |
| ஆற்காடு | வந்தவாசி |
| அரக்கோணம் | சேத்துப்பட்டு |
| வாணியம்பாடி | செய்யார் |
| காவேரிப்பாக்கம் | போளூர் |
| குடியாத்தம் | செங்கம் |
| கலவை | புதுப்பாளையம் |
| அம்மூர் | வானாபுரம் |
| காட்பாடி | வேட்டவலம் |
| ஆம்பூர் | தெள்ளார் |
| திமிரி | மங்கல மாமண்டூர் |
| | தேசூர் |
| | பெரணமல்லூர் |
| | தூசி |
| | கீழ்பென்னாத்தூர் |

| 5. விழுப்புரம் | |
|---|---|
| திண்டிவனம் | மணலூர்ப்பேட்டை |
| திருக்கோவிலூர் | அவலூர்ப்பேட்டை |
| உளுந்தூர்ப்பேட்டை | மரக்காணம் |
| விழுப்புரம் | விக்கிரவாண்டி |
| சின்னசேலம் | அனந்தபுரம் |
| கள்ளக்குறிச்சி | வளத்தி |
| செஞ்சி | மூங்கில்துறைப்பட்டு |
| தியாகதுர்கம் | கிளியனூர் |
| சங்கராபுரம் | |
| திருவெண்ணெய்நல்லூர் | |



2006 ஆகஸ்ட் 3]

| 6. சேலம் | 7. தருமபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| சேலம் | தருமபுரி | திருப்பூர் |
| ஆத்தூர் | கிருஷ்ணகிரி | அவிநாசி |
| நாமக்கல் | ஒசூர் | சேவூர் |
| இராசிபுரம் | கெலமங்கலம் | அன்னூர் |
| திருச்செங்கோடு | பாலக்கோடு | காரமடை |
| சங்ககிரி | பென்னாகரம் | கோயம்புத்தூர் |
| கொங்கனாபுரம் | போச்சம்பள்ளி | சூலூர் |
| கொளத்தூர் | காவேரிப்பட்டினம் | பல்லடம் |
| வேலூர் | ஊத்தங்கரை | உடுமலைப்பேட்டை |
| மேச்சேரி | அரூர் | ஆனைமலை |
| வாழப்பாடி | பாப்பிரெட்டிப்பட்டி | பொள்ளாச்சி |
| தம்மம்பட்டி | கொளத்தூர் | மலையடிப்பாளையம் |
| நாமகிரிப்பேட்டை | பர்கூர் | நெகமம் |
| தலைவாசல் | இராயக்கோட்டை | கிணத்துக்கடவு |
| ஓமலூர் | தென்கனிக்கோட்டை | தொண்டாமுத்தூர் |
| காடையம்பட்டி | பாப்பாரப்பட்டி | மடத்துக்குளம் |
| கெங்கவல்லி | | பெதப்பம்பட்டி |
| கருமந்துறை | | பொங்கலூர் |
| சோளக்காடு | | |

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| ஈரோடு | ஜெயங்கொண்டம் | அதிராம்பட்டினம் |
| அவல்பூந்துறை | கரூர் | அம்மாபேட்டை |
| கொடுமுடி | அரியலூர் | பூதலூர் |
| சிவகிரி | மணப்பாறை | கும்பகோணம் |
| சித்தோடு | ஆண்டிமடம் | மதுக்கூர் |
| பவானி | துறையூர் | ஒரத்தநாடு |
| பூதப்பாடி | பெரம்பலூர் | பட்டுக்கோட்டை |
| அந்தியூர் | லால்குடி | பாபநாசம் |
| மயிலம்பாடி | திருச்சிராப்பள்ளி | பேராவூரணி |
| கவுந்தம்பாடி | தொட்டியம் | தஞ்சாவூர் |
| கோபி | மண்ணச்சநல்லூர் | வல்லம் |
| நம்பியூர் | குளித்தலை | திருப்பனந்தாள் |
| வெள்ளக்கோவில் | துவரங்குறிச்சி | பாப்பாநாடு |
| சத்தியமங்கலம் | இரும்பூதிப்பட்டி | |

[2006 ஆகஸ்ட் 3

| 9. ஈரோடு—தொடர்ச்சி | 10. திருச்சிராப்பள்ளி —தொடர்ச்சி | |
|---|---|---|
| புஞ்சைபுளியம்பட்டி | சின்னதாராபுரம் | |
| தாளவாடி | புள்ளம்பாடி | |
| பெருந்துறை | தாத்தையங்கார்பேட்டை | |
| குன்னத்தூர் | மேலணைக்குழி | |
| காங்கேயம் | அரும்பாவூர் | |
| வெள்ளாங்கோவில் | | |
| தாராபுரம் | | |
| மூலனூர் | | |
| அலங்கியம் | | |
| முத்தூர் | | |
| எழுமாத்தூர் | | |

| 12. புதுக்கோட்டை | 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|---|
| ஆலங்குடி | திருமங்கலம் | விருதுநகர் |
| அறந்தாங்கி | உசிலம்பட்டி | இராஜபாளையம் |
| புதுக்கோட்டை | மேலூர் | சாத்தூர் |
| கந்தர்வக்கோட்டை | மதுரை | அருப்புக்கோட்டை |
| ஆவுடையார்கோவில் | டி.கல்லுப்பட்டி | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| கீரனூர் | வாடிப்பட்டி | வத்திராயிருப்பு |
| கீரமங்கலம் | | வெம்பக்கோட்டை |
| பொன்னமராவதி | | சிவகங்கை |
| இலுப்பூர் | | திருபுவனம் |
| கரம்பக்குடி | | மானாமதுரை |
| | | சிங்கம்புணரி |
| | | காரைக்குடி |
| | | இளையான்குடி |
| | | தேவகோட்டை |
| | | இராமநாதபுரம் |
| | | பரமக்குடி |
| | | கமுதி |
| | | திருவாடானை |
| | | இராசசிங்கமங்கலம் |
| | | முதுகுளத்தூர் |



2006 ஆகஸ்ட் 3]

| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி | 18. திண்டுக்கல் |
|---|---|---|
| கோவில்பட்டி | ஈத்தாமொழி | திண்டுக்கல் |
| சங்கரன்கோவில் | வடசேரி | ஒட்டன்சத்திரம் |
| தூத்துக்குடி | களியக்காவிளை | பழனி |
| புதூர் | திங்கள்சந்தை | நத்தம் |
| கடம்பூர் | குலசேகரம் | வத்தலக்குண்டு |
| கழுகுமலை | தொடுவட்டி | கோபால்பட்டி |
| தென்காசி | | வடமதுரை |
| அம்பாசமுத்திரம் | 17.தேனி | வேடசந்தூர் |
| வள்ளியூர் | தேனி | |
| ஸ்ரீவைகுண்டம் | கம்பம் | |
| திருநெல்வேலி | போடிநாயக்கனூர் | |
| விளாத்திக்குளம் | சின்னமனூர் | |
| கடையநல்லூர் | ஆண்டிப்பட்டி | |
| திசையன்விளை | உத்தமபாளையம் | |
| பாவூர்சத்திரம் | பெரியகுளம் | |
| திருவேங்கடம் | | |
| எட்டையபுரம் | | |
| சிவகிரி | | |
| ஆலங்குளம் | | |
| சாத்தான்குளம் | | |

| 19. நாகப்பட்டினம் | 20. திருவாரூர் | 21. நீலகிரி |
|---|---|---|
| கீவளூர் | வலங்கைமான் | உதகமண்டலம் |
| குத்தாலம் | கொரடாச்சேரி | குன்னூர் |
| மயிலாடுதுறை | மன்னார்குடி | கோத்தகிரி |
| நாகப்பட்டினம் | பூந்தோட்டம் | கூடலூர் |
| செம்பனார்கோவில் | வடுவூர் | |
| சீர்காழி | குடவாசல் | |
| வேதாரண்யம் | திருவாரூர் | |
| திருப்பூண்டி | திருத்துறைப்பூண்டி | |

[2006 ஆகஸ்ட் 3

## அட்டவணை–4

### மிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| நா. ண் | மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|---|
| 1 | சென்னை | வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் அலுவலகத்தில் அமைந்துள்ள முதன்மை ஆய்வகம்.<br>சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) |
| 2 | வேலூர் | வேலூர் |
| 3 | கடலூர் | கடலூர் |
| 4 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி–1, திருச்சிராப்பள்ளி–2 |
| 6 | கரூர் | கரூர் |
| 7 | மதுரை | மதுரை–1, மதுரை–2 |
| 8 | தேனி | தேனி |
| 9 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10 | விருதுநகர் | விருதுநகர் |
| 11 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13 | கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14 | சேலம் | சேலம் |
| 15 | தருமபுரி | தருமபுரி |
| 16 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17 | ஈரோடு | பெருந்துறை, ஈரோடு–1, ஈரோடு–2, காங்கேயம்–1, காங்கேயம்–2, வெள்ளக்கோவில், சித்தோடு |



2006 ஆகஸ்ட் 3]

## அத்தியாயம்–9

## மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்பு

### தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் (வ.து.) (டான்ஹோப்)

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் 1995 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஒரு தொடக்கக் கூட்டுறவுச் சங்கமாகும். இச்சங்கம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983–ன்கீழ் பதிவு செய்யப்பட்டு 18–1–1995 முதல் செயல்பட்டு வருகிறது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் இந்நிறுவனத்தின் தனி அலுவலர் ஆவார் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆவார்.

சிறு, குறு விவசாயிகள் தங்களின் காய், கனிகளை நல்ல விலைக்கு விற்பனை செய்யவும் நுகர்வோர்கள் புதிய காய், கனிகளைக் குறைந்த. விலைக்கு பெற்றிடவும் வகை செய்வதற்காக இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இதில் 3,904 விவசாயிகள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். அவர்களால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3.90 இலட்சங்கள் ஆகும். தமிழ்நாடு முழுவதும் இந்நிறுவனத்தின் செயல்பாடு எல்லையாக இருந்து வருகிறது

இந்நிறுவனம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் ரூ.470 இலட்சம் மதிப்பிலான காய், கனி விற்பனை திட்டத்தினை செயல்படுத்தியது. அத்திட்டத்தின் செயல் காலம் 30–6–2001–ல் முடிவடைந்ததை நீட்டித்து புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் இந்நிறுவனத்தின் வியாபார வளர்ச்சி கடந்த ஐந்து ஆண்டு காலங்களில் படிப்படியாக நலிவடைந்தது. 1996–2001 காலத்தில் இந்நிறுவனத்தின் வியாபாரம் ரூ.380.26 இலட்சமாக இருந்தது. 2001–06 காலத்தில் ரூ.167.61 இலட்சமாக குறைந்தது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மொத்த நிதியான ரூ.470 இலட்சத்தில் ரூ.93.00 இலட்சமே பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பயன்படுத்தப்பட்ட நிதியில் உருவாக்கப்பட்ட கொள்முதல் நிலையங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் முழு அளவில் செயல்படவில்லை. இத்திட்டம் முதற்கட்டமாக காஞ்சிபுரம், சேலம்

[2006 ஆகஸ்ட் 3

மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டதில், சேலம் மாவட்டத்தில் குளிர்பதன வசதியுடன் கூடிய கொள்முதல் மையம் கட்ட அனுமதி அளிக்கப்பட்டும் நிதி ஒதுக்கீடு செய்தும், கட்டப்படாமல் உள்ளதை இந்நிதி ஆண்டில் கட்டி முடித்து முழு அளவில் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நிறுவனத்தின் திட்டங்கள் உழவர் சந்தை திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். உழவர் சந்தைகள் செயல்படும் பகுதியில் விளைவிக்கப்படாத மேலைநாட்டு / மலைக் காய்கறிகள் விளையும் மாவட்டங்களிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து உழவர் சந்தைக்கு வழங்கவும், உழவர் சந்தை அமைக்க இயலாத நகரின் முக்கியப் பகுதிகளில் சில்லறை விற்பனை அங்காடிகள் திறந்து செயல்படுத்தவும் உறுதுணையாக இந்நிறுவனத்தின் செயல்பாடு அமைந்திட வகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் வளர்ச்சியினைக் கருத்தில் கொண்ட இவ்வரசு, அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் போன்றவற்றிற்குத் தேவையான காய், கனிகளை டான்ஹோாப் நிறுவனத்தின்மூலம் அளித்திட நடவடிக்கை எடுக்கும். இதனால் குறிப்பாக ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி, சத்துணவு மையங்கள், மருத்துவமனை, சிறைச்சாலை போன்றவை குறைந்த விலையில் தரமான காய்கறிகளைப் பெற இயலும்.

மேலும் துறை சார்ந்த அனைத்துத் திட்டங்களுக்கும் இடுபொருட்கள் முதலான அனைத்துத் தேவைகளும் டான்ஹோப்மூலம் கொள்முதல் செய்து விநியோகம் செய்திட நடவடிக்கை எடுக்கப்படும்.



2006 ஆகஸ்ட் 3]

## கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

### 2006–2007–ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2006–2007

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 913,73,60 | 64,24,65 | -- | 977,98,25 |
| மொத்தத் தொகை–சாட்டியது | 3 | -- | -- | 3 |

| | கணக்குத் தலைப்பு | 2004–05 கணக்குகள் | 2005–06 திருத்த மதிப்பீடு | 2006–07 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2006–07 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 1,06,75 | 1,62,72 | 1,98,92 | 1,98,92 |
| 2202 | பொதுக் கல்வி | -- | 30,00 | 60,00 | 60.00 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 583,23,45 | 536,34,96 | 554,18,76 | 639,42,40 |
| 2402 | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 101,37,37 | 95,13,61 | 88,33,10 | 103,42,73 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும் | 63,22,42 | 76,46.15 | 76,59,98 | 81,32,07 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 32,70,40 | 35,25,36 | 40,35,10 | 42,06,34 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 10,24,97 | 7,25,00 | 7,25,00 | 7,25,00 |
| 2551 | மலைப் பகுதிகள் | 11,36,04 | 4,95,45 | 5,34,61 | 4,18,59 |
| 2702 | சிறு பாசனம் | 6,82,07 | 6,56,52 | 7,82,91 | 8,03,81 |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | 39,45,41 | 17,06,50 | 17,59,50 | 18,50,21 |
| 3451 | தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 3,76,05 | 4,05,70 | 4,61,84 | 4,79,21 |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 14,51,89 | 2,77 | 8 | 1,34,54 |
| 4402 | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | -- | 17,63,44 | 24.05,01 | 24,31,26 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | -- | 1 | 1 | 4,50,01 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | -- | 6.53,58 | 5,89,47 | 9.64,52 |
| 4705 | பாசனப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு | -- | 23,97,18 | 24,44,32 | 24,44,32 |

[2006 ஆகஸ்ட் 3

## கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை

### திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2006–2007

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 05 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 14,04,21 | -- | -- | 14,04,21 |
| 05 02 | வேளாண்மை இயக்ககம் | அனுமதித்தது | 620,54,71 | 94,51 | -- | 621,49,22 |
| 05 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 25,90,79 | 4,50,01 | -- | 30,40,80 |
| 05 04 | விதைச் சான்று இயக்ககம் | சாட்டியது | 1 | -- | -- | 1 |
| | | அனுமதித்தது | 11,20,17 | -- | -- | 11,20,17 |
| 05 05 | தோட்டக்கலை மற்றும் மலைத் தோட்டப்பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | -- | -- | 1 |
| | | அனுமதித்தது | 53,82,80 | 1,00,02 | -- | 54,82,82 |
| 05 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 1 | -- | -- | 1 |
| | | அனுமதித்தது | 109,96,22 | 57,80,11 | -- | 167,76,33 |
| 05 07 | வேளாண் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 14,37 | -- | -- | 14,37 |
| 05 08 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 78,10,33 | -- | -- | 78,10,33 |
| | மொத்தம் | சாட்டியது | 3 | -- | -- | 3 |
| | | அனுமதித்தது | 913,73,60 | 64,24,65 | -- | 977,98,25 |



2006 ஆகஸ்ட் 3]

### 2006–2007 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| | **திட்டத்தில் சேராதது, தலைமைச் செயலகம்** | |
| 1 | வேளாண்மைத் துறையை நவீனப்படுத்தி கணினிகள் வாங்குதல் | 30.00 |
| | **மொத்தம்** | 30.00 |
| | **பத்தாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்** | |
| | **வேளாண்மை** | |
| 2 | வட்டார அளவில் பயிர் அறுவடை சோதனை மேற்கொள்ள கருவிகள் வழங்குதல் | 30.80 |
| 3 | 6 பயிர் பூச்சுக் கொல்லி பரிசோதனைக் கூடங்களை மேம்படுத்துதல் (6 ஜி.எல்.சி. வாங்குதல்) | 45.00 |
| 4 | அரசு விதைப் பண்ணைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 27.40 |
| 5 | 44 வேளாண் விரிவாக்க மையங்களைப் பழுது பார்த்தல் | 50.00 |
| 6 | தரமான விதை உற்பத்திக்கு விதைகளை சுத்திகரிப்பு செய்யக் கூடுதல் வசதிகள் – புதுக்கோட்டை சுத்திகரிப்பு நிலையத்திற்கு வாங்குதல் | 2.00 |
| 7 | விதை சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 3.04 |
| 8 | தென்னை நாற்றுப் பண்ணைகளுக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் | |
| | (அ) நவ்லாக்கிற்கு தென்னை நெற்று சேமிப்புக் கிடங்கு மற்றும் பாதுகாப்புக் கொட்டகை கட்டுதல் | 3.00 |
| | (ஆ) நவ்லாக்கில் நீர்மூழ்கி பம்புசெட்டுகளுடன் கூடிய துளைக் கிணறுகள் – நவ்லாக் – 4 எண்ணிக்கை (ரூ.5 இலட்சம்), நெய்வேலி – 3 எண்ணிக்கை (ரூ.4.06 இலட்சம்), மாதவரம் –2 எண்ணிக்கை (ரூ.2 இலட்சம்), எட்டன்குளம்–1 எண்ணிக்கை (ரூ.1 இலட்சம்) | 12.06 |
| | **மொத்தம்** | **173.30** |

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| | **வேளாண் விற்பனை** | |
| 9 | அக்மார்க் தரப் பரிசோதனைக் கூடங்களை நவீனப்படுத்துதல் | 30.00 |
| 10 | கணினியுடன்கூடிய டிஜிட்டல் மாய்ச்சர் மீட்டர் வழங்குவதன்மூலம் சென்னை விற்பனை மையத்தில் தரம் பிரிக்கும் வசதிகளை வலுப்படுத்துதல் | 2.60 |
| 11 | மத்திய அரசு உதவியுடன் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் தெரிந்தெடுக்கப்பட்ட பெருநகர வட்டாரங்களில் பழங்கள், காய்கறிகள் மற்றும் எளிதில் கெடக்கூடிய ஏனைய பொருட்களுக்கு விற்பனை முனைய வளாகங்கள் அமைத்தல் | 300.00 |
| 12 | கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடத்தில் வெங்காய சேமிப்பு வசதிகளுடன் விற்பனை அடிப்படை வசதிகளை உருவாக்குதல் | 10.00 |
| 13 | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழத்திற்குக் குளிர்பதன சேமிப்பு வசதியை உருவாக்குதல் | 10.00 |
| 14 | தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் தரமான திராட்சைப் பழங்களை ஏற்றுமதி செய்வதற்கு, ஏற்றுமதி அங்காடி வளாகம் மற்றும் குளிர்பதன சேமிப்பு வசதிகளையும் உருவாக்குதல் | 100.00 |
| | **மொத்தம்** | **452.00** |
| | **விதைச் சான்றளிப்பு** | |
| 15 | விதை ஆய்வுப் பணிக்காக ஆறு உதவி இயக்குநர்களுக்குக் கணினிகள் மற்றும் துணைப் பாகங்கள் வாங்குதல் | 3.00 |
| 16 | கோயம்புத்தூர் விதைச் சான்றளிப்புத் துறை இயக்ககத்துடன் இணைந்துள்ள விதைப் பரிசோதனைக் கூடத்திற்கு 45 கே.வி.ஏ. மின் உற்பத்தி சாதனங்கள் மற்றும் துணைப் பாகங்கள் வழங்குதல் | 7.00 |
| 17 | கண்ணம்பாளையம் முளைவிட்ட பயிர் சோதனைப் பண்ணையிலுள்ள துளைக் கிணறுக்கு, தமிழ்நாடு மின்வாரியம் மின் இணைப்பு வழங்குதல் | 0.50 |



| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 18 | தஞ்சாவூர், கடலூர், திருச்சி விதை ஆய்வுத் துறை உதவி இயக்குநர்களுக்கும், ஈரோடு மற்றும் சேலம் விதைச் சான்றளிப்புத் துறை உதவி இயக்குனர்களுக்கும் பழைய ஜீப்புகளுக்குப் பதிலாக புதிதாக 5 ஜீப்புகள் வாங்குதல் | 21.25 |
| 19 | கோயம்புத்தூர் விதைச் சான்றளிப்பு இயக்குநர் அலுவலகத்தில் மின் இணைப்புகளை வலுப்படுத்துதல் | 1.66 |
| 20 | கோயம்புத்தூர் விதைப் பரிசோதனைக் கட்டடங்களில் மின் இணைப்புகளை வலுப்படுத்துதல் | 2.91 |
| 21 | மதுரை விதைப் பரிசோதனைக் கூடத்தில் மின் இணைப்புகளை வலுப்படுத்துதல் | 1.86 |
| 22 | காஞ்சிபுரம் விதைப் பரிசோதனைக் கூடத்தில் மின் இணைப்புகளை வலுப்படுத்துதல் | 2.50 |
| | **மொத்தம்** | **40.68** |
| | **தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்** | |
| 23 | 10 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பாசன வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் ஓர் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் மண் வளத்தை மேம்படுத்துதல் | 40.00 |
| | **மொத்தம்** | **40.00** |
| | **வேளாண்மைப் பொறியியல்** | |
| 24 | கோயம்புத்தூர், வேலூர் மாவட்டங்களில் தற்போதுள்ள கசிவு நீர்க் குட்டைகளில் செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் அமைப்புகளுக்கான முன்னோடித் திட்டம் | 5.00 |
| 25 | பெரியார் வைகை பாசனப் பகுதியில் நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கும் முன்னோடித் திட்டம் | 21.25 |
| 26 | காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், கரூர், நாமக்கல், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய ஒன்பது மாவட்டங்களில் ஜி.ஐ.எஸ். மையங்களை ஏற்படுத்துதல் | 81.00 |
| 27 | 29 மாவட்டங்களுக்கு உலகளாவிய நிலை அறியும் கருவிகள் வாங்குதல் | 8.70 |
| 28 | 25 உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு அலுவலக தானியக்கம் மற்றும் மின் ஆளுகை | 12.50 |
| 29 | 10 பழைய ஜீப்புகளுக்குப் பதிலாக புதிய ஜீப்புகளை வாங்குதல் | 42.50 |
| | **மொத்தம்** | **170.95** |

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் | |
| 30 | தமிழ்நாட்டில் நிலைப்பட்ட தரிசு நிலங்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் குறித்து செயல் விளக்கம் அளித்தல் | 4.83 |
| 31 | தமிழ்நாட்டிலுள்ள தரிசு நிலங்களில் வி.ஆர்.ஐ. 3 முந்திரி பயிர் குறித்து செயல் விளக்கம் அளித்தல் | 2.93 |
| 32 | பல்லடம் வட்டத்திலுள்ள புன்செய் நிலப் பயிர்களில் உட்கரப்பு நீர்மம்மூலம் வறட்சிப் பாங்கினை நீக்குதல் | 3.85 |
| 33 | கோவில்பட்டி வட்டத்தில் மானாவாரிப் பகுதிகளில் நீடித்த பயிர் உற்பத்திக்கு பண்ணை வளர்த்தல் | 8.40 |
| 34 | பதப்படுத்தப்பட்ட உணவுகளில் கால்நடைத் தீவனங்களில் பூசன நச்சு கலந்திருப்பதைக் கண்டறிவதற்கு நோய்க்குறி அறியும் கையடக்கப் பெட்டிகளை மேம்படுத்துதல் | 5.80 |
| 35 | கழிவு நீர் கலந்துள்ள தரிசு நிலங்களில் உணவு வகை அல்லாத பயிர் சாகுபடியைக் கண்டறிதல் மற்றும் விளம்பரப்படுத்துதல் | 4.80 |
| 36 | எம்.சி.யு 5 / எம்.சி.யு 12 / எம்.சி.யு 13 / எஸ்.வி.பி.ஆர் 2 பருத்தி வகைகளில் பி.டி. மரபணுவைச் செலுத்தி காய் புழுவிற்கு எதிர்ப்புத் திறனை உருவாக்குதல் | 7.00 |
| 37 | தொழிற்சாலைத் தேவைகளை ஏற்பதற்கு அதிக விளைச்சல் தரக்கூடிய அதி நீள பருத்தி இழைகளை உருவாக்குதல் | 6.20 |
| 38 | ஒரு பரு கரணை நடவு முறைமூலம் கரும்பு மகசூலை அதிகப்படுத்துதல் மற்றும் அதன் சிறப்பம்சத்தைக் கரும்பு விவசாயிகளிடையே பரப்புதல் | 6.60 |
| 39 | தென்னையைத் தாக்கும் முக்கியப் பூச்சி வகைகள் மற்றும் நோய்களைத் தடுத்து ஒருங்கிணைக்கப்பட்ட மேலாண்மைப் பணிகள் | 5.00 |
| 40 | தமிழ்நாட்டில் மானாவாரி கரிசல் நிலங்களுக்கேற்ற வீரிய ஒட்டு ஆமணக்கு மற்றும் இரகங்களை விவசாயிகளின் பங்கேற்புடன் தெரிவு செய்தல் | 4.92 |
| 41 | மல்லிகை மற்றும் சம்பங்கியின் அறுவடைக்குப் பின் மலர்களின் வாழ்நாளை அதிகரித்தல் | 1.58 |



| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 42 | தென் தமிழ்நாடு மாவட்ட விவசாயிகளுக்கான பருத்தி அமெரிக்கன் காய்ப்புழு, புகையிலைப் புழு மற்றும் கடலை சிகப்பு கம்பளிப் புழுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் என்.பி. வைரஸ் உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டம் | 5.53 |
| 43 | உயிரியல் முறையில் பப்பாளி மற்றும் எலுமிச்சையில் போகோனியா கிளாமிதோஸ்போரியா பூஞ்சாணம்மூலம் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துதல் | 2.28 |
| 44 | தமிழ்நாட்டில் பயிர்க் காப்புறுதித் திட்டங்களை மேற்கொள்ள மதிப்பீடு | 1.83 |
| | மொத்தம் | 71.55 |

| | |
|---|---|
| மொத்தம் – திட்டத்தில் சேராதது | 30.00 |
| மொத்தம் – திட்டப் பணிகள் | 949.08 |
| பெரு மொத்தம் | 979.08 |

D
V 2/3/2006
7.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227418
சென்னை-600 008